
AR
902



# தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்

நான்காம் பகுதி

தம்பிக்கு

# அண்ணாவின் கடிதங்கள்

நான்காம் பகுதி

C. N. அண்ணாதுரை, M.A.

பல்லடம் மாணிக்கம்
தமிழ் நூல் காப்பகம்
திருமுதுகுன்றம்

பாரி நிலையம்
184, பிராட்வே, சென்னை-600001

முதற்பதிப்பு : மார்ச் 1980
பதிப்பு : உரிமையுடையது

தமிழ் நூல் காப்பகம்
09210
தமிழ் நகர், விருத்தாசலம் - 606 001.

விலை ரூ. 10-00

அச்சிட்டோர்: நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-600014.

# பதிப்புரை

அமரர், அறிஞர் அண்ணா அவர்களின் சிந்தனையும் பேச்சும் எழுத்தும் மகத்தான சக்தி படைத்தவை. அவை தமிழர் உள்ளங்களைக் கவர்ந்து தம் வசப்படுத்தும் ஆற்றலும் ஊட்டமும் பெற்றவை.

எளிமை, நயம், கருத்துச் செறிவு, அரசியல் தெளிவு, வரலாற்றுப் படப்பிடிப்பு எல்லாவற்றையும் அவற்றிற் காணலாம். அவை காலத்தை வென்று விளங்கும் சிறந்த தமிழ் இலக்கியங்கள்.

அண்ணாவின் கடிதங்களின் நான்காவது தொகுதி இது. தமிழக வரலாற்றின் முதன்மையான ஒரு வரலாற்றுத் திருப்பத்தில் எழுதப்பட்டவை. இவை தமிழன்பர்களின் சிந்தனைக்கு விருந்தும் மருந்தும் ஆகும்.

அண்ணாவின் கடிதங்களின் பிற தொகுதிகளும் தொடர்ந்து வெளிவரும் என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பாரி நிலையத்தார்

### முதல் இரண்டு தொகுதிகளின்

### முதற்பதிப்பின்

# முன்னுரை

## திரு. நாவலர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

'அண்ணா தம்பிக்கு எழுதிய கடிதங்கள்' நூல் வடிவம் கொண்டு, அழகும் கவர்ச்சியும் ஒருங்கே ஏற்று, என் கைக்கு வரப்பெற்று மிக்க பேருவகையுற்றேன். அறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிட நாடு' இதழ் மூலம் அருமைத் தம்பிமார்களுக்கு எழுதி வந்த முடங்கல்கள் அனைத்தும் நூல் வடிவம் பெற்றால், அந்த நூல் கருத்துக் கருவூலமாகத் திகழப் பெறுமே என்ற வேணவா என் உள்ளத்தில் நீண்ட நாட்களாக எழுந்ததுண்டு. என்னைப்போன்ற பல்லாயிரக்கணக்கான தம்பிமார்களுக்கும் வேணவா கிளர்ந்தெழுந்திருக்கும் என்பது உறுதி. அந்த வேணவாவை இனிது நிறைவேற்றி வைக்கும் அரும்பெருந் தொண்டை, 'பாரி நிலையத்தார்' செய்திருப்பது கண்டு பூரிப்படைகிறேன். பாரி நிலையத்தாரை வரவேற்றுப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

அறிஞர் அண்ணா அவர்களின் எழுத்து வன்மையையும் அவரது எழுதுகோல் முனையிலிருந்து உருப்பெற்றெழுந்து நாடெங்கணும் வெற்றியுலா வரும் கதைகள்—கட்டுரைகள்—நாடகங்கள்—திரைப்பட வசனங்கள்—எழுத்தோவியச் சுவரொட்டிகள், துண்டு அறிக்கைகள் ஆகியவற்றையும், அவற்றில் தமிழ் மணம் மிகச்சிறந்த முறையில் கமழ்வதையும், இனிய ஓசைபயக்கும் சொற்கள் அருவியின் வீழ்ச்சியெனத் தங்கு தடையின்றிப் பாய்ந்து துள்ளிக் குதித்து ஓடுவதையும், கருத்துக்கள் செறிந்து காணப்படுவதையும், உவமை நயங்கள் பெருவாரியாக ஆங்காங்குப் பளிச்சிட்டு மின்னுவதையும். அறிவும் ஆற்றலும்—உண்மையும் உயர்வும் திண்மையும் திட்பமும் சொல்லழகும் பொருளாழமும் ஒன்றையொன்று போட்டி போட்டுக்கொண்டு துள்ளிக் குதிப்பதையும், தமிழ் கற்றறிந்த நல்லறிவு படைத்தார் அனைவரும் நன்கு உணர்வர். தமிழின்பத்தை எல்லாவகையிலும் சுவைக்க விரும்புவோர், இந்நூலைச் சுவைத்தாலே போதும். எல்லா வகையான இனிய சுவைகளும் இதனுள் பொதிந்து கிடக்கின்றன.

படித்து மகிழ்ந்து பயன் பெறுவதற்குரியவைகள் பலப் பல இருந்தபோதிலும், ஒவ்வொருவரும் கடிதத்தைப் படிப்பதற்கு பேராவல் காட்டுகிறோம். அஞ்சலை அன்றாடம் வழி மேல் விழிவைத்துப் பார்க்க நாம் தவறுவதில்லை. அஞ்சல் வந்தவுடன் மற்றப் பணிகளையெல்லாம் ஒதுக்கி வைத்து விட்டுப் பரபரப்புணர்ச்சியுடன் அவற்றைப் பிரித்துப் படிக்கிறோம்; பலதரப்பட்ட செய்திகளையும் கருத்துக்களையும் அறிந்து கொள்கிறோம். பொதுவாகக் காதலியிடமிருந்தும், நண்பர்களிடமிருந்தும், நெருங்கிய உறவினர்களிடமிருந்தும் வரும் முடங்கல்களைப் படிப்பதில் ஒருவன் எவ்வளவு ஆர்வமும், அக்கறையும், அகமகிழ்ச்சியும் காட்டுவானோ அவ்வளவு ஆர்வமும் அக்கறையும் அகமகிழ்ச்சியும் அறிஞர் அண்ணா அவர்களின் கடிதங்களைப் படிப்பதிலும் ஒவ்வொருவரும் காட்டுவர். அவ்வளவு கவர்ச்சியும், அறிவுத் தெளிவும் ஆராய்ச்சித் திறனும் அறிஞர் அண்ணா அவர்களின் கடிதங்களில் காணப்பெறும். அறிஞர் அண்ணா அவர்களின் உயர்ந்த உள்ளத்தை எழுத்துக்களின் மூலம் எளிதில் கண்டறிய இந் நூல் பெரிதும் பயன்படும்.

அறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிட நாடு' இதழில் 'தம்பிக்குக் கடிதம்' என்று தலைப்பிட்டு எழுதிய கடிதங்களைப் பத்துத் தொகுப்புகளாகக் கொண்டுவர முயற்சி எடுத்து, இப்பொழுது இரண்டு தொகுப்புகளை வெளியிட்டிருக்கின்றனர். இந்தப் பத்துத் தொகுப்புகளும் தமிழகத்தின் அரியபெரிய கருத்துக் கருவூலங்களாகும். இப்பொழுது வெளிவந்துள்ள இரண்டு தொகுப்புகளைப் போலவே, விரைவில் ஏனைய எட்டுத் தொகுப்புகளும் வெளிவருவனவாக!

அறிஞர் அண்ணா அவர்களின் சொல்லமுதைக்கொண்டு இலக்கிய விருந்துபடைக்க முன்வந்த 'பாரி நிலைய'த்தாரைப் பாராட்டுகிறேன். தமிழ்ப் பெருங்குடி மக்கள் அனைவரும் இந்த இலக்கிய விருந்தை உண்டு மகிழ்ந்து, பயன் பெற்று இனிதுற வாழ்வார்களாக!

4—1—63 இரா. நெடுஞ்செழியன்

# பொருளடக்கம்


| கடித எண் | | பக்க எண் |
|---|---|---|
| 63. | "மிருக ஆட்சி... | 9 |
| 64. | சந்தனம் அரைத்த கரம்! | 25 |
| 65. | ஆனால்...ஆகவே...! | 48 |
| 66. | அறைகூவுகிறார் அமைச்சர்! | 52 |
| 67. | வேதனை வெள்ளம் | 76 |
| 68. | காடு இது—நாடு அல்ல! | 84 |
| 69. | நெற்றிக் கண்ணைக் காட்டினாலும்...! | 94 |
| 70. | வீரத் தியாகி | 102 |
| 71. | நாமாவது...! | 117 |
| 72. | வாழ்க தமிழகம்! வருக திராவிடம்! | 129 |
| 73. | மூவர் முரசு | 139 |
| 74. | இயற்கை கொஞ்சுகிறது! இல்லாமை கொட்டுகிறது! | 154 |
| 75. | மிரட்டல்! விரட்டல்! | 172 |
| 76. | சுகஸ்தான் வாசி... | 186 |
| 77. | வெற்றிபுரி செல்ல | 200 |
| 78. | எரிகிற தழலில்...! | 214 |
| 79. | காட்டாட்சி... | 233 |
| 80. | ஓட்டுச் சாவடி போகுமுன்பு... | 245 |

தமிழ் நகர், விருத்தாசலம் - 606 001.

கடிதம் : 63

# "மிருக ஆட்சி.."

**தேர்தலும் காங்கிரசும்—**
**''விடுதலை''யும் காமராசரும்—**
**காங்கிரசாட்சியின் கொடுமை.**

தம்பி !

போஸ்டர் வேண்டுமா, போஸ்டர்! கண்ணைக் கவரும், கருத்தைக் கிளறும்! காங்கிரஸ் ஒழிப்பிலே கவலைகொண்ட பெரியவர்களே! இளைஞர்களே! போஸ்டர் தயாரித்திருக்கிறோம். 'காங்கிரசுக்கு ஓட்டு போடாதீர்கள்' என்று அழகாக அச்சடிக்கப்பட்ட போஸ்டர் — இலட்சக் கணக்கிலே உள்ளன—அடக்க விலை—ஆதாயம் கருதிப் போடப்பட்டதல்ல - வியாபார நோக்கத்துடன் வெளியிடப்பட்டதல்ல— நாட்டைக் கேடர்களிடமிருந்து மீட்டிட நல்லறிவுப் பிரசாரம் நடாத்துவதற்காகவே, பொருள் நட்டம், நேரக்கேடு, எதனையும் பொருட்படுத்தாது, இதனை வெளியிடுகிறோம்.

ஆயிரக் கணக்கிலே வாங்குங்கள்—விலை மலிவு - பல்லாயிரக் கணக்கிலே வாங்குங்கள்—பட்டி தொட்டிகளிலுள்ளோரும் வாங்குங்கள் —வீடுதோறும் ஒட்டிவையுங்கள்—ஓட்டு கேட்க வரும் காங்கிரசாரை ஓட்டுங்கள்.

காங்கிரசார் கண்களிலே, எந்தப்பக்கம் திரும்பினுலும் இந்தப் போஸ்டர்கள் படவேண்டும்—நாடே நமக்கு விரோத

மாக இருக்கிறது—ஊரார் அனைவரும் ஒன்று கூடிவிட்டார்கள் நம்மை விரட்ட என்று கிலிகொண்டு, அவர்கள் பிடரியில் கால்பட எடுக்க வேண்டும் ஓட்டம்—அதற்கு உதவக்கூடிய போஸ்டர், வாங்குங்கள் ஒட்டுங்கள்!

ஆயிரம் ஐந்தே ரூபாய்! கருப்பு மையில் அச்சிடப் பட்டது, கண்கவரும் வனப்புள்ளது.

நாலரை அல்லது ஐந்து அங்குல அகலம் இருக்கும்—பதினெட்டு அங்குல நீளம்!

புரட்சிகரமான தோற்றம் தேடுவோர், சிகப்பு மையில் அச்சிடப்பட்ட போஸ்டர்களை வாங்கலாம்—விலை சிறிதளவு தான் கூடுதல்—ஆயிரம் 7-ரூபாய்தான்!

காங்கிரசுக்கு ஓட்டுப் போடாதீர்கள்—என்ற இந்த அறிவுரைத் தாட்களை அனைவரும் ஆயிரக் கணக்கிலே வாங்கி, ஊரெங்கும் ஒட்டி, திராவிட நாட்டுக்கு ஆபத்து வராதிருக்க நம்மாலான நல்ல தொண்டு செய்தோம் என்ற மனத்திருப்தியும் மகிழ்ச்சியும் பெறுங்கள். இந்தச் சிறு காரியத்தைக்கூடச் செய்யத் தவறுபவர்களை, நாம் எப்படித் திராவிட மக்கள் என்று ஏற்றுக்கொள்ள முடியும்?

இழி ஜாதி மக்கள், ஈனப் பிறவிகள், காலித்தனத்தால் கூலித்தனத்தால் வயிறு கழுவும் வக்கற்ற மக்கள், என்று உலகு நாளைக்குக் கூறும். எனவே போஸ்டர் வாங்குங்கள், பொன்னுன வாய்ப்பு, புனிதமான கடமை, பொறுப்பு உணர்ந் தோர் செய்து தீரவேண்டிய தொண்டு—காங்கிரசுக்கு ஓட்டுப் போடாதீர்கள்—என்ற போஸ்டர்களை வாங்கி எங்கும் ஒட்டி வைப்பது தான்.

என்ன அண்ணு! இது! காங்கிரஸ் ஒழிப்புக்கான போஸ்டர் வெளியிடுகிருேம், விலை கொடுத்து வாங்கி ஊரெல் லாம் ஒட்டு என்ருல் ஒட்டுகிருேம்—அதற்காக, வாங்காத வர்கள், ஈனப் பிறவிகள்—இழி ஜென்மங்கள் என்றெல்லாம் சுடுமொழி கூறுகிருயே, இதென்ன; என்றைக்குமில்லாத முறையில் இருக்கிறதே என்று சிறிதளவு கோபத்துடன் கேட்க எண்ணுகிருய் அல்லவா? தம்பி! சுடுசொல் கூறுபவனு நான்—உன்னையா நான் சுடுமொழியால் தாக்குவேன்? என் மொழியும் அவ்விதம் இராது—என் வழியும் அது அல்லவே! விஷயத்தைச் சொன்ன பிறகல்லவா உனக்கு உண்மை துலங்கும், கேள்.

சென்ற பொதுத்தேர்தலின் போது, காங்கிரஸ் கட்சி எப்படியும் ஒழிக்கப்பட்டாகவேண்டும்; அதிலே ஒரு சில



கண்ணியவான்கள், ஓமந்தூரார் போன்ற உத்தமர்கள் இருந் தாலும் கவலைப்படுவதற்கில்லை, அந்த 'ஸ்தாபனம்' ஒழிக்கப் பட்டாக வேண்டியது மிக மிக அவசரமான கடமை, அதிலிருந்தும், அணுவளவும் பிசகுவது கூடாது, அச்சம், தயை தாட்சணியம்—முன்பின் தொடர்பு எதுவும் குறுக்கிடக் கூடாது என்று வீராவேசமாகத் திராவிடர் கழகம் சீறிப் போரிட்டபோது, விடுதலைக் காரியாலயம், காங்கிரசை ஒழித்துக் கட்டுங்கள்—காங்கிரசுக்கு ஓட்டுப் போடாதீர்கள் என்று மக்களுக்கு அறிவு விளக்கம் தர, அவர்களை ஆண்மை யாளர்களாக்க, கருப்பிலும் சிகப்பிலும் போஸ்டர்கள் பல இலட்சம் வெளியிட்டு, விற்பனை செய்தார்கள்—அதை நினைவூட்டுகிறேன்—உனக்கு மட்டுமல்ல—அவர்களுக்கோ என்று கேட்டு விடாதே, அவர்களுக்கு நான்தரும் கரும்பும் கசக்கும்—நாட்டவருக்கு நினைவூட்டுகிறேன்.

அன்று காங்கிரஸ், எந்த அளவுக்கு, வெறுக்கப்பட வேண்டிய, ஒழிக்கப்படவேண்டிய, கேடான 'ஸ்தாபன மாக' இருந்ததோ, அதிலே ஏதேனும் ஒரு துளி மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா? நாமெல்லாம் வாழ்த்தி வரவேற்கத்தக்க, அல்லது சகித்துக்கொள்ளத்தக்க விதமான அமைப்பாக, காங்கிரஸ் மாறிவிட்டதா? பார்ப்போம்—இந்த ஒரு தடவை இருந்து தொலைக்கட்டும்—என்று கூறத்தக்க, மனநிலையை நாம் பெறுவதற்கான திட்டங்களை, காங்கிரஸ் நாட்டுக்கு அளித்திருக்கிறதா? என்பன போன்ற எண்ணங்கள் என் மனதைக் குடைகின்றன, மனமென்ற ஒன்று இருந்து தொலைப்பதால்!

சென்ற பொதுத் தேர்தலின் போது இருந்ததைவிட, எல்லாத்துறைகளிலும், காங்கிரஸ், கேடு தருவதாக இருக் கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

சிறையிலே தள்ளிச் சித்திரவதை செய்வதிலும், தெருவில் செல்வோரைத் துரத்தித் துரத்தி அடிப்பதிலும், மிரண்டு ஓடுவோரைச் சுட்டுக் கொல்வதிலும், காங்கிரஸ் பயங்கரமான பயிற்சி பெற்றுவிட்டிருப்பது காண்கிருேம்.

இன்று எந்த இடத்தில் துப்பாக்கிப் பிரயோகம், ஊரடங்கு சட்டம், எந்த இடத்தில் எவ்வளவு பேர் கைது செய்யப்பட்டனர் என்று வெளியிடப்பட்டிருக்கிறதோ என்ற பயத்துடன் தான், நாளிதழ்களைப் பிரித்துப் படிக்க வேண்டி இருக்கிறது.

சென்றபோதுத் தேர்தலின் போது, காங்கிரசாட்சியினுல் விழுந்த பிணங்களின் எண்ணிக்கையைக் கூறினேம்—இந்தத்

தடவை கூறும்போது, முன்பு எவ்வளவோ மேல் என்று சொல்லத்தக்க விதமாகத்தான் இப்போதைய ஆட்சி அலங்கோலம் இருக்கிறது.

மக்களின் 'வாழ்வு' முன்பு இருந்ததைவிட, இப்போது மோசமாகி இருக்கிறது.

தொழில் வளம்—தென்னுட்டைப் பொறுத்தமட்டில், இந்த ஐந்தாண்டுகளில் எந்த விதத்திலும் வளர்ச்சி அடையவில்லை.

இதனைச் சிற்சில சமயங்களில் காங்கிரஸ் அமைச்சர்களே கூறி அழுகிருர்கள்.

இவை எதனையும் மறுத்திடவுமில்லை. ஆனாலும், காமராஜர் நல்லவர், அவர் மறுபடியும் ஆட்சிபுரிய வேண்டும், ஆகவே அவருடைய வெற்றிக்காகத்தான் வேலை செய்யப் போகிறோம். அவர் வெற்றிபெறுவது, தமிழர்களுக்கு ஒரு 'வரப்பிரசாதம்' என்று எண்ணுகிறோம் என்பதாகக் கூறுகிருர்களே, இவர்களேதான் ஆயிரம் ஐந்து ரூபாய் என்று போஸ்டர் போட்டு நாட்டவருக்குக் கொடுத்தார்கள்.

இப்போது ஒரு சமயம், காங்கிரசை மறவாதீர்கள்! ஓட்டுகளைக் குவியுங்கள்! என்று போஸ்டர் போடவேண்டிய நிலைமை வருகிறதோ, அல்லது.

நாடு வாழ மாடு வேண்டும்

மக்கள் ஓட்டு மாட்டுப் பெட்டிக்கே!

காளைமாட்டுப் பெட்டி

காமராஜர் வைக்கும் பெட்டி

என்று விதவிதமான போஸ்டர்கள், பச்சை, நீலம், ஊதா கலர்களில் வெளியிட்டு விற்பனைக்குத் தரப்படுமோ என்னமோ, யார் கண்டார்கள்!

இல்லை, அண்ணு! அப்படி எல்லாம் போடமாட்டார்கள், கூச்சமாக இருக்குமல்லவா, வேண்டுமானால், நம்மீது உள்ள வெறுப்பைக் காட்டுகிற முறையில்.

கண்ணீர்த் துளிக்கு வேட்டு

காமராஜருக்கே ஓட்டு

என்று வெளியிடக்கூடும்—அல்லது இன்னமும் இழிமொழி அழகுடன் வெளியிடக்கூடும் என்று கூறுவாய்; எவ்விதமான



முறையைக் கையாண்டாலும், தம்பி நாடும் நாமும், காங்கிரஸ் குறித்து, பெரியார் கொண்டுள்ள கருத்து என்ன என்பதை எப்படி மறந்து விடமுடியும்.

அவர் என்ன, பட்டும்படாதது மாகவா, கூறியிருக்கிருர்.

பொறி பறக்கப்பறக்கப் பேசி இருக்கிருர்—பசுமரத்தாணி போலல்லவா பதிந்திருக்கிறது.

நான் கூடச் சில வேளைகளில், ஏன் வீணன தொல்லை, சஞ்சலம், சங்கடம், சிக்கல்—காங்கிரசே வந்து தொலைந்து போகட்டுமே, நமக்கென்னவென்று இருந்துவிடுவோமே, நாம் எதற்கு வம்புதனை விலைகொடுத்து வாங்குவதுபோல, தேர்தலில் காங்கிரசை எதிர்த்து நின்று இடர்ப்படவேண்டும், என்று சலிப்புடன் எண்ணிக்கொள்வதுண்டு. ஆனல் அடுத்த கணமே அவருடைய உருவம் தோன்றும் மனக்கண்முன்பு, ''அடே அறிவிலி! எவ்வளவு இடித்திடித்துக் கூறினேன்—எத்துணை அருமையான காரணம் காட்டினேன், காங்கிரஸ், ஆட்சிக்கு வரவிடக்கூடாது என்று; இவ்வளவும் கேட்டுவிட்டு, இனியும் இளித்தவாயனுவதா? காங்கிரசை எதிர்த்து நிற்கும் ஆற்றலை எவ்வளவு தந்தேன்—எங்கே போயிற்று அந்த ஆற்றல்! விழலுக்கு இறைத்த நீராயிற்று என் அறிவுரை விளக்கம்!'' என்று கேட்டுக் கேலிசெய்கிறதே, என் செய்வேன்? இதோ கேளேன், தம்பி, ஒரு விளக்கம்—அவர் அருளியது:

''காங்கிரஸ் ஒழிந்த ஒரே வருடத்தில் பட்டினி என்று பரதவிக்கும் பாமர மக்களைப் பார்க்கவே முடியாதே! கஞ்சியின்றிப் பிச்சை எடுத்துத் திரியும் தொழிலாள நெசவாளி மக்களைக் காணமுடியாதே!''

என்னென்ன இன்ப அலைகள் நெஞ்சில் கிளம்புகிறது, இந்த அரசியல் விளக்கம் கேட்கும்போது.

பாமரன் பட்டினி கிடக்கமாட்டான். பாட்டாளிக்குத் துன்பம் இல்லை!

இதைவிட 'வெற்றி' வேறு என்ன காணமுடியும்?

இந்த இன்ப நாள் காணக் காங்கிரஸ் ஒழியவேண்டும், என்கிருர்—காங்கிரஸ் ஒழிந்த ஒரே வருடத்திலே, இந்த இன்பநிலை ஏற்படும் என்று கூறுகிருர்.

இதை எண்ணத்தில் பதிய வைத்துக் கொண்டானபிறகு, காங்கிரசை எதிர்க்காமலிருக்க முடிகிறதோ!! உன்னுலும்

என்னாலும் முடியவில்லை!! காமராஜர் நல்லவர், ஆகவே, இப்போதைக்கு, காங்கிரஸ் ஒழிப்பு வேலையை நிறுத்திவைக்கலாம் என்று வாதிட முடிகிறது அவர்களால். நமக்கோ அந்த வாதம், மயக்கமளிக்கிறது.

காரணம் காட்டும்போது, கசடனே! நீ, பழங்காலப் பேச்சையே, புட்டுப்புட்டுக் காட்டிக்கொண்டு கிடக்கிறாயே, சரியாகுமா? நல்லவர் நம்மவர் என்று பெரியாரால் பரிவுடன் அழைக்கப்படும் பேறு பெற்றவர், காமராஜர், ஆட்சி புரியக் கண்டு உளம்மகிழ்ந்தோம், அவருடைய ஆட்சித் திறமையால் ஏற்பட்ட நன்மைகள் பலப்பல, மறுபடியும் அவர் ஆட்சி ஏற்படின் இன்னும் எண்ணற்ற நன்மைகள் கிடைத்திடும்—எனவேதான், இப்போது 'புதிய போர்முறை' வகுத்திருக்கிறோம்—நீ சுத்தக் 'கர்நாடகமாக' இருக்கிறாயே, எப்போதோ அவர் சொன்ன அந்தப் பழைய விஷயத்தைக் கிளறிக்கொண்டிருக்கிறாயே, இப்போது புதிய நிலைமை, புதிய காரணம், எனவே புதியமுறை, இதனைப் புரிந்துகொள் என்று சிலர் கூறிடக் கேட்டிருப்பாய்.

காரணம் என்ன கூறப்பட்டாலும், கடமையிலிருந்து துளியும் தவறாதே! துரோகம் இழைக்காதே!—என்று பெரியார் எச்சரித்திருக்கிறார்—மிகுந்த கோபத்துடன், சாபமிடுவதுபோலப் பேசியிருக்கிறார்—அது என் நினைவிலே நின்று, வாட்டுகிறது, வதைக்கிறது, தவறி நடக்காதே என்று எச்சரிக்கை செய்கிறதே, நான் என்ன செய்யமுடியும்.

நாட்டுக்குத் துரோகம் திராவிட மக்களுக்குத் துரோகம்

தகப்பன், தாய், பெண்டு பிள்ளைக்குச் செய்யும் தீங்கு

எது? காங்கிரசுக்கு யாராவது ஒரு ஓட்டு போடுவார்களானாலும் கூட, இத்தனை 'பாபமும்' பற்றிக் கொள்ளும் என்று பெரியார் கூறியிருக்கிறார்.

காரணம் கூறினால், போதாது என்கிறார்.

ஒரு ஓட்டுப்போட்டாலும் கெட்டுவிடும் காரியம்—துரோகிப் பட்டியலில் உன் பெயர் இடம்பெற்றுவிடும் என்கிறார்.

அவர் கூறும் அறிவுரை முழுவதையும், கேள், தம்பி, கேள்.

"ஒவ்வொருவரும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் காங்கிரஸ் பெட்டியில் ஓட்டுப் போடாமல் பார்த்துக் கொள்ள



வேண்டியது நமது கடமை. இதை மறந்து யாராவது ஒரு ஓட்டுக்கூட போடுவார்களானால் அது இந்த நாட்டுக்குச் செய்த துரோகம் மாத்திரமல்ல, திராவிட மக்களுக்குச் செய்கிற துரோகம் மாத்திரமல்ல, ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் தன் தகப்பன் தாய், பெண்டு பிள்ளைகளுக்குச் செய்யும் பெருந்தீங்கு"

இவ்வளவு கடுமையாக அவர் எச்சரித்திருக்கும்போது, காமராஜர் நல்லவர் என்று ஒரு காரணம் காட்டி, காங்கிரசை எதிர்க்காமலிருக்கவேண்டும் என்று எப்படித் தம்பி, நான் உனக்குக் கூறமுடியும்—நாடு நகைக்காதா? நல்லோர் கைகொட்டிச் சிரிக்கமாட்டார்களா?

நாட்டு மக்களிலே, பொதுநல நோக்கமற்றோர் சிலர், காங்கிரசைச் சுயநலம் கருதிஆதரித்து மீண்டும் காங்கிரசாட்சி ஏற்படவழி செய்து விடுவார்களோ என்ற கவலை கலக்கும் நிலையில், பெரியார், அப்படி ஒரு நிலை ஏற்பட்டால், அது நாட்டுக்கு எத்துணை பெரிய நாசம் என்பதை எடுத்துரைத்திருக்கிறார்—தம்பி—கேட்டால் நடுக்கம் பிறக்கும் உனக்கு—காங்கிரசாட்சியை எதிர்த்திட கல்லுருவும் உயிர்பெற்று எழத் துணியும் என்றுகூட, கற்பனை அலங்காரத்துடன் பேசுவாய்.

"நம்மைப் பொறுத்தமட்டில் மீண்டும் காங்கிரஸ் கட்சி ஆதிக்கத்திற்கு வருவதைவிட, உலகப் போர் வந்து, இந்தியாவின் பெரும் பகுதி மக்கள் அணுகுண்டுக்கு இரையாகி மடிவதே சிறந்த முடிவு என்போம். சித்திரவதையைக் காட்டிலும், திடீர் மரணம் மேலானதல்லவா?"

சித்திரவதை!—காங்கிரசாட்சி மீண்டும் ஏற்படுவது, மரணத்தினும் கொடியது என்றாலும், அவர் எம்மிடம் சிரித்துப் பேசுகிறார், ஆகவே, இந்தத் தடவை சித்திரவதையைச் சகித்துக் கொள்ளும்படி செந்தமிழ் நாட்டவருக்குக் கூறுவோம் வாரீர் என்று நாட்டு மக்களை அழைத்திட என்னால் எப்படித் தம்பி முடியும்!, அவர்கள் அழைக்கிறார்கள்!

நான், முன்பு பெரியார் காங்கிரஸ் குறித்துச் சொன்னதை மறவாமலிருக்கிறேன்—மாற மறுக்கிறேன்.

"காங்கிரஸ்காரர்கள் ஆளத் தகுதியற்றவர்கள்; அவர்களுக்கு நிர்வாகத் திறமையில்லை.

காங்கிரசின் பெயரைச் சொல்லிக் கொண்டு, காந்தியின் பெயரைச் சொல்லிக்கொண்டு, கதர் வேஷம் போட்டுக்கொண்டு ஏமாற்றுகிறவர்கள், ஜனநாயகம் என்று சொல்லிக்கொண்டு—மக்கள் அரசாங்கம் என்று சொல்லிக்கொண்டு

பதவி வேட்டை ஆடுகிறவர்கள், மக்களுடைய கருத்தைத் அலட்சியம் பண்ணிவிட்டுத் தங்களுடைய விருப்பப்படி அதிகாரம் செலுத்த ஆசைப்படும் எதேச்சாதிகார வெறியர்கள்”

அந்த வெறியர்களிலே வேண்டியவர்கள்—வேண்டாதவர்கள் என்று பாகுபாடு என்ன தேவைப்படுகிறது. பெரியாரின் ‘பாஷை’யில் கேட்கிறேன், எரிகிற கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி?

காமராஜர் நல்லவர், என்கிறார்கள்—எனக்குப் பெரியார் பேசும் அந்தப் பழமொழி நினைவிற்கு வருகிறது.

நேருவுக்கு வலது கரம், பார்ப்பனப் பாதுகாவலர், முதலாளிக்கு இரும்புத்தூண், அடிதடியாட்சிக் கர்த்தா, கொலைபாதக ஆட்சிக்கு உடந்தையானவர்.

இவை, காமராஜருக்கு விடுதலை சூட்டிய பட்டங்கள்.

முன்பு தேர்தலில் திருவில்லிபுத்தூர் தொகுதியில் நின்று காமராஜர் வெற்றி பெற்றார்—அப்போது அவர் தோற்க வேண்டும் என்பதற்காகப் பட்டபாடு வீணானது கண்டு, மனம் வெதும்பி “எப்படிப்பட்ட ‘ஆசாமி’ வெற்றி பெற்று விட்டார், ஐயோ! தமிழகமே! உன் கதி இதுவாகவா போக வேண்டும்” என்று கொதித்தெழுந்து கேட்டு, விடுதலை தீட்டிற்று. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரை—அடிதடியாட்சிக்குக் காரணமாயிருந்த தலைவரை—எதிர்க்கட்சிக்காரகளைச் சுட்டுக்கொன்ற கொலைபாதக ஆட்சிக்குக் காரணமாயிருந்த கட்சித் தலைவரை தோற்கடித்து உலகப்புகழ்பெற வேண்டுமென்று கருதியிருந்த தமிழர்கள் ஏமாந்துவிட்டனர்.

இராவணீயம் தோற்றுவிட்டது; விபீஷணத்தும் வெற்றி பெற்றுவிட்டது.’’

தம்பி! இப்போது இந்த விபீஷணத்துவ வெற்றியிலே தான் தமிழரின் நல்வாழ்வே இருக்கிறது என்று எடுத்துக் கூறுகிறார்கள்- நியாயந்தானா?

விபீஷணன், இராவணனாகி விடவுமில்லை; விபீஷணன் இராவணன் ஆகியோர்பற்றி கொண்டுள்ள கருத்தும் மாற்றிக் கொள்ளப்படவில்லை; ஆனால் திருவில்லிபுத்தூரில் வெற்றி பெற்ற காமராஜர், விபீஷணர்; இன்று அவர் தமிழர் தலைவர்! ஏன்? ஏன்?

திருவல்லிபுத்தூரில் வெற்றி பெறுவதற்காகக் காமராஜர் ஊரூர் சுற்றி ஓட்டுக் கேட்டுக் கொண்டிருந்தபோது. அவர்



எப்படிப்பட்டவர் என்பதுபற்றி விடுதலையில் ‘விமசர்னம்’ வெளிவந்தது. அதையும் கொஞ்சம் பார்—அவர்களிலே பொறுமைசாலிகள் கிடைத்தால் பார்க்கச் சொல்லு;

நாடாரின் வாய்ப்புக் குறித்து கேட்டேன், இதற்கு ஒரு குடிமகன் கூறியதாவது—

காங்கிரஸ் தலைவர் காமராஜ நாடாருக்கு இங்கு செல்வாக்கில்லை. அவர் எங்கு சென்றாலும் யாரோ என்று மக்கள் அலட்சியமாகக் கருதுகின்றனர்.

அவருக்கு அரசியல்பற்றி மூலாதார அறிவே கிடையாது.

“நாடாரால் அரசியல் சூழ்ச்சிகள் தான் நாம்தெரிந்து கொள்ள முடிந்தது. போதும் அச்சூழ்ச்சிகள்”

“முதலமைச்சராயிருந்த கண்ணியமான அரசியல் வாதியான ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரை மேற்படி பதவியிலிருந்து நீக்கியதற்கு நாடார்தான் பொறுப்பாளி. அவ்வாறு இருக்க, நாடாருக்கு ஏன் நாங்கள் எங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும்’’

“நாடாரைப் போன்ற சுயசாதிப் பித்தரைப் பார்க்க முடியாது. சுய சாதியிலும் தமக்கு வேண்டிய நண்பர்களுக்கே சலுகை காட்டுவார். எனவே நாடார்களிலே பெரும்பாலோர் அவருக்கு எதிராகவே இருப்பர்”

இருக்கலாம்! திருவில்லிபுத்தூர் தேர்தலின்போது காமராஜரின் குணாதிசயம் அவ்விதம் இருந்திருக்கலாம்—பிறகு அவர், படிப்படியாக, மெல்ல மெல்ல, நல்லவராகி விட்டிருக்கக்கூடாதா, என்று கேட்கத் தோன்றும் தம்பி, அந்த ஆராய்ச்சியும் சிறிதளவு செய்தே பார்த்துவிடுவோமே, அதிலென்ன கஷ்டம்.

“காமராசர் தோற்றார் என்ற செய்தியினால், இந்த மாகராணம் மட்டுமல்ல, இந்த நாடே எவ்வளவு கிடுகிடுத்துப் போயிருக்கும். நேருவுக்கு வலது கையாகவும், பார்ப்பனர்களுக்கு நீங்காத் துணையாகவும், முதலாளிகளுக்கு இரும்புத் தூணாகவும் இருக்கின்ற ஒருவரைத் தோற்கடிக்கக்கூடிய தலைசிறந்த வாய்ப்பைத் தமிழ் மக்கள் இழந்துவிட்டார்களே! தோழர் தங்கமணிக்குப் பயந்துகொண்டு விருதுநகரை விட்டு ஓடி, சென்னை ராஜ்ய சட்டசபையையும்விட்டு ஓடி, பார்லிமெண்ட் அபேட்சகராக நின்ற ஒரு காங்கிரஸ் தலைவரைத் தோற்

கடிக்கக்கூடிய தங்கமான வாய்ப்பைப் பாழாக்கிவிட்டார்களே, படுமோசக்காரர்கள்''

என்று விடுதலையில் எழுதப்பட்டது; இதை எல்லாம் கண்டு காமராஜர் திருந்திவிட்டிருக்கக் கூடாதா என்று கேட்போர் எழக்கூடும் அல்லவா? அதையும் கவனிப்போம், தவறென்ன!

காவடி தூக்கினர்

கன்னத்தில் போட்டுக்கொண்டார்

காலில் வீழ்ந்தார்.

தோள்மீது சுமந்தார்

கோவை சுப்பிரமணியத்தை அடுத்துக் கெடுத்தார்!

இவ்வளவு, திடுக்கிடக் கூடிய கேடுகளை, இழிவு என்றும் பாராமல் செய்த ஆசாமி யார்? இப்படி ஒரு தமிழ்ப் பண்பு இழந்தவரை நாடு தாங்கிக்கொண்டிருக்கிறதா? தமிழ் மண்ணிலேயா தாசர் புத்தி தலைக்கேறிய 'ஜென்மம்' இருக்கிறது!—என்றெல்லாம் கேட்கத் தோன்றும். ஆசாமியார், என்பதை அறிந்து கொள்வதற்கு முன்பு, அரசியல் சம்பவம் என்ன என்பது பற்றி அறிந்துகொள்வோம்.

பொதுத் தேர்தல் முடிந்து, காங்கிரஸ் இளைத்து, ஈளை கட்டி எதிர்க்கட்சிகள் ஒன்றுகூடி என்ன செய்யுமோ என்று கிலிகொண்டிருந்தது.

அப்போது தமிழ்நாடு காங்கிரசுக்கு, காமராஜர்தான் கக்கன்.

காங்கிரஸ் குலைந்துவிடாது இருக்கவும், மந்திரிசபை அமைக்கவும், ஆச்சாரியாருடைய தயவு தேவைப்பட்டது.

ஆச்சாரியாருக்கும் தனக்கும் நீண்டகாலமாக இருந்து வரும் விரோதத்தை, இந்தச் சமயம் கவனித்தால், காரியம் கெட்டுவிடும் என்று கருதிய காமராஜர், காங்கிரஸ் கட்சி சார்பில் மந்திரிசபை அமைத்து நடத்திச் செல்லும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படி, ஆச்சாரியாரிடம் சென்று, "பயபக்தி விசுவாசத்துடன்'' பணிந்து கேட்டார்.

அந்த ''அடிமைப் புத்தியை''க் கண்டித்து, காரசாரமாக விடுதலை எழுதிற்று-அதுபோது கிடைத்த மணிமொழிகள்தான் முன்னாலே உள்ளன.



''திருப்பரங்குன்றத்தில் தங்களைக் குப்புறத் தள்ளியதற்காகக் கன்னத்தில் போட்டுக்கொள்கிறோம். திராவிடர்களாகிய எங்களில் யாருக்கும் தலைமைப்பதவிக்கான தகுதி கிடையாது. நாங்களெல்லோரும் அடி முட்டாள்கள். நெல்லிக்காய் மூட்டைகள் உதவாக்கரையான சுரைக்காய் குடுக்கைகள். தங்கள் திருப்பாதங்களைக் கண்ணில் ஒத்திக் கொள்கிறோம். தயவு கூர்ந்து கருணை புரியுங்கள். மீண்டும் பதவியேற்று எங்களுக்கு நல்லபுத்தி கற்பியுங்கள்"

என்று கூறுவதுபோல, அவர் வீட்டுக்கு நூறுதடவை காவடி தூக்கி மண்டியிட்டு வணங்கி, தோள்மீது சுமந்துவந்து தலைமைப் பீடத்தில் அமர்த்திவிட்டனர்.

தோழர் காமராசர் கோவை சுப்ரமணியத்திடம் கூடவே இருப்பது போல நடித்து, இறுதியில் அவரைக் கவிழ்த்துவிட்டு, ஆச்சாரியாரிடம் அடைக்கலம் புகப்போகிறார் என்று ஒரு வாரத்துக்கு முன்பே பல முக்கிய நண்பர்கள் பேசிக்கொண்டனர். அது தவறு என்று கருதினோம். ஆனால் இன்று உண்மையாகிவிட்டது!!

எனவே, திருவில்லிப்புத்தூரில் எந்தக் காமராஜர் தெரிந்தாரோ அவரேதான், பிறகும் தெரிகிறார்—விடுதலையின் கண்ணோட்டத்தின்படி.

காங்கிரஸ் கட்சியின் கண்ணியத்தையும் செல்வாக்கையும் காப்பாற்றுவதற்காக, சொந்தத்தில் இருந்துவந்த பகையையும் மறந்ததுபெருந்தன்மையல்லவா! சொந்தத்தில் 'மானபிமானம்' பார்த்துக்கொண்டு, கட்சி எக்கேடோ கெட்டுப் போகட்டும் என்று அவர் இருந்துவிடவில்லை, இதிலிருந்தே அவர் எவ்வளவு நேர்மையுணர்ச்சி கொண்டவர், கட்சிப்பற்றுக் கொண்டவர் என்பது தெரியவில்லையா?

காங்கிரசுக்குள்ளேயோ பிளவு இருக்கிறது—காமராஜ் காங்கிரஸ்—ராஜாஜி காங்கிரஸ் என்று கோஷ்டிச் சண்டை இருக்கிறது, கோட்டைக்குள்ளே குத்தும் வெட்டும் இருக்கும்; இந்தச் சமயம்தான் அந்தக் கட்சியை ஒழித்துக்கட்ட ஏற்றது என்று காங்கிரஸ் விரோதிகள் எண்ணுவார்கள், இதற்கு நாம் இடமளிக்கக்கூடாது, நமக்கும் இராஜகோபால ஆச்சாரியாருக்கும் சொந்தத்தில் ஆயிரத்தெட்டு விரோதம் இருக்கலாம், அதற்காகக் காங்கிரசுக்குக் கேடுவர சம்மதிக்கக் கூடாது, இப்போது நாம் எப்படியாவது ஆச்சாரியார் துணையைப் பெறவேண்டும் என்று எண்ணிக் காரியமாற்றியது மிகத்திறமையான இராஜதந்திரமல்லவா?

இவ்விதமெல்லாம் கூறவில்லை,

காவடி தூக்கினார்

காலடி வீழ்ந்தார்

கன்னத்தில் போட்டுக்கொண்டார்.

என்று சொன்னதுடன், கோவை சுப்ரமணியத்தை அடுத்துக் கெடுத்தார் என்றுதான் கூறப்பட்டது.

காங்கிரஸ் அமைச்சு நடைபெறுகிறது—பெரியார் போர்க் கொடி உயர்த்தினார், வடநாட்டுத் துணிக்கடை, உண்டிச் சாலைகளின் முன்பு மறியல் நடத்தினார். அப்போது, காமராஜர் என்ன செய்தார்?

ஆட்சியில் உள்ளவர்கள் உண்டு, பெரியார் உண்டு, நமக்கென்ன என்று இருந்தாரா? இல்லை!

இதென்ன மறியல்! நாங்கள் செய்த மறியல், மகத்தானது தூய்மையானது — அது சத்யாக்கிரகம் — இது துராக்கிரகம்—என்று கண்டித்தார்.

அடக்குவோம், ஒடுக்குவோம் என்று ஆர்ப்பரித்தார்.

ஆட்சியாளருக்கு இவர் 'வக்காலத்து' வாங்கிக்கொண்டு பேசினார்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் என்ற முறையில், அது அவருடைய கடமை அல்லவா, என்று கேட்பர்; ஆம்! ஆம்! கடமை! அதனைக் குறைகூற அல்ல இதுபோது கூறுவது, அந்தச் சமயத்தில் காமராஜர், நல்லவர்—நம்மவர் என்று கூறத்தக்க நிலையில் இல்லை என்பதை நினைவூட்டத்தான்.

காமராஜர் அத்துடன் விடவில்லை; மறியலுக்கு எதிர் மறியல் செய்யப்போவதாகக் கூறினார். எடுத்தனர் எழுதுகோல்-தொடுத்தனர் பாணம்—காமராசர் என்றோர் தலைப்பில் தலையங்கம் வெளி வந்தது விடுதலையில் — அதிலே, காமராசரின் படப்பிடிப்பு முதல்தரமாக அமைந்திருக்கிறது-காண்போம் தம்பி, காண்போம்.

''காமராஜர் இன்றைய இந்த தமிழ்நாட்டில் தன்னை ஒரு சர்வாதிகாரி ஸ்டாலின் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார். சர்க்கார் தன் காலடியில் இருப்பதாகவும், மந்திரிகள் தன்னுடைய அடிமைகள், வேலைக்காரர்கள் என்றும் எண்ணிக் கொண்டிருக்கிறார்.''



எடுத்த எடுப்பிலேயே, விடுத்தகணை 'விர்'ரென்று பாய்கிறது பார்த்தாயா தம்பி,

அகம்பாவம்

ஆணவம்

அதிகார வெறி

எனும் கொடிய குணங்கள் குடிகொண்டவராக, சர்வாதிகாரியாக இருக்கிறார், என்று, சவுக்கடி கொடுத்த விடுதலை, மேலும் எழுதுகிறது.

''காமராஜர் யார்? அவரின் இயற்கை நிலை என்ன? எப்படி இருந்தவர்? என்ன காரணத்தால் இவர் பொது வாழ்வில் மதிக்கவேண்டியவரானார்? இன்றைய வாழ்வு இவருக்கு எப்படி வந்தது? இவருடைய பொருளாதாரம், கல்வி, பொது அறிவு, அரசியல் திறமை, தகுதி, திறமை நேர்மை, அனுபவம், ஒழுக்கம் எவ்வளவு? என்பவைகளான விஷயங்களை இவரே சிந்தித்துப் பார்ப்பாரானால், இவர் இப்போது பேசும் பேச்சுகளுக்குதான் தகுதியுடையவரா? இந்தப் பேச்சுகள் பேசுவது தன் பேரால் இருந்துவரும் பதவிக்கு ஏற்றதா என்பது விளங்குவதோடு, மிகுதியும் வெட்கப்படுவார் என்றே கருதுகிறோம்''

காமராஜர்மீது இந்தக் கடும்தாக்குதலை நடத்தினால் மட்டும் போதாது, இதில் ஒளிவு மறைவு என்ன, மக்களிடம் வெளிப்படையாகக் கூறிவிடவேண்டியதுதான், என்று தீர்மானித்து, காமராஜரின் முகமூடியைப் பிய்த்தெறிந்து, இந்த அவலட்சணத்தை நீங்களே பாருங்கள் என்று மக்களிடம் காட்டுவதுபோல, விடுதலை, மேலால் எழுதுகிறது;

''காங்கிரசானது முதல் தரமக்களிடமிருந்து பிடுங்கி மூன்றுந்தர மக்களிடம் ஒப்புவிக்கப்பட்டாலொழிய தங்களால் இந்த நாட்டில் வாழமுடியாது என்கின்ற நிலை, பார்ப்பனர்களுக்கு ஏற்பட்டபோது, அந்த மாதிரி நிலை பார்ப்பனருக்கு ஏற்படும்படியாக சுயமரியாதை இயக்கம் செய்துவிட்டதன் பயனாய், பார்ப்பனர்கள் தேடிப்பிடித்த ஆள்களில் ஒருவராக காமராஜர் பார்ப்பனர்களுக்குக் கிடைத்தவரே தவிர. அதற்கேற்ற காமராஜரின் தகுதி என்ன என்று சிந்திக்கப் பொது மக்களை வேண்டுகிறோம்''

தம்பி! நீயும் நானும் காங்கிரஸ் வரலாற்றிலே பெரும் பகுதியை, படித்துத் தெரிந்து கொண்டவர்கள்—பெரியார்

அப்படி அல்ல; அவர் அந்தச் சம்பவங்களிலேயே தொடர்பு கொண்டிருந்தவர். காங்கிரசின் தலைவர்களின் கொடிவழிப் பட்டி அறிந்தவர்—யாரார் என்னென்ன யோக்யதை உள்ளவர் என்பதைத் தெரிந்தவர்—எவரெவர் எப்படி எப்படிக் காங்கிரசுக்குள் வந்து சேர்ந்தனர் என்ற ‘கதைகள்’ அவருக்குத் தெரியும்.

அவர் கூறுகிறார், இந்தக் காமராஜர், பார்ப்பனர்கள் தேடிப் பிடித்துக்கொண்டு வந்து சேர்த்தவர்களிலே ஒருவர் என்று.

மூன்றுந்தரம்!! என்பதைக் கூறிவிட்டு, சந்தேக மிருப்போர்,

கல்வி

பொது அறிவு

ஒழுக்கம்

அனுபவம்

நேர்மை

தகுதி

திறமை

என்ற இவைகளைக் கவனித்துப் பார்த்து, இந்தக் காமராஜர் யார் என்பதைத் தீர்மானித்துக்கொள்ளுங்கள் என்று கூறுகிறார்—ஆண்டு ஆறுதான் உருண்டோடியுள்ளன, அந்த அரிய கருத்துரை நாட்டுக்கு அளிக்கப்பட்ட பிறகு.

பதவியும், அதிகாரிகளை மிரட்டி வளைய வைக்கும் வாய்ப்பும் இருந்தால், அகம்பாவம் ஏற்பட்டு, எப்படிப் பட்டவர்களையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசும் துணிவு கிளம்பும். இது காமராஜர் விஷயத்தில் முற்றிலும் உண்மையாகிவிட்டது என்பதையும், விடுதலை விளக்குகிறது.

“காமராஜருடைய பதவி காரணமாக காமராஜருக்கு சில அதிகாரிகள் அடங்கி நடக்கவேண்டியதாகவும், காமராஜர் சிபார்சின் மேல் பதவி பெறவேண்டியவர் களாகவும், பல பெரும் தப்பிதங்கள் செய்து தப்பித்துக் கொள்ள வேண்டியவர்களாகவும் இருக்கும்படியான நிலையில் இருப்பதால், காமராஜர், உண்மையிலேயேதான் ஏதோ பெரிய பதவியில் இருக்கும் சர்வாதிகாரி என்ப



தாகக் கருதிக்கொண்டு அகம்பாவ வெறியில் இருக்கிறார்”

பெரியார் பொதுமக்களைச் சிந்தித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொண்டதற்கு ஏற்ப, இப்போதும் நாம் சிந்தித்துப் பார்க்கிறோம், தம்பி, காமராஜர்.

கல்வி

திறமை

பொது அறிவு

அனுபவம்

எனும் அருங்குணங்களின் பெட்டகம் என்று முடிவு கட்ட, மனம் இடம் தரவில்லை. பார்ப்பனர்களின் கையாள் என்ற பேச்சும், முதலாளிகளின் பாதுகாவலர் என்ற பேச்சும், பொருளற்றுப் போய் விட்டதாகத் தெரியவில்லை; அன்று போலவே இன்றும் காமராசர் திராவிட இன உணர்ச்சிக்கு மதிப்பளிக்க மறுக்கும் மகானுபவராக இருப்பது கண்கூடாகத் தெரிகிறது—இந்நிலையில், என்ன காரணத்துக்காக அவர் நல்லவர்—நம்மவர் என்று கொள்வது?

இராஜ ரத்தினம்

சுந்தர வடிவேலு

என்று பட்டியல் கொடுத்தால், ஆச்சாரியார் காலத்து

சபாநாயகம்

சிங்காரவேலு

தேவ சகாயம்

ஞானசம்பந்தம்

என்றும் அடுக்கிக் கொண்டே போகலாமே!!

எனவே, விபீஷணன் என்று திருவில்லிபுத்தூரின்போது. காட்டப்பட்ட காமராஜர், அதே போக்கிலே தான் இருக்கிறார். நோக்கமும் வேறு ஆகிவிடவில்லை.

காங்கிரசோ, முன்பு இருந்ததைவிட, மக்களுக்கு, குறிப்பாக தென்னகத்து மக்களுக்குக் கேடு விளைவிக்கும் பாசீச அமைப்பாக மாறிக்கொண்டு வருகிறது.

00240

இதைக் கண்டும், தம்பி! நம்மீது உள்ள கோபத்தைக் காரணமாகக் கொண்டு, காமராஜரை ஆதரித்து, அதன் தொடர்பாகக் காங்கிரசை ஆதரித்து, மீண்டும் காங்கிரசாட்சி ஏற்படுத்தி விட்டால், ஏற்பட உடந்தையாக இருந்தால், நாட்டு நிலைமை எப்படி ஆகும்? தம்பி! நான் கூறினால்,பொறி பறக்காது; முன்பு பெரியார் சொன்னதை 'இரவலாக'க் கொண்டு உனக்கும், உன் மூலம், நாட்டுக்கும் தருகிறேன்.

"அடுத்த தேர்தலிலேயும் காங்கிரசு பதவிக்கு வந்து விட்டால் என்ன நடக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? நாட்டில் மனித ஆட்சியா நடக்கும்? அசல் கரடி, புலி, ஓநாய், சிறுத்தை, சிங்கம் ஆளுகிற மாதிரியான எதிர்ப்பட்டதை அடித்துக் கொல்லுவதான முறையில் தான், மிருக ஆட்சிதான் நிச்சயம் நடக்கும்'

அப்படிப்பட்ட 'மிருக ஆட்சி' ஏற்படக்கூடாது எச்சரிக்கையாக இருங்கள், காங்கிரஸ் கட்சியைப் பாசீச ஸ்தாபனமாக்கி விடாதீர்கள் என்று மக்களிடம் இந்தத் தேர்தலின்போது எடுத்துக் கூறுவோம், தம்பி. நம்மாலே, காங்கிரசின் கேடுபாடு குறித்தும், காமராசரின் திருக்கலியாண குணம்பற்றியும், ஆணித்திறமாக எடுத்துக்கூற முடியாத போது, காமராஜர் குறித்தும், காங்கிரஸ் பற்றியும், 'விடுதலை' நாட்டுக்குத் தந்துள்ள விளக்க உரைகளைத் தொகுத்து அளித்தாலே போதும், சூடும் சுவையும் நிரம்ப உண்டு.

குரங்குகைப் பூமாலைபோல, காங்கிரசு சர்க்கார் வரிப் பணம்போல.


யானை உண்ட முலாம் பழம்போல! காங்கிரசு நிதிக்குக் கொடுத்த பணம்போல!

பெருச்சாளி புகுந்த வீடுபோல! காங்கிரஸ் சர்க்கார் ஆண்ட நாடுபோல!

இப்படிப்பட்ட அரசியல் பழமொழிகள்—படப்பிடிப்புகள்—கண்டனங்கள்—விளக்கங்கள்—ஏராளம்—ஏராளம்!!

பேரகராதி நமக்குப் பெருந்துணை புரியும்!!

அன்பன்,



2-9-1956

கடிதம் : 64

# சந்தனம் அரைத்த கரம்!

இந்திய சர்க்காருக்கு வரிப்பணம்—வெளி நாட்டாருக்கு விருந்தும் வரவேற்பும்—திட்ட ஊழல்—ஏழை துயரம்.

தம்பி!

ஒரு ஓலைக்கொத்துக் குடிசைக்குள்ளே நடைபெற்றுக் கொண்டிருக்கும், அவலச் சுவைமிக்க சம்பவம் கூறுகிறேன், கேள். மாட மாளிகைகளிலே நடைபெறும் சம்பவமாக இருந்தால், கேட்கத் தித்திக்கும், இது...? என்று எண்ணி, அலட்சியமாக இருந்து விடாதே, பலப்பல ஆயிரம் குடிசைகள் பாடுபட்டால்தான் ஒரு மாளிகை; கவனமிருக்கட்டும்.

'கையைத் தூக்கவே முடியவில்லை. ஒரே குத்தல், குடைச்சல். நானும் எப்படி எப்படியோ சமாளித்துப் பார்க்கிறேன், முடியல்லே...பிராணனை வாட்டுது..."

"பாரடி அம்மா, உங்க அப்பன், சுளுக்குக்கு இந்தக் கூச்சல் போடறதை! கை சுளுக்கிக்கிட்டுதாம், அதுக்கு உசிரு போகுது, தாளமுடியல்லேன்னு ஒரே அமக்களம் பண்ணுற கூத்தைப் பாரு..."

"பெரிய கிராதகிடி, நீ. நான் என்ன, துடியாத் துடிக்கறேன். மூணுநாளா நான் பல்லைக் கடிச்சிக்கிட்டு, நோவை பொறுத்துக்கிட்டு இருந்தேன்—என்னாலேயும் வலி தாளமுடி

யாததாலே கூச்சல் போடறனே தவிர, வேணும்னு வேஷமாப் போடறேன்...''

''இருக்கும்மா! அப்பா எப்பவும், எப்படிப்பட்ட வலியை யும் பொறுத்துக்கிட்டு இருப்பவராச்சே. பாவம்! என்னமா வலிக்குதோ என்னமோ...''

''அவ மனம், துளியாவது பதறுதான்னு பாரேன் பொண்ணு, இவளுக்கு மண்டைக்குத்தல் வந்துவிட்டா, போடற கூச்சலிலே, ஊரே திரண்டு வந்தூடும்...''

"சும்மா இருங்க...எந்தக் கை வலிக்குது...சோத்துக் கையா...? எந்த இடத்திலே...? தோள்பட்டையாண் டையா? முதுகுப்பக்கமாகக்கூட வலிக்குதா...? சுளுக்குத் தான்...வேறே ஒண்ணும் இல்லே..."

"எலும்பு கிலும்பு முறிஞ்சி போயிருக்குமா, இம்மாம் வலி இருக்குதே!...''

''ஏம்பா! பச்சிலே வைத்யரண்டை போய்க் காட்டினு, நல்லதாச்சே...''

''அடி ஏண்டி, பச்சிலேயும் உலர்ந்த இலேயும்...நீ போயி நம்ம கொல்லேமேட்டுக் கொளத்தாங்கரையிலே, களிமண்ணு இருக்கு பாரு, அது ஒரு நாலு கை கொண்டா...''

''களிமண்ணு, சஞ்சீவியாச்சே! சுளுக்கு, பிடிப்பு, வீக்கம், இதுக்கெல்லாம், களிமண்ணே குழைச்சி வலிக்கிற இடத்திலே தடவினு, அது உலர உலர, வலி இருக்கற இடம் தெரியாமேப் போயிடும்...''

''வெறும் களிமண்ணு?''

''ஆமாம்; நீ போடி; உங்க அப்பாவுக்கு எதுலேயும் நம்பிக்கை இருக்காது. களிமண்ணு போட்டுகிட்டு வலியைக் கொஞ்சம் பல்லேக்கடிச்சிகிட்டு பொறுத்துகிட்டு, ராப்பொழுது ஓட்டிவிட்டா, பொழுது விடிஞ்சதும் சுளுக்கு சொல்லாமே கொள்ளாமே ஓடிப்போயிடும்...''

''எம் புள்ளே! நெஜமாத்தான் சொல்றியா? இல்லே, என்னேச் சும்மா அலங்கோலம் பண்ணவேணும்னு எண் ணமா?''

''அம்மா! விளேயாட்டுத்தனமா எதாச்சும் செய்துட்டு வலி, அதிகமாயிடப்போகுது...''



''ஆமாம், எனக்கு வயசு அஞ்சு, நான் விளேயாடறேன். ...அடி, ஏண்டி! அந்த ஆகாவழியோட கூடிகிட்டு, கதை பேசறே,போயி களிமண்ணு கொண்டுவா...வரவழிலே, எருக் கம் செடி இருக்கும், பத்து இலேயும் கிள்ளிகிட்டுவா...''

''எருக்கம் பால் தடவினு புண்ணுயிடும்னு சொல்லு வாங்களே...''

''கொழந்தைப் புள்ளெக்குக் கூடத் தடவலாம். புண்ணு ஏன் ஆவுது? போடி, இருட்டிவிட்டா, அந்தப் பக்கம், கன்னிம்மா கோயில் சர்ப்பம் உலாத்தும்...''

''ஆமாம் பொண்ணு, பார்த்துப்போ...''

''அது என்ன பண்ணும்? கன்னிம்மா! கன்னிம்மான்னு மூணு தடவை சொன்னு, மாயமா மறைஞ்சிடும்...''

''எதுக்கும் ஜாக்கிரதை வேணும்..போயிட்டு சுருக்கா, வாம்மா. என்ன இழவெடுத்த சுளுக்கோ தெரியல்லே, உசிரை வாட்டுது...''

களிமண் தடவி, நோய், நொடியிலே போய்விடும் என்று உபசாரம் பேசி, அவனே அன்றிரவு உறங்கவைக்க, தாயும் மகளும் வெகுபாடு பட்டனர். காலேயில்எழுந்ததும்,வலி அதிக மாயிற்றே தவிர குறைய வில்லே.

'அப்ப இது, நோய் அல்ல; கன்னியம்மா குத்தம்' என்று தீர்ப்பளித்துவிட்டு, கோயில் சுற்றக் கிளம்பிவிட்டாள் கோவிந்தம்மா. கந்தப்பன், வேலேக்குப் போகமுடியாதே, என்ன கோபம் செய்துகொள்வார்களோ, வேறு ஆளே வைத்து விடுவார்களோ என்று பயந்தான். ஆனல் என்ன செய்வது, இப்படிப் பயந்து பயந்துதான், வலி இருக்கும் போதே அதைப் பொருட்படுத்தாமல், மூன்று நாட்களாக வேலேக்குச் சென்று, வலியை அதிகமாக்கிக்கொண்டான்.

"ஏன், அந்தச் சோம்பேறி, இன்னேக்கு மட்டம் போட்டுட்டுதா...?''

என்று ஒரு குரலும், அதற்கு ஆதரவாக,

''இப்பத்தான் இதுகளுக்கெல்லாம் திமிர் தலேவிரித்து ஆடுதே''

என்று வேருேர் குரலும் கிளம்புவது, கந்தப்பனுக்குக் கேட்பது போலவே இருந்தது. இருந்தாலும் பரவாயில்லே,

தேவையைவிட அதிகமாகவே சரக்கு தயாரித்து வைத்தா யிற்று; இன்று ஒரு நாள் வேலை செய்யாததாலே காரியம் குந்தகப்பட்டுவிடாது என்ற தைரியத்தில் கந்தப்பன் இருந்தான். தைலம் வாங்கிவரச் சொல்லி தன் மகள் முத்தம்மாளை அனுப்பிவிட்டு, அம்மா! அப்பா! அம்மம்மா! ஐயயோ...! அடடடா!—என்று முனகியபடி படுத்துக் கிடந்தான்.

சுளுக்கு, எலும்பு முறிவு ஆகியவைகளுக்குப் பச்சிலைத் தைலம் தடவிக் குணப்படுத்தும் பரம்பரை ராஜ வைத்யர் ராமண்ணு வீட்டில் இல்லை. அன்று செந்திலாண்டவன் கோயிலில் முருகனுக்குச் 'சந்தனக் காப்பு' உற்சவம், பிரமாதம், அதைத் தரிசிக்கப்போயிருந்தார் வைத்தியர்.

முருகனுக்குச் சந்தனக் காப்பு உற்சவம் தடபுடலாக நடைபெற்றது.

பல ஆயிரக்கணக்கான பக்தர்கள், கண்டுகளித்தனர்.

மேளம், வாணவேடிக்கை எல்லாம், செலவு பற்றிய கவலையற்ற முறையில், ஏற்பாடாகி இருந்தது.

'சந்தனக்காப்பு' சேவை முடிந்ததும், சந்தனம் பக்தர் களுக்குத் தரப்பட்டது—விலைகொடுத்து அல்ல, காணிக்கை செலுத்தி, சந்தனம் பெற்றுக்கொண்டனர்.

அத்தரும் பன்னீரும், அரகஜாவும் பிறவும் கலந்துதான் பார், என் செத்திலாண்டவன்மீது அப்பப்பட்ட சந்தனத் துக்கு உள்ள மணம், இருக்கிறதா என்று பார்! இருக்கவே இருக்காது! சந்தனக் காப்பு முடிந்ததும், தனியாக ஒரு தெய்வீக மணம், சந்தனத்துக்கு ஏற்பட்டுவிடுகிறது! மல்லிகை முல்லை, மருவு மருக்கொழுந்து, ரோஜா மகிழம்பூ, மனோரஞ்சிதம், எனும் புஷ்பங்களிலே எல்லாம் கிடைக்கும் 'வாசனை' அவ்வளவும் ஒன்ருகச் சேர்ந்து விட்டதுபோலிருக் கும். செந்திலாண்டவன் கோயில் சந்தனக்காப்பு உற்சவம் என்ருல், தேசமுழுவதும் தெரியும்—என்றெல்லாம் பக்தர்கள் பேசிக்கொண்டனர்.

எலுமிச்சை அளவு, விளாங்காய் அளவு, குண்டுமணி அளவு, உருத்திராட்சைக் கொட்டை அளவு, இப்படிப் பக்தர்கள் அவரவர் செலுத்தும் காணிக்கைக்குத் தக்கபடி, சந்தனப் பிரசாதம் பெற்றுச் சென்றனர்.

தெய்வீக மணம் பொருந்தியது என்று நம்பப்பட்ட இந்தச் சந்தனம் முழுவதும், குடிசையிலே குமுறிக்கொண்



டிருக்கிருனே கந்தப்பன், அவன் அரைத்தெடுத்துக் கொடுத்தது!

செந்திலாண்டவன் கோயிலில், சந்தனம் அறைத்துக் கொடுக்கும் 'ஊழியக்காரன்' இந்தக் கந்தப்பன்.

பல ஊர்களிலிருந்தும் தரிசனத்துக்கு வரும் பக்தர்கள், பகவத் பிரசாதம் என்று பயபக்தியுடன் காணிக்கை செலுத் திப் பெறுவதற்காகத் தயாரிக்கப்பட்ட சந்தனம், இந்தக் கந்தப்பன், கைவலிக்க வலிக்க அறைத்தெடுத்துக் கொடுத்தது.

சந்தனக்காப்பு உற்சவத்தை முன்னிட்டு, கந்தப்பன், இரவு பகலாகச் சந்தனம் அறைத்தெடுத்துக் கொடுத்துத் தான், கை சுளுக்கிக்கொண்டுவிட்டது.

மார்பில் பூசிக்கொண்டும், நெற்றியில் பொட்டாக வைத் துக்கொண்டும், சந்தனம் 'கமகம வென்று இருப்பது குறித்துக் களிப்புடன் பேசிகிருர்கள், பக்தர்கள்!

கன்னத்தில் தடவி மகிழ்பவரும், மார்பிலே பூசிக் கொண்டு மந்தகாசமாக இருப்போரும், மாளிகைகளிலே உள்ளனர்.

உண்ட ருசியான பண்டம் 'ஜீரணம்' ஆவதற்காகப் பூசிக்கொண்டு முருகா! கடம்பா! கந்தா! வடிவேலா!—என்று கூறிப் புரண்டுகொண்டிருக்கிருர்கள், சில பக்தர்கள். கோயில் அர்ச்சகர், தனக்கு வேண்டியவாளுக்காகப் பிரத்யேகமாக, வெள்ளி வட்டிலில் சந்தனத்தை வழித் தெடுத்துவைத்திருக்கிருர்; வத்சலாவோ சபலாவோ, அபரஞ் சிதமோ அம்சாவோ, அதன் மணம் பெற்று மகிழப் போகி ருர்கள்.

காட்டில் கிடைக்கும் மரம்—அதிலே கவர்ச்சியூட்டும் மணம்!—அரைத்தெடுத்திட உழைப்பாளிக்கு முடிகிறது. சீமான்களின் மாளிகையாக இருந்தால்கூட கந்தப்பன், இவ்வளவு கடினமாக உழைத்திருக்கமாட்டான்; கைசுளுக்கு ஏற்பட்டிருந்திராது. செந்திலாண்டவன் கோயிலில் சந்தனம் அரைத்துக் கொடுப்பது என்பது 'புண்ய காரியம்' என்பது அவனுக்குக் கூறப்பட்டது.

''கேவலம் கூலிக்காக, சோற்றுக்காகவாடா, கந்தப்பா நீ வேலை செய்கிருய்? சகல சித்திகளையும் அருளவல்ல, முருகப்பெருமானுக்கு நீ செய்யும் கைங்கரியம் இது—ஊழியக் காரனல்ல நீ. பக்தன்! தெரிகிறதா! எனவே, கஷ்டத்தைப்

பாராதே, காசு எவ்வளவு தருவார்கள் என்று கேளாதே, பகவானுக்கு நாம் சேவை செய்கிறேம் என்ற எண்ணத்தோடு வேலை செய், வேல்முருகன், உனக்குத் தக்க சமயத்தில் தக்க விதமாக அருள்பாலிப்பார், என்று திருப்புகழ் பஜனைக் கூடத்தாரும், கோயில் தர்மகர்த்தாவும் கூறினர்; அவர்களெல்லாம் மெத்தப்படித்தவர்கள், அவர்கள் கூறுவது சரியாகத்தான் இருக்கும் என்ற நம்பிக்கை கந்தப்பனுக்கு. எனவேதான், கை தழும்பேறியதைக் கவனியாமல், சுளுக்கு ஏற்பட்டு உயிர் துடிக்கும் விதமான வலி உண்டாகும் அளவுக்கு, சந்தன அரைப்பு வேலையைச் செய்திருக்கிறுன்.

முருகனுக்குச் சந்தனக் காப்பு நடைபெற்றது, சன்னதியே நறுமணம் பெற்றது.

பக்தர்கள் சந்தனப் பிரசாதம் பெற்றனர்—மகிழ்ந்தனர். கோயில் நிருவாகத்தினர், வரவு செலவு கணக்குப் பார்த்தனர். நல்ல ஆதாயம், எனவே, மிகுந்த மகிழ்ச்சி அவர்களுக்கு. அவர்களின் இல்லங்களிலெல்லாம் சந்தன மணம் கமழ்ந்தது! கந்தப்பன் வீட்டிலேயோ, எருக்கம்பால் வாடை மூக்கைத் துளைத்தது. கந்தப்பன் அரைத்துக் கொடுத்த கலவைச் சந்தனம், பலருடைய உடலுக்கு அழகும் மணமும் அளித்தது கந்தப்பன் உடலில், களிமண் பூசப்பட்டிருக்கிறது. எருக்கம்பால், தடவி இருக்கிருர்கள்; மூதாட்டி ஒருத்தி சொல்லிவிட்டுப் போயிருக்கிருள், ''இதெல்லாம் எதுக்கு? பசுமாட்டுச் சாணியைக் கொதிக்கவைத்துத் தடவு, நோய் பட்டுன்னு விட்டுப்போகுது பாரு'' என்று.

இந்திய சர்க்காருக்கும் தம்பி, மக்கள், கோடி கோடியாகப் பணத்தைக் கொட்டிக் கொடுத்துவிட்டு, கைசுளுக்குக்கு எருக்கம்பால் தேடிடும் கந்தப்பன் போல, தங்கள் வாழ்க்கை வசதிக்கு, தகுந்த அளவும் வகையும் பொருள் கிடைக்காமல், திண்டாடித் தேம்புகிருர்கள்.

சந்தனம் அரைத்துக் கொடுத்ததால் உண்டான வலி தீர்ந்தால் போதும் என்ற நிலையில், கந்தப்பன் இருப்பது போல, நாளுக்கு நாள் ஏறிப் பாரமாகிக்கொண்டு வரும் வரித் தொல்லையைத் தாங்குவதற்காவது வலிவு வேண்டுமே, அதை எப்படிப் பெறுவது என்று, ஏழை மக்கள் ஏங்கித் தவித்துக் கிடக்கிருர்கள்.

சந்தனக் காப்பு உற்சவம், பார்க்கப் பதினுயிரம் கண் வேண்டும் என்று பக்தர்கள் பரவசத்துடன் கூறுவதுபோல,



இந்திய சர்க்கார், மந்திரிகளின் கௌரவம் உயர்த்தப்படுவதற்கும், மதிப்பு பெருகுவதற்கும் செலவிடும் தொகையையும் வகையையும் கண்டால், சுயராஜ்யத்தின் 'சுந்தர சொரூபம்' தெரிகிறது என்று தெந்தினம் பாடிடப் பலர் உளர்.

''கேவலம் கூலிக்காகப் பாடுபடுவதாக எண்ணிக்கொள்ளாதே, இது பகவத் கைங்கரியம், எனவே 'விசுவாசத்துடன்' சேவை செய்ய வேண்டும்'' என்று கந்தப்பனுக்கு உபதேசிக்கப்படுவது போலவே, ''அன்னிய ஆட்சியின் போது, வரி கொடுக்க, உங்கட்கு, மனக்கசப்பும் கொதிப்பும் இருப்பது சகஜம்; இப்போது அப்படி இருக்கக் கூடாது; இது சுயராஜ்யம்; எனவே முகத்தைச் சுளிக்காமல் பாரம் என்று குமுருமல், முடியவில்லையே என்று கூறிக் கண் கசக்கிக்கொள்ளாமல், கேட்கும் வரிப்பணத்தைக் கொடுக்கவேண்டும்; அதுதான் தர்மம் தேசபக்தி'' என்று உபதேசிக்கும் காங்கிரஸ் தலைவர்கள், உரத்த குரலில் பேசுகிருர்கள்.

களிமண் தடவினல் வலிபோகுமா, எருக்கம் பாலடித்தால் சுளுக்கு நீங்குமா என்று கந்தப்பன் பாதவிப்பது போலவே, என்னென்ன பாடுபட்டால் பிழைக்கலாம், எந்தெந்தத் தேவைகளைக் குறைத்துக் கொள்ளலாம், என்னென்ன துணைத் தொழில்கள் தேடிடலாம், கூடை முடைவோமா, கோழி வளர்ப்போமா, கொல்லன் பட்டரையில் வேலை செய்வோமா, என்ன செய்தால், நமக்கு இன்னும் ஒரு கவளம் கிடைக்கும் என்று ஏக்கத்துடன் எண்ணி எண்ணி, 'போதாமை'யால் தாக்குண்டு கிடக்கிருன், ஏழை! அவனுக்குப் போதிக்கப்படும் தேசீயமோ, குமுருமல் கொடு, குறை கூருமல் கொடு, வரியாகக் கொடு, கடனுகக்கொடு, நகைக்குச் செலவிடாதே, 'நல்லது பொல்லதுக்கு' என்று பணத்தை வீணுக்காதே, நாங்கள் அடிக்கடி கடன் கேட்போம், உன் கடமை என்று எண்ணிக்கொண்டு கழுத்துத் தாலியில் உள்ள குண்டுமணிப் பொன்னுகை இருந்தாலும், எடுத்துக் கொடு, தேசபக்தன் என்ற கீர்த்தி உனக்குக் கிட்டும்—என்று பிரசாரகர்கள் பேசுகிருர்கள்.

கந்தப்பன், கையைத் தூக்கமுடியவில்லையே, என்று கதறிக் கிடக்கிருன்.

வாழ்வு சுமையாகிவிட்டது, தலைநிமிர்ந்து நிற்க முடியவில்லை என்று பொதுமக்கள் புலம்புகிருர்கள்.

செந்திலாண்டவனுக்குச் சந்தனக் காப்பு உற்சவம் 'சம்பிரமமாக' நடைபெறுகிறது; சவுதி அரேபியா சுற்றுப் பயணத்துக்காக நேரு பெருமகனுர் தம் 'ஜமா'வுடன்

தயாராகிக்கொண்டிருக்கிறார். அவர் பல்வேறு நாடுகளுக்குச் சென்று வந்து ஒரு திங்கள் ஆகிறது, இதற்குமேல் அவருக்கு இங்கு இருக்கப் பிடிக்கவில்லை. சவுதி அரேபிய மன்னரின் விருந்தினராகிறார்! அன்றலர்ந்தரோஜா தினமும் விமானமூலம் நேருவுக்குக் கொண்டு வந்து தர ஏற்பாடாம். சவுதி அரேபிய மன்னரின் இரம்மியமான ஒரு அரண்மனையில் நேரு துரை மகனார் தங்கி இருக்க ஏற்பாடு! நேருவுக்குப் பிரியமான உணவு வகைகளைச் சமைத்திட, இங்கிருந்தே திறமையான சமயற்காரர்கள்! சவுதி அரேபிய மன்னர், கோடீஸ்வரர்! அவருடைய விருந்தினராகத் தங்கி இருக்கும் நாட்களில், ரோஜாவின் மணமும் ராஜோபசாரமும், சலாமிட்டு நிற்கும் பணியாட்களின் குழைவும், சர்வதேச நிலைமை பற்றிய பேச்சும், நேருவுக்கு மனச் சந்துஷ்டி அளிக்கும்; மகனைத் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாக்கிவிட்டு மாரடித்து அழுது கொண்டிருக்கும், தாய்மார்களின் கதறல் அல்லவா அவருக்கு இங்கு காது குடையும் அளவுக்குக் கிடைக்கிறது! கண்ணீர்க் குண்டு வீச்சினால் கிளம்பும் புகையும், பிணவாடையும், நாள் தவறாமல் இங்கு! எப்படி நேரு பெருமகனார் இந்தக் 'கண்றாவி'க் காட்சியைக் காண்பது! நிம்மதி இராதே! இதற்கோ அவர் இந்தியாவின் முடிசூடா மன்னரானார்! மோதிலாலின் திருக்குமாரன், தங்கத்தொட்டிலில் தாலாட்டி வளர்க்கப்பட்ட செல்லப்பிள்ளையாமே!

கண்ணே! கண்வளராய்

கட்டிக்கரும்பே! கண்வளராய்

என்று தாலாட்டுப்பாடித் தாதியர் தொட்டிலாட்டியிருப்பர். அப்படி வளர்ந்த ஆனந்த பவனத்தாருக்கு, இங்கு, ஐயோ! அப்பா! அம்மவோ! என்ற அலறலும் கதறலும், எப்படி இனிப்பளிக்கும்? எனவே சவுதி அரேபியா செல்கிறார்! பன்னீரில் குளிக்கலாம், பரிமளகந்தம் பூசலாம், சிரித்திடும் ரோஜாவையும் புன்னகை பூத்திடும் இராஜதந்திரிகளையும் கண்டுகளிக்கலாம். தேன் பாகிலே பதமாக்கப்பட்ட பேரீச்சம்பழமும், கனிச்சாறும் அவருக்கு, மொழி வழி அரசு, எல்லைத் தொல்லை என்பன போன்றவைகளால் ஏற்பட்ட எரிச்சலைப் போக்க உதவக்கூடும்.

மறந்தே போனேனே தம்பி, இந்தியாவின் மதிப்பு உயரும்!!

இதனாலா? இங்கு மக்கள் இல்லாமையில் இடர்ப்பட்டுக் கொண்டு கிடக்கும்போது, இவர் சவுதி அரேபியா சென்று இராஜோபசாரம் பெறுவதாலா இந்தியாவின் மதிப்பு உயரும்? என்று—உனக்குக் கேட்கத் தோன்றும்! அப்படித்தான்



அவர்கள் சொல்லுகிறார்கள், நம்பாதவனைத் தேசத் துரோகி என்று ஏசுகிறார்கள்.

"என்ன சந்தனக் காப்பு உற்சவமோ! கைசுளுக்கு என் பிராணனை வாட்டுது இப்படி வலி எடுக்கும் அளவுக்கு நான் அரைத்தெடுத்த சந்தனந்தானய்யா அது "என்று செந்திலாண்டவன் கோயிலில் சந்தனம் அரைத்திடும் கந்தப்பன் சொன்னால், சும்மா விடுவார்களா! செந்திலாண்டவன்கூட அல்ல, அங்கு வரும் காவடி தூக்கியும், காவிகட்டியும், மொட்டையும் பிறவுமன்றோ, கந்தப்பன்மீது வசைமொழியும்!

சவுதி அரேபியாவோடு நின்று விடுவதா, நேரு பவனி.

நேருபவனி ஒரு நீண்ட தொடர்கதை...

அமெரிக்கா அழைக்கிறது, ஆஸ்திரேலியாவில் அலுவல் இருக்கிறது, எங்குதான் செல்லக்கூடாது! செல்கிறார்!!

இதற்காகச் செலவாகும் தொகையை எமக்குச் செலவிட்டால்கூடப் போதுமே, புளித்தகூழுக்கு ஒரு துண்டு காரமிளகாயாவது கிடைக்குமே! என்று கேட்பர் இந்தப் பஞ்சைகள்.

பஞ்சைகள் எப்போதும் எந்த நாட்டிலும் இப்படித்தான் கேட்பது வாடிக்கை; பவனிவரும் ஆட்சியாளர் குறுநகை புரிந்தபடி, "குறைமதியினரே! வீணாக ஏதேதோ கூறிக் கிடக்கின்றீரே! பவனியால், எமக்கா இன்பம்? நாட்டின் மதிப்பன்றோ உயருகிறது" என்று பேசுவதும் வழக்கம்!

பொறுமையின் எல்லைக்குப் பஞ்சைகள் சென்று முகட்டின் மீது நிற்பர். மேலால் செல்ல வழி இருக்காது. பிறகுதான் திரும்பிப்பார்த்திடுவர். தம்பி! அப்படித் திரும்பிப் பார்த்திடும் போதுதான், 'பஞ்சடைந்த கண்களிலே கனல் கக்கும், புழுவும் போரிடும்' என்ற நிலைபிறக்கும்.

அது, இப்போது, உடனடியாக நடைபெறக் கூடியதா, என்ன? எனவே, வீண் பீதிக்கு இடமளிக்காமல், நேரு பெருமகனார். சந்தனக் காப்பு உற்சவத்துக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறார்.

தம்பி! எப்படிப்பட்ட எழில் மிக்க நாட்டிலே இருக்கிறாய் தெரியுமா என்று, எந்த ஏழையைக் கேட்டாலும், அவன் ஒரு விளக்கமற்ற பார்வையால் நம்மைத் திகைக்கவைப்பான்.

இமயப் பனிமலையின் எழிலும் கங்கை புரண்டோடும் கவர்ச்சியும், காதல் மாளிகையாம் தாஜ்மஹாலின் தகத்த

காயமும், குதுப்மினரின் கெம்பீரமும் அஜந்தா சித்திரமும், விஜயநகர சாம்ராஜ்யச் சேதக்குவியலும், மாமல்லபுரத்துச் சிற்பங்களும், குமரிமுனைக் கோலமும் அவன் எங்கே கண்டான்? எங்ஙனம் காண்பான்? இதோ வருகிறார்கள். இந்த எழில் கண்டு மகிழவும், இவை தம் ஏற்றத்தை எடுத்துரைக்கும் பிரமுகர்களுடன் அளவளாவவும், இந்த நாட்டுக் கலை கல்லிலே வடித்துக்காட்டப்பட்டது மட்டுமல்ல, காவலர்களே! கல்லிலே நீவிர்கண்ட குமரியை, அஜந்தா சித்திரத்திலே உங்களை வசீகரித்துக்கொண்ட அந்த வளைவு, குழைவு, நெளிவுகளை, இதோ உங்கள் சிந்தை அணு ஒவ்வொன்றும் சிலிர்த்திடச்செய்யும் வகையில் எடுத்துக் காட்டும், மாலாக்களையும் பாலாக்களையும் குமரிகளையும் தேவிகளையும் காணீர். அவர்கள் கரத்தால் கமலம் காட்டுவர், கண்ணால் கடலைக் காட்டுவர், வெறும் ஆடலல்ல அன்பரீர்! கேவலம் இச்சையைக் கிளறும் அங்க அசைவுகளல்ல! இவை ஆன்ம சுத்திக்காகவே எமது ஆன்றோர் அளித்துச் சென்ற 'கலோபாசனை'—கலைமூலம் கடவுளைப் பூஜிப்பதாகும்!—என்று கூறுவர்.

இந்த உபசாரம், உலா, பெறுவதற்கு இப்போது துர இருக்கும் தலைவர்களின் பட்டியல், தற்காலிகமானது, தருகிறேன், பார், கந்தப்பன் கரத்திலே சுளுக்கு இருந்தால் என்ன, சந்தனக்காப்பு சம்பிரமாக நடைபெறுகிறதே அந்தச் சம்பவம் நினைவிற்கு வரும்.

எதியோபிய சக்கிரவர்த்தி

இந்தோனேசியத் தலைவர் டாக்டர்

சுகர்ணோ

போலந்து முதலமைச்சர்

தாய்லந்து முதலமைச்சர்

சிரியா நாட்டுத் தலைவர்

இலங்கை முதலமைச்சர்

நேபாள நாட்டு முதலமைச்சர்

இவர்களெல்லாம் 'விஜயம்' செய்ய இருக்கிறார்கள்!

விருந்து, வேட்டை, கேளிக்கை, கண்காட்சி, இடையிடையே சர்வதேச நிலைமை பற்றியும் பேசுவர்!

ஒவ்வொருவருக்கும், குடியரசுத் தலைவர் விருந்தளிப்பார். குடியரசுத் தலைவருக்கு அவர்கள் ஒவ்வொருவரும் விருந்தளிப்பர்! முதலமைச்சர் ஒவ்வொருவருக்கும் விருந்தளிப்பார், ஒவ்வொருவரும் முதலமைச்சருக்கு விருந்தளிப்பர்; எல்லா விருந்துகளிலும் நளினிகளின் நடனம் உண்டு! எல்லாம் கந்தப்பன் அரைத்தெடுத்த கலவைச் சந்தனம் தம்பி, அவன் கைக்கு எருக்கம்பாலடித்து, களிமண் பூச்சுத் தடவி விடப்பட்டிருக்கிறது!



ஒரே அடியாக உன் அண்ணன், எரிந்து விழுகிறான், நாங்களெல்லாங்கூட வருத்தப்படக்கூடிய விதமாகப் பெரும் பொருள் இப்படிப்பட்ட விருந்து, உபசாரம், உலா, உற்சவம், ஆகியவற்றுக்குச் செலவாகி விரயமாகிறது. ஆனால் எல்லாப் பணமும் இதற்கே பாழாகிவிடுவதுபோல எடுத்துக் கூறுவது, சரியல்ல; வாழ்வும் வளமும் தரத்தக்க எத்துணையோ நல்ல திட்டங்களுக்குப் பணம் செலவிடப்படுகிறது, என்று தம்பி! காங்கிரஸ் நண்பர் கூறக்கூடும்.

அந்த இலட்சணம் எப்படி இருக்கிறது என்பதையும், அந்தப் பொல்லாத மனிதர், கவர்னர் குமாரசாமிராஜா சென்ற கிழமை எடுத்துக் காட்டிவிட்டார்.

*பிரம்மாண்டமான பணவிரயம்—வீண்செலவு!*—என்று குமாரசாமிராஜா கூறுகிறார்.

பத்துக்கோடி ரூபாய் செலவில் இங்கு கட்டப்படுகிறது, *பவானிசாகர்! மிகப் பிரமாதம் என்று விளம்பரப்படுத்தப் பட்டு வரும் தாமோதர் திட்டத்தை நான் பார்த்தேன்-அங்கு பிரம்மாண்டமான பண விரயம் நடந்துகொண்டிருக்கிறது'*-என்று, சென்ற கிழமை கோவையில் கூறினார்.

அஞ்சா நெஞ்சும், நேர்மைத் திறனும் கொண்டிருந்தாலொழிய, இவ்வளவு வெளிப்படையாக, இந்திய சர்க்காரின் திறமைக் குறைவை, ஊதாரித்தனத்தை, கண்டித்திருக்க முடியாது.

இந்திய சர்க்காரின் நிர்வாகத்தைக் கண்டிப்பது என்றால் நேருவைக் கண்டிப்பது என்று பொருள்! நேருவுக்கோ யாராவது ஒரு சிறுசொல் கூறிவிட்டாலும் கண் சிவந்துவிடும். நேரு புருவத்தை நெரித்தால், எந்தக் காங்கிரஸ் தலைவருக்கும் எதிர்காலம் இருண்டுவிடும்!

இவை தெரிந்தும், உள்ள நிலையை எடுத்துக் கூறத்தான் வேண்டும் என்ற வீரத்தைக் காட்டிய, குமாரசாமிராஜாவைப் பாராட்டாதவர்கள், பண்பற்றோரே!

கவர்னர் பதவி என்பது காந்திகோயிலில் பஜனை செய்வதற்கும் கலா பவனத்தில் காட்சி காண்பதற்கும் மட்டுமே உள்ள 'பொழுதுபோக்கு' என்று கருதாமல், நாட்டவருக்கு உண்மையை நடுக்கமின்றி எடுத்துரைக்கும் பெரும் பொறுப்பும் கவர்னருக்கு உண்டு என்ற தூய நோக்குடன், குமாரசாமிராஜா பேசினர்.

எங்கள் பக்கம் அணைகட்டுவதற்கு, செலவு சற்று அதிகம் தான் பிடிக்கும்—உங்கள் பகுதியில் கிடைப்பதுபோன்ற கற்கள் இங்கு கிடைப்பதில்லை, எனவே இங்கு சிறிது பணம் அதிகமாகச் செலவாகிறது என்று, திட்ட அலுவலக அதிகாரி சமாதானம் கூறுகிறர். குமாரசாமி ராஜா அவர்கள் பல உண்மைகளைத் தமது 'இரத்னச் சுருக்கமான' பேச்சிலே வெளியிட்டிருக்கிறர்; முப்பது ஆண்டுகள் இருந்து முகந் திருத்தி ஈரோடு பேன் வாங்கி இதமாக எடுத்துச் சொன்னலும், இதுபோன்ற அஞ்சா நெஞ்சுடன் நம்ம காமராஜர் பெரிய இடத்தின் போக்கைக் கண்டித்துப் பேசும் அஞ்சாமையைப் பெறுவாரா என்பதும் சந்தேகமே!

1. இங்கு செலவாவதைவிட வடக்கே, பணம் அதிகம் செலவாகிறது.
2. செலவு செய்யப்படும் முறை, வீண் விரயத்துக்கு இடமளிக்கிறது.
3. அனுவசியமாக அதிகமான அளவு மேலதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவை, திட்டம் அமுல் செய்யப்படுவதுபற்றி, நேரில் கண்டறிந்தவர், பொறுப்பான பதவியில் அமர்ந்திருப்பவர், கூறுவன.

வடக்கு என்பதற்காகவே, ஏதாவது வம்பும் தும்பும் பேசும் வட்டாரமல்ல.

தேர்தல் ஆசை பிடித்துக்கொண்டதால், பேசும் பேர் வழியுமல்ல!!

பணம் விரயம் ஆவதை மட்டுமல்ல, அவர் சுட்டிக்காட்டி இருப்பது.

தாமோதர் திட்டத்தில் தேவையைவிட அதிகத் தொகை செலவிடப்படுகிறது என்பது மட்டுந்தான் ராஜாவின் மனக்குறை என்ருல், உயரிடத்தில் அமர்ந்துள்ள அவர், இதனை, நேருவிடம் ஜாடை மாடையாகக் கூறினலே போதும். ஆனல்



'ராஜா'—கோவைப் பொதுக்கூட்டத்தில் தொழிலதிபர்களும்' துரைத்தனத்தாரும் கூடியிருந்த மன்றத்தில் எடுத்துப்பேசி இருக்கிறர்.

திட்டங்களைச் சிக்கனமாகச் செலவிட்டு முடிக்கவேண்டும் என்ற நோக்கத்துக்காகப் பேசினதாக யாராவது கருதிக்கொண்டு, தமது பேச்சின் சூட்சமத்தை அறியாது போய் விட்டால் என்ன செய்வது என்ற எண்ணத்தினல் உந்தப்பட்ட நிலையில், ராஜா மேலும் சில உண்மைகளை எடுத்துக் காட்டினர்.

1. வடக்கே, பேசுவது சர்வோதயம் பற்றி! ஆனல் நடைமுறை என்ன என்ருல், பிரம்மாண்டமான நவீன அமெரிக்க யந்திரங்களை வரவழைப்பது!!

இந்தக் 'கேலி'க்கு ஈடாகச் சமீப காலத்தில், எந்தத் தலைவரும் வட நாட்டுப் போக்கைக் கண்டித்ததில்லை என்று கூறலாம்.

கட்டுவது காவி

தொட்டு இழுக்கிருன் பாவி!

என்று காரிகை கதறக் கேட்டால் எப்படி இருக்கும்? அது போல, பேசுவது சர்வோதயம், வரவழைப்பதோ அமெரிக்க நவீன யந்திரம்—என்று குட்டுகிறர் ராஜா!!

சர்வோதயம்—ஒரு இலட்சியம், உத்தமரொருவர் ஊருக்கும் உலகுக்கும் காட்டும் பாதை! இதற்கு உதட்டுபசாரம் அளித்துவிட்டு, தமது தேவைக்கு, வசதிக்கு, அமெரிக்காவிலிருந்து நவீன யந்திரங்களை வரவழைத்துப் பயன் பெறுகிறர்கள் வடக்கே!

சர்வோதயம் பேசப்படுகிறது—செயலோ அதற்கு நேர் மாருக இருக்கிறது.

இந்தக் கபடத்தைக் காட்டமட்டும் ராஜா இதைக் கூறினதாக நான் எண்ணவில்லை, தம்பி, இதற்கு உள்ளே மிகப் பெரிய உண்மை உறங்கிக்கொண்டிருக்கக் காண்கிறேன்.

ஓ! என் நாட்டவரே! உரத்த குரலில், சர்வோதயம் பற்றிய உபதேசம் நடக்கிறது; வடக்கே இருக்கும் தலைவர்களெல்லாம், அந்த இலட்சியத்தை வாழ்த்திப் பேசுவது கேட்டு, மயங்கிவிடாதீர்கள்! சர்வோதயம் பேசும் அந்த வடக்கத்தித் தலைவர்கள், இனிக்க இனிக்க, நெஞ்சு

நெக்குருகப் பேசுகிருர்களே தவிர, உள்ளூர அவர்களுக்கு சர்வோதயத்திலே நம்பிக்கை கிடையாது; சர்வோதயம் பேசிக்கொண்டு அவர்கள் அங்கே சர்க்கரை ஆலே வேண்டாம் கருப்பட்டி போதும், நூலாலே வேண்டாம் சர்க்கா போதும், காகித ஆலே வேண்டாம் பனே ஓலே போதும், மோட்டார் தொழில் வேண்டாம், கட்டை வண்டி போதும், டிராக்டர் வேண்டாம் ஏர் எருது போதும், என்றெல்லாம் இருந்துவிடுகிருர்கள் போலும் என்று எண்ணி ஏமாந்து விடாதீர்கள். நாமும் இங்கு சர்வோதயம் காண்போம் என்று மனதார நம்பி வளர்ச்சியைக் குலேத்துக்கொள்ளாதீர்கள்; வடக்கே உள்ளவர்கள் பேச்சிலேதான் சர்வோதயம்; ஆனுல் நடைமுறையிலோ, நவீன அமெரிக்க யந்திரங்களேத்தான் வரவழைக்கிருர்கள்.

அவர்களுடைய இந்தக் கபடத்தை நான் கண்ணுல் கண்டேன்—ஏமாருதீர், என் நாட்டவரே! அவர்களின் சொல்வேறு, செயல் வேறு! உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகிருர்கள்!

குமாரசாமி ராஜாவின் பேச்சிலே இவ்வளவும், எண்ணிப் பார்க்கப் பார்க்க, இதனினும் அதிகமாகவும், பொருள் பொதிந்திருக்கக் காண்கிறேன்.

சர்வோதயம் பேசுகிறீர்களே! இப்படி நவீன யந்திர மோகம் கொண்டு அலேகிறீர்களே!—என்று ராஜா, வடக்கே இடித்துக் கூறவில்லே, தம்பி, இங்கு நமக்கு எச்சரிக்கை செய்கிருர், சர்வோதயம் பேசும் வடநாட்டார் தங்கள் தொழிலில் பழைமையின் சாயலேக்கூட வைத்துக்கொண்டில்லே, எல்லாம் அமெரிக்க யந்திர மயமாக இருக்கிறது; உண்மையை அறியாமல், அவர்கள் உதட்டசைவு கேட்டு, மயங்கிவிடாதீர்கள்; சர்வோதயம், பேச்சு; செயல், நவீனம், நவயுகம் அமெரிக்க முறை!—என்று எடுத்துக் கூறுகிருர்.

தம்பி! பலமுறை பார்த்து, மிகவும் மனம் புழுங்கி, நீண்ட காலம் மறைத்துப் பார்த்து, கடைசியில் இனியும் நாமறிந்த இந்த உண்மையை நமது மக்களுக்கு எடுத்துக் கூருமலிருப்பது, மக்களுக்கு நாம் மனதறிந்து செய்யும் துரோகமாகும் என்று உணர்ந்து, என்ன நேரிட்டாலும் கவலே இல்லே, நேருவுக்கு கோபம் பீறிட்டுக்கொண்டு வந்தாலும் பரவாயில்லே என்று துணிந்து, பேசின பேச்சு என்றே நான் இதனேக் கொள்கிறேன்.



தம்பி! வடக்கு வளருகிறது தெற்கு தேய்கிறது என்று நாம், கூறும்போது, அலங்காரப் பேச்சு அடுக்குமொழி என்று கேலி பேசினரே, அவர்கள், ராஜா அம்பலப்படுத்தியிருக்கும் உண்மையைக் கண்ட பிறகேனும், சிந்திப்பார்களா என்று கேட்டுப்பார்.

அவர்கள் சிந்திக்கிருர்களோ இல்லேயோ, குமாரசாமிராஜா அவர்கள் நிரம்பச் சிந்தித்திருக்கிருர் என்பதும், செயல்படக் கூட விரும்புகிருர் என்பதும் விளங்கும் வகையில், மேலும் சில உண்மைகளே அவர் கூறுகிருர்.

1. மத்ய சர்க்கார் அனுவசியமாக மாகாண சர்க்காரின் அலுவலில் குறுக்கிட்டுக் கொண்டு வருகிறது.

மத்ய சர்க்கார் ஆதிக்கம் செய்கிறது, மாகாண சர்க்காருக்கு முழு உரிமை கிடையாது என்று நாம் பேசும்போது, முகம் சுளித்துக் கொள்கிருர்களே காங்கிரசார், அவர்கள் இந்தக் 'குற்றச்சாட்டு' ஒரு கவர்னர் மூலம் பதிவு செய்யப்படுவது கண்டு ஆச்சரியத்தால் வாய் பிளந்து நிற்பார்கள் என்று எண்ணுகிறேன். எவ்வளவு திறமையாக, அப்பழுக்கற்ற முறையில் மாகாண சர்க்கார் ஒரு திட்டம் தயாரித்தாலும், தங்கள் அதிகாரமும் அமுலும் இருக்கவேண்டும் என்பதற்காகவென்றே, மத்ய சர்க்கார், அதிலே அங்கொரு மாற்றமும் இங்கொரு மாற்றமும் செய்து, திட்டத்தைத் திருத்துகிறது என்றுகூறுகிருர், ஓரிசாவில் கவர்னராக வேலேபார்க்கும் ராஜா.

கூறினதுடன் அவர் அமைதி கொள்ளவில்லே; மத்ய சர்க்கார் இனியும் இந்தப் போக்கிலே இருக்கக் கூடாது என்று புத்திமதி கூறலாமா என்றுகூட அவர் எண்ணிக் கொள்ளவில்லே.

புத்திமதி கூறும் கட்டம்போய் விட்டது; பிறர் கூறும் அறிவுரையைக் கேட்கும் நிலேயிலும் மத்ய சர்க்கார் இல்லே என்பது அவருக்குப் புரிந்திருக்கிறது. எனவே குமாரசாமி ராஜா, போர்க்கொடி உயர்த்துவதுபோலவே பேசுகிருர்.

2. மேலிடத்தவரின் குறுக்கீடுகளே நாம் எதிர்த்துப் போராட வேண்டிய காலம் விரைந்து வருகிறது.

என்று கூறியிருக்கிருர்.

தம்பி! பொறுமை உணர்ச்சியும் பொதுப் பிரச்சினேகளிலே அக்கரையும் கொண்ட காங்கிரஸ் நண்பர் யாராவது உனக்குத் தெரிந்திருந்தால், அவரை, குமாரசாமி ராஜாவின் பேச்சிலே பொதிந்து கிடக்கும் உண்மைகளேப்பற்றி விளக்

கும்படி கேள்; கேட்டுக்கொள்ளும் பண்பு அவரிடம் இருந்தால் நீ விளக்கிக் காட்டு.

வடக்குவேறு

தெற்குவேறு

வடக்கு வஞ்சனையுடன் நடந்துவருகிறது.

வடக்கே, பணம் விரயமாகிறது.

தெற்கு ராஜ்ய அலுவலில் வடக்கு, அனுவசியமாகக் குறுக்கிடுகிறது.

வடக்கு குறுக்கிடும் போக்கை, தெற்கு எதிர்த்துப் போரிடவேண்டும்.

அந்தக் காலம் விரைவில் வருகிறது.

இவ்வளவும், சுரங்கத்துள் தூங்கும் தங்கம் போலவோ, கடலுக்குள் உறங்கும் முத்துபோலவோ கூட அல்ல, தோலுக்குள் இருக்கும் சுளை போலவோ, நெல்லுக்குள் இருக்கும் அரிசி போலவோ, இருக்கிறதா இல்லையா என்று கேட்டுப்பார்.

குமாரசாமிராஜா இந்த அளவு எடுத்துக் கூறியது எனக்கென்னமோ, கை சுளுக்குடன் கஷ்டப்படும் கந்தப்பனுக்கு வலி போக்கிக் கொள்ளக் கிடைக்கும் பச்சிலைத் தைலம் போலத் தோன்றுகிறது. இதுவாவது கிடைக்கிறதே என்று மகிழக்கூடத் தோன்றுகிறது.

கவர்னர் பதவியிலிருந்து விலகியதும், இது குறித்து, மேலும் பல உண்மைகளை, விஷயங்களை நான் கூறுகிறேன்—என்று குமாரசாமி ராஜா கூறுகிறார்.

இதற்குள், தூதும், சமரசப் பேச்சும், ஆகாது கூடாது, அவர்கள் பயன்படுத்திக்கொள்வார்கள், இவர்கள் ஏளனம் செய்வார்கள் என்றெல்லாம் எடுத்துக் கூறும் பாசவலையும் வீசப்பட்டிருக்கும்.

அத்தனைக்கும் தப்பி வந்து, ஆற்றலுடன், குமாரசாமி ராஜா அவர்கள், வடக்கு கொண்டுள்ள கோலத்தையும் போக்கினையும் மக்கள் மன்றத்தில் அம்பலப்படுத்தி, வடக்கு செலுத்தும் ஆதிக்கத்தை எதிர்த்து, ஏன் என்று கேட்கும் வீரத் தலைவராக வெளிவர வேண்டும்.




முடிகிறதோ இல்லையோ, இப்போதைக்கு இந்த அளவுக்கேனும் அஞ்சா நெஞ்சுடன் உண்மையை எடுத்துரைத்த நேர்மையைப் பாராட்டத்தானே வேண்டும்.

செந்திலாண்டவன் கோயிலில் சந்தனம் அறைத்திடும் கந்தப்பனுக்கு, கை சுளுக்குப் போக, எருக்கம் பாலும் களிமண் பூச்சும் மட்டுமல்ல, பச்சிலைத் தைலமும் சிறிதளவு கிடைக்கிறதென்றால், கொஞ்சம் நிம்மதிதானே!

அந்தவிதமான மகிழ்ச்சி நமக்கு, ராஜாவின் பேச்சு கேட்டதில். வாழ்க அவர்தம் வாய்மைப் பற்று, வாழ்க அவர் தம் அஞ்சாமை என்று நீயும் நானும் வாழ்த்துவோம், தம்பி! வேறு என்ன இருக்கிறது நம்மிடம், அவருக்கு அளித்திட.

அன்பன்,



9-9-1956

கடிதம் : 65

# ஆனால்......ஆகவே......!

**தமிழர் பிரச்சினையும் காமராஜரின்**
**போக்கும் — அடக்குமுறையும்**

தம்பி!

ஆனால்... ஆகவே... எளிதாகப் பொருள் விளங்கி விடுகிறது என்று எவரும் கருதிக்கொண்டுள்ளனர்; அன்றாட உரையாடலிலிருந்து பாராளுமன்றப் பேச்சுவரையில் மிகத் தாராளமாகப் பயன்படுத்துகின்றனர், இந்த இரு சொற்களை. ஆனால்......? பார்த்தாயா, தம்பி, நாலு வரி முடிவதற்குள் இந்த ஆனால் எனும் சொல் வந்து தொலைக்கிறது. ஆகவே இதிலிருந்து என்ன புரிகிறது?...... மீண்டும், பார், தம்பி. ஆனால் எனும் சொல்போலவே, ஆகவே என்ற சொல்லையும் அழைத்துக் கொண்டேன். அந்த அளவுக்கு எவருடைய பேச்சிலும் எழுத்திலும், தோழமை கொண்டாடிக்கொண்டு, ஆனால், ஆகவே எனும் இந்த இரு சொற்களும் இடம்பெற்று விடுகின்றன.

பேச்சிலும் எழுத்திலும் தோழமை கொண்டாடி இடம் பெற்றுள்ள இந்த இரு சொற்களும், தம்பி, காண்பதற்கு மிக எளிதாகப் பொருள் தரத்தக்கன போல் இருக்கும். ஆனால், இந்தச் சொற்களிலே புதைந்து நிற்கும் பொருளை விளக்கிக் கொள்வது உண்மையில் எளிதல்ல.

அணு என்ற உடன், ஓஹோ! அணுவா? என்று எப்படி எவரும் மிகமிகச் சாதாரணமாகக் கூறிவிடுவதன் மூலம்,



அணு குறித்து அனைவரும் அறிந்துகொண்டுள்ளனர், அத்துணை எளிது, அதன் தன்மையை அறிதல் என்று எண்ணும் படிச் செய்துவிடுகிறார்களோ, அது போன்றே, இந்த ஆனால், ஆகவே எனும் இரு சொற்கள் குறித்தும், ஒருபோக்குக் காட்டப்பட்டு வருகிறது.

அதுமட்டுமல்ல, இந்த ஆனால், ஆகவே எனும் இரு சொற்களையும், 'அசை'க்குப் பதிலாகப் பயன்படுத்துவோரும் நிரம்ப உள்ளனர்!

ஏதேது, அண்ணா! தமிழ் இலக்கணம் பேசுவது போன்ற போக்குக் கொண்டு, தமிழ் ஆசிரியர்களின் 'ஒட்டுக்களை'ப் பறிக்க முயலுகிறாயா? என்று, தம்பி, நீ கேட்க மாட்டாய் — என்னிடமும் உன்னிடமும் கடுப்புள்ளவர் பேச்சல்லவா, அது

நான், தமிழ் இலக்கணம் குறித்து அல்ல இதனை எழுதுவது — எனது இரு தமிழ்ப் பேராசிரியர்களும் — மணி திருநாவுக்கரசு, மோசூர் கநதசாமியார், இருவரும் வெகு பாடுபட்டனர், எனக்கு இலக்கணம் கற்பிக்க. நான் தமிழின் இனிமை பற்றி மட்டுமே அறிந்துகொள்ள முடிந்தது. இலக்கணப் பயிற்சியில் என்னை வெற்றிபெறச் செய்வதிலே, எனது இரு ஆசிரியர்களும் வெற்றிபெறவில்லை. ஆகவே... பார், பார், தம்பி! மீண்டும் அந்த ஆகவே வந்து ஒட்டிக்கொள்கிறது! அடா, அடா, இந்த இரு சொற்களும், பொதுவாழ்வுத் துறையினரின் நாவிலே இருந்துகொண்டு, அவர்களையும் அவர்களிடம் தொடர்புகொண்ட பொது மக்களையும், படுத்தும் பாடு இருக்கிறதே, தம்பி, சொல்லுந்தரத்ததல்ல.

ஒரு பிரச்சினையை விளக்கிக் கொண்டே போகிறார் ஒரு தலைவர் என்று வைத்துக்கொள் — ஏன் வைத்துக்கொள் என்று தயவாகக் கேட்டுக்கொள்கிறேன் என்றால், இப்போதெல்லாம் பிரச்சினைகள் விளக்கப்படுவதில்லை, புகுத்தப்படுகின்றன, புதிராக்கப்படுகின்றன! எல்லாத் தலைவர்களுமா அவ்விதம் என்றால், தம்பி, பெரும்பாலோர் இம் முறையைத்தான் கையாள்கிறார்கள் — வேறு சிலர், நல்ல விளக்கம் தருகிறார்கள், ஆனால் பிரச்சினைகளுக்கு அல்ல — இந்த நிலைமை இருப்பதனால்தான் பிரச்சினையை விளக்குவதாகவைத்துக்கொள் என்று தயவு கோரும் தன்மையில் கேட்டுக்கொண்டேன் — இனிக்கேள், பிரச்சினையை விளக்கியானதும், ஆனால், அல்லது ஆகவே எனும் இரு சொற்களும் துள்ளிக் குதித்து வந்து நிற்கின்றன — அந்தத் தலைவர், இந்த இரு சொற்களிலே, எதனைத் தன் பேச்சுக்கும், அதை அடுத்துத் தன் செயலுக்கும் துணையாகக் கொள்கிறாரோ, அதைப் பொறுத்துத்தான்,

சமுதாயத்துக்குக் கிடைக்கும் பலன் இருக்கிறது. இதைச் சொல்லத்தான் நான் இலக்கண பாடம் போன்ற முறை துவக்கினேன் — இலக்கணம் போதிக்க அல்ல.

நமது நாட்டிலே, இந்த இரு சொற்களுக்கிடையே கடுமையான போட்டி-தலைவர்கள் திணறும்படியான நிலை ஏற்பட்டுவிடுகிறது — கடைசியில் அவர்கள், ஆனால் போட வேண்டிய கட்டத்தில் ஆகவே யையும், ஆகவே என்று கூற வேண்டிய கட்டத்தில் ஆனால் என்று கூறியும், பிரச்சினைகளைப் பாழடித்து விடுவதைத்தான் பெரிதும் காண்கிறோம்.

நம் நாட்டிலேயே பல பிரச்சினைகளுக்கு, எத்துணையோ முயற்சிக்குப் பிறகும், தக்கதோர் பரிகாரம் கிடைக்காமற் போனதற்குக் காரணம், இந்த ஆனால் ஆகவே எனும் இரு சொற்களும், தலைக்குப் போட வேண்டியதைக் காலுக்கும் காலுக்குப் போடவேண்டியதைத் தலைக்கும் போட்டுக்கொள்ளும் அலங்கோலம்போலப் பயன்படுத்தப் பட்டுவிடுவதுதான் என்பதை, பல்வேறு அரசியல் சம்பவங்களையும் ஆய்ந்தறிந்தால், அறிந்துகொள்ளலாம்.

பொதுவாகக் கவனிக்கும்போது ஒரு உண்மை புலப்படும்; ஆனால்... என்றசொல், இழுப்பு, வழுக்கல், திகைப்பு, திணறல், அச்சம், தயை, தாட்சணியம் போன்ற மனப்போக்கின் விளைவாக முளைப்பதையும், ஆகவே எனும் சொல், உறுதிப்பாடு, செயல்படுதிறன், எழுச்சி, முயற்சி போன்ற போக்கிலே மலர்வதையும் உணரலாம், பெரிதும்.

எழுச்சி கொண்டோர்போல நடித்துவிட்டு, பிறகு வழுக்க விரும்புவோர், பிரச்சினைபற்றிப் பேசிக்கொண்டே வரும்போது ; சரி சரி, பிரச்னையைக் காரசாரமும் வீரதீரமும் ததும்பும் வகையில் விளக்குகிறார் இந்தத் தலைவர், ஆகவே இந்த அக்ரமத்தை ஒழிக்க வேண்டும் என்று முழக்கமிடப் போகிறார் என்று கேட்போர் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு இருப்பர். ஆகவே என்று சொல்வதற்குப் பதிலாக அந்த அருந்தலைவர் ஆனால் என்று இணைப்புப் போட்டு, இழுப்புப் பேச்சில் இறங்கி, வழுக்கி விழுந்து, தமது அச்சத்தையோ, அல்லது தயவு தாட்சணியத்துக்குக் கட்டுப்பட்டு விட்ட தன்மையையோ காட்டிக் கொண்டுவிடுவார்.

இதோ ஓர் எடுத்துக்காட்டு—

"நமது திட்டம் சமதர்மம். சமதர்மம்தான் நீதியையும் நேர்மையையும் அடிப்படையாகக் கொண்டது.



சமதர்ம திட்டத்தைத்தான் மக்களாட்சியின் மாண்பறிந்த நாடுகளெல்லாம் ஏற்றுக்கொண்டுள்ளன.

பாரதமும் சமதர்ம திட்டத்தை ஆவடி காங்கிரசின் போதே, ஏற்றுக்கொண்டுவிட்டது.

நேரு பண்டிதர், தமது ஆட்சியின் குறிக்கோள் யாது என்ற பிரச்சினையை இவ்விதம் விளக்குகிறார். மாம்பழத்தை, தோலைப் பதமாகச் சீவி எடுத்துவிட்டு, சிறு சிறு துண்டுகளாக நறுக்கிவைக்கிறார். மாம்பழத் துண்டு கிடைக்கப் போகிறது, சுவை பெறப்போகிறோம் என்றுதானே எவருக்கும் தோன்றும். கிடைக்கிறதா என்று பார், தம்பி.

பிரச்சினையை இந்த ஆர்வத்துடன் நேரு பண்டிதர் விளக்கிக் கொண்டு செல்வது கண்டு, என்ன எண்ணிக்கொள்வோம்.

விளக்கத்தின் இறுதியில் ஆகவே என்று வீரச்சொல் தந்து,

ஆகவே, இந்த நாட்டிலே தொழில்களை முதலாளிகளிடம் விட்டுவைக்கப் போவதில்லை. கொள்ளை இலாபக்காரனை விட்டுவைக்கமாட்டோம்.

உழைப்பவனை வாட்டி வதைத்து ஒரு சிலர் உல்லாச வாழ்வு நடத்துவதற்கு அனுமதிக்கமாட்டோம்.

என்றெல்லாம் நேரு பேசப்போகிறார். ஆர்வம் கொந்தளிக்கும், வீரம் வீறிட்டெழும் என்றுதானே எண்ணிக்கொள்வோம். அவரோ, பிரச்சினையை விளக்குவதிலே விவேகம் காட்டிவிட்டு, இறுதியாக உறுதிப்பாட்டைக் குறித்திடும் கட்டம் வந்ததும், ஆகவே என்ற சொல்லை, மெல்லச் சிரமப்பட்டுத் தள்ளிவிட்டு, ஆனால் எனும் இழுப்புச் சொல்லினை இழுத்தணைத்தபடி,

ஆனால் சமதர்மம் வெற்றி பெறுவதற்கு முதலாளிகளை ஒழித்தாக வேண்டும் என்பதில்லை.

தொழில்கள் தனிப்பட்ட முதலாளியிடம் இருக்கக் கூடாது என்று சட்டம் போடத் தேவையில்லை.

இலாபம் தேடுவோரைத் தடுக்கவேண்டும் என்பதில்லை.

என்றெல்லாம் பேசுகிறார்.

திகைத்து நிற்கிறோம், திணறிப் போகிறோம், சமதர்மத் திட்டமே திக்குத்தெரியாத காட்டிலே விடப்பட்ட சிற கொடிந்த பறவை போலாகிவிடுகிறது.

தம்பி, இந்தக் கட்டத்தில் மட்டும் ஆனால் என்ற அவலச் சுவை தரும் சொல்லைக் கொள்ளாமல், ஆகவே என்ற சொல்லை இணைத்துத் தம் ஆற்றலைக் காட்டினால் எத்துணை நன்மை கிடைக்கும் என்று எண்ணிப் பார்க்கும்போது, ஏக்கம் பிறக்கத்தான் செய்கிறது.

சூயஸ் கால்வாய் எகிப்தின் உடமை: அதனை நிர்வாகிக்கும் உரிமையை எழுச்சி பெற்ற எகிப்து நிலைநாட்டிக்கொண்டு விட்டது — என்ற இந்த விளக்கத்தின் தொடர்ச்சியாக, ஆகவே, ஆனால் எனும் இரு சொற்களில் எது பயன்படுத்தப் படுகிறதோ அதைப் பொறுத்து, இன்றைய உலகப் போக்கே இருப்பதனை எண்ணிப் பார்த்திடும்போது, ஆனால் — ஆகவே எனும் இருசொற்களும் வடிவில் சிறியன, மகத்தான வலிவுடையன என்பதை அறிந்து கொள்ளலாம்.

சூயஸ்வரையிலே செல்வானேன், தம்பி, நமது குடும்ப விவகாரம் போதுமே. பெரியாரின் திருமணப் பிரச்சினை கிளம்பியபோது ஆனால் போட்டவர்கள் ஒரு சிலர், ஆகவே போட்டவர்கள் ஒரு சாரார் — திராவிடர் கழகம், திராவிடர் முன்னேற்றக் கழகம் எனும் இரு வடிவமே அல்லவா ஏற்பட்டு விட்டன!

தம்பி, சாமான்யமான சொற்களல்ல, இந்த, ஆனால் ஆகவே — என்பவைகள். மிகப் பொல்லாதன!!

தேவிகுளம் பீர்மேடு பிரச்சினையின்போது, அவை தமிழருக்கு உரியன என்பதற்கான காரணங்களை, வரலாற்று ஆதாரங்கள், புள்ளி விவரங்கள் ஆகியவற்றினைத் துணை கொண்டு நிதியமைச்சர் சுப்பிரமணியம் நேர்த்தியாகப் பேசினார், சட்டசபையில் — தேவிகுளம் இழந்தோம் — காரணம் என்ன? — இவ்வளவு பேசியவர், ஆகவே என்று ஆர்த்தெழவில்லை, ஆனால் என்று ஆமையானார்; சிறிது நாட்களிலே அந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் ஊமையுமானார்.

ஆகவே என்ற சொல் கொலுவிருக்கவேண்டிய கட்டத்தில், ஆனால் எனும் சொல் குடிபுகுந்தது; காடும் மலையும் கவினுற விளங்கிடும் தேவிகுளம் பீர்மேடு, நெய்யாற்றங்கரை போன்ற இடங்களை இழந்தோம்.

ஆகவே என்ற சொல்லினை அமைச்சர், அரியாசனத்தில் அமர்த்தியிருந்தால், தேவிகுளம் ஆகிய பகுதிகள் தமிழர்க்குக்



கிடைத்திருக்கும்-அமைச்சர் பதவி ஒருக்கால் அவருக்கு இல்லாது போயிருக்கும்!

தமிழர் வாழும் இடம் இது-தமிழரின் தாயகம் — ஆகவே தமிழ்நாடு என்றே பெயர் அமைதல்வேண்டும் என்று பெரியாரே கூறினர். அவருடைய பேரன்பைப் பெற்றுப் பெருமிதம் கொண்டுள்ள காமராஜரோ, ஆகவே இதற்குத் தமிழ் நாடு என்று பெயரிடலே பொறுத்த முடைத்து என்று கூறாமல், ஆனால், உலகில் சென்னை என்றால்தான் புரியும், சென்னை ராஜ்யம் என்றே பெயர் இருக்கும் என்று அறிவித்துவிட்டார். தமிழருக்குத் 'தமிழ்நாடு' என்ற பெயர் அணியும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

ஆகவே இப்படிப்பட்டவரின் ஆட்சியை ஆதரிப்பது அறமாகாது என்றல்லவா தம்பி! நீ கூறுகிறாய். தமிழ்நாடு என்ற பெயர்கூட வைக்கத்தான் காமராஜர் முன்வரவில்லை, ஆனால் அவர் நல்லவர், நம்மவர், தமிழர், அவர்தான் மீண்டும், மீண்டும் ஆட்சி செய்யவேண்டும் என்றல்லவா பெரியார் சொல்கிறார்.

இதன்பயனாக அரசியல் நிலைமையும், போக்கும், எவ்வளவு எதிர்பாராதமுறையில் உருவாகிவிட்டது, உணருகிறாயல்லவா?

பொதுமக்கள் பேசுவதை சற்று உற்றுக் கேட்போம், வா, தம்பி,

பெரியார், தமிழ்நாடு என்று தான் பெயர் இருக்க வேண்டும் என்கிறார்.

ஆர்வத்தோடு சொல்கிறார்: எழுச்சியூட்டும் முறையில் எடுத்துரைக்கிறார்.

இந்தப் பெயர் கிடைப்பதற்காகப் பெரும்போரே நடத்துவேன் என்று எச்சரித்திருக்கிறார்.

காமராஜரோ, அதெல்லம் அர்த்தமில்லாத பேச்சு, அனாவசியமான ரகளை, வீணான குழப்பம், சென்னை ராஜ்யம் என்ற பெயர்தான் இருக்கும். ஆமாம், யார் வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் கூச்சல் போடட்டும் என்று பிடிவாதமாகப் பேசுகிறார்.

ஆகவே பெரியார், காமராஜரின் இந்தக் குருட்டுப் போக்கை வன்மையாக எதிர்த்துப் போராடக் கிளம்புவார்—

இப்படித்தானே பொதுமக்கள்—பெரியார், தமிழ்நாடு என்ற பெயர் தேவை என்பதற்கான விளக்கமளித்தபோது பேசிக் கொண்டனர். பிறகோ, காமராஜர், தமிழ்நாடு என்ற பெயர் சூட்டக்கூட ஒப்பாதது கண்டு, பரணி பாடினுரோ என்ருல், இல்லை.

ஆனாலும் காமராஜரை ஆதரிக்கிருர்! ஏன்? ஏன்? என்று பொதுமக்கள் கேட்கின்றனர்.

இவ்வண்ணம், தம்பி, ஒவ்வோர் பிரச்சினையிலும், இந்த ஆனல், ஆகவே எனும் சொற்கள், வண்ணத்தை, வடிவத்தை வலிவை, விளைவை, நிலையை, நோக்கை, மாற்றிவிடக் காண்பாய். ஒவ்வொன்ருகவும், ஒவ்வோர் முனையில் நின்றும் எண்ணிப்பார்த்தால், முழுவதையும் காண்பாய் — இல்லையேல், குருடர் கண்ட யானைக் கதையாக முடியும்.

> என்னோடு இருந்தார்கள். என்னல் ஆளானுர்கள், என் திருமணத்தின்போது விட்டுப் பிரிந்தார்கள், தனிக் கட்சியானுர்கள்.

என்ற பேச்சுடன், பெரியார் ஆனல்

> திராவிடநாடு பிரச்சினை, பொருளாதாரத் திட்டம், சமுதாயப் பிரச்சினை
>
> ஆகியவற்றிலே, முன்பு கொண்டிருந்த கருத்தினையே கொண்டு இருக்கிருர்கள்.
>
> தனியாக இருக்கிருர்கள், வேறு கட்சிகளிலே குடி புகுந்துவிடவில்லை.

என்று மட்டும் சேர்த்துப் பேசுவது என்ற போக்கு இருந்தால், இன்று அவர்,

> என்னை விட்டுப் பிரிந்து போனதுகள், ஆனாலும் என் கொள்கைகளையே கொண்டோராக இருப்பதால், தேர்தலில் ஆதரிக்கிறேன் என்றல்லவா கூறுவார்!

ஆனல்—ஆகவே எனும் இரு சொற்களும், பயன்படுத்தப் படவேண்டிய முறை தவறிப் போவதால், தாலாட்ட வேண்டியவர்கள் தடிகொண்டு தாக்க வருவது போன்ற வேதனை தரும் விசித்திரம் விளைகிறது.

மற்ருேர் வேடிக்கை, கேள், தம்பி!

வடநாட்டு நேருவுக்கு நாம் கருப்புக் கொடி காட்டினேமல்லவா? நையப் புடைத்தார்கள்! சிறையில் போட்டுச் சிதைத்தார்கள்!!



இதைக் கண்டோர் கண் கலங்கினர்.

இது குறித்துப் பேசினேர், பரிதாபப்பட்டனர்.

> தி. மு. க. க்களின் திட்டம் எங்களுக்குப் பிடிக்காது, ஆனல் அவர்கள் மீது சர்க்கார் ஏவிய அடக்கு முறையைக் கண்டிக்கிருேம்.

என்று நம்மோடு நேசமற்ற ஏடுகளும் எழுதின.

இதுகள் என்னைவிட்டுப் பிரிந்துபோய் தனிக் கட்சி வைத்துக்கொண்டன, ஆனல் பாவம், வடநாட்டு எதிர்ப்பு உணர்ச்சியைக் கைவிட வில்லை; நேருவுக்குக் கருப்புக் கொடி காட்டும் அளவுக்கு ஆர்வமும் ஆற்றலும் காட்டினர்; மகிழ்கிறேன்; அவர்களைப் போலீஸ் காட்டுமிராண்டித்தனமாக அடித்தனர்; கண்டிக்கிறேன்.

இதுபோல் பெரியார் கூறும் போக்கிலே இருந்தால், பாசம் பால்போல் பொங்குமல்லவா! இப்படித்தான் பேசுவது முறை என்று தானே பகைவரும் கூறுவர்! கட்சியிலிருந்து, பிரிந்து போனுர்கள், ஆனல் கடுமையான அடக்குமுறைக்கு ஆளானுர்கள், என்று பச்சாதாபம் காட்டத்தானே வேண்டும்.

அந்தச் சம்பவத்தின்போது, ஆனல் போட்டுத்தான் பெரியார் பேசினுர், எழுதினுர்; எப்படி? நம்மிடம் பச்சாதாபம் காட்டும் முறையில்!

அடக்கு முறையைக் கண்டிக்கக் கடற்கரையில் கூட்டம் கூட நடத்தினுர்.

அந்த 'ஆனல்' அவருடைய அவசரகாலத் திட்டம் என்பது இப்போது அவர் ஆனல் என்னும் பதத்தை வேறு நோக்குடன் பயன்படுத்துவதலிருந்து தெரிகிறது.

இப்போது பெரியார் பேசுகிருர்,

> நான் கொடிகொளுத்து என்றேன்.
>
> சர்க்கார் என்னிடம் நெருங்க வில்லை.
>
> கருப்புக்கொடி பிடித்தோம்; போலீஸ் பாதுகாப்பு கொடுத்தது.
>
> ராமர் படம் கொளுத்தினேன்; ஒரு துளி சர்க்கார் அடக்கு முறையும் கிடையாது.
>
> நீ, நேருவுக்குக் கருப்புக் கொடி காட்டினுய் என்ன செய்தார்கள்?

பூட்ஸ் காலால் உதைத்தார்கள்,

உருட்டி உருட்டித் தள்ளினார்கள்.

என்று பேசியிருக்கிறார்

நான் கிளர்ச்சி செய்தேன் அடக்குமுறை ஏவவில்லை, ஆனால் நீ கருப்புக் கொடி காட்டினாய், உதை உதை என்று உதைத்தார்கள்! என்று பேசுகிறார்.

ஆனால் எனும் சொல் இதற்குப் பயன்பட்டது!

ஒருமுறைக்குப் பன்முறை இந்தப் போக்கினை அலசிப் பார், தம்பி, தமிழகத்தின் அரசியலே புரியும்!

நம்மோடு சேர்ந்திருப்பவர்களுக்குப் பெரியார் பயமூட்டப் பார்க்கிறார்.

ஓ! தோழர்களே! அங்கே இருந்தால் உங்களுக்கு அல்லல், அவதி, அடக்குமுறை தாக்கும். என்னோடு இருந்தால், துளியும் தொல்லை இல்லை. துரைத்தனம் உங்களைத் தொடாது.

என்ன கிளர்ச்சி செய்தாலும், என்னோடு இருப்பவருக்கு இம்சை நேரிடாது. சந்தேகமிருந்தால், கொடி கொளுத்தும் திட்டம், பிள்ளையார் உடைப்பு, ராமர் எரிப்பு எதை வேண்டுமானாலும் பார். போலீஸ் நம்மை ஏதாவது செய்ததா? அதுகள் கதை தெரியுமா? அதுகள் கருப்புக் கொடி பிடித்தன! உதைத்தார்கள்! உருட்டினார்கள்! சுட்டுத் தள்ளினார்கள்!

ஆகவே அதுகளோடு சேராதே! என்னோடு வா! தொல்லை வராது! துரைத்தனம் தொடாது!

என்று அழைக்கிறார்.

பூட்ஸ் காலால் உதைபட்டோம் — உண்மை. உருட்டி உருட்டித் தள்ளப்பட்டோம், உதை உதை என்று உதைத்தனர்; மறுக்க வில்லை! துப்பாக்கியால் சுட்டனர் — பிணமாயினர் தோழர்கள்! ஆமாடா தம்பி ஆமாம். மிகமிக நாகரீகமான முறையில், நல்லாட்சியுள்ள எந்த நாட்டிலும் அனுமதிக்கப்படும் கருப்புக்கொடி காட்டும் முறையில் கிளர்ச்சி செய்தோம் — பெரியார் கூறுகிறபடி

பூட்ஸ் காலால் உதைத்தனர்.

உருட்டி உருட்டித் தள்ளினர்.



உதை உதை என்று உதைத்தனர்.

இல்லை என்று சொல்லவில்லை — இது இழுக்கு என்று பேசும் பெரியாரோடு நாம் இன்று இல்லை.

உதைப்பான்; பட்டுக்கொள்.

அடிப்பான்; பொறுத்துக் கொள்.

சுடுவான்; தாங்கிக்கொள்.

பத்துபேர் செத்தாலும் கவலைப்படாதே.

செத்தவர் போக மிச்சம் இருப்பவர், மானத்தோடு வாழட்டும்.

இப்படிப் போதித்த பெரியாருடன் நாம் இருந்தோம்.

அடக்குமுறை, வெறிக்கோலத்தில் துரத்தியபோது, நம் தோழர்கள் கலங்காது நின்றபோது, மனக் கண்ணால் அந்தப் பெரியாரைத்தான் கண்டனர்.

அடிபட்டோம், உதைபட்டோம், என்று கூறிக் கொள்வதிலே, வெட்கமில்லை, பெருமிதத்தோடு கூறுகிறோம்; தாயக விடுதலைக்காக இந்த அளவுக்காவது துணிவு பெற முடிந்ததே என்று மகிழ்ச்சியோடு கூறுகிறோம்; பெரியார் நம்மோடு இல்லாதிருக்கும் இந்நிலையில், அடக்கு முறை கண்டு அஞ்ச நேரிட்டுவிடுமோ என்று ஐயம் கொண்டிருந்த நாம், இல்லை, அவர் இன்று நம்மோடு இல்லாமற் போகலாம், அவர் ஊட்டிய ஆர்வமும் நம்மை விட்டுப் போய்விடவில்லை.

உதைக்கிறீர்களா? பட்டுக் கொள்கிறோம்.

சுடுகிறீர்களா? தாயகத்தின் தளை உடைத்திடும் பணிக்கு இன்னுயிர் தருகிறோம் என்று கூறினோம்.

இது, என்றென்றும், எண்ணுந்தொறும் நெஞ்சினை நெகிழச் செய்திடும் சம்பவம்.

இது கேலிக்கும் உதவும் என்று யார் எண்ணியிருப்பார்; ஆனால் — ஆகவே எனும் பொல்லாத சொற்களின் போக்கினாலே தம்பி, எது கண்டு எவரும் பாராட்டுவரோ அதே கஷ்ட நஷ்டம் ஏற்ற சம்பவத்தையே, பெரியார், கேலிபேசப் பயன்படுத்திக்கொள்ளும், விசித்திரம் ஏற்படுகிறது.

தம்பி, பெரியாராவது, தம்மோடு இருந்தால் கிளர்ச்சி செய்யலாம், சர்க்கார் 'கிச்சுகிச்சு" மூட்டுவரேயன்றி கொட்ட மாட்டார்கள், தட்ட மாட்டார்கள் என்று ஆசைகாட்டி,

அதன் மூலமாக நமது அணிவகுப்பிலேயிருந்து யாரையாவது இழுத்துக்கொள்ளலாமா என்று முயற்சிக்கிருர் என்று வைத்துக்கொள்வோம்; ஆசைக்கு ஆட்படும் போக்கு நம்மிடம் இருந்தால், இதைவிட, காங்கிரஸ் சுவைமிக்க ஆசை காட்டுகிறதே.

பதவி கிடைக்கும் என்று!—அணி வகுப்பிலே, யார், இளித்தவாயராயினர்!

கொள்கைக்காக கொடிய அடக்கு முறைக்கு ஆளாகினுர்கள் என்பது புகழின் சின்னமாயிற்றே! இதைக் காட்டியும் கேலி பேச முடிகிறதே!!

அடக்குமுறை கண்டு அஞ்சாமலிருக்கும் மனப்போக்கு, பூண்போட்ட தடியால் அடித்தாலும், பூட்ஸ் காலால் உதைத்தாலும், தாங்கிக் கொள்ளும் வீர உள்ளத்தை, பெரியாரே! எமக்குத்தாரும்!! தாரும்!!—என்று கேட்டுக் கேட்டுப் பெற்ருேம்.

இன்று அடிபட்டார்கள், உதைபட்டார்கள், ஆகையால் அங்கே போகாதீர்கள்—நான் நடத்தும் கிளர்ச்சியிலே புகை இருக்கும் நெருப்பு இராது; நெருப்பே தீண்டினுலும் சுடாது; சுட்டாலும் புண்ணுகாது; புண்ணுனுலும் மருந்தில்லாமலே குணமாய்விடும் என்று பேசுவது கேட்டா, தம்பி, நீ நமது கழகத்தைவிட்டுச் சென்றுவிடுவாய்! அப்படி நீ கேட்பதோ, தவறு அண்ணு!! என்று கேட்டிடும் எண்ணற்ற தம்பிமார்களின் கோபப் பார்வையை அல்லவா நான் காண்கிறேன்!

அடிப்பார்கள்! உதைப்பார்கள்! ஆகவே, என்னேடு வாருங்கள்—எந்தக் கிளர்ச்சி செய்தாலும் சர்க்கார் கிட்டேகூட வரமாட்டார்கள் என்று ஆசை காட்டும் பெரியார் ஒரு அரைமணி நேரம் மட்டும்தான் பேசுகிருர். உடனே உண்மைப் பெரியார் முழக்கமிடுகிருர், அதே கூட்டத்தில், 5000 பேர் தூக்குமேடை ஏறச் சித்தமாக இருக்கவேண்டும், தெரிகிறதா!—என்று கூறுகிருர்!

இதிலிருந்து உனக்கு என்ன, தம்பி, புரிகிறது! எனக்குத் தலை சுற்றுகிறது!

அங்கே இருந்தால் அடிப்பார்கள், ஆகவே அங்கு இராதே; ஆனால் இங்கே வா, தூக்குமேடை ஏற!!

இதிலே உள்ள ஆகவே ஆனல்—இவைகளின் போக்கு, எப்படி இருக்கிறது, என்பதை ஆர அமர இருந்து எண்ணிப் பார்!



அடிபட்டோரே! உதைபட்டோரே! அடக்குமுறைக் கொடுமைக்கு இலக்கானேரே! அவர்கள் எம்மை அடித்த போது ஏற்பட்ட வேதனையைக் காட்டிலுமன்ருே, அது குறித்துக் கேலி பேசுவது கேட்டு வேதனை எழுகின்றது. அருந்தொண்டாற்றக் கிளம்பினேரையா அடித்திடக் கிளம்பினீர்! அறிவிலிகாள்! பிரிந்தோர் எனினும் அவரும் எம்மவர் என்பதை மறந்தா நிற்போம்! என்று கூறி, களம் வந்து துணைபுரிவர் நல்லோர். அந்த அளவுக்கு மனம் இடம் தராது போயினும், ஐயகோ! அடிக்கின்றனரே, அறியாச் சிருரை! என்று கூறிக் கண்ணீர் சிந்தவேனும் இசைவர் இதயம் படைத்தோர். அடித்தனர், உதைத்தனர், உருட்டினர்! என்று கேலியல்லவா செய்கின்றனர்—என்று தோன்றும் தம்பி! இதையும் தாங்கிக்கொள்ளத்தான் வேண்டும்.

போர்க்குறிக் காயமே
புகழின் காயம்!
யார்க்கது வாய்க்கும்!
ஆ! ஆ! நோக்குமின்!
அனந்தம் தலைமுறை
வருந்தனி மக்கள்
தினந்தினம் தாம் அனுபவிக்கும்
சுதந்திரம் தந்தது
தம்முனேர் நொந்த
புண்ணென் றெண்ணிச்
சிந்தை அன்புஉருகிச்
சிந்துவர் கண்ணீர்

என்ருர் மனேன்மணீயம் ஆசிரியர்.

புகழின் காயம் பெற்ருேம்! மேலும் மேலும் பெறுவதற்கான உள்ள உரம், இத்தகு கேலி மொழிகளால் ஏற்படும். ஆகவே, தம்பி, கவலைப்படுவானேன்!

ஆனல்......ஆகவே எனும் சொற்களின் சிலம்பம் தரும் சுவையான பாடம் கண்டு மகிழத்தான் இதைச் சொல்கிறேனேயல்லாமல், இதிலே குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் பிரச்சினைகளுக்காக அல்ல.

'இந்த நாட்டை இன்றைய தினம் ஆளுகிறவர்கள் வடநாட்டார்கள்; பணியாக்கள், மார்வாடிகள் குஜராத்திகள்தானே! அவர்கள் இத்த நாட்டை ஆளுவதற்கு உள் உளவாய் இருந்துகொண்டு இருப்பவர்கள் நம் நாட்டுப் பார்ப்பனர்கள்; அவர்களுக்குக் கூலியாயிருப்பவர்கள்,

திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த சில விபீஷணர்களும்,

அனுமார்களும் ஆவார்கள்.''

பெரியார் பேருரையில் ஓர் பகுதி இது.

ஆகவே, விபீஷணர்களையும் அனுமார்களையும் தேர்தலில் ஆதரிக்கக்கூடாது. இந்நாட்டு காமராஜர் போன்ற காங்கிரஸ் தலைவர்கள்தான், உள் உளவு ஆட்கள்—என்று கூறத் தோன்றும் உனக்கு.

ஆகவே போட்டால் இந்தக் கருத்துத்தான் பிறக்கும்.

ஆகவே, ஆகவே போடாமல் ஆனால் போட்டு, காமராஜர் காங்கிரஸ்காரர்தான், அந்த முறையில் வட நாட்டுக்குக் கங்காணிதான், ஆனால் அவர் நல்லவர், நம்மவர், ஆகவே அவரை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம், அவர் 'ஒண்டிக்கட்டையாக வெற்றிபெற்றால் பலன் இல்லை, ஆகவே காங்கிரஸ் மெஜாரடியாக வெற்றிபெறப்பாடுபட்டுத் தீரவேண்டும். ஆனால் காங்கிரஸ் நல்ல ஸ்தாபனம் என்று எண்ணிவிடாதீர்கள், அது முதலாளி முகாம், பார்ப்பனப் பாதுகாப்புச்சபை, வடநாட்டுக்கு நாட்டைக் காட்டிக் கொடுக்கும் கங்காணி ஸ்தாபனம்—என்று எடுத்துரைக்கப்படுகிறது.

இந்த அரசியல் தனி ரகமாக இருக்கிறதே என்பதற்காக அல்ல இதனைக் கூறுவது, இந்தக் கருத்தோவியத்தில், ஆனால்-ஆகவே என்ற சொற்கள் அரசியல் போக்கையே, தம் இஷ்டப்படி ஆட்டிப்படைக்கும் வேடிக்கையைக் கவனித்துக் களிப்புறுவதற்குத்தான்.

அண்ணா! உன் நோக்கம் இந்த இரு சொற்கள் நடத்தும் சிலம்ப வேலையின் வேடிக்கையை எடுத்துக்காட்டுவதாக இருப்பினும், இடையிடையே வரும் அரசியல் பிரச்சினைகளை அடியோடு எப்படி ஒதுக்கிவிடமுடியும்—ஆகவே ஒரு கேள்வி கேட்கிறேன்—காங்கிரஸ் கெட்டதுதான், காமராஜர் போன்றவர்கள் வடநாட்டு ஆதிக்க வளர்ச்சிக்கு உடந்தைதான், ஆனால் காங்கிரசை இதற்காக ஒழிப்பது என்று நாம் முயற்சிக்கும்போது, அதனைச் சாக்காகக்கொண்டு சந்து



கிடைத்ததும் பொந்து ஆக்கிக்கொள்ளும் நச்சுகள் இடம் பெற்றுவிட்டால் என்ன செய்வது சொல்லு கேட்போம்—என்று கேட்கத் தோன்றும், தம்பி.

பெரியார் இதை எண்ணிப் பார்க்காமலில்லை! இதுபற்றி அவர் தீர்க்கமாக ஆலோசித்துப் பார்த்தான் பிறகு, சொல்லுகிறார்—சொல்லி இருக்கிறார்......

காங்கிரசை ஒழிப்பதற்கு முதல் வேலை காங்கிரஸ் எதிரிகளுக்கு வெற்றி உண்டாக்குவதேயாகும். உண்மை எதிரி கிடைக்காத இடத்தில் எதிரி வெற்றிபெறமாட்டார் என்று கண்ட இடத்தில், வசதிபோலப் பார்த்து யாருக்கு ஓட்டுப் போட்டால், காங்கிரஸ் தோல்வி அடையும் என்பதாகக் காணக்கிடைக்கிறதோ அந்தப் பெட்டியில் ஓட்டுப் போடுங்கள். வேறு அபேட்சகர் இல்லை என்றோ, வெற்றி பெறமாட்டார் என்றோ கண்ட இடத்தில், பார்ப்பனருக்கு ஓட்டுப் போட்டால்தான் காங்கிரஸ் அபேட்சகர் தோல்வியுறுவார் என்று கண்டால், பார்ப்பனருக்கு ஆவது ஓட்டு செய்து காங்கிரசைத் தோற்கடிக்கவேண்டியது அறிவுடைமையாகும். கங்காணிகள்—துரோகிகள்—உண்மைச் சூத்திரர்கள் பேச்சைக் கேட்டு எந்தக் காரணத்தைக்கொண்டும் காங்கிரஸ் கங்காணிப் பெட்டியில் ஓட்டுப் விழும்படி நடந்துகொள்ளாதீர்கள். எப்படியாவது காங்கிரஸ் அழியவேண்டும், ஒழியவேண்டும். ஏன் என்றால் அது நம் நாட்டுப் பார்ப்பனர்போல் தேவை இல்லாத ஸ்தாபனம்-கேடான கேட்டை விளைவிக்கும் உள்மாந்தை போன்ற ஸ்தாபனம் என்பதே நமது முடிவு.''

தம்பி! இன்னும் என்ன விளக்கம் வேண்டும்?

அப்போதைக்கு இப்போதுள்ள நிலைமை எப்படி இருக்கிறது என்று பார்த்தால், சென்ற தேர்தலின்போது, அபேட்சகர்கள் நிறுத்தும் வேலையில் ஆச்சாரியார் ஈடுபடவில்லை, இப்போது டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அந்தக் காரியத்தைக் கவனிக்கப் போகிறார்!

இந்தக் கட்டம் வந்ததும், மீண்டும் அந்தப் பொல்லாத சொற்கள் வந்துவிடுகின்றன! வளைவும் நெளிவும் தெரிகின்றன.

ஆனால், ஆகவே என்ற சொற்களின் சுவைமிகு காதையை நான் நமக்குச் சாதகமாக்கிக்கொண்ட கோபத்

தில், சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைகள், அதே பாணியில் தன்னுல் எழுதும். படித்துச் சுவைத்திடுவதுடன், நாம் நமக்காகமட்டுமல்ல, நம்மைத் தாக்குவோருக்கும் உதவுகிருேம் என்று பெருமையும் கொள்ளலாம்.

நினைக்க நினைக்க வேடிக்கை வேடிக்கையாக இருக்கிறது இந்த இரு சொற்கள் நடத்தும் விளையாட்டு.

குமாரசாமி ராஜா, வடக்கு பொருளைப் பாழாக்குகிறது ராஜ்யசர்க்கார் விஷயத்தில் அனுவசியமாகக் குறுக்கிடுகிறது, அதன் இந்தப் போக்கை நாம் எதிர்க்கவேண்டும்—என்றெல்லாம் பேசினுரல்லவா!

அந்தப் பேச்சுடன் அவர், 'ஆகவே' எனும் சொல்லை இணைத்திருந்தால், இன்று, தென்னுட்டு விடுதலைப் போர்த் தலைவராகிச் செயல்பட வேண்டிவரும். அவருக்கு அது விருப்பமில்லை. ஆகவே, 'ஆகவே'வை விட்டுவிட்டார். இப்போது 'ஆனுல்' பேச ஆரம்பித்து விட்டதாகத் தெரிகிறது.

வடக்கு அப்படிச் செய்கிறது, அது, இது என்று நான் சொன்னேன்—ஆனுல் எனக்கு வடநாடு தென்னுடு பேதம் கிடையாது—அந்தக் காரியத்தை நான் ஆதரிக்கவும் மாட்டேன்—எதிர்க்கக் கூடச்செய்வேன்—நான் காங்கிரஸ் வாதியாக்கும்!—என்று நிருபரிடம் கூறுகிருராம்.

பார்த்தாயா; தம்பி, ஒரே ஒருசொல், ஒருவருடைய போக்கையே மாற்றிவிடுகிறது.

''ஆகவே'' என்று அவர் கூறினுல் எப்படி இருந்திருக்கும்—ஆனுல் என்று கூறும்போது எப்படி இருக்கிறது!

மைசூரில் முதலமைச்சராகஇருந்த அனுமந்தைய்யாவும்,
காங்கிரஸ் கெட்டுவிட்டது
சுயநலமிகள் புகுந்து விட்டார்கள்.

இந்தியா, அமெரிக்காவுக்கோ ரஷியாவுக்கோ அடிமை ஆகிவிடும்.

ஏதோ, நேருவின் புகழ், செல்வாக்கால் அந்த அவதி இன்னும் வரவில்லை.

என்பதாகப் பேசியிருக்கிருர்.

''ஆகவே''—என்று பேசினுல் ஒரு தினுசான அனுமந்தய்யாவும், 'ஆனுல்' என்று பேசினுல் முற்றிலும் வேறுவிதமான அனுமந்தய்யாவும் தெரிவார்களல்லவா!



ஆகவே, தம்பி, ஆனுல் என்பதற்கும் ஆகவே என்பதற்கும் உள்ள மகத்தான சக்தி, பிரச்சினைகளை, நிலைமையை, போக்கை எப்படி எப்படி எல்லாம் உருவாக்க, மாற்றி அமைக்க முடிகிறது என்பதுபற்றி எண்ணிப்பார்த்தேன், ஏ! அப்பா! ஏடு போதாது அவ்வளவு கருத்தலைகள் எழுகின்றன! ஆனுல் அவ்வளவும் ஒரு இதழில் தரமுடியுமா? ஆகவே, இத்துடன் இதனை நிறுத்திக்கொள்கிறேன். உறக்கமும் வருகிறது; காகம் கரைவது காதில் விழுகிறது.

அன்பன்,

அண்ணாதுரை

17—9—56.

கடிதம் : 66

# அறைகூவுகிருர் அமைச்சர்!!

நிதி அமைச்சர் மொழிகள்—

ஜஸ்டிஸ் கட்சியும் காங்கிரசும்—

ஆயிரம் கோடி திட்டம்

தம்பி !

நிதியமைச்சர் சுப்ரமணியஞர் போர்க்கோலத்துடன் வந்து நிற்கிருர்.

மெத்தக் கோபத்துடன் அவர் இருக்கிருர் என்பதும் தெரிகிறது. கோபம் ஏன் அவ்வளவு கொந்தளிக்கிறது என்பதும் புரிகிறது.

செல்லுமிடமெல்லாம் அவருக்குச் சொல்லுகிருர்கள் 'ஊழியர்கள்' — நமது கழகம் வளர்ச்சி அடைந்திருப்பதனை !

"கூட்டம் குறைவுதான்."

"பரவாயில்லையே! சென்ற மாதம் காமராஜர் வந்தபோது இதிலே கால்வாசிதான் இருக்கும்."

"அப்படியா ... இந்த ஊரில் மக்களுக்குப் போதுமான அரசியல் விழிப்புணர்ச்சி இல்லை... பொதுக்கூட்டத்திற்கு வருவதில் ஆவல் எழாததற்கு அதுதான் காரணமாக இருக்க வேண்டும்..."



"அப்படிச் சொல்லிவிடுவதற்கில்லை..."

"ஏன்?...என்ன...!"

"முன்னேற்றக் கழகத்தார் கூட்டம் போட்டால்...!"

"முன்னேற்றக் கழகம் ஒரு கட்சியா?... அடுக்கு மொழி பேசிடும் ஆள் மயக்கிக் கூட்டம், அதுகளுக்கு அரசியல் என்ன தெரியும்...?"

"அதுசரி, அதுசரி......ஆனல் இந்த ஜனங்கள்..."

"குப்பையில் தள்ளுங்கள் ...... பெரிய கூட்டமா அவர்கள் வந்தபோது?"

"ஆமாம் ...... பிரமாண்டம் ...... அதைப் பார்த்த பிறகுதான் நம்ம பேச்சிமுத்து, தேர்தலில் இறங்கவே தயங்குகிருர்."

"அப்படியா! இன்று வெளுத்து வாங்கிவிடுகிறேன், முன்னேற்றக் கழகத்தை..."

இப்படி உரையாடல் நடந்தான பிறகு, பொதுக்கூட்டம் சென்றிடவும், 'பிரமுகர்கள்' அவரை வரவேற்கவும், பொது மக்கள் ஆர்வம் காட்டாமலிருக்கவும் கண்டவுடன், நிதி அமைச்சருக்குக் கோபம் கோபமாக வருகிறது, கொக்கரிக்கிருர்.

இந்தக் கிழமை, தம்பி, சென்ற இடமெல்லாம், எங்கே அந்த அண்ணுத்துரை? பிடித்திழுத்து வாருங்கள்!—என்று கேட்பது போலவே, சீற்றத்துடன் பேசியிருக்கிருர். நான் வருத்தமடைகிறேன், மெத்தவும் அவருக்கு 'வேலை' கொடுத்துவிட்டதற்காக.

திட்டம் எங்கே? திட்டம் எங்கே? காட்டட்டும்! நீட்டட்டும்! பார்க்கிறேன்! நிபுணர்களை, அழைக்கிறேன்! அவர்கள் அளித்திடும் தீர்ப்பை ஏற்கிறேன்! என் பதவியைக் கூடத் துறக்கிறேன்!—என்று ஒரே வீராவேசமாகப் பேசியிருக்கிருர்.

தேர்தல் நேரமல்லவா — தீ பறக்க வேண்டுமே — அப்போதுதானே ஐம்பது ஆயிரமானுலும் இலட்சமானுலும் பரவாயில்லை என்று வீசி எறிந்து தேர்தல் வேட்டையில் ஈடுபட 'ஆட்கள்' தைரியம் பெறமுடியும். அதற்காகப் பாபம், அமைச்சர் ஆலாய்ப் பறக்கிருர், 'ஆலகாலம்' கக்கப்பார்க்கிருர். அவர் உதிர்த்துள்ள 'முத்துகளை' சிந்தாமல் சிதருமலெடுத்து ஏடுகள் வெளியிட்டுத் தமது தேசியத்தைத் தெரி

வித்துக்கொண்டுள்ளன! தேசீயத்தைத் தெரிவித்துக்கொள் வதுடன் அந்த ஏடுகள், மக்களுக்குத் தெளிவும் அளிக்க வேண்டும் என்ற பொறுப்பையும் கவனித்து நடப்பதானல், நான் எடுத்துக் கூறும் பேச்சையும், குலேக்காமல் வெளியிட வேண்டும். அந்தப் பண்பு ஏது? இருந்தால் ஜனநாயகம் ஏன் இன்று கேலிக்கூத்தாகிக் கிடக்கிறது! அது கிடக்கட்டும். நீண்டகால வியாதி, உடம்போடு ஒட்டிக் கொண்டது !

என் மீது இத்துணை எரிச்சல் கொள்ள என்ன காரணம் நிதி அமைச்சருக்கு?

சாதாரணமாக, நிதி அமைச்சர், நம் பிரச்னைகளை — பேச்சுகளைத் தமது மேலான கவனத்துக்கு உரியன என்றே கருதுவது கிடையாது. நிதியும் மந்திரியும், ஒருசேரத் தம் மிடம் சிறைப்பட்டிருப்பதால், அவர் பண்டைக்காலப் பாது ஷாக்கள்போல, ஊர்ப் பிரமுகர்கள் தரும் உக்காவைப் பிடித் துக்கொண்டு, ஊஹூம் ... ஆஹாம் ... பேசிக் கொண்டு உலா வந்தால் போதும், கழகத்தார் பற்றிக் கவனிப்பதே, தமது மேலான நிலைக்கு ஏற்றதாகாது என்று எண்ணிக்கொள்பவர், எனினும், இந்தக் கிழமை, முழுவதும் அவர், கரூரிலும், மதுரையிலும், திருச்சியிலும் செல்லுமிடமெங்கணும், பொது வாக முன்னேற்றக் கழகத்தையும், குறிப்பாக என்னையும் 'போடு போடு' என்று போட்டுவிட்டதாகக் கருதிக் கொண்டு தம்முடைய பலவீனத்தைக் காட்டிக்கொண்டிருக்கிருர்.

1. திராவிட முன்னேற்றக் கழகம் சரியான முறையில் அமைந்த எதிர்க்கட்சி அல்ல.
2. திராவிட முன்னேற்றக் கழகத்தாருக்கு அரசியலே தெரி யாது.
3. அடுக்குமொழி பேசுவார்கள் — அனுவசியமாக எதிர்ப் பார்கள்.
4. அவர்களுக்கு நாட்டிலே ஆதரவே கிடையாது.

இவை நிதியமைச்சரின் மொழிகள் — மதிமிகு மொழிகள் என்று அவர் எண்ணிக்கொண்டிருக்கிருர் — அவராவது அவ் விதம் எண்ணிக்கொள்ளாவிட்டால், வேறு யார் துணைவரப் போகிருர்கள்.

எதிர்க்கட்சி என்பதற்கு என்ன இலக்கணம் காண்கிருர் நிதி அமைச்சர் — அவர் படித்துள்ள அரசியலில் — படித்திருந் தால்! — என்று அறிய யான் மிகவும் ஆவல் கொண்டுள்ளேன்.



அவர் பேசுவதிலிருந்து; நான் யூகித்துக்கொள்ள என்ன இருக்கிறது ?

கம்யூனிஸ்டு கட்சி கெட்டது.

சோஷலிஸ்டுகள் கெட்டவர்கள்.

முன்னேற்றக் கழகம் மிகமிகக் கெட்ட கட்சி.

இப்படி எல்லாவற்றையும் கண்டித்துவிட்டு, எதை எதிர்க் கட்சி என்று இவர் கூறுகிருர்? ஒரு சமயம், உண்மையான எதிர்க்கட்சி எப்படி இருக்கவேண்டும் என்பதை எடுத்துக் காட்டவே, காங்கிரசிலே இருந்தே சிலரை இவர் அழைத்துக் கொண்டு வெளியே கிளம்பி, எதிர்க் கட்சியாக்கி, அரசியல் 'சேவை, செய்யப் போகிருரோ என்னவோ ? யார் கண்டார் கள்!

ஆளும் கட்சியில் வளரும் சர்வாதிகாரத்தைக் கண்டிப் பது.

ஆளும் கட்சி மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறை வேற்ருததை அம்பலப்படுத்துவது.

ஆளும் கட்சியின் அமுலில் ஏற்படும்அல்லலை, அவ தியை எடுத்துக் காட்டுவது.

ஆளும் கட்சியின் சட்ட திட்டங்களும், நிர்வாக முறை களும் ஏழைகளை எவ்விதத்தில் கெடுக்கிறது என்பதை எடுத் துரைப்பது.

ஆளும் கட்சி, என்னென்ன விதமான இதமளிக்கும் சட்டம் செய்திருக்கவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுவது. உரிமையையும் உடைமையையும் பறிகொடுக்கும் போக்கில் ஆளும் கட்சி நடந்து கொள்ளும்போது, கண்டிப்பது எதிர்த்துக் கிளர்ச்சி நடத்துவது.

இவைபோன்றவைதாம், எதிர்க்கட்சிகளுக்கு இருக்க வேண்டிய இலட்சணங்கள் என்று நான் படித்த—அதிக அளவு படிக்கவில்லை, ஆனல் படித்தவரையில் கவனத்துடன் படித்திருக்கிறேன்—அரசியல் விளக்க ஏடுகளில் காணப் படுகின்றன.

எதிர்க் கட்சிகளுக்கு இருக்கவேண்டிய இந்த இலட்சணங்கள், யாரிடம், எந்த வகையிலே இல்லை என்பதை எடுத்து விளக்கிட இந்த வீராதி வீரர் முன்வரவில்லை—அதை

விட்டு விட்டு 'ஓஹோ! இவைகளெல்லாம் கட்சிகளே அல்ல' என்று கூறிவிடுகிருர்.

ஓநாயும் ஆட்டுக்குட்டியும் என்ற கதை உண்டல்லவா, அதுபோல, திராவிடமுன்னேற்றக் கழகத்தின் நோக்கத்தில் இன்ன தவறு, போக்கிலே இந்தவிதமான கோளாறு இருக்கிறது என்று எடுத்துக்காட்ட வக்கற்ற இந்த வக்கீல், இந்தக் கழகத்தார், முன்பு வெள்ளேயர் ஆட்சியிலே வெண்சாமரம் வீசினவர்கள் என்று குதர்க்கம் பேசிவருகிருர்.

இன்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களில்—முக்கியஸ்தர்களில்—யார் வெள்ளேயருக்கு வெண் சாமரம் வீசினவர்கள்—யார் பதவியில் இருந்தவர்கள்—யார் வெள்ளேயனிடம் பணம் வாங்கி வேலேபார்த்தவர்கள், என்பதை எடுத்துக் காட்டும்படி, 'சூரசம்ஹார'க் கோலம் பூண்டு சுற்றி வரும் இந்தச் சுப்பரமணியனுரைக் கேட்கிறேன்.

எப்போது ஜஸ்டிஸ் கட்சி, சேலத்தில் திராவிடர் கழகமாக மாறிற்ருே, அன்றே, களங்கம் துடைக்கப்பட்டது. 'கழுவி விட்டதை'க் காங்கிரஸ் தங்கக் கலசத்தில் அல்லவா ஏந்திக் கொண்டது?

நாமறியோமா, நாடு அறியாதா, இந்தச் சேதியை?

வெள்ளேயனிடம் சுளேசுளேயாகப் பணம் பெற்றுக் கொண்டு, அவன் காலேத் தொட்டுக் சண்களில் ஒத்திக் கொண்டவர்களே, கட்டி அணேத்துக்கொண்டது காங்கிரஸ் என்பதை விளக்க எத்தனே எடுத்துக்காட்டு வேண்டும்! மந்த மதியினரும் இதனே அறிந்துகொள்ள முடியுமே!

அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் யார்? அலிபுரம் சிறையில் அவதிப்பட்ட தேசியத் தொண்டரோ!! வெள்ளேயர் ஆட்சியை ஒழித்திட வீரப்போரிட்ட சிதம்பரனுருடன் கூடிச் செக்கிழுத்தவரோ! அன்னிய ஆட்சிக்கு அடங்கிக் கிடக்க மாட்டேன் என்று ஆர்த்தெழுந்த வைக்கம் வீரருக்கு வலது கரமோ? தேசத்தை அடிமை கொண்டவனுடன் உறவு கொள்ளமாட்டேன் என்று கூறி, 'உத்யோகத்தை' உதறி எறிந்த தியாகியோ? நாடு கேட்காதா, நாப்பறை அறையும் இந்த அமைச்சரை? ஐயா! அமைச்சரே! அண்ணுத்துரையும் அவன் சார்ந்துள்ள கழகத்தினரும், வெள்ளேயரை ஒழித்திடும் வீரப்போர் புரிந்தவர்களல்லர், எனவே அவர்கள், எமது ஆட்சியிலுள்ள அலங்கோலத்தை எடுத்துக் கூறினுல், கேளேன், எவரும்கேளார் என்று விசித்திர வாதம் புரிகிறீரே, இந்த அல்லாடி யார், கூறும் கேட்போம், என்ருல், பதில்



ஏது கூறுவார்! நான் கூறுகிறேன், தம்பி, நாடறிந்த உண்மையை, அதை மறுத்திடவாவது முன்வருகிருரா, கேள் இந்த மந்திரியை!

அல்லாடி—ஒரு, சர்! ஆங்கில அரசு தந்த பட்டம், அட்வகேட் ஜெனரல் பதவி—ஆங்கில அரசு வீசிய எலும்புத் துண்டு என்றுரைக்கவேண்டும் அமைச்சரின் பாஷையில்! அவரை அல்லவா, அடிபணிந்து அழைத்து, இவர்கள், அரசியல் சட்டம் தீட்டும் வேலேயைத் தந்தனர்!

தேசத்துரோகி—இவர் தீண்டக்கூடாது எமது விடுதலேச் சாசனத்தை என்ரு கூறினர்.

தேடித் தேடிப் பிடித்திழுத்து வந்தனர், தேசியத் தலேவர்கள், அவர் திருவடி சரணம் என்று கிடந்தனர்.

அமைச்சரின் அறிவாற்றல் என்ன செய்துகொண்டிருந்தது? அல்லாடியை அழைக்காதே! அவமானத்தைத் தேடாதே! என்ரு இவர் ஆர்ப்பரித்தார்!

அல்லாடி, அரசியல் சட்டத்தைத் தீட்டிக்கொண்டிருந்த போது, இந்த அமைச்சர் இருந்த திக்கும் தெரியாது நாட்டு மக்களுக்கு! இன்று இளித்து நிற்கவும், இனிப்பாகப் பேசவும் பதவியின் காரணமாக நாலுபேர் நத்திக்கிடக்கக் கிடைத்துவிட்டார்கள் என்பதனுல் உண்டான போதையில், போதகாசிரியராகிருர்—வெள்ளேயன் காலத்தில் இந்தக் கழகத்தார் என்ன செய்தார்கள் தெரியுமா என்று விண்ணுரம் பேசுகிருர்.

கலெக்டர் வேலேயில் காலடி வைத்து, காஷ்மீர் திவான் வேலே வரையில் உயர்ந்து, உள்ளே நுழையாதே! என்று உத்திரவிட்டு, நேரு பண்டிதரின் மார்புக்கு நேராகத் துப்பாக்கியை நீட்டிடும் துணிவுடன் துரைத்தனம் நடத்திய கோபாலசாமி ஐயங்காரல்லவா, மந்திரியானுர்! அப்போது. மானமும் ரோஷமும் எங்கேபோய்க் குடிபுகுந்தது? வெள்ளே ஏகாதி பத்யத்தின் செல்லப் பிள்ளேயாயிற்றே இந்த கோபாலசாமியார்! இவரைக் காங்கிரசாட்சியிலே காராக்கிரகத்தில் தள்ளுவார்கள், கண்ட இடத்தில் சுட்டுக் கொல்லுவார்கள், எந்தத் துப்பாக்கி முனேயை நேரு பண்டிதரின் மார்பிலே வைத்தாரோ, அதே துப்பாக்கி முனேயை இவருடைய முதுகிலே குத்தி விரட்டுவார்கள் என்றெல்லாம் முழக்கமிட்டனரே காங்கிரஸ் பேச்சாளர்கள். வெட்கமின்றி அவரை அழைத்து 'சோடசோபசாரம்' நடாத்தி, 'சுபசோபனம்' பாடி, பாதுகாப்பு இலாகா, மந்திரியாக்கிக் கொள்கிருேமே, உலகு கைகொட்டிச் சிரிக்காதா, என்று,

அன்று எண்ணிய தன்மானத் தலைவர் யார்? காட்டச் சொல்லுங்கள்! இன்று துள்ளி வருகுதுவேல்! தூர விலகி நில்! என்று துந்துபி முழக்கிடும் இந்தத் தூயவராவது, வாய் திறந்தாரோ! இவர் இருப்பதையே நாடு கவனிக்கவில்லை அந்த நாட்களில்!! இன்று வீரம் சொட்டுகிறது பேச்சில்—அன்று அசடு வழிந்தது இவர் போன்றார் முகத்தில்! ஆங்கில ஆட்சியின்போது எத்துணை ஜொலிப்புடன் இருந்தாரோ, அதே பளபளப்புடன், கொலு வீற்றிருந்தார் கோபாலசாமி ஐயங்கார்.

வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்திடும் வீரப்போருக்கு முத்துராமலிங்கத் தேவர் தேவைப்பட்டார்—இன்று பசும்பொன் இருக்கவேண்டிய இடத்தில், பரங்கியருக்குப் பல்லக்குத் தூக்கிய சிற்றரசர் கூட்டத்தைச் சேர்ந்த இராமநாதபுரம் ராஜா அல்லவா வீற்றிருக்கிறார்! வெட்கங்கெட்ட நிலைக்கு, வேறென்ன எடுத்துக்காட்டு வேண்டும்.

தமிழ்நாடு என்ற பெயர் வேண்டும்.

ஏழைகள் ஈடேற்றப்படுவதற்கான திட்டம் வேண்டும்.

ஆட்சியாளர்கள் இதைச் செய்கிறவரையில் உண்ணாவிரதமிருக்கிறேன், என்று சங்கரலிங்க நாடார் எனும் காங்கிரஸ் தியாகி, அல்லற்படுகிறார்; அமைச்சர் அவையில் அமர்ந்துகொண்டு, என்ன ரகளை? என்ன கூச்சல்? என்று கேட்டிட, இராமசாமி படையாச்சியும் மாணிக்கவேலரும் இருக்கிறார்கள். இது வேதனையைக் கிளறவில்லை, வெட்கத்தை மூட்டவில்லை, இந்த அமைச்சருக்கு! நாம் ஒரு காலத்திலே ஜஸ்டிஸ் கட்சியை ஆதரித்தோமாம், ஆகவே நம்மை மக்கள் ஆதரிக்கக் கூடாதாம!!

யாரார் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் என்று மக்களால் சுட்டிக் காட்டப்பட முடியுமோ, அவர்களிலே பசை கொண்டோரிடமெல்லாம் நேசம் கொண்டு சுவைத்து, இன்புறுவதுதான் இன்றைய காங்கிரஸ் என்பதை யார்தான் அறிந்து கொள்ளவில்லை! ஊர் முழுவதையுமா ஒரு அமைச்சர் தமது அதிகாரப் பேச்சினாலே உண்மையை மறந்துவிடச் செய்யமுடியும்?

எனவே தம்பி, சொத்தை வாதத்தை மெத்தச் சிரமப்பட்டு. மெச்சுவதற்கு யார் கிடைக்கா விட்டாலும், அடுத்த தேர்லுக்கு மனு போட்டிருக்கும் மகானுபாவர்களாவது பாராட்டுவர் என்ற எண்ணத்தில் அமைச்சர் பேசுகிறார், அந்தமகானுபாவர்களிலே பலரும், ஜஸ்டிசில் இருந்தவர்கள்!!



மற்றோர் பெரிய தவறு நாம் செய்கிறோமாம்—தேமதுரத் தமிழோசை அவர் செவியைத் துளைக்கிறதாம்! ஏனடா, தம்பி, தமிழின் எழில் விளங்கப் பேசுகிறாய்? பார்! அமைச்சருக்கு எவ்வளவு ஆத்திரம் வருகிறது; அமைதி அழிகிறது; அழுதுவிடுவார் போலிருக்கிறது. நானே கூடச் சொல்லலாமென்று இருக்கிறேன்—நீயும் சொல்லு—மலையினின்றும் கிளம்பும் சிற்றாறின் ஒலியோ, மங்கை நல்லாள் மதலைக்கு முத்தமிட்டுக் கொஞ்சும் போதும், மணவாளனிடம் பேசி மகிழ்ந்திருக்கும் வேளையிலும் கேட்கக் கிடைக்கும் சிரிப்பொலியோ, வாட்போரின்போது கேட்கும் ஓசையோ, தென்றலோ, புயலோ, தேனோ, என்றெல்லாம் பலரும் பலப்பட எண்ணி மகிழத்தக்க விதமாக, இனிப் பேசி, இந்த அமைச்சரின் இதயத்தை வாட்டாமலிருக்கும்படி, நமது நாவலருக்கும், மற்றையோருக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும்.

சீவிச் சிங்காரித்துக்கொண்டு, முல்லை சூடி, முறுவலுடன் இடுப்பில் குழந்தையுடன் இதயத்தில் மகிழ்ச்சியுடன் இள மங்கை செல்லக் கண்டால், பதியை இழந்ததால் பசுமை உலர்ந்து போன பரிதாபத்துக்குரிய 'மொட்டை'க்குக் கோபமும சோகமும் பீறிட்டுக் கொண்டுதானே வரும்! அமைச்சருக்கு நாம் ஏன் அந்த அல்லல் தரவேண்டும்!!

அவர் நமது கழகத் தோழர்கள் பேசும் மொழியில் ஏற்றமும் எழிலும் இருந்திடக் காண்கிறார்—எரிச்சல் பிறக்கிறது—அதை மறைத்துக்கொள்ளும் ஆற்றலும் அற்றுப் போய், அழகாகப் பேசி, அடுக்குமொழி பேசி, மயக்கிவிடுகிறார்கள் என்று கூறி மாரடித்து அழுகிறார்! நாம் என்ன செய்வது, தம்பி, வேண்டுமென்றே, தமிழின் இனிமையைத் தேடிப் பிடித்திழுத்தா வருகிறோம். தமிழ் உள்ளம் நமக்குத் தமிழ் இனிமையைத் தருகிறது; அமைச்சரின் நிலை அது அல்லவே!

உள்ளொன்று வைத்துப் புறம் பொன்று பேசவேண்டிய நிர்ப்பந்தம் தாக்குகிறது.

உண்மை தெரிகிறது, அதை மறைத்தால்தான் பதவி என்பது குடைகிறது.

எந்தத் துறையிலே பார்த்தாலும் வடவர் வளம் பெறுவதையும், தென்னவர் திகைப்புண்டு கிடப்பதையும் அறிகிறார் உள்ளத்தில் சோக அலை கிளம்புகிறது கோபப் புயல் வீசுகிறது. ஆனால் அந்த வெல்வெட்டு மெத்தையில் அமர்ந்து எண்ணிப் பார்க்கும்போது, தெற்குத் தேய்ந்

தாலென்ன, காய்ந்தாலென்ன, என்ன சுகம்! என்ன சுவை, இந்தப் பதவி! என்று சபலம் பிறக்கிறது; அமைச்சரின் பேச்சு, உள்ளத்தில் உள்ளதை மறைத்திடப் பயன்படுத்தப் படுகிறது. அதனாலேயே பேச்சிலே சூடு இருந்தால் சுவை இல்லை, சுத்தம் இல்லை! சூட்சமம் அதுவே தவிர அவருக்கென்ன அகமும் புறமும் படித்திட, தமிழின் அருமையும் இனிமையும் அறிந்திட, எதுகை மோனையை அழைத்திட, எழிலும் சுவையும் பெற்றிடவா இயலாது! நம்மைவிட அதிகம் முடியும்!! ஆனால். உள்ளத் தூய்மை வேண்டுமே! கொள்கை ஆர்வம் தேவையாயிற்றே! தெளிவும் துணிவும் நிரம்ப வேண்டுமே! அதை எங்ஙனம் அவர் பெறுதல் இயலும்—அமைச்சராயிற்றே!

அமைச்சர் பேசியதாக 'தினமணி' கூறுகிறது, நான் ஓர் மாபாதகம் செய்துவிட்டிருப்பதாக அவர் மனச்சங்கடம் அடைந்திருக்கிறார் என்று தெரிகிறது என்ன என்கிறாயா? கேள், தம்பி, நான் ரோமாபுரி ராணிகள்—ஓர் இரவு—என்றெல்லாம் ஏடுகள் எழுதினேனாம்—எனவே, இதுதான் இவர்கட்குத் தெரியும், வேறென்ன தெரியும்—என்று ஏளனம் செய்ய முற்படுகிறார், அமைச்சர் பெருமான்!

அமைச்சர் பெருமானுடைய கவனத்தை ஓர் இரவும் ரோமாபுரி ராணிகளும் ஈர்த்திருக்கும் உண்மை எனக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறதல்லவா—மகிழ்ச்சி—மெத்த மகிழ்ச்சி. நரைதிரை மூப்பு என்பவைகளுக்கு ஆளான தொண்டு கிழங்களே, ரோமாபுரி ராணிகளிடம் சிக்கிக்கொண்டனர் என்றால், வாலிப முறுக்குக் குறையாத அமைச்சர், அவர்களிடம் சொக்கிப் போனதிலே ஆச்சரியமில்லை. ஆனால் இதிலே ஆச்சரியம் என்ன தெரியுமா தம்பி, கயல்விழி, மையல் மொழி, காட்டியும் ஊட்டியும் கட்டழகிகள் கருத்தைக் கெடுப்பர், காரியம் குலைப்பர், ரோம் சாம்ராஜ்யம் அழிந்துபட்டதற்த வேல்விழி மாதரிடம் வாள் ஏந்திய வீரர்கள் அடிமைப்பட்டது ஓர் காரணம் என்று எச்சரிக்கை செய்ய, நான் அந்த ஏடு எழுதினேன். அமைச்சர், பாவம், அதைப் படித்து, பெறவேண்டிய பாடம் பெறாமல், வேறு ஏதேதோ எண்ணங்களைப் பெற்று, மெத்தச் சிரமப்பட்டிருக்கிறார்போலும். அதனாலேதான், அவர் அத்துணை கோபத்துடன், ரோமாபுரி ராணி புத்தகம் எழுதியதைக் கூறியிருக்கிறார்.

அமைச்சரே! அலைமோதும், அடக்கிக்கொள்க! ஆசை வந்து உந்தும், ஆட்பட்டுவிட வேண்டாம். அந்த ஏடு, சுவையூட்டுச் சூறாவளியை மூட்டிவிடும் சுந்தராங்கிகளிடம்,



அரசியல் உலகத்து அதிபர்கள், ஆழ்வார்கள், அடிவருடிகள் எனும் எவரும் சர்வஜாக்ரதையாக இருக்கவேண்டும், ஏனெனில், ரோம் சீரழிந்ததே, கோலமயிலனையார் கண்டரரைக் கொல்லும் விழியால் தாக்கியதனால்தான் என்று எடுத்துக் கூறவே எழுதப்பட்டது அந்த ஏடு.

இது, சபலம் எழும்போதெல்லாம், அமைச்சர்போன்று பெரிய நிலைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் படித்துப் பாடம் பெற்று, பதமும் பக்குவமும் கெடாதபடி தம்மையும் நாட்டையும் பாதுகாத்துக்கொள்ள உதவ வேண்டும் என்ற எண்ணத்துடன் எழுதப்பட்டது.

படித்துவிட்டு, பாடம் பெறாமல், பெருமூச்சு விடுவதும், ஆஹா! அந்தக் காலம், எப்படிப்பட்ட அருமையான காலம்! என்று ஏங்குவதும், இது அதுபோலவா? கண்டால் புன்னகை மலருகிறது, கைபட்டால் முகம் சுளித்துக்கொள்வதும் தெரிகிறது. தொட்டால் துவளும் போக்கு அல்லபோலும், கனியவைத்திடக் காலம அதிகம் தேவைபோலும் என்றெல்லாம் எண்ணமிடுவதும் சிலருக்கு ஏற்படுகிறது எனின் குற்றம் என்னுடையதல்ல. கிடைத்த பாலை குழந்தைக்குத் தந்து மகிழ்ந்திடும் மதியூகியும் உண்டு, பாம்புப் புற்றுக்கு வார்த்துவிட்டு பரமபதத்துப் பேரேட்டிலே பெயர் பதிவாகிவிட்டது என்று எண்ணிக்கொள்ளும் ஏமாளியும் உண்டு! குற்றம், பாலில் இல்லை!!

அமைச்சர் இப்போது காங்கிரஸ் வட்டாரத்திலே இடறி விழுந்தால், ஓர் இரவு எனும் ஏட்டிலே நான் காட்டி இருக்கும் ஜெகவீரர் மீது தான் விழ வேண்டும். அத்தகையோரின் கெடுமதியைக் கண்டிக்க ஏடு எழுதுவது, எந்த வகையான குற்றமோ-எனக்குத் தெரியவில்லை—காலஞ்சென்ற 'கல்கி'யும் வ. ரா.வும் அவ்விதம் கூறவில்லை! அவர்கள் ஏதேனும் குறை காட்டியிருந்தால், நான் திருத்திக் கொண்டிருப்பேன். அமைச்சர் போன்றவர்கள் அந்த ஏடுகள் குறித்து ஏதேதோ பேசும்போது, எனக்கு அவர்கள் அந்த ஏடுகளிலிருந்து பெறவேண்டிய பாடத்தைப் பெறவில்லை என்றுதான் தெரிகிறது. அவர்களை எல்லாம் திருத்தும் ஆற்றலையா நான் பெற்றிருக்கிறேன்! நாட்டு மக்கள்தான் அவர்களைத் திருத்தவேண்டும். சீதையை இராவணன் சிறை பிடித்ததைக் கூறிடும் சம்பவத்தைக் கவி கூறுவது எதற்கு? அதுபோல ஒன்று கிடைக்காதா, இராவணன்போல கெஞ்சிக் கிடக்காமல், வஞ்சியைப் பஞ்சணை விருந்தாக்கிக் கொள்ளலாமே என்ற கெடுமதி பெறுவதற்கா?

ஓர் இரவு,—ரோமாபுரி ராணிகள்—மேலிடத்தில் உள்ளவர்கள் ஒழுக்கத்தைத் துணைகொண்டால்தான், நாடு உருப்படும் என்ற உண்மையை உணர்த்தும் ஏடுகள்!

துரோபதை துகில் உரியப்படும் சம்பவத்தைப் படிக்கக் கேட்டு, பரிதாபப் படவேண்டும், அக்ரமம் இந்த அளவுக்கா போவது என்று கொதித்தெழ வேண்டும் என்று எதிர்பார்ப்பது முறை – துகிலா உரிந்தார்கள்.. ஆஹா...பலே! பலே!... சொல்லு சொல்லு...எப்படி எப்படி உரிந்தார்கள்...என்று ரசித்துக் கேட்டபடி, எதை எதையோ எண்ணிக்கொண்டு, உதட்டை மடக்கிக் கடித்துக்கொள்ளும் உலுத்தர்கள் இருக்கத்தான் செய்வார்கள்! அதற்கென்ன செய்யலாம்.

கிடக்கட்டும், நான் வகை கெட்டவன், ஓர் இரவும், ரோமாபுரி ராணியும் குறித்து மட்டுமே எழுதினேன்; இதனை ஏளனம் செய்து எரிச்சல்பட்டுப் பேசுகிறாரே, இவர் தீட்டி, நாட்டவருக்குத் தந்துள்ள கேடு நீக்கிடும் ஏடுகள், யாவை?

இவர் தீட்டிய ஓர் அரசியல் விளக்க ஏடு வெளிவந்த பிறகுதான், உலகப் பெரும் தலைவர்கள் ஒன்று கூடி, உண்மையை உணர்ந்து, ஐக்கிய நாடுகள் சபையையே அமைத்ததுபோலவும், இவர் அளித்த விஞ்ஞான விளக்க ஏட்டினைப் படித்த பிறகே ஈன்ஸ்டின் தத்துவத்தையே உலகு பெற்றதுபோலவும், இவர் கீதைக்குப் புது வியாக்யானம் தீட்டிடக் கண்டு, கண்ணனே ஆச்சாரியார் கனவில் தோன்றி, கண்ணன் காட்டிய வழி என்று நீர் வெளியிட்ட ஏடு சரியில்லை, நமது பக்தன் பண்டித சிகாமணி சுப்ரமணியம் தீட்டியுள்ள ஏடுதான் சரியானதாகும் என்று எடுத்துரைத்தது போலவும், 'உலகப் பேருண்மைகள்' என்று இவர் ஓர் ஏடு தீட்டிட, அதிலே உள்ள கருத்துரையைக்காணவே, நேரு பண்டிதர் ரஷியாவுக்கும் கிரீசுக்கும், சவுதி அரேபியாவுக்கும், பிரான்சுக்கும இப்படித் தேசம் தேசமாகச் சுற்றி அலைந்து தேடிக்கொண்டிருப்பது போலவும், நோபல் பரிசு வருஷா வருஷம் எனக்கே தருகிறீர்களே, மற்றவர்களும் பிழைத்துப் போகட்டும் பாவம் என்று இவராகப் பார்த்து நிறுத்திக் கொண்டது போலவும், பேசுகிறாரே, தம்பி, இவர் தீட்டி நாட்டுக்கு நீட்டிய ஏடு எத்தனை?

இன்றுவரையில், சொத்தையோ சோடையோ இவர் பார்க்க, படிக்க, கண்டிக்க, வெறுக்க, நான், ஏடு தந்ததாகத் தெரிகிறதே தவிர, நான் படித்திட இவர் ஒரு ஏடும் தந்ததாகத் தெரியவில்லையே! இந்த மலடியா என் படைப்பு



களை நையாண்டி செய்வது? பரிசீலனை நடத்தும் உரிமையே உண்டா என்பது சந்தேகம்!

வடநாட்டவர் பொருளாதாரத் துறையிலே படுத்தும் பாடுகளை விளக்குவது பணத்தோட்டம்-ரோமாபுரி ராணிகள் மட்டும் படித்ததாகக் காட்டிக்கொள்ளும் இந்தக் 'கனம்' இதைப் படித்ததுண்டா? நாடு, படித்ததுண்டா? நாடு, படித்தது.

தமிழன் 'கலிங்கம்' வென்ற தீர இனத்தவன் என்பதைக் கதை வடிவமாக்கியது கலிங்கராணி—அமைச்சர் கண்சிமிட்டிச் கருத்தழித்த ரோமாபுரி ராணிகளைக் கண்டு, சொக்கிப்போய் நின்றுவிட்டார். கலிங்கராணியைக் காண முடியவில்லை, பாபம்!

பொது வாழ்க்கைத் துறையிலே உள்ள போலிகளை அம்பலப் படுத்துவது பார்வதி B. A. பார்த்ததில்லை அமைச்சர்—மற்றும் பல. ரோமாபுரி ராணிகள்—ஓர் இரவு—இந்த இரு ஏடுகள்தான் இவருக்குச் சுவை தந்தனபோலும்.

பேசத் தெரியும், இதுபோன்ற ஏடுகள் தீட்டத் தெரியும் என்று கூறிவிட்டதோடு, நிற்கவில்லை அமைச்சர். நான் செய்யவேண்டிய வேலை' என்ன என்பதுபற்றியும் கூறுகிறார்.

தம்பி! தேர்தலில் ஈடுபட, நாம் முனைகிறோமல்லவா—பலருக்கு இது பலத்த அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

நமது பலம் பெரிது என்பதற்காக அல்ல, அவர்களுடைய பலக்குறைவு அவ்வளவு அதிகம்; அதனால்.

பதவி ஆசை பிடித்துக்கொண்டது, அதனால்தான் தேர்தலுக்கு வருகிறார்கள் என்று பதவியில் பிசின்போல் ஒட்டிக்கொண்டுள்ள இந்த உத்தமர்கள் பேசினர்.

அச்சம் காரணமாகவோ, அல்லற்பட வேண்டிவருமே, என்ற சங்கடம் காரணமாகவோ, இவர்கள் இவ்விதம் பேசக்கூடும் என்று எண்ணிக்கொண்ட நான், இரண்டோர் திங்களுக்கு முன்பு மதுரையில் பேசினேன், "ஐயா காங்கிரஸ் நண்பர்களே! ஆயாசப்படாதீர்கள்! எமக்குப் பதவியும் வேண்டாம், இடமும் தேவையில்லை; தேர்தலில் போட்டியிடாதபடி எம்மைத் தடுத்திடும் வாய்ப்புக்கூட நான் தருகிறேன்; இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆறு ஆயிரம் கோடி செலவழிக்கப்படும் என்கிறீர்கள்; முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலேதான் தென்னாடு ஏமாற்றப்பட்டது.

இப்போதாவது, முன்னாலே வஞ்சகம் செய்யப்பட்டதற்குப் பரிகாரம் தேடும் முறையிலும் இப்போதைக்கு நீதி வழங்கும் தன்மையிலும், தென்னாட்டுக்கு 2000-கோடி ரூபாய் ஒதுக்கு வதாக, நேருபண்டிதரை வாக்களிக்கச் சொல்லுங்கள்; அந்த வாக்குறுதி கிடைத்தால், நாட்டுக்கு 2000 கோடியும் அதன் பயனாகப் பல நற்பயனும் கிடைக்கும் என்ற மகிழ்ச்சியுடனும், நாம் முயற்சி எடுத்ததால், இந்தப்பலன் நாட்டுக்குக் கிடைக் கிறது என்ற திருப்தியுடனும், நாங்கள் தேர்தலில் நிற்பதைக் கூட விட்டுவிடுகிறோம், என்றேன்.

இது சில நாட்கள், கவனிப்பாரற்றதாக இருந்துவந்தது.

நாட்டுமக்கள், இதனைக் கவனிக்கும்படியான அரிய தொண்டாற்ற முதலில் கம்யூனிஸ்ட் கட்சி பாடுபட்டது; நான் சொன்ன யோசனையை ஆதரிப்பதன் மூலமாக அல்ல; நையாண்டி செய்வதன் மூலமாக.

திராவிடநாடு கூட வேண்டாம் போலிருக்கிறது, 2000-கோடி ரூபாய் கொடுத்தால் போதுமாம்—அண்ணாத்துரை யின் அரசியலைப் பார்த்தீர்களா—2000-கோடி கிடைத்து விட்டால், தேர்தலில் கூட ஈடுபடாமல் விலகிக்கொள்வார் களாம்—இப்படி இருக்கிறது 'இதுகளோட' அரசியல்—என்று கம்யூனிஸ்டுகள் கேலிபேசினர்.

இது மக்களிடம் நமக்கு இருந்த 'மதிப்பை' உயர்த் தியதை, அவர்கள் அறியவில்லை.

இதுவா அரசியல்? என்று கம்யூனிஸ்டுகள் கேட்டுக் கேலி செய்ததிலிருந்தே, மக்களுக்கு ஒன்று புரிந்தது: மற்ற மற்ற கட்சிகளைப்போல அல்லாமல், முன்னேற்றக் கழகத்தார், நாட்டுக்கு நன்மை கிடைப்பதானால் நாங்கள் தேர்தலைக்கூட மறந்துவிடுகிறோம் என்றல்லவா தெரிவிக்கிறார்கள். தேர்த லில் ஈடுபட்டுத் தமது கட்சிக்குப் புதிய அந்தஸ்து தேடிக் கொள்வதுதான் குறிக்கோள் என்று இல்லாமல், நாட்டுக்கு 2000-கோடி ரூபாய் ஒதுக்கினால், தேர்தல் வாய்ப்பும் வேண்டாம் என்றல்லவா கூறுகிறார்கள்—கட்சியைவிட, நாடு பெரிது என்று கருதும் இவர்களல்லவா, உண்மை ஊழியர்கள், என்று மகிழ்ந்தனர்.

இப்போது, கம்யூனிஸ்டுகள் செய்த 'தொண்டு' மேலும் திருத்தமாக, சுப்ரமணியனார்மூலம், செய்யப்பட்டிருக்கிறது.

இவர், கம்யூனிஸ்டுகளைவிட பலபடி தாவிச் சென்று 'ஆக்ரோஷத்துடன்' பேசியிருக்கிறார் என்பது எல்லா ஏடு களாலும் தெரிகிறது.



"அண்ணாத்துரை 2000-கோடி ரூபாய் தரப்படவேண்டும் என்று கூறுகிறார்; சரி; 2000-கோடிக்கு, நல்ல திட்டம் தீட்டட்டும், அதை ஒரு அயல் நாட்டு நிபுணர் ஒப்புக்கொள்வா ரானால் நான் என மந்திரிப் பதவியை ராஜிநாமாச் செய்து விடுகிறேன்—என்று பேசியிருக்கிறார்.

படித்ததும், தம்பி, எனக்கு முதலில் பரிதாபமாக இருந்தது.

திட்டம் தீட்டினதும், முதலில் களப்பலிபோல, இவருக் குப் பதவி போய்விடுமாமே! அந்தோ, பரிதாபமே, எவ்வளவு சிரமப்பட்டுப் பெற்றார், எத்துணை இராஜதந்திரத்தைக் கொண்டு, ஆபத்தினின்றும் தப்பிப் பிழைத்தார்! கடைசீயில் நம்மாலா இவருடைய பதவிக்கு 'முடிவு' ஏற்பட வேண்டும், என்றெல்லாம் எண்ணத் தோன்றிற்று.

நான் 2000 கோடி தென்னாட்டுக்கு ஒதுக்க வேண்டும் என்று கேட்டது, இவருடைய 'பதவி'க்கு முடிவு காண அல்ல! அது சாதாரணமாகவே, காலாவதி ஆகிவிடக் கூடியது! இவர், ஏன், பதவியை, இதற்காக இழக்க வேண்டும்! தாராளமாக இருக்கட்டும். அதிலும், எப்போது இவர் திட்டம் திட்டச் சொல்லி என்னை அறைகூவி அழைக் கிறாரோ, இவரேதானே இருந்து அதை நிறைவேற்றித்தர வேண்டும்! ஏன், ஓடிவிடப் பார்க்கிறார்!

ஆனால் உண்மையில் அப்படி ஓடிவிடக் கூடியவரா? செச்சே! அதற்கு வேறு ஆளைப்பாருங்கள்! ஆச்சாரியார் ஆட்சியின்போது, குலக்கல்வித் திட்டத்தை முழு மூச்சாக ஆதரித்தவர், பிறகு அது காமராஜர் ஆட்சியின்போது, குழி தோண்டிப் புதைக்கப்பட்டது கண்டும், கண்ணீர் வடித்துக் துக்கொண்டு, நான் பெற்ற செல்வம் மடிந்ததே என்று 'மந்திரி' வேலையை இராஜிநாமாச் செய்வார் என்று பலரும் கூறினர். அவரா இதற்கெல்லாம் இடம் கொடுப்பவர்! ஒட்டிக் கொண்டார்! அவர் புகுத்திய கல்வித் திட்டத்தை ஓட்டினர்—இவர் மட்டும், ஓட்டினவருடன் ஒட்டிக்கொண் டார்; ஓடிவிடவில்லை. பிசின் அவ்வளவு பலம்!!

தேவிகுளம் பீர்மேடு பெருவிட்டால்...! என்று முழக்க மிட்டார்; நேரு பண்டிதர், 'மையமைய' அரைத்தெடுத்த கரியை முகத்தில் பூசினார்; செ! இதுவும் ஒரு பிழைப்பா? சட்ட சபையிலும் மக்களிடமும் மார்தட்டித் தட்டிப் பேசி னோம், நமது வார்த்தைக்கு மதிப்பளிக்கவில்லையே டில்லி தாபார், இந்த அவமானத்தைத் துடைத்துக்கொள்ளவாவது அமைச்சர் பதவியை இராஜிநாமாச் செய்வோம் என்று

'ரோஷம்' காட்டினாரா? அவரா!! காட்டியிருந்தால் இன்று கரூரிலும் மதுரையிலும் பிற இடங்களிலும், 'பிரமுகர்கள்' தரும் வரவேற்புக் கிடைத்திருக்காதே!

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 400 கோடி தரவேண்டுமென்று, டில்லி சென்று 'இருந்து முகந்திருத்தி ஈரோடு பேன் வாங்கி'க் கேட்டார். நேரு பண்டிதரோ, ஆடினார் ஆடி சாடினார் ஓடோட! என்ன செய்தார், வேண்டமய்யா இந்தப் பதவி என்று கூறி இராஜிநாமாச் செய்தாரா? செய்வாரா? சுவை சாமான்யமா?

எனவே, திட்டம் தந்தால் இராஜிநாமாச் செய்கிறேன் என்று பேசுவது, உண்மையல்ல; விளையாடுகிறார்!

திட்டம் தீட்ட எனக்குத் தெரியுமா, தெரியாதா, என்பதா, இன்று அரசியல் பிரச்சினை?

இதிலேயும், பார் தம்பி, அடிமைப் புத்தியை.

நம்மைப்போய் நையாண்டி செய்கிறார், அன்னிய மோகம் என்று; இவர் இலட்சணத்தைக் கவனித்தாயா? நான் திட்டம் தீட்டவேண்டுமாம், அதை ஒரு அயல்நாட்டு நிபுணர் ஒப்புக்கொள்ள வேண்டுமாம்!

அயல் நாட்டு நிபுணர்!! ஏன் இந்த அடிமை மனப்பான்மை?

சரி, இனிப் பிரச்சினையைப் பார்த்திடுவோம்.

நான், அயல்நாட்டு நிபுணர் கண்டு மெச்சி ஏற்றுக்கொள்ளத்தக்க திட்டம் ஒன்று என்னிடம் இருக்கிறது, அதை நிறைவேற்ற 2000 கோடி தருக! என்று கேட்கவில்லை.

நான் கேட்டது, நீங்கள் தீட்டியுள்ள இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 2000 கோடிரூபாய் தென்னகத்துக்கு ஒதுக்குங்கள், என்றுதான் கேட்டேன்—கேட்கிறேன்—ஒவ்வொரு வாக்காளரிடமும் கூறி இதைக் கேட்கச் சொல்லப் போகிறேன்.

இப்போது, இந்த அமைச்சர் கொலுவிருக்கும் சென்னை ராஜ்யத்துக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை 170 கோடி!

இவர் கேட்டது 400 கோடி! கிடைத்தது 170!



இந்த வெட்கக் கேட்டைப் போக்கிக்கொள்ள இவர் முனையாமலிருக்கலாம்; பதவி காப்பாற்றப்படவேண்டும் என்பதற்காக.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே வஞ்சிக்கப்பட்ட தென்னகம், இப்போது 2000 கோடி கேட்க உரிமை பெற்றிருக்கிறது.

நான், 2000 கோடி என்று கேட்டபோது, என்னிலும் மிக மிகப் பெரிய தலைவர்கள் சார்பில் கேட்கிறேன். அமைச்சர் ஆச்சரியத்தில் மூர்ச்சையாகாமலிருக்கவேண்டும். நான் அவர் சார்பிலும்தான் கேட்கிறேன்!

தென்னாடு தொழில்துறையில் பின்னடைந்திருக்கிறது என்று இவரே கோவையில் இரண்டோர் திங்களுக்கு முன்பு கதறவில்லையா!

சிந்தாமணி தேஷ்முக், இது உண்மைதான் என்று ஒப்புக்கொள்ளவில்லையா?

தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருப்பதுபற்றி அனுமந்தய்யா ஆயாசப்படவில்லையா? தென்னேட்டி விசுவநாதம் தேம்பவில்லையா? வல்லத்தரசு கண்டிக்கவில்லையா? புன்னூஸ் புலம்பவில்லையா? அன்னா மஸ்கரினிஸ் கேட்கவில்லையா? இங்குள்ள தேசிய ஏடுகளேகூட அவ்வப்போது கண்டிக்கவில்லையா? இவ்வளவு மலையெனக் குவிந்திருக்கும் மனக்குமுறலின்பேரால், கேட்டேன்; என் 'மேதாவிலாசத்தை'க் காட்டிக்கொள்ள அல்ல.

திட்டம் தீட்டித் தர நான்மட்டும்தான் என்ற 'அகம்பாவம் புகத்தக்க விதமாக நான் பயிற்சி பெற்றவனுமல்ல' பதவி எனக்குத் தலைக்கனம் தரவில்லை.

திட்டம் தீட்ட நாட்டிலே உள்ள எல்லாக் கட்சித் தலைவர்களும் உட்காரலாம்—எனக்கும் இடமளித்தால் இருக்கிறேன்—தொழில்துறை நிபுணர்கள் இருக்கிறார்கள், நிர்வாக அலுவலர்கள் உள்ளனர், விஞ்ஞான வித்தகர்கள் உளர், பேராசிரியர்களின் அணிவகுப்பே இருக்கிறது, பாரெங்கும் உள்ள பல்வேறு முறைகளைப் பாங்குடன் அறிந்த பத்திரிகை ஆசிரியர்கள் பலர் உளர், அனைவரும் அமரலாம், அற்புதமான திட்டம் தீட்டலாம்—எந்த அயல்நாட்டு நிபுணரும் மெச்சத்தக்கவகையில்.

இது முறை—இது நெறி,

‘திட்டம் தீட்டு பார்ப்போம்’ என்று எனக்கு அறைகூவல் விடுவதா முறை? ஒருவகையில் இதனை எனக்கு அளிக்கப் படும் பெருமை என்றுகூட நான் எடுத்துக்கொள்ளலாம்—ஆனால் அகம்பாவம் என்னைப் பிடித்துக்கொண்டில்லை—எனவே, அருமையான திட்டம் தீட்டத்தக்க அறிஞர் பெருமக்கள் அனேகர் உள்ளனர் என்பதை அமைச்சருக்கு நினைவூட்டுகிறேன்.

அதெல்லாம் முடியாது, உன்னால் முடியுமா என்றே அமைச்சர் பிடிவாதமாகக் கேட்பதானால், அந்த அறிஞர் பெரு மக்களின் உதவியை நான் கேட்டுப் பெற்று, திட்டம் தருகிறேன் என்று உறுதி அளிக்கிறேன்.

அறைகூவலை நான் ஏற்றுக்கொள்கிறேன் — ஆனால் அந்த 2000 கோடி ஒதுக்கும் அதிகாரம் இருக்கிறதே, அது என்னிடம் வீரதீரமாகப் பேசிடும் இந்த வித்தகரிடம இல்லையே, என்ன செய்வது ?

ஐந்தாண்டுத் திட்டம் தீட்டவும், தொகை ஒதுக்கவும் அதிகாரம் படைத்தவர் நேரு! இவர், கையேந்தி நின்று, கிடைத்தால் மகிழ்ந்து, இல்லையென்றால் கண்கசக்கிக் கொண்டு வரும் நிலையில் வைக்கப்பட்டிருக்கும், ‘பொம்மை’ தானே!

இவர் எனக்கு அறைகூவல் விடுப்பதும், நான் அதனை ஏற்றுக்கொள்வதும் என்ன பலன் அளிக்கும்?

நேரு பண்டிதர், இவ்விதம் கேட்பாரானால், நான் அழைக்கக்கூடத் தேவையில்லை, தென்னாட்டின் அறிஞர் பெருமக்களேகூடி, அருமையான திட்டம் தீட்டுவர். அவர்களில் பலர் ‘தனிநாடு’ என்று பிரிவது தேவையில்லை, என்று எண்ணுபவர்களாக இருக்கலாம்; ஆனால், வடநாடு மிக மிக அதிகமாகத் தொழில்துறையில் முன்னேறிவிட்டது—தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையை உணர்ந்து வேதனை அடைந்தவர்கள் என்பது அனைவருக்கும் தெரியும்.

ஆகவே, என்மீது சுடுசொல் வீசியோ, கேலி பேசியோ, அமைச்சர் தமக்கு ஏற்பட்டுள்ள எரிச்சலைக் காட்டிக்கொள்ள லாமே தவிர, நாட்டு மக்கள் உள்ளத்திலே கொதித்துக் குழம்பிக்கொண்டுள்ள அதிர்ப்தியை அடக்கிவிட முடியாது.

இந்தச் சூழ்நிலையில், ஆவேசமாகப் பேசுகிறார் என்று நம்பி, யாரார் பாவம் எப்படி எப்படியோ குவித்த பணத்தை



இலட்ச இலட்சமாக, இந்தத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர்களாக நின்று, இழந்துவிட்டு ஏங்கப் போகிறார்களோ!

அப்படிப்பட்ட பணப் பெட்டிகளைத் தேடிச் செல்லும் வேளை இது; எனவேதான் அமைச்சர் ஆர்ப்பரிக்கிறார்; அறைகூவல் விடுகிறார்!

மதுரையில் நான் பேசினபோது; இவ்வளவு எளிதில் முளைவிடும் என்று எண்ணவில்லை; இதோ அமைச்சர் ஆர்ப்பரிக்க வேண்டிய நிலைமை வேகமாக வளர்ந்துவிட்டது.

எனவே தம்பி,

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மோசம் போய் விட்டோம் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலாவது நாம் சரியான, நியாயம் பெறவேண்டும்.

தி. மு. க. 2000 கோடி ரூபாய் தென்னாட்டுக்கு ஒதுக்கப்படவேண்டும் என்று கேட்கிறது.

நாட்டு மக்களே ! இதற்கு உங்கள் ஆதரவு தாருங்கள், என்று இல்லந்தோறும் எடுத்துச் சொல்ல, நாள் தவறாமல் பணியாற்று; பார், பதைக்கிறார், கதைக்கிறார், ‘கனம்’. பலன் அளிக்கிறது நமது பிரசாரம் என்பது தெளிவாகிறது, எனவே, புதிய உற்சாகத்துடன் பணிபுரியலாம், தம்பி, அமைச்சரின் ஆவேசப் பேச்சு அதற்கே பயன்பட வேண்டும்.

அன்பன்,

23—9—1956

கடிதம் 67

# வேதனை வெள்ளம்

## கே. வி. கே. சாமியின் மறைவு

தம்பி,

நெஞ்சிலே பெருநெருப்பு மூண்டதடா, தம்பி. ஓராயிரம் நச்சுப் பாம்புகள் ஒருசேரக் கூடி, இதயத்தைக் கடித்துக் கடித்து, மென்று மென்று கீழே உமிழ்ந்தவண்ணம் இருக்கிறது. வேதனை வெள்ளத்தில வீழ்ந்து, கரைகாணாமல் தவிக்கும் நிலையிலே இருக்கிறேன். எதையும் தாங்கும் இதயம்வேண்டும் என்று நான் சொல்லாத நாளில்லை. இதயம் தாங்கிக்கொள்ள முடியாத பெரு நெருப்பு புகுந்து, சுட்டு எரிக்கிறது. உட்கார்ந்தால் உடல் சாய்கிறது. உடலைக் கீழே சாய்த்தால் தானாக எழுகிறது. நடமாடினால் கால்கள் நடுக்கமெடுக்கின்றன, பேசினால் நாக்குக் குளறுகிறது. நண்பர்களைச் சந்தித்தாலோ, கண்ணீர் குபுகுபுவெனக் கிளம்புகிறது. ஐயயோ வேதனை, வேதனை, இது நாள்வரை நான் அனுபவித்தறியாத வேதனை! எவராலும் தாங்கிக் கொள்ள முடியாததோர் வேதனை! எந்தக் காதகனும் கன்மனம் படைத்தோனும், எண்ணவும் சொல்லவும் கூசும் விதமான கொடுமை நேரிட்டுவிட்டதே! வாழ்கின்ற இடம் நாடா, காடா? சூழ இருப்போர் மனிதர்களா, கொலைபாதகர்களா, கொடிய காட்டு மிருகங்களா? இதென்ன 1956 தானா அல்லது நாக்கறுத்து மூக்கறுத்து, கண்டதுண்டமாக்கிக் கொலைபுரியும் காட்டுமிராண்டிக் காலமா? என்றெல்லாம்



எண்ண எண்ண, நெஞ்சிலே குபீல் குபீலென்று ஓர் ஜுவாலை கிளம்பி, தகித்துத் தள்ளுகிறது என்ன செய்வது, எப்படித் தாங்கிக்கொள்வது. ஐயயோ! என்று அலறி மாரடித்து அழுது புரண்டு புரண்டு அழுது, காணும் நண்பர்களுடன் கூடிக் கூடி அழுதாலும், கப்பிக்கொண்டுள்ள துக்கம் ஒரு துளியும் விலகுவதாகக் காணோம். என்னைப் பிடித்திழுத்து, செயலற்றவனாக்கிவிட்டது. பித்தன்போல, வெறிச் சென்றதோர் பார்வையுடன் இருக்கிறேன். பேயறைந்தது என்பார்களே, அதுபோன்றதோர் கோலம் என்னைப் பிடித்துக்கொண்டது. நான் எந்நாளும் இதுபோன்றதோர் வேதனையைக் கொண்டதில்லை.

நடுநிசிக்குமேல், இரண்டிருக்கும். அடிகள் நாக்குக் குழறக் குழற, சென்னையிலிருந்து கிடைத்த சேதியைக் கூற வந்தார். இல்லத்தில் படுத்து, அந்தக் கிழமை இதழில் நான் நாட்டுக்கு அளித்துள்ள கருத்துகளைப்பற்றி எண்ணியபடி இருந்த என்னிடம்.

"அடிகள்?"—என்று நான் கேட்கிறேன்—படியிலிருந்து கீழே உருண்டு விழுந்து விடுபவர்போல் காணப்பட்டார். என்ன?—என்று நான் கேட்க, "நமது சாமி...தூத்துக்குடி சாமி......" என்றார், கண்ணீர் தளும்பியபடி..."என்ன, என்ன தூத்துக்குடி சாமிக்கு...என்ன?...என்ன......" நான் கேட்கிறேன், நடுக்கும் குரலில்..."யாரோ, அவரை...கொலை... போய்விட்டாராம்..." என்றார்; அந்தத் தாக்குதலிலிருந்து நான் இந்த விநாடிவரையில் மீளமுடியவில்லை, முழுதும்மீள என்றைக்குமே முடியாதடா தம்பி, முடியாது. இதயத்திலே ஏற்பட்டுவிட்ட பிளவு, குறையாது, மறையாது......

அந்த விநாடியிலிருந்து வேதனை வெள்ளத்தில் வீழ்ந்து பட்ட நான், என்ன செய்வது, என்ன எண்ணுவது என்று தெரியாமல், திகைத்துப்போய், கிடக்கிறேன்......

அஞ்சாதீர்கள்—எதற்கும் கவலை கொள்ளாதீர்கள்—மலைகுலைந்தாலும் மனம் குலையாதவன் தமிழன்—இன்னல் இடுக்கண் வரிசை வரிசையாக வந்து தாக்கினாலும், கலங்காதவன் திராவிடன்! அஞ்சா நெஞ்சுடையோன்!—தம்பி, ஆயிரம் தடவை கூறி இருப்பேன், பல்லாயிரம் தடவை எழுதி இருப்பேன், மேடைகளிலே நின்று இவைதமை முழக்கியிருக்கிறேன், இதோ கவிழ்ந்த தலையைத் தூக்கிவிட முடியவில்லை, பொங்கும் கண்ணீரை நிறுத்த முடியவில்லை. பதறும் உடலத்தைக் கட்டுக்குக் கொண்டுவர இயலவில்லை, வேதனை பிடித்தாட்டுகிறது. ஆபத்து என்றால் அஞ்சா

நெஞ்சம் இருந்தால்போதும் எதிர்த்து நிற்க. இது நமது
இதயத்தை அல்லவா சுட்டெரிக்கும் பெருநெருப்பு—அந்தோ!
எத்தனை நாளாக எண்ணி எண்ணித்திட்டமிட்டு, இதயத்தில்
இந்தப் பெருநெருப்பை மூட்டினரோ...எத்தகைய இதயம்
படைத்த இழிகுண மக்களோ, மனித உருவத்தை எப்படித்
தான் பெற்றனரோ, அந்த மாபாவிகள்...எண்ணும்போதே
நெஞ்சு வெடித்து ஓராயிரம் சுக்கலாகிவிடும் போலிருக்
கிறதே...இப்படியும் ஒரு கொடுமை நடப்பதா...இது
போன்றதோர் கொடுமை நடைபெறக்கூடும் என்று
எண்ணவே நெஞ்சு நடுக்குறுமே! நடத்தினரே நாசகாலர்கள்!
காலம் சுமக்கிறதே அக்கயவர்களை, மண்ணிலே அவர்கள்
நிற்க முடிகிறதே! எத்தனை எத்தனை இலட்சம் மக்களின்
இதயத்தைப் புண்ணாக்கிவிட்டனர் அந்த இதயமற்ற
கொடியவர்கள்...அந்தோ! அந்தோ! அக்ரமமே உருவான
அந்த மாபாவிகள் இந்த நம் மண்ணிலே தோன்றினரே!
தூத்துக்குடி சாமியை, தமிழ் மாநிலமே! திருஇடமே!
பெற்றெடுத்துப் பெருமை பெற்றாய்—எப்படித்தான் இத்
தகையோரைப் பெறமுடிந்தது. இதோ தெரிகிறானே அந்த
மாவீரன், வடித்தெடுத்த வேல்போல நிற்கிறான், கொள்கைப்
பற்று கொழுந்துவிட்டெரியும் கண்களால் பார்க்கிறான்,
உழைத்து மெருகேறிய உடற்கட்டுடன் நிற்கிறான், உறுதி
படைத்த உள்ளம் எனக்கு உண்டு என்று அந்த உருவமே
அறிவிக்கிறதே—திருஇடமே! இதோ உன் விடுதலையைத்
தன் பேச்சாக மூச்சாகக்கொண்ட செயல் வீரனைக் காண்பாய்!
உன் தளை உடைபடும் வரையில் ஓயாது உழைக்கும்
நோக்குடன் தன்னைத்தானே உனக்கு அர்ப்பணித்துவிட்ட
ஆற்றல் வீரனைக் காண்பாய், மக்கள் பணியன்றி வேறோர்
நோக்கமில்லை, கழகத் தொண்டன்றிப் பிரிதொன்றிலே என்
எண்ணம் பாய்வதில்லை என்று கூறிப் பணியாற்றி வரும்,
குன்றெடுக்கும் நெடுந்தோளுடையானைக் காணாய்! எவரிருக்
கிறார்கள், பிறந்த நாட்டைப் பீடுடையதாக்கும் பெரும்
பணியாற்ற? மக்கள் தொண்டாற்ற யார் இருக்கிறார்கள்?
அதற்கேற்ற மனதிடமும் கொள்கைப் பற்றும் குன்றாமல்,
குறையாமல், குலையாமல் கொண்டோர் யார் இருக்கிறார்கள்?
என்று கவலைப்படத் தேவையில்லை, இதோ சாமி, தூத்துக்குடி
சாமி, பாண்டி மாநாட்டின் படைத் தளபதி, பாட்டாளிகளின்
தோழன், கழகத்தின் காவலன், உண்மை உழைப்பாளர்களின்
உற்ற நண்பன், என் தம்பி, என் தம்பி, என்று நான்
பெருமையுடன் கூறிக்கூறி, திரு இடமே! உனக்குக் காட்டி
னேன்! அந்தத் திருவிளக்கு அணைந்துவிட்டதே—எண்ணெய்
தீர்ந்தா? அல்லவே! அல்லவே! திரி குறைந்தா? அதுவும்
இல்லையே! இருளொழிக்கும் இன்ப ஒளிவிட்டுக் கொண்டிருக்



கும் வேளையில், இதயமற்ற கயவர் சிலர் அந்தத் திருவிளக்கை
அணைத்து விட்டனரே......

தூத்துக்குடி சாமி—என்றால் தமிழகம், கேட்ட விநாடி
யிலேயே ஓர் களிப்பு காட்டுமே—பல ஆண்டுகளாக அந்தக்
கொள்கை வீரனின் தொண்டு தழைத்து, மணம் தந்து வரு
வது கண்டு, மகிழ்ந்து இறுமாந்தல்லவா இருந்து வந்திருக்
கிறது. தூத்துக்குடி கே. வி. கே. சாமி என்ற பெயர் உச்சரிக்
கப்பட்டதும் எந்த மன்றத்திலும், மாநாட்டிலும், உள்ள மக்
கள், நிமிர்ந்து உட்கார்ந்து, கண்களுக்கு ஓர் விருந்து, இதயத்
துக்கு ஓர் நம்பிக்கை, நாடு விடுதலை பெற்றுத் தீரும் என்பதற்
கோர் அத்தாட்சி இதோ, இதோ, என்று சுட்டிக்காட்டி அல்
லவா இன்புறுவர். தத்துவ விளக்கமா செய்வார்? தர்க்கமா
பேசுவார்? தழதழத்த குரலா? தட்டுத் தடுமாறும் போக்கா?
ஒரு துளியும் கிடையாதே! கழகம் இன்னதிட்டம் தீட்டுகிறது,
நான் அந்தக் கட்டளையை நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்
கிறேன், கடமையை, எத்தகைய எதிர்ப்பு வந்தாலும் நிறை
வேற்றியே தீருவேன், இது உறுதி என்றல்லவா, தொண்டு
உள்ளத்துடன், வீர உள்ளத்துடன் எடுத்துக் கூறுவார். ஆம்!
இந்த மாவீரன், செய்து முடிப்பான்! அதற்கான ஆற்றல்
இவனிடம் இருக்கிறது!—என்று எவரும் கூறுவரே! அத்
தகைய மாவீரனை, தம்பி, இழந்தோமே — நாம் வாழ்கிறோம்,
வேதனையால் வாட்டப்பட்டுக்கொண்டிருக்கிறோம், வன்
கணாளர்கள் நமது குலக்கொடியை வேரோடு பறித்தெடுத்து
அழித்துவிட்டனரே!

தம்பி, நான் உங்கள் யாவரிடத்திலும், உரிமையுடன்
பேசுவேன். சாமியிடம் நான் சொந்தத்துடன் பேசுவேன்—
என்னை நன்றாகப் பார்த்தபடியே அவர் இருக்கமாட்டார்—
நான் பேசும் போது, அவர் அப்படியா? என்று கேட்ட
தில்லை, ஆகுமா! என்று கேட்பதில்லை, ஆகட்டும் என்பதன்றி
பிறிதோர் சொல்லை அவர் எனக்கு அளித்ததில்லையே! அவ
ரிடம் நான். பழகிய ஆண்டுகள் பலப்பல, சுயமரியாதை இயக்
கால முதற்கொண்டு, அவருடன் பழகும் வாய்ப்பு பெற்றிருந்
தேன். கடந்த பத்து ஆண்டுகளாக அந்த வாய்ப்பு, எனக்கு,
நாம் எடுத்துக்கொண்டுள்ள இலட்சியத்தில் வெற்றி
கிடைத்தே தீரும் என்பதற்கான நம்பிக்கையை மிகுதியாக்
கிற்று. செயல்படு திட்டம் எது என் எண்ணத்தில் எழும்போது
அடுத்த விநாடி. சாமியின் பெயர் நினைவிற்கு வரும். அப்படிப்
பட்ட தம்பி, அந்த ஆற்றல் வீரன், அவனுக்கா இந்தக்
கொடுமை!! அந்த மறத்தமிழ் வீரனுக்கா இந்தக் கொடுமை!

வெட்டினராம், குத்தினராம், பயங்கரமான ஆயுதங்களால், வெறியர்கள் ; தனியாக நின்றான் ; அவன் கூப்பிடு குரலுக்கு ஓடிவர இலட்சக் கணக்கான மக்கள் உள்ளனர், தமிழகமெங்கும். ஆனால், யாரும் உதவிக்கு வராததோர் சூழ்நிலையைச் சாதகமாக்கிக்கொண்டு, சண்டாளர்கள். தாக்கினரே கொன்றனரே! ஐயோ, இக் கொடுமையைக் கேட்கவே நமக்கு வேதனை பிறக்கிறதே —அந்த இரவு அக்ரமக்காரர்கள் தாக்கிய போது, எதிர்த்துப் போரிடமுடியாத நிலையில் சூழநின்று அவரைச் சித்திரவதை செய்தபோது, நம் சாமி அந்தோ ! என்னென்ன எண்ணினாரோ, ஏதேது நினைத்தாரோ, எப்படி எப்படித் துடித்தாரோ, வெட்டும் குத்தும் அவர் மீது பாயப்பாய, வெறியர்கள் தாக்கத்தாக்க, நம சாமி இரத்தம், வெள்ளமாகி ஓட, உயிர் ஊசலாட நின்ற நிலையிலும் வீழ்ந்திடும் போதும், ''ஐயோ! திருஇடமே! தாயகமே! பார்! உன் உண்மைத் தொண்டனை இந்த உலுத்தர்கள் உருக்குலைப்பதைப் பார் ! ஊருக்கு உழைப்பவனை இந்தக் கொலைபாதகர்கள் கொன்றுபோடும் கொடுமையைப் பார் ! பாட்டாளியின் நண்பனை இந்த மாபாவிகள், பதைக்கப் பதைக்க வெட்டுவதைப் பார் ! பார் ! தாயகமே ! பார் !— என்று எண்ணியிருந்திருப்பார்! என் குரல் கேட்டு ஓடிவர, இலட்சக்கணக்கான வீரர்கள் உள்ளனர்—எனக்காக இன்னுயிரும் தர பாட்டாளிகளின் படைவரிசை அணி அணியாக இதே தூத்துக்குடியிலிருக்கிறது எனினும், அவர்கள் எவரும் வர முடியாத நிலையிலே, என்னைக் கொல்கிறார்களே, கொடியவர்கள், என் செய்வேன்'' என்று அல்லவா குத்தும் வெட்டும் உடலைத்தாக்கி உயிரைக் குடித்திடும்போது எண்ணியிருந்திருப்பார்.

மலைமலையாக நாம் இருக்கிறோம், அணி அணியாக இருக்கிறோம், நாடெங்கும் இருக்கிறோம், நாசகாலர்கள், நமது சாமியைப் படுகொலை செய்துவிட்டனரே ! ஏழைகளின் இன்னல் துடைக்க, அவர்தம் உரிமைக்காக அல்லும் பகலும் பாடுபடும் ஆர்வமிக்க தொண்டராயிற்றே, பொதுத தொண்டிலே, துள்ளும் பிள்ளைப்பருவ முதற்கொண்டு ஈடுபட்டு, எதிர் நீச்சு நடத்தி ஏற்றம் பெற்றவராயிற்றே! எங்கு அநீதி தலை விரித்தாடினாலும், அக்ரமம் கொக்கரித்தாலும் பாய்ந்து சென்று அதனை எதிர்த்தொழிக்கும் அஞ்சாநெஞ்சனாயிற்றே. என்ற எதனையும் எண்ணிபார்த்தார் இல்லை அந்தக்கொலைபாதகர்கள். ஐயகோ ! அவ்வளவு ஆற்றல் படைத்தவர் என்பதற்காகவே அவரை அடித்துக்கொல்லக் கிளம்பிய கொடியவர்களல்லவா, அந்தக் கொலை பாதகர்கள்!

எங்கும் சாமி ! எதற்கும் சாமி ! எப்போதும் சாமி ! எங்கள் சாமி !— என்று நாடே பூரிப்புடன் பெருமிதத்துடன் கூறிடக்கேட்டதால், கெடுமதியாளர்கள் பொறாமை படமெடுத்தாடும் பாம்பாயினரோ ! எங்கள் சாமி ! என்று எண்ணற்ற வீரர்கள், நேருக்கு நேர் நின்று போரிடும் வீரம் காட்டிட எவர் வரினும் அவர்தம்முடன் வீரப் போரிட்டு வெற்றி கொள்ளத்தக்க அடலேறுகள், சொந்தம் கொண்டாடினர், பந்த பாசம் கொண்டிருந்தனர். பாட்டாளிகள், எங்கள் சாமி! எங்கள் சாமி ! என்று பரிவுடன் அழைத்தனர். ஆலைத் தொழிலாளரும் உப்பளத் தொழிலாளரும், கல் உடைப்போரும் கட்டை வெட்டுவோரும், எங்கள் சாமி ! எமக்குற்ற குறை அறிந்து உருகி, அக்குறை தீரத் துடிதுடித்தெழும் உள்ளம் படைத்த எங்கள் சாமி! என்று பாசம் காட்டினர். பள்ளிச் சிறுவர்களும், எங்கள் சாமி ! என்று அன்புடன் அழைத்தனர். வணிகர் கோட்டத்திலும், நகராட்சி மன்றத்திலும் எங்கள் சாமி!என்றுதான் உவகையுடன் அழைத்தனர். எங்கள் சாமி ! எதற்கும் அஞ்சா நெஞ்சினன் ! எந்த இன்னலுக்கும் கலங்காத உள்ளத்தினன் ! — என்று நமது கழகம் பெருமையுடன் நாடெங்கும் கூறிற்று! ஓங்கி வளர்ந்தது புகழ்! ஒப்பற்ற தொண்டு உயர்ந்தது, உயர்வளித்தது, பலன் தெரிந்தது ! இது கண்டு பொறாதார், இது போன்ற ஆற்றல் பெற இயலாதார், பொறாமை கொண்டனர், பொச்சரிப்பு உமிழ்ந்தனர், நச்சரவு ஆயினர், நள்ளிரவிலே, நாட்டுக்குக் கிடைத்த நல்ல புதல்வனை, வெட்டிக்கொன்றனர்—படுகொலை புரிந்தனர்.



அடுத்து வரும் தேர்தலில் எங்கள் சாமி வெற்றிக்கொடி நாட்டப்போகிறார். K. V. K. சாமி திராவிட முன்னேற்றக் கழக நெல்லை மாவட்டச் செயலாளர்;செயற்குழு உறுப்பினர் ; உப்பளத் தொழிலாளர் தலைவர்;ஆலைத் தொழிலாளர் தலைவர்; இம்மட்டோ, விரைவிலே K. V. K. சாமி M. L. A. ஆகப் போகிறார் என்று கூறிக் குதூகலித்தோமே—நமது தேர்தல் வெற்றிபற்றிய பட்டியலை எண்ணும்போதே, முதல் வெற்றி என்று இதனைக் குறித்திருந்தோம் — நமக்குச் செந்தேனாக இனித்த இதே எண்ணம், செந்தேளாயிற்றே பொறாமை உள்ளம கொண்டோருக்கு — ஆகா ! ஓங்கி வளருகிறான், புகழ் ஓங்குகிறது, ஓங்கியபடி இருக்கிறது, எப்படி இதனைக் கண்டு சகிப்பது என்று எண்ணினரோ அந்த இதயமற்றோர் படுகொலை செய்துவிட்டனரே! பூவும் பிஞ்சும் தோன்றி கனி குலுங்கவேண்டிய பக்குவம் பெற்ற பச்சை மரத்தை வெட்டி வீழ்த்தினரே, பாரில்எங்கும் கேள்விப்படமுடியாத பாதகச் செயலன்றோ செய்தனர்.

பாவிகளா ! படுபாவிகளா ! சாமியை வெட்டினீர்கள், சாமியைமட்டுமா, எமது இதயங்களை எல்லாமல்லவா ஈட்டி

கொண்டு குத்திவிட்டீர்கள் — குருதிகொட்டி அந்த வீரன் பிணமானான், இதோ நாங்கள் பல்லாயிரவர், இரத்தக் கண்ணீர் வடித்துக்கொண்டு நடைப்பிணமாகிவிட்டோமே —உமக்கு நாங்கள் இழைத்த கொடுமைதான் என்ன? ஏன் தான் இத்தகைய பயங்கரப் படுகொலை செய்தீர்கள்? சட்டமே! கேள்! சமூகமே! நீதிக்காக வாதாடு! நீதியே, உன் நீண்ட கரத்துக்கு வேலை கொடு! படுகொலை செய்த பாதகர்களைப் பாருக்குக் காட்டு. காரி உமிழட்டும் கற்றறிந்தோர்; சட்டம் அதன் சக்தியைக் காட்டட்டும்.

ஈடு செய்யமுடியுமா இந்தப் பெரும் இழப்பை — ஏது ? ஏது ?

எம்மிடம் பேச்சாளரும் எழுத்தாளரும் நிரம்ப இருக்கிறார்கள் — நடிகர்கட்குக் குறைவில்லை - நல்லோருக்குக் குறைவில்லை—வல்லோருக்கும் குறைவில்லை — ஆனால் நமது சாமி, நல்லவர், வல்லவர், எனும் இரு அருங்குணமும் ஒருருவாய் அமைந்து, பேசுவோருக்கும் எழுதுவோருக்கும் பெருந்துணையாய், பேசப்படத்தக்க பெரும்பொருளாக அல்லவா விளங்கி வந்தார் — அவரல்லவா அனியாயமாக வெட்டி வீழ்த்தப் பட்டார். செயல்முறையிலே ஓர் நாட்டம், செயல் படுவதிலே ஓர் தனி ஆர்வம், செயலில் ஓர் எழுச்சி—இவையாவும் ஒருங்கு அமைந்த ஓர் படைத்தளபதி அல்லவா நம் சாமி ! கட்டளையிட்டுவிட்டுக் கண்ணயர்பவரா, உத்தரவு பிறப்பித்துவிட்டு உறங்கச் செல்பவரா, அல்லவே; படை அமைத்து, படைவரிசையை நடத்திச் சென்று, பணியாற்றி வெற்றிகாணும், வீரம் செறிந்த தலைவராக அல்லவா விளங்கிவந்தார்.


நரை முளைக்காப் பருவம் — நாற்பதுக்குச் செல்லவே இன்னும் எட்டாண்டு செல்லவேண்டும் — போய்விட்டானே அந்த வாலிப வேந்தன் — எப்படித் தாங்கிக் கொள்வோம்!

அழுகிறேன், அழுகிறீர்கள், அழுகிறோம் — நம்மை அழவைத்துவிட்ட அக்ரமக்காரர்கள் எங்கோ இருந்துகொண்டு சிரிக்கிறார்கள். பெருமைப்பட்டுக்கொண்டிருந்தீர்களே, எங்கள் சாமி, எங்கள் சாமி என்று. மார்தட்டித் தட்டிப் பேசினீர்களே, எங்கள் சாமி!, எங்கள் சாமி! என்று எங்கே உங்கள் சாமி ? என்று கேட்கின்றனர்; ஐய்யயோ ? என்னபதில் சொல்லுவோம். வேதனையால் தாக்கப்படுகிறோம்; படுபாவிகளா ! எங்கள் சாமியைப் படுகொலை செய்துவிட்டீர்கள், பாதகம் புரிந்துவிட்டீர்கள், பண்பற்றவர்களே ! எங்கள் சாமியின் உடலைத்தான் வெட்டி எறிந்தீர்கள், அவர் உள்ளம் எங்களோடு இருக்கிறது, வேறெங்கும் செல்லவில்லை, அது அழிந்துபட வில்லை, எங்களாடு இருக்கிறது, எங்களுள் இருக்கிறது,



நாங்கள் யாவரும் கே. வி. கே. சாமிகளாகிறோம், அவர் காட்டிய ஆர்வத்தைக் கொள்கிறோம். அவர்பெற்றிருந்த ஆற்றலைப் பெறுகிறோம். பேயர்களே ! எங்களையும் கொலை செய்ய, கத்தி தீட்டுங்கள், அரிவாள் எடுங்கள், வாருங்கள், நாங்கள் சாக அஞ்சும் பரம்பரை அல்ல, என்றெல்லாம் தம்பி, கூறத் தோன்றுகிறது, நா எழமறுக்கிறது, அழுகிறோம், அழுகுரல் கேட்கிறோம், ஆறுதல் பெறமுடியவில்லை. ஆறுதல் அளிக்கச் சக்தி இல்லை. ஒருவரை ஒருவர் காணும் போது கண்ணீரைத்தான் பரிமாறிக்கொள்கிறோம். மறைந்த மாவீரன் குடும்பத்தாருக்கு நாம் என்ன ஆறுதல் கூற முடியும். நாமும் அவர்கள் கூடநின்று கதறித் துடிப்பதன்றி வேறென்ன செய்யும் நிலை இருக்க முடியும். அவர் நமது சாமியாயிற்றே, அழுகிறோம், அழுகிறாய், அழுகிறேன், தம்பி, செய்திகேட்டதிலிருந்து வேதனையால் தாக்கப்பட்டுக் கிடக்கிறேன் — வேறு எதுவும் எழுத முடியவில்லை.

அன்பன்,



30—9—1956

கடிதம்: 68

# காடு இது-நாடு அல்ல!

கே.வி.கே. சாமியின் குண
இயல்புகள்—சாமிக்குப் பின்

தம்பி!

தூத்துக்குடி சென்றிருந்தேன், துயரக் கடலில் வீழ்ந்து உழலும் நம் தோழர்களைக் கண்டு ஆறுதல்கூற; ஆனால் எனக்கு ஆறுதல் அளியுங்கள் என்றுதான் என்னால் கேட்க முடிந்தது.

சாமியின் திருமணக் கோலத்தைக் கண்டு களித்து, வாழ்வில் எல்லா இன்பமும் எய்தி மகிழ்ந்திடவேண்டும் என்று வாழ்த்துரை வழங்கச் சென்றிருக்கவேண்டிய நான் தம்பி தகுதியும் திறமையும் படைத்தவன், அஞ்சா நெஞ்சன், ஆற்றல் மிக்கோன், ஏழையின் இதயத்தை நன்கு அறிந்தவன், மாளிகையில் மந்தகாச வாழ்வு நடாத்திக்கொண்டு குடிசை வாழ்வோரின் குமுறல் குறித்துப் பேசி உருகிடும் போக்கினன் அல்ல, அவர்களோடு கலந்து உறவாடி அவர் தம் கஷ்ட நஷ்டம் இன்னது என்று கண்டறிந்தவன், பாட்டாளி ஆலையில் வெந்து கருகுவதையும், உழவன் உழைத்து உருக்குலைந்து போவதையும், நடுத்தரக் குடும்பங்கள் வாழ்க்கைத் தொல்லை எனும் சுமையைத் தாங்கமாட்டாமல் வளைந்து போயிருப்பதனையும் கண்டு குமுறும் நெஞ்சினன், இவர்தம் இன்னலைத் துடைத்திடவேண்டும்



என்ற பேரார்வம் கொண்டுமட்டுமல்ல, துடைத்திட இயலும் என்ற நம்பிக்கையுடன் பணியாற்றி வரும் உத்தமத் தொண்டன், மேதா விலாசத்தைக் காட்டுவதற்காக ‘மேடை’ ஏறுபவனல்ல, பொதுநலத் தொண்டாற்ற வேண்டும் எனும் எண்ணத்துடன் பேசும் போக்கினன், மக்களின் வாழ்வு செம்மை பெற எது செயல்வேண்டும், எங்ஙனம் அதனைச் செயல்வேண்டும் என்ற முறை அறிந்து ஓயாது உழைத்து வருபவன், அத்தகைய சாமி, உங்கள் தொகுதியின் உறுப்பினனாகி, சட்டசபையில் வீற்றிருந்தால், உமக்கு உற்ற குறை எல்லாம் தீரும், நலன் பல வந்து எய்தும் என்று எடுத்துக்கூறி ஆதரவு திரட்டிட தேர்தல் கூட்டத்தில் சென்று பேசிடவேண்டிய நான், காலத்தின் கொடுமையை என்னென்பது, சாமியின் சவக்குழியைக் காணவும், அங்கு நின்று பேசவும், அனுதாபக் கூட்டத்தில் கதறவும் வேண்டியதாயிற்று. என்மீது தீராப்பகை கொண்டோரும், இந்த அளவுக்கு என்னை வாட்டி வதைத்திருக்க முடியாது. சவக்குழியைக் காணச் சென்றேன்—சண்டமாருதம் என்றனர் சாமியின் ஆர்வம் கண்டோர், சளைக்காத உழைப்பாளி என்றனர் அவன் அல்லும் பகலும் அனவரதமும் பாடுபடக் கண்டோர், நகராட்சி மன்றத்திலே உறுப்பினராக அமர்ந்து நற்பணியாற்றி வரும் திறம் கண்டு வியந்து பாராட்டினர், அத்தகைய என் தம்பியின், சவக்குழியைக் காணச் சென்றேன்—கண்ணீரைச் சுமந்துகொண்டு சென்றேன்—வெடித்துவிடும் நிலையிலிருந்த இதயத்தோடு சென்றேன்—எந்த தூத்துக்குடிக்கு நான் சென்றால், அண்ணா! என்று வாய் நிறைய அழைத்து, வாஞ்சனையுடன் பேசி மகிழ்ந்து மகிழச் செய்வானோ, அந்தத் தம்பியின் சவக்குழியைக் காணச் செல்வது என்றால், இதனைவிட எனக்கு நேரிடக்கூடிய கொடுமை வேறு என்னவாக இருக்கமுடியும்? சென்றேன், கண்ணீர் வெள்ளத்தில் உழலும் தோழர்களைக் கண்டேன், கண்ணீர் வடித்தேன், கண்ணீர் வடித்தனர்.

தூத்துக்குடி செல்லும் பாதை நெடுக, நான் பன்முறை சாமியுடன் சென்ற நினைவுகள், அப்போதெல்லாம் கழகம் குறித்து நடத்திய உரையாடல்கள், ஆங்காங்கு உள்ள கழகத் தோழர்களைக் கனிவுடன் சாமி இன்னின்ன காரியத்தை இப்படி இப்படிச் செய்யுங்கள் என்று பணித்திட்ட பாங்கு, ஆகிய நினைவுகள் என் நெஞ்சில் எழும்பின, வாட்டி வதைத்தன. சாமி மறைந்துவிட்டார்—மாவீரன் கொல்லப்பட்டார்—மாபாவிகள் அந்தக் காளையை வெட்டிச் சாய்த்துவிட்டனர்—சாமி இல்லை, சவக்குழியை அல்லவா காணச் செல்கிறோம் என்று எண்ணிய உடனே, நெஞ்சில் பெரு

நெருப்புத் தோன்றும்—ஆறுதல் பெற எண்ணி இப்பக்கம் திரும்பினுல், அழுத கண்களுடன் நடராசன், பிறிதோர் பக்கமோ, மனம் குலைந்த நிலையில் மதுரை முத்து-ஒருவருக் கொருவர் ஆறுதல் கூறிக்கொள்ளமுடியாத நிலையில் இருந்தோம் என் செய்வது? நமது கழகம் தோன்றி வளர்ந்து வரும் இந்த எட்டு ஆண்டுகளில், பலப்பல கொடுமைகளுக்கு ஆளானேம்—மனம் பதறப்பதறப் பழி மொழியும் இழி சொல்லும் வீசினர்-எத்தனையோ விதமான தாக்குதல்களை நடத்தினர்—இழப்புகள் பல-இடிகள் ஏராளம்—ஈனத்தனமான செயல் புரிகிறேமே, அடுக்குமா என்ற எண்ணமுமின்றி, பகை கொப்பளிக்கும் உள்ளத்தினர் எதை எதையோ செய்தனர்—நமது தோழர்களைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர்—தம்பி!—இவை எதுவும் சாதிக்க முடியாததை, இந்தப் பேரிடி சாதித்துவிட்டது-வேதனை என்றுல் எப்படி இருக்கும் என்பதை நமக்குக்காட்டிவிட்டது. யாருடைய திருமணப் பந்தலுக்கும் வெற்றி விழாக் கூட்டத் துக்கும் நான் சென்று களிப்பும் பெருமையும் பெற்றிருக்க வேண்டுமோ, அந்தச் சாமியின் சவக்குழி கண்டேன். தம்பி! தம்பி! என்று பரிவுடன் பாசத்துடன் சொந்தம் கொண்டாடி னேன்—என் தம்பி சவக்குழி சென்றுவிட்டான்—தவிக் கிறேன்—தவிப்பு தீரவுமில்லை, குறையவுமில்லை—என்றைக்கே னும் தீருமா என்று ஐயமே கொள்ளவேண்டி இருக்கிறது.

சாமியிடம் சொன்னுல் காரியம் முடிந்துவிடும்.

சாமியால் மட்டுமே இந்தக் காரியத்தைச் செய்துமுடிக்க முடியும்.

சாமிக்குத்தான் இந்தக் காரியத்தைச் சாதிக்கும் ஆற்றல் உண்டு.

சாமி சாதித்த வெற்றி இது காணீர்.

சாமியின் திட்டப்படி இந்தக் காரியம் துவக்கப்பட்டது—அதனுல் வெற்றி கிட்டிற்று.

இவ்விதம் பேசாதவர் இல்லை—பேசும்போது அலாதி யானதோர் மகிழ்ச்சிகொள்ளாதார் இல்லை. வாழ்க்கையை அர்ப்பணிப்பது என்று பேசுவர்; பலர் விஷயத்திலே அது ஆர்வத்தினுல் பிறந்திடும் அன்புரை என்றே, வெறும் சொல்லலங்காரம் என்றே மட்டுமே கூறப்படவேண்டும்—சாமியைப் பொறுத்தமட்டில், அந்தப் பேச்சு முழுக்க முழுக்க உண்மை. ஒவ்வொரு நாளும், நாளில் ஒவ்வொரு மணி நேரமும், தொண்டு — தொண்டன்றி வேறில்லை — கழகத்



தொண்டு, பாட்டாளிகளுக்கான பணிமனை அமைக்கும் தொண்டு-பள்ளிக்கூடம் நிறுவும் தொண்டு, நகராட்சிக்கான நற்றெண்டு—என்று இப்படி வகை வகையாக இருக்கும்—தொடர்ந்து நடந்தேறி வரும். ஒரு காரியம் வெற்றியானுல் மற்றென்று, அது வேருேர் காரியத்தைத் துவக்க வழி காட்டும்—இப்படி இடைவிடாது தொண்டாற்றிவந்த இளவல் சாமி, காதகரின் கத்தி தன் உயிரைக்குடிக்கும்—அதுவும் விரைவில்—என்று முன் கூட்டியே அறிந்து—அந்தக் கொடுமையான முடிவு வந்து சேருவதற்குள் எவ்வளவுக்கெவ் வளவு அதிகமாகத் தொண்டாற்றி, சமூகத்துக்கு நன்மை காணமுடியுமோ அத்தனையையும் விரைந்து செய்துமுடித்து வெற்றி காணவேண்டும் என்று திட்டமிட்டதுபோல, அந்தப் பாண்டிமண்டலப் பாசறைக் காவலன், முன்னேற்றக் கழகத் தின் முன்னணி வீரன், ஆர்வத்தால் உந்தப்பட்டு, செயல், செயல், செயல், என்று ஈடுபட்டிருந்தான்.

நாசகார உலகம் இது! நன்றி கெட்ட நாடு இது! நயவஞ்சகர் கொட்டமடிக்கும் காலம்! நல்லது செய்பவரை நாசமாக்கும் நச்சு நினைப்பினர் உலவும் காடு இது—நாடு அல்ல! நன்றி கூறவேண்டியவர்கள், நட்புக் காட்டவேண்டி யவர்கள், பாராட்ட வேண்டியவர்கள், பரிவுகாட்டவேண்டி யவர்கள் இவர்களே, நற்றெண்டு ஆற்றும் நல்லோனை, வெட்டுவர், குத்துவர், கொல்வர்-என்று அறிந்ததாலோ என்னமோ, நமது சாமி, அந்த நாசகாலர்கள் தன்மீது பாய்ந்து சாய்க்கு முன்பு, நம்மாலான நல்ல காரியமனைத்தை யும் செய்து முடித்துவிடவேண்டும் என்று துடியாய்த் துடித்து செயலில் ஈடுபட்டான். வயது முப்பதாகி ஈராண்டுகளே உருண்டன—சவக்குழி புகுந்துவிட்டார் சாமி. அவர் ஆற்றலால் வீரரான, உறுதியுடன் பாடுபடும் பண்பாளர் களான, ஊருக்கு உழைக்கும் உத்தமர்களான, கட்டிளம் காளைகள் ஆயிரக்கணக்கில் அழுது நிற்கின்றனர்—அந்த ஆற்றல்மிக்கோன் சவக்குழி சேர்ந்துவிட்டான். கொடுமை யாளர்களால் கொலை செய்யப்பட்டு, மறைந்தான்—கொப் பளிக்கிறது கண்ணீர்.

“அண்ணு—” என்றனர் அழுகுரலில்—சூழ வந்து நின்ற தோழர்கள்—நான் என்ன சொல்லுவேன்.

நோய்நொடியால் இறந்துபட்டார் என்றுல், தக்க மருத்து வம் பார்த்திடவா இயலாது போயிற்று? என்று கேட்பேன். இறந்துபட்ட சாமிக்கு அறுபது வயது என்றுல் பழம் கீழே உதிர்ந்தது, பதறி அழுது என்ன பயன் என்பேன். காட்டு மிருகங்கள் அவர் உடலைக் கிழித்தெறிந்து உயிரைக் குடித்தது

என்றால், வேட்டையாடி அவைகளை வீழ்த்திடும் வீரம் உமக்கு எங்கே போயிற்று என்று கேட்பேன், அடக்கு முறைக்கு அவர் பலியானார் என்றால்கூட, சாமியின் உயிர் குடித்த ஆணவ ஆட்சியின் ஆதிக்கத்தை அழித்தொழிப்போம், வாரீர், என்று அழைத்து, சூள் உரைத்திடச் செய்வேன்—சாமி, சாகவில்லையே—கொல்லப்பட்டார்—படுகொலை அல்லவா செய்யப்பட்டார். பெரியதோர் பயங்கரக் கலகமாம், இருதரப்பினரும் ஆயுதம் எடுத்துப் போரிட்டனராம், எதிர்த் தரப்பிலே ஏழெட்டு பிணமாம், சாமியின் இதயத்திலே ஈட்டி பாய்ந்ததாம், சாய்ந்துபட்டாராம் கீழே என்று இருந்தால்கூட, சோகத்துக்கு இடையிலேயே ஒரு பெருமை உணர்ச்சிகூடப் பளிச்சிட்டிருக்கும்—கேட்கவே கூசும், கொடுமையல்லவா நடைபெற்றுவிட்டிருக்கிறது—இரவு மணி பத்தும் ஆகவில்லை—ஊர் உறங்கவில்லை—ஆள் அரவம் அடங்கவில்லை—வீடு செல்கிறார்—வழியில், முட்டுச் சந்தில் அல்ல, காட்டுப் பாதையில் அல்ல, பனைமரச்சாலையில் அல்ல, பயங்கரப்பாதையில் அல்ல, நெடுஞ்சாலையின் நடுவே, எத்தனைபேர் தாக்கினரோ—ஏழெட்டு என்கிறார்கள்—கத்திக்குத்து மட்டும் பதினெட்டாம்—பாதையில் மடக்கிக்கொண்டு, பதைக்கப் பதைக்க வெட்டிக் கொன்றுவிட்டனரே—இதைக் கேட்டு, நெஞ்சம் கொதிப்படைவதன்றி—'அண்ணா' என்று அழு குரலில் என்னை அழைத்த தோழர்களிடம் நான், என்ன சொல்லுவது. பதறாதீர்கள் என்பதா—நானே பதறிப் போயல்லவா இருக்கிறேன். அழாதீர்கள் என்பேனா, நான் அழுதுகொண்டு அல்லவா இருக்கிறேன். நான் அவர்களின் கண்ணீரைக் கண்டேன்—அவர்கள் நான் அழக் கண்டனர்.

சாமியின் இல்லம் சென்றேன்—உள்ளே நுழையும் போதே—இங்குதானே சில திங்களுக்கு முன்பு நம்மை அழைத்துவந்து இருக்கச் செய்து—உபசாரம் நடத்தி—உவகையுடன் உரையாடினார்—என்று எண்ணினேன்—கால்கள் பின்னிக்கொண்டன. உள்ளே படுக்கையில், செயலற்ற நிலையில் அமர்ந்திருந்தார், சாமியின் தந்தை, முதியவர், அவரிடம் சென்றேன்—ஐயோ! தம்பி! நான் எப்படி எடுத்துச் சொல்வேன், அந்த இதயம் வெடிக்கும் காட்சியை.

ஐயா! ஐயா! என் அருமை மகனைக் கொன்றுவிட்டார்களய்யா!

என் மகன் போய்விட்டானய்யா, போய்விட்டான்.



ஊருக்கு உழைக்கிறான், உத்தமனென்று பெயரெடுக்கிறான் என்று பூரித்துக் கிடந்தேன்—கொலை செய்துவிட்டார்களய்யா—கொன்று போட்டு விட்டார்களய்யா—என்று கூறிக் கதறினார்—என்னைக் கட்டிப் பிடித்தபடி. தம்பி! அந்த ஒரு கணம் நான் அடைந்த வேதனை, பகைவனுக்கும் வரலாகாது—நிச்சயமாகக் கூடாது.

உன்னிடம்தானே ஒப்படைத்தேன்—உலுத்தனே—எங்கே என் மகன்?—என்று கேட்கிறது, அந்த முதியவரின் கண்ணீர். நான் என்ன பதில் அளிப்பேனடா, தம்பி? என்ன பதில் அளிப்பேன்?

உங்கள் கழகத்தில்தானே என் மகன் ஈடுபட்டு, குடும்பத்தை மறந்து, தொண்டு செய்வதிலே மூழ்கிக் கிடந்தான்—அவன் கொல்லப்படுவதைத் தடுத்திடும் வக்கு அற்றுப் போனீர்களே? நீங்கள் மனிதர்கள்தானா!!!—என்று கேட்கிறது அந்த முதியவரின் கதறலொலி! நான் என்ன பதிலளிப்பேன். மார்புடன் சேர்த்து அணைத்துக்கொண்டேன். எங்கள் இருவரின் கண்ணீரும் கலந்தன—சூழ நின்றோர் கதறினர்

"ஐயா! சாமியைப் பறிகொடுத்துவிட்டோம்—கதறுகிறோம்—வேறு என்ன செய்யமுடியும்—ஐயா! சாமி போய்விட்டார்—என்னை உங்கள் 'சாமி'யாக ஏற்றுக்கொள்ளுங்களய்யா!" என்று கூறிக் கதறினேன்—பெரியவர், ஐயா! ஐயா! என் மகன்! என் மகன்! என்று கதறியவண்ணம் இருந்தார்.

வயோதிகத்தால் இளைத்துக் கிடக்கும் அந்தப் பெரியவரின் மடியிலே, சாமி பெற்றெடுக்கும் செல்வங்களல்லவா தவழ்ந்திருக்க வேண்டும்! அந்தப் பேரப்பிள்ளைகளை வாரி எடுத்து மார்போடு அணைத்து, உச்சி மோந்து முத்தமிட்டு, கண்ணே! மணியே! என்று கொஞ்சி வேண்டிய அந்த முதியவர், தன் மகன் படுகொலை செய்யப்பட்ட கொடுமையைக் காண்பது என்றால்,ஐயய்யோ! அதைவிட இம்சை வேறு என்ன வேண்டும்! இருவரும் சென்றோம், சவக்குழி காண.

உடன்வந்தோர் உருகி அழுதனர்—சுற்றுப்புறமிருந்து வந்திருந்தோர் அனைவரும் பதறி அழுதனர்—நடராசன் தேம்பித் தேம்பி அழுதார்—முத்து சிறிதளவு சமாளிப்பார் என்று எண்ணினேன்—அவரும் கதறுகிறார். என்னுடன் வந்திருந்த நண்பர் பாபுவும், சென்னைத் தோழர் தேவராசன் அவர்களும், கண்ணீர் பொழிந்தனர்.

சவக்குழி—தம்பி—சாமியின் முயற்சியால் உருவாகி எழிலுடன் விளங்கும் பள்ளிக்கூடத்தின் பக்கத்தில்!!—ஒருபுறம் சாமியின் வெற்றி—மற்றோர்புறம் அவருடைய சவக்குழி—பணியின் உருவம் அந்தப் பள்ளிக்கூடம்—பாதகரின் காதகச் செயலின் உருவாக அமைந்தது சவக்குழி. அதனைக் காண நேரிட்ட கண்கள்—புண்கள். கண்டோம்—நாடு, காடுதான் சிற்சில வேளைகளில்—நல்லாட்சியும் நாகரிக மேம்பாடும், சட்டமும் சமூகக் கட்டுக்கோப்பும் எல்லாம் உள்ளன என்றுதான் பெருமையாகச் சொல்லிக்கொள்கிறோம்—ஆனால் இதோ சவக்குழி-படுகொலை செய்யும் பாதகர்கள்—எதிர்த்துப் போரிடவோ, தப்பிப் பிழைக்கவோ முடியாத நிலையில் சிக்கிக்கொண்டவனை வெட்டிக்கொல்லும் வெறியர்கள், உலவுகிறார்கள் என்ற வெட்கக்கேடான நிலையைக் காட்டிக்கொண்டு இருக்கிறது. நெடுஞ்சாலையிலே நின்று நாசகாலர்கள் படுகொலை செய்திருக்கிறார்கள்—தடுத்திட ஒருவர் இல்லை—துணைக்கு யாரும் இல்லை. துரைத்தனம் கொடிகட்டி ஆள்கிறது-பல்லாயிரக்கணக்கிலே, ஆடவரும் பெண்டிருமாகக் கூடினர்—அழுத கண்களுடன்—அனுதாபக் கூட்டத்தில். ஆறுதல் அளிக்கவந்தேன்—எனக்கு ஆறுதல் அளியுங்கள்—என்று கேட்டுக் கதறினேன். ஒருவருடைய முகத்திலும் ஈயாடவில்லை.

படுகொலைக்குக் காரணம் என்ன? இந்தப் பயங்கரச் சூழ்நிலைக்குக் காரணம் யாது?—அனைவரும் கேட்கின்றனர்—ஒருவரும் இன்னதுதான் என்று கூறமுடியாமல் திகைக்கின்றனர்.

சோகமும் திகைப்பும் தூத்துக்குடியைக் கப்பிக்கொண்டிருக்கிறது. தமிழகமெங்கும் இதுவே நிலைமையாகிக் கிடக்கிறது.

''போலீசார் எடுத்துள்ள நடவடிக்கைக்குக் குந்தகம் ஏதும் விளைந்திடலாகாது, படுகொலை மர்மம் விளக்கப்பட வேண்டும், நாட்டிலே தலைவிரித்தாடும் காட்டுப்போக்கு அடக்கப்பட்டாகவேண்டும்,'' என்று தூத்துக்குடி வட்டாரமே கேட்கிறது.

தம்பி! என் வாழ்நாளில் இது போன்றதோர் கொடுமையை நான் கண்டதில்லை. நாங்கள் கூடத்தான் இப்படிப்பட்ட 'நீசத்தனமான' காரியத்தைக் கண்டதில்லை என்று அறுபது வயதினரும் கூறுகின்றனர்.

அதிர்ச்சியிலிருந்து நமது தோழர்கள் மீண்டிடவே சில காலம் பிடிக்கும் என்று தோன்றுகிறது-கலம் கவிழ்ந்து,



பச்சிளம் குழந்தை பிணமாகிக் கடலில் மிதந்திடக்காணும் தாய், கதறுவது போலக் கதறுகின்றனர், நமது கழகத் தோழர்கள்.

ஆண்டு எட்டு ஆகிறது நமது கழகத்துக்கு—இந்த அறியாப் பருவத்திலே இப்படிப்பட்ட அக்ரமம், கொடுமை, நமது கழகத்தைத் தாக்கியிருக்கிறது.

தாங்கிக்கொள்ள இயலுமா? இந்தச் சோகத்திலிருந்து, திகைப்பிலிருந்து, நாம் மீளமுடியுமா? அல்லது, நம்மைச் செயலற்றவர்களாக்கி விடுமா என்றுகூட, சில வேளைகளிலே எண்ணிடத் தோன்றுகிறது.

எத்துணை மகிழ்ச்சியுடன் இருந்து வந்தோம்—இன்னல் பல வந்துற்றாலும், இழிமொழியாளர் எதிர்த்தாலும், தொல்லை பல துரத்திவந்து தாக்கினாலும், அவைதமை எதிர்த்து நிற்கும் ஆற்றல் பெற்றுவிட்டோம் என்றெல்லாம் எண்ணி இறுமாந்து கிடந்தோம். இந்தப் 'பேரிடி'யைத் தாங்கிக் கொள்ள முடிகிறதா, பார்!—என்று காலம் கேட்டுவிட்டதே, என் செய்வோம்?

சாமி, தனி ஆள் அல்ல! தந்தைக்கு மகன் என்பதான நிலையினன் மட்டுமல்ல! நம் கழகத்துச் செல்வன்—நம் குடும்பத்துப்பிள்ளை — நமது இலட்சியத்தின் காவலன். அவனைக் கொன்றதானது நம் ஒவ்வொருவரையும் வாட்டும் கொடுஞ் செயல்.

துரைத்தனத்தின் துப்பாக்கிக்கும், தடியடிக்கும், தூற்றிக் கிடப்போரின் இழிமொழிக்கும் ஈடுகொடுத்துக்கொண்டு, எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று இலட்சியம் பேசிக்கொண்டு திரிகிறீர்களே, இதோ உங்கள் சாமியைப் படுகொலை செய்கிறோம், தாங்கிக் கொள்ளுங்கள் பார்க்கலாம் என்று கேட்பது போலல்லவா, இந்தக் கொடுமை நடந்து விட்டது தம்பி! நாம் என்ன செய்வது?

எனக்கு ஒன்று தோன்றிற்று, தூத்துக்குடியிலிருந்து திரும்புகையில். நாம், வளர வளர, கொடுமை பலப்பல, பல்வேறு வகையில் நம்மைத் தாக்கத்தான் செய்யும் என்று தோன்றிற்று. நாம், மிகச் சாமான்யர்கள்—சிறுவர்கள் என்றுகூடச் சொல்கிறார்கள்—நமக்கு ஏற்பட்டுவிட்ட வளர்ச்சியின் அளவுக்கு வளர்ச்சி காண, அனுபவ மிக்கவர்கள் அரை நூற்றாண்டு பாடுபட்டால்மட்டுமே பெறமுடிகிறது, பிற கட்சிகளால்.

கொழுந்துவிட்டெரியும் ஆர்வம் காரணமாகவும், சொல்லைப் பற்றுடன் பணியாற்றும் திறனுலும், கொதிப்பு மூட்டுவோர்பற்றிப் பொருட்படுத்தாது பணியில் ஈடுபடும் பண்பினுலும், நாம், மிக உன்னதமானதோர் வளர்ச்சியைக் கண்டோம். இதுகண்டு பொருதாரும், இதற்கு நாம் தகுதி அல்ல என்று எண்ணுவோரும், இது நமக்குக் கிட்டாமற் போயிற்றே என்று ஏங்குவோரும் ஏராளமாக உள்ளனர். அவர்களில் பலர் வெளியில் இருந்து நமக்கு வேதனை விளைவிக்கப் பல்வேறு முறைகளில், முனைகின்றனர். உடனிருந்து கொண்டே வேதனை விளைவிக்கவும் சிலர் உளர் போலும். எது எப்படி இருப்பினும், இந்தக் கட்டத்தையும் நாம் கண்டாகவேண்டும்போல் தோன்றுகிறது. ‘பயல்கள் இதனுல் மருளட்டும், மனம் உடைந்து போகட்டும்,’ என்று எண்ணுவோரும் இருக்கக்கூடும். இந்நிலையில் நாம் செய்ய வேண்டியது என்ன? நான் எண்ணி எண்ணிப் பார்த்தேன் — ஒன்றுதான் எனக்குப்பட்டது—அதைத்தான் தம்பி, உனக்கும் கூறுகிறேன். எந்த நேரத்திலும் எந்த வடிவத்திலும், எத்தகைய காதகச் செயலுக்குப் பலியாக நேரிடுமோ என்ற நிலைமை இருக்கிறது—அந்த நிலைமையின் ஒரு அறிகுறிதான் சாமி படுகொலைச் சம்பவம்—அந்த நிலைமை நமக்குக் குழப்பத்தையும் கிலியையும் மூட்டுவதாக இருத்தலாகாது—அப்படிப்பட்ட ஆபத்து எந்த நேரத்திலும் நேரிடக்கூடும், ஆகையால், ஒவ்வோர் நாளும், நாளை என்ன ஆகுமோ, இன்றே நாம் நம்மாலான நல்ல தொண்டினைச் செய்து முடித்துவிடுவோம், என்ற பொறுப்பைத்தான் நமக்கு அளிக்க வேண்டும். அதற்கென்ன பிறகு செய்யலாம்—நாளையத்தினம் பார்த்துக்கொள்வோம்—அவசரம் எதற்கு—என்று நாம், யாரும், காலதாமதம் செய்வதுகூடாது—ஒவ்வோர் நாளும் பணியாற்றும்போது, இதுவே நமதுகடைசி நாளாகிவிட்டால் என்ன செயவது, இன்றே நம்மாலானதைச் செய்து முடித்துவிடவேண்டும் என்ற எண்ணத்துடனேயே பணியாற்றவேண்டும். அது ஒன்றுதான், நாம் மேற்கொள்ள வேண்டிய முறை—இப்போதைய சோகச் சம்பவம் நமக்குக் காட்டவேண்டிய பாடம்.

சாமி, சவக்குழியில்; நாம் வெளியில்.


சவக்குழியினின்றும் ஒருவரும் தப்பித்துக்கொள்ளப் போவதில்லை—ஆனுல் அங்கு கொண்டுசெல்லப்படுமுன், நமது தொண்டு, பார்த்தோர் பாராட்டத்தக்க விதமான பட்டியல் ஆக இருத்தல் வேண்டுமல்லவா. அதனை மனத்திலிருத்தி நாம் அனைவரும் நித்தநித்தம் மெத்தவும்



பாடுபட்டு, நமது பங்கினைச் செலுத்திவிடவேண்டும். நாளை, நாளை என்பது கூடாது! நாளையத்தினம், யார், நம்மைச் ‘சாமி’யாக்கிவிடுவார்களோ, யார் கண்டார்கள் - எனவே இன்றே நாம் நமது கடமையைச் செய்யவேண்டும்.

கண்ணீர் தளும்பும் நிலையில் இருக்கிறோம்—கடமை வீரனைப் பறிகொடுத்ததால். நாம் நமது கடமையை விரைந்து செய்தல் வேண்டும் என்பதைக் காட்டும், கொடிய ஆசானுகிறது, அந்தச் சவக்குழி.

அன்பன்,



7—10—1956

கடிதம் 69

# நெற்றிக் கண்ணைக் காட்டினாலும்...!

**தேவி குளமும் பீர்மேடும்—**

**காமராஜரும் நக்கீரரும்.**

தம்பி!

நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம், குற்றமே!

திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள், மான் மழுவேந்திய மகேசன், மாலும் அயனும் தேடித்தேடிப் பார்த்தும் அடியும் முடியும் கண்டறியவொண்ணாதபடி அண்டசராசரமனைத்துமாய் நின்ற அரன், உமையொரு பாகன், சிறுபொறி கிளப்பிச் சிதறினாலே எதிர்ப்பட்டதனைத்தையும் சாம்பலாக்கிடத்தக்கதான 'சம்ஹார சக்தி' படைத்த நெற்றிக் கண்ணைக் காட்டினார்—ஏடும் எழுத்தாணியுமின்றி பிறிதோர் பலமற்ற நக்கீரன் எனும் பெரும்புலவர், ஐயனே! யார் நீவிர் என்பதனை அறிந்தேன், எனினும் அச்சம் காரணமாகவோ, பக்திக்குக் கட்டுப்பட்டோ, என் நெஞ்சார உணர்ந்ததை எடுத்துரைப்பதை விட்டுவிடுவேன் என்று மட்டும் எண்ணாதீர், நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே! என்று எடுத்துரைத்தாராம்.

தமிழர் பங்கமுறாமல் சங்கம் வளர்த்து, சான்றோராய், ஒழுகி வந்த நாட்களில், தமிழ்ப்பெரும் புலவர்களின்



மனவலிவு எத்துணை ஏற்றமுடையதாக இருந்தது என்பதனை எடுத்துக்காட்ட, நக்கீரன் நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று அஞ்சாது எடுத்துரைத்த காதையைக் கூறுவது, இப்போது, ஏறத்தாழ மேடை மரபு ஆகிவிட்டது.

தமிழன் எதற்கும் அஞ்சமாட்டான், மனதிற்குச் சரியெனப்பட்டதை, எவர் குறுக்கிட்டாலும், உருட்டி மிரட்டினாலும் எடுத்துரைக்கத் தயங்கமாட்டான், என்பதற்கான எடுத்துக்காட்டாக, நக்கீரன் விளங்குவதுபோல், பிறமொழியாளர்களிடம் காதைகள் உள்ளனவா என்பதுகூட ஐயப்பாடுதான்.

தமிழரின் அஞ்சா நெஞ்சினையும், தயாபரனின் உருட்டல் மிரட்டல் வேலையையும் விளக்கிடப் பயன்படுத்தப்படும் இந்த நக்கீரம், பெண்களின் கூந்தலுக்கு இயற்கை மணமா, செயற்கை மணமா என்ற பிரச்சினையை ஒட்டிப் பிறந்தது.

செயற்கையில்தான் மணம் என்பது நக்கீரன் வாதம்.

இல்லை, இயற்கை மணம் உண்டு என்பது இமயவன் இயம்பிய வாதம்.

நக்கீரனுக்கு நெஞ்சில் நடுக்கம் இல்லை—புலமை வலுவளித்தது.

உள்ள படைகள் உருக்குலைந்து ஓடிடக் கண்டான பிறகு மூலப்பலப் படையின் துணையை நாடும் முறைப்படி, சிவனார், புலமைக்கு உரிய வாதங்கள் பயன்படாமற் போன பிறகு, மூலபலம் காட்டும் நோக்குடன், ஏ! ஏடு தூக்கியே! எம்மை யார் என்று காண்பாயாக! என்று எடுத்துக்கூறி, மடக்கிடும் முறையில், நெற்றிக்கண்ணைக் காட்டினார்.

கண்டேன், கண் மூன்றுடையோனே!, கண்டேன்! எனினும் குற்றம் குற்றமே என்று துணிந்துரைத்தார், நக்கீரர் எனும் பெரும் புலவர்.

தமிழர் இதனை மேடைமரபு ஆக்கிக்கொள்ளும் அளவுக்கேனும் ஆர்வம் இழந்திடாமல் உள்ளனரே என்பதிலே மகிழ்ச்சி கொள்ளத்தான் வேண்டும்.

எனினும், என் மகிழ்ச்சி ஒன்றுக்குப் பத்தாகி, என் உள்ளத்தில் களிப்புக் கொந்தளிக்கும் நிலைக்குக் கொண்டு செல்லும் ஓர் நிகழ்ச்சி, சின்னாட்களுக்கு முன்பு நடைபெற்றது—பெரும்புலவனும் நக்கீரன்பற்றி காமராஜர் பேசினார்!

ஆமடா, தம்பி, ஆமாம்! நக்கீரன் பற்றி காமராஜர் பேசினார்!!

தமிழன் இனி தலைநிமிர்ந்து நிற்கலாம், தோள் தட்டி ஆடலாம், பள்ளுப்பாடி மகிழலாம்; காமராஜர், மாநில முதலமைச்சர், சங்கம் புகழ விளங்கிய சான்றோராம் நக்கீரனார் குறித்துப் பேசிடவும், அதனை நாட்டுமக்கள் கேட்டு இன்புறவு மானதோர் நற்காலம் பிறந்துவிட்டதே என்றுகூட ஒருகணம் எண்ணினேன்—மறுகணமோ...!

நக்கீரர்போலக் குற்றம் குற்றமே என்று எடுத்துக்கூறும் பண்பு பாராட்டத்தக்கது, அது வளர வேண்டும் என்று பேசுகிறாரா என்றால், அதுதான் இல்லை!

'உன் புருஷனோடுதான் நீ எப்போதும் சரசமாடுவாயே, இன்று என்னோடு கொஞ்சம் சிரித்துப் பேசேன்' என்று கேட்கும் பாவனையில், நக்கீரர் குறித்துச் சுட்டிக் காட்டிய காமராஜர், அவர்போல அஞ்சா நெஞ்சுடன், தவறு எத்துணை பெரிய இடத்தவர் செய்தாலும் கலங்காமல், அஞ்சாமல், குற்றம் குற்றமே என்று எடுத்துக் கூறுக என்று பேசாமல், நக்கீரர் பரம்பரை என்று கூறிக்கொள்கிறீர்களே, உங்களுக்கு ஏன் வடநாட்டினிடம் பயம், வடநாடு ஆதிக்கம் செலுத்தும் என்று ஏன் பயப்படுகிறீர்கள்? வடநாடுதான் ஆதிக்கம் செலுத்தட்டுமே? என்று பேசுகிறார்.

இதிலே, அவர் காட்டும் தெளிவு இருக்கிறதே, அதைக் கண்டு அகில உலகும் அதிசயிக்கும்!

முதுகின் மீது யார் ஏறி அழுத்தினாலும், வாய் திறவாமல் இருப்பதுதான் நக்கீரர் பரம்பரையின் போக்காக இருக்க வேண்டும் என்று கருத்துரை அளித்திட, காமராஜரால் தவிர வேறு ஒருவரால் நிச்சயமாக முடியாது! வேறு ஒருவரால் முடியாது.

சிவபெருமான் என்று தெரிந்த பிறகும், நக்கீரர் அஞ்சாமல் தமது எதிர்ப்பை, மறுப்பைத் தெரிவித்தார்.

அதே முறையிலேதான், சுட்டுச் சாம்பலாக்கவல்ல சக்தியைப் பெற்றவர் நேரு பெருமகனார் என்று தெரிந்தும், அந்தச் செயலில், அவருடைய துரைத்தனம் இந்த எட்டாண்டுகளிலே, நிரம்பப் பயிற்சியும் பெற்றுவிட்டது என்பதை அறிந்தும், நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று எடுத்துரைக்கும் துணிவும், தமிழ் மரபு இதுதான் என்பதைக் காட்டிடும் போக்கும், முன்னேற்றக் கழகத்திடம் இருக்கிறது. இதைக் கண்டு பெற வேண்டிய கருத்தைப்



பெறாமல், அப்படிப்பட்ட நக்கீரர் வழி வந்தவர்கள், வடநாட்டுக்குப் பயப்படுவானேன் என்று வக்கணை பேசுவதற்குத் தேவையான சிறுமதியைப் பலர் பெற முயன்றாலும் முடியாது. நமது மாநில முதலமைச்சருடன் இதில் போட்டியிட எவராலும் இயலாது.

எனினும் எனக்கோர் மகிழ்ச்சி—கனியைப் பறித்து குறும்புக்காக மந்தி வீசினாலும், கனி கிடைப்பது நல்லதல்லவா! அதுபோல, தவறாகப் பயன்படுத்துகிறார் என்றபோதிலும், காமராஜர், தமிழகம் தாழ்ந்திடாமல் இருந்த காலத்துச் 'செய்திகளை' மேலும் மேலும் தெரிந்துகொள்வது, நல்லது என்று எண்ணவேண்டி இருக்கிறது.

நக்கீரர், நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று கூறியதும், என்னே இவர் தம் அஞ்சாமை! என்று வியந்து வெண்மதி சூடியோன், அவரை வாழ்த்தினன் என்று கதை இல்லை. வெந்தழல் நக்கீரர் உடலைப் பற்றிக் கொண்டதன்னதோர் நிலையை மூட்டிவிட்டார் என்றும், பின்னர் அப்பெரும் புலவர் திருமுருகாற்றுப்படை பாடி உய்வு பெற்றார் என்றும்தான் திருவிளையாடல் குறித்து உரைக்கின்றனர்.

எனவே, நக்கீரர் காலத்திலும் சரி அஞ்சா நெஞ்சனைப் போற்றிட ஒரு சிலரே உளர் என்று கூறத்தக்க இக்காலத்திலும் சரி, நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று கூறும் போக்கினை, மேலிடத்தில் அமர்ந்தவர்கள் பாராட்டுவது கிடையாது—பகைதான் பெரு நெருப்பாகும்.

நக்கீரர் கதியே இதுவாயிற்று—உண்மையைச் சொன்னதற்காக உழல நேரிட்டது, அதுவும் உமாநாதனின் உக்கிரத்தினால் என்று கண்ட பிற்காலத் தமிழர்கள், ஒற்றைக் கண்ணனாக இருந்தாலும்கூட அவன் ஊராளும் நிலைபெற்றான் என்றால், அடங்கவும் ஒடுங்கவும், ஆமையாகவும் ஊமையாகவும் தாழ்ந்து போயினர். எனவே, எதைச் சொன்னாலும் சரி என்று ஏற்றுக்கொள்ளும் பாவனைப் பணிவும், கோழை உள்ளமும் ஏற்பட்டுவிட்டது; அதன் விளைவாகவே இங்கு ஆரியம் நுழையவும், பிறகு ஆங்கிலேயர் அரசாளவும் இன்று வடவர் கொட்டமடிக்கவுமான கோணல் நிலை ஏற்பட்டது; இதை நாட்டுமக்களுக்கு எடுத்துக் கூறிடும் பொறுப்பை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம்; காமராஜரோ, நாவடங்கிக் கிடவுங்கள் என்று புத்தி கூற, நக்கீரர் கதையையே பயன்படுத்தப் பார்க்கிறார்.

போகட்டும் இதற்காக வேனும், இவர் நக்கீரர், கபிலர், இளங்கோ போன்ருர்பற்றி அறிந்துகொள்ள வாய்ப்புக் கிடைப்பது குறித்து நான் உள்ளபடி மகிழ்கிறேன்.

'முதியோர் கல்வி'யில் பலவகை உண்டு; அதில் இது ஒருவகை என்றெண்ணி மகிழ்கிறேன்.

பெறவேண்டிய 'பாடம்' துவக்கத்தில் கிடைக்காமற் போயினும், தமிழகம் கொண்டிருந்த புலமையும், கோலோச்சிய தன்மையும், பெற்றிருந்த வளமும், பின்னர் அதனை இழந்ததன் காரணமும் அறிந்திடவும், அறிந்ததன் பலனுகவே, மீண்டும் தாழ்ந்த தமிழகம் எழுச்சி பெறுவதற்கான திட்டம் காணவேண்டும் என்று எண்ணவும், உள்ளத்தில் ஆவல் அரும்பும்! இது என் நம்பிக்கை.

நெற்றிக்கண்ணைக் காட்டினுலும் குற்றம் குற்றமே!— என்று கூறிடும் அளவுக்கு நெஞ்சு உரம், தமிழகத்தில் இருந்து வந்தது; காமராஜர் அறிந்து உரைக்கும் அளவுக்கு, அந்தக் காதை நாட்டிலே சர்வ சாதாரணமாகிவிட்டு மிருக்கிறது— எனினும், அத்தகைய தமிழகத்தில், காணக் கிடைக்கும் எல்லா வகையான ஆதாரங்களையும் கொண்டு பார்க்கும் போது, தேவிகுளம் பீர்மேடு ஆகிய பகுதிகள் தமிழகத்துக்குத்தான் உரிமையான உடைமைகள் என்பது தெரிந்திருந்தும், அதனைத் தேசியப் பாசம் குன்ருமுறையிலும், தெளிவு தெரியும் வகையிலும் எடுத்துக் காட்டியும், டில்லி ஏற்க மறுத்ததே அதுபோது, நக்கீரம் பேசும் இந் நற்றலைவர் செய்தது என்ன? தமிழரின் உரிமையை மறுப்பவர், எவராயினும், எத்துணை ஏற்றம் பெற்ருேராக இருப்பினும், கொற்றம் கொண்டு அதனையே கொடுமைக்குக் கருவியாக்கிக் கொண்டோராக இருப்பினும், நான் பணிந்திடுவேன் அல்லேன், பணிந்திடுதல் பணபுமல்ல, தமிழ் மரபுமாகாது, என்ரு சீறிக் கிளம்பினர்!

தேவிகுளம் போனுலென்ன

வாவி குளம் வந்தாலென்ன

வாஞ்சனை போதுமய்யா, நேருவே!

வாய்திறவேனே, மெய்யாய்!

என்று கண்ணி பாடிக் கிடந்திட்டாரே! இப்படிப்பட்டவர்களிடம் தமிழகம் சிக்கிய பிறகுதான், நெற்றிக் கண்ணைக் காட்டினுலும் குற்றம் குற்றமே என்று கூறிடும் உள்ள உரம் உருக்குலைந்தது, எடுப்பார் கைப்பிள்ளைகளும், எனக்கென்ன



பங்கு என்று கேட்பவர்களும் கொலு வீற்றிருக்கத் தொடங்கினர், கோல் சாய்ந்தது, கோலம் கலைந்தது, ஞாலம் புகழ வாழ்ந்த தமிழர், நாமம் மட்டும் தமிழரெனப் பெற்று வாழ்ந்திடும் அவலம் பிறந்தது, அவதி மிகுந்தது.

எனவேதான், இதுகாலை தமிழரின் பண்டைய பெருமையினை எடுத்துக் காட்டியேனும், ஓர் புது எழுச்சி காணலாமா என்று தம்பி, நாமெல்லாம் எண்ணுகிருேம்.

தமிழ் இனம், பண்பு கெடாத நாட்களில் பாராண்ட பாங்குபற்றி, படிக்குந்தொறும் படிக்குந்தொறும் பாகெனச் சுவை அளித்திடும் பாக்களைக் காண்கிருேம்; பெருமூச் செறிகிருேம்.

கோடும் குவடும் பொரு தரங்கக்

குமரித் துறையில் படு முத்தும்

கொற்கைத் துறையில் துறை வாணர்

குவிக்கும் சலாபக் குவால் முத்தும்

ஆடும் பெருந்தண் துறைப் பொருனை

ஆற்றில் படுதெண் ணிலா முத்தும்

அந்தண் பொதியத் தடஞ்சாரல்

அருவி சொரியும் குளிர் முத்தும்!

என்று பாடுகிருர்கள்—உன் தமிழகம் முத்தும் மணியும் ஒளி தர விளங்கிய உயிரோவியம் என்பதனை அறிந்திடுக! என்று புலவர் பெருமக்கள், பொருளுரையும் பொழிப்புரையும் கூறுகின்றனர்—பழிப்புரை கேட்டும் பதைத்திடாதார் பரிபாலனத்திலே உள்ளோமே! முத்து கூத்தாடுமாமே முந்தையர் நாட்களில், வறுமை முடைநாற்ற மன்ருே துளைக்கிறது என்று எண்ணுகிருேம், ஏங்கித் தவிக்கிருேம்!

"குன்றின் இள வாடை வரும் பொழுதெல்லாம்

மலர்ந்த திருக்கொன்றை நாறத்

தென்றல் வரும் பொழுதெல்லாம் செழுஞ்சாந்தின்

மண நாறும் செல்வவீதி..."

என்று கூறுகிருர் புலவர்—தமிழகத்தின் புகழ் மணம், கமழ்ந்திருந்த அந்த நாட்கள் நினைவிற்கு வருகின்றன. அந்தச் 'செல்வவீதி'களிலே இன்று தேம்பித் தவித்தும், திண்டாடித் திகைத்தும், உழைத்து உருக்குலைந்தும், பிழைப்

பிற்கு வழி காணாது புலம்பியும், உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் கிடைக்காததால், இழிநிலை பெற்றும், தமிழர் உழல்கின்றனரே!

குன்றிலிருந்து கிளம்பும் காற்றும், ஊருக்குள் செல்கிறோம், மக்களுடன் உறவாடி மகிழச் செல்கிறோம், செல்லுங்காலை, எமைக்காண வந்த இளங்காற்றே! எமக்களிக்க எது கொணர்ந்தனை? என்று கேட்டிடின் என்ன செய்வது என்று எண்ணிப்போலும், மலர்ந்த கொன்றையின் மணத்தை வாரிக் கொண்டு வந்து தருகிறது; இளவாடை! தென்றல் வீசும் போது, இனியதோர் குளிர்ச்சி மட்டுமா! அந்தத் தென்றல் தமிழகத்தில் வீசுகிறதல்லவா, தமிழர், தென்றலுக்கே வாசம் அளிக்கின்றனர்—செழுஞ்சாந்தின் மணம் பெறுகிறது தென்றல்! இவ்விதமெல்லாம் இருந்த 'செல்வ வீதி'களிலே இன்று காண்பது என்ன? இன்றைய நிலையை எண்ணி எண்ணி ஏக்கமுறும்போது, எதிரே வந்து நின்று காமராஜர், ''ஓலமிட்டுக் கிடப்பானேன்—நீதான் நக்கீரன் பரம்பரையாயிற்றே!'' என்று கேலி பேசுகிறார். தமிழகம் எத்துணை தாழ் நிலையில் இருக்கிறது என்பதற்கு நான் ஓர் நடமாடும் சான்று என்று கூறிக்கொள்கிறார்!!

நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்ற நெஞ்சுறுதி கொண்டோராகத் தமிழர் இருந்த நாட்களில், சிங்களம், புட்பகம், யவனம், சீனம், சோனகம், வங்கம், மகதம், கலிங்கம், காந்தாரம், காமரூபம்—எனும் எண்ணற்ற நாடுகள் பலவும், தமிழகத்தின் திருவைக் கண்டு வியந்தன, திறனைக் கண்டு அஞ்சின, செருமுனைக்கு வரப் பயந்தன, தோழமைக்குக் காத்துக் கிடந்தன! இமயம் தொட்டு நின்ற அரசுகள் அனைத்தும் தமிழர் முரசு கொட்டுகின்றனர் என்று அறிந்தால், தமது அரசுகட்டில் ஆடிட அச்சம் கொண்டனர்.

கலிங்கத்துப் பரணி இதனைக் காட்டி நிற்கிறது.

கனக—விசயர் காதை இதனை அறிவிக்கிறது.

கடாரம் கொண்டான், கங்கை கொண்டான், இமய வரம்பன்—என்றெல்லாம் சிறப்புப் பெயர்கள் உள்ளன—ஒவ்வொன்றும் ஒவ்வோர் வீரக் காதையை விளக்குவன!

அவ்விதம் புகழ் பரப்பி வாழ்ந்த தமிழன் இன்று, அடி பணிந்தும், அடிமையாகியும், உரிமை இழந்தும், உதவாக் கரை நிலை பெற்றும், இழிந்து கிடக்கிறானே, இந்த நிலை மாற வழி என்ன என்கிறோம்—காமராஜர், நீதான் நக்கீரன்



பரம்பரையாச்சே! உனக்கென்ன குறை!—என்று நையாண்டி பேசுகிறார்.

நையாண்டி பேசட்டும், தம்பி, தாராளமாகப் பேசட்டும், பேசுவதற்காகவேனும், தமிழரின் வரலாற்றுத் துணுக்குகளைக் கேட்டுப் பெறட்டும்—அவை உள்ளத்திலே வந்து புகப்புக, நையாண்டி பேசும் போக்கே கூட மாறிவிடக்கூடும்.

"அந்த வாழ்வுதான் எந்த நாள் வரும்?


இந்த மாநிலம் முழுதாண்டிருந்தார்

இணையின்றி வாழ்ந்தார் தமிழ் நாட்டு வேந்தர்''

என்று பண்பாடத் தோன்றும், தமிழகத்தின்மீது பூட்டப் பட்டுள்ள தளைகளை உடைத்திடாமல், இந்தத் தடந்தோள்கள் எதற்கு என்று கேட்டிடும் ஆற்றல் எழும், தமிழ் அரசு அமையும்!

அந்த நன்னாளைப் பெறுவோம் என்ற நம்பிக்கையுடனேயே, நக்கீரர் காதை காட்டி நையாண்டி செயும் காமராஜரை நாம் சகித்துக் கொள்கிறோம்.

அன்பன்,



14—10—1956

தமிழ் நூல் காப்பகம்
தமிழ் நகர், விருத்தாசலம் - 606001.

கடிதம் : 70

# வீரத் தியாகி

*சங்கரலிங்கனார் உண்ணாவிரதம்—தமிழர் சமுதாயச் சீர் கேடு—தமிழ்நாடு—பெயர் வைத்தல்.*

தம்பி!

நடுநிசி! தூக்கம் வரவில்லை; துக்கம் துளைக்கிறது; வெட்கமும் வேலாகக் குத்துகிறது; கொழுந்து விட்டெரியும் பெருநெருப்பும், அதிலே கிடத்தப்பட்டுள்ள தியாகத் திருமேனியும், தெரிகிறது; தீ என்னைத் தீண்டாது, தீயோரின் பிடியிலிருந்து நான் விடுதலை பெற்றுவிட்டேன், தீரமற்றோரே! தெளிவற்றோரே! இனி தீ உங்களைத்தான் தாக்கும்! வெந்து வேதனைப்படுங்கள்! உணர்ச்சியற்ற உருவாரங்களே! உண்ண, உடுக்க, இருக்க, வழி கிடைத் தால் போதும் என்று எண்ணி, அவைதமைப் பெற 'எடுபிடி' யாகவும், இழி நிலையைச் சகித்துக்கொள்ளவும் சம்மதித்துக் கிடக்கும் சத்தற்ற ஜென்மங்களாகிவிட்டீர், சடங்களே! கருகிப் பொடியாகட்டும், எனக்கென்ன! இதோ நான் கண் மூடி விட்டேன்! இனி உங்களைத் திரும்பிப்பாரேன்! செல் கிறேன், சிந்திக்கவும் செயலாற்றவும் திறனற்றுப்போன உம்மைக் காணக் கூசினேன், இந்த நிலை பெற்றீரே என்றெண்ணிக் குமுறினேன், இனி இவர்தம் கூட்டுறவு வேண்டாம் என்று துணிந்தேன், சாவை வரவேற்றேன்! நான் மறைகிறேன், நீங்கள் உலாவுங்கள்!! நான் இறந்து படுகிறேன், நீங்கள் இளித்துக் கிடவுங்கள்! எனக்கு மானம்



பெரிது, உயிர் அல்ல; உயிரை இழக்கிறேன்! உலுத்தருக்கு உயிர்தான் வெல்லம், அதைச் சுமந்துகொண்டு திரியுங்கள்! சவத்துக்கும் உயிர் உள்ள சடத்துக்கும் என்ன மாறுபாடு? உணர்ச்சிதானே, இரண்டினையும் வேறுபடுத்திக் காட்டுவது! உணர்ச்சியற்றுக் கிடக்கும் உம்மை, மாந்தர் என்றும் மறத் தமிழர் என்றும் கூற என் நா, கூசுகிறது! இதோ இனி நான் பேசப்போவதில்லை! போகிறேன், பொல்லாங்கும் பழியும், புல்லர் வாழ்வும் பூசலும் நிரம்பிய இந்த இடத்தைவிட்டே அகன்று செல்கிறேன்! சாக்கடையில் நீங்கள் உழலுங்கள், சாக்காடு எனக்குச் சாந்தி அளிக்கட்டும்! பதைக்கிறீர்கள், துடிக்கிறீர்கள்; ஆஹா! என்கிறீர்கள், ஆகட்டும் என்று ஆர்ப்பரிக்கிறீர்கள்; யார் தெரியுமா என்று உருட்டுகிறீர்கள், என்ன செய்வேன் தெரியுமா என்று மிரட்டுகிறீர்கள்; எல்லாம், எதற்கு? ஒரு சிறு பொருள் உன் கரத்தை விட்டுப் போவதானால்! ஒரு சிறு சொல் உம்மீது எவனேனும் வீசுகிறானென்றால்! சுயநலத்துக்குக் குந்தகம் விளைகிறது என்றால், சூரத்தனமாகக் கிளம்புகிறீர்கள், போராடுகிறீர்கள்! தாயகம் பழிக்கப்படுகிறது, தாயகம் இழிநிலை பெறுகிறது, ஏன் என்று கேட்கும் துணிவு இல்லை உங்கட்கு! தாயகம் தருக்கரின்காலடி யில் சிக்கிச் சீரழிகிறது; தடுத்திடும் ஆற்றல் இல்லை, உங்களுக்கு! மொழி அழிக்கப்படுகிறது, உமது விழியிலே நீர் சோரக்கூடக் காணோம். தன்மானம் அழிக்கப்படுகிறது, தடுத்திடக் கிளம்புகிறீர்களா? இல்லை! தாளேந்திக்கிடக்கிறீர் கள்! நத்திப் பிழைத்திடவும், நமக்கென்ன என்று ஒதுங்கிக் கிடக்கவும், நம்மால் ஆகுமா என்று பெருமூச்செறியவும் கற்றீரேயன்றிக் கடமை உணர்ச்சியை எங்கே கொண்டீர்! வீரர் வழி வந்தோரே! வெற்றி முரசு கொட்டினோரே! தமிழர் காள்! தரணி புகழப் பரணி பாடிய பரம்பரையினரே! கடலில் கலம்செலுத்தி, கரிப்படைகொண்டு கருங்கற்கோட்டைகளைத் தூளாக்கி, வேற்படைகொண்டு மாற்றாரை விரட்டி, வாகை சூடிய வெற்றி வீரர் வழிவந்தோரே! என்றெல்லாம், ஏடு உம்மைக்குறித்து குறிப்பிடுகிறது; நாடு நலியக் கண்டும், வலியோர் சிலர் எளியோர்தமை வாட்டிடக்கண்டும் வாய் திறந்து கேட்கவும் வக்கற்றுக் கிடக்கிறீர்! உம்மோடு, நான் இருக்கச் சம்மதியேன்! உம்மில் ஒருவனாக இருக்க என் மனம் இடம்தரவில்லை! நான் பிணமாகிறேன், பேசும் பிணங்களே! குடும்பம் அழைக்கிறது, சென்று குதூகலமாகக் காலங் கடத்துங்கள், குட்டவருவான் கொடியோன்! குனிந்து கிடவுங் கள். குறை கூறாதீர்கள், குண்டாந்தடியுடன் வருவான், கோலோச்சுவோரின் ஏவலன், இழிவாகப் பேசுவான், இனிமை, இனிமை! என்று கூறுங்கள்—இல்லையெனில் இருட்டறையில் தள்ளிப்பூட்டிவிடுவான்! வாழவேண்டுமே

என்பீர், வாழுங்கள், வாழுங்கள், மானம் இழந்து, உரிமை இழந்து, உணர்ச்சி இழந்து, உயிரைச் சுமந்துகொண்டு உலவுங்கள்! என்னால் முடியாது! இதோ, நான் மரணத்தைத் தழுவிக்கொண்டேன்! மலர் தூவிய மஞ்சம் உமக்குக் கிடைக்கக்கூடும், மானத்தை இழந்த பலருக்குக் கிடைக்கும், எனக்கு இந்த நெருப்புப் படுக்கைபோதும்! பிடிசாம்பலாகிறேன்! பேதையாய், தலையாட்டிப் பதுமையாய், அடிமையாய்க் கிடந்து உழல்வதைக் காட்டிலும், பெருநெருப்புக்கு என்னை ஒப்படைத்துவிடுவது சாலச்சிறந்தது! எனவே, நான் செல்கிறேன், நீங்கள், பூச்சி புழுக்களும், சீச்சீ என்று இகழ்ந்திடும் விதத்தில் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டு கிடவுங்கள்!—என்று நம்மை நோக்கி, பெருநெருப்பில் கிடத்தப்பட்டுள்ள பெரியவர் பேசுவது போன்றதோர் பிரமை ஏற்படுகிறது! அவர் இதுபோலெல்லாம் நம்மை ஏசி இருக்கக் கூடாதா—ஏசியிருந்தாலாவது, ஒரு வகையில், நன்றாக இருந்திருக்கும்—அந்தப் பெருங்குணவான், ஒருதுளி ஏசினாரில்லை, நமது இழிநிலை கண்டு இரக்கப்பட்டு இறந்துபட்டேனும், நமக்கு உய்யும் வழி கிடைத்திடச் செய்வோம் என்று எண்ணினாரேயன்றி, ஏடா! மூடர்காள்! என்று சினந்துகொண்டாரில்லை! இறந்துபட்டார்—நமக்காக இறந்துபட்டார்—நாட்டுக்காக உயிர் துறந்தார்—நாமெல்லாம் நடைப்பிணமாகிவிட்டோம் என்பதறிந்து வேதனையுற்றார்—உயிர் துறந்தார்! உயிர் போகிறது—போய்க்கொண்டே இருக்கிறது என்று அறிந்தார்—விநாடிக்கு விநாடி மரணவாயிலை நெருங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தார் — சாவை வரவேற்றார்! நாம் வாழ்கிறோம்! வெட்கமின்றி, வாழ்ந்துகொண்டு கிடக்கிறோம்—வெந்து சாம்பலாகிவிட்டார் அந்த வீரத்தியாகி! எண்ணும்போது, இதயத்தை யாரோ சம்மட்டி கொண்டு தாக்குவது போலாகிவிடுகிறது. இந்த நடுநிசியில், என் நெஞ்சம் நடுக்குறுகிறது, எண்ணம் ஈட்டியாகிவிடுகிறது—எரிதழல், தெரிகிறது-தியாகியின் உடல் அதிலே கிடப்பது தெரிகிறது: ஓர் கேலிச் சிரிப்பொலிகூடக் கேட்கிறது—ஓஹோ! நீ விடுதலைப்படை வரிசையில் உள்ளவனல்லவா? உரிமை முழக்கமிட்டுக்கொண்டு ஊரூரும் அலைபவனல்லவா? தமிழர், தமிழர் என்று மார்தட்டித்தட்டிப் பேசுபவனல்லவா? அகம் என்பாய், புறம் என்பாய், ஆற்றல் என்று கூறுவாய், என் ஆன்றோர், சான்றோர் என்று புகழ்பாடுவாய், அல்லவா? என்று கேட்டுவிட்டுக் கேலிச் சிரிப்பொலி கிளப்பி என்னை வாட்டி வதைக்கிறது, நான் மனக்கண்ணால் காணும் அந்தக் காட்சி. இந்த நடுநிசியில், என்போல் இதுபற்றி எண்ணி எண்ணி நெஞ்சு புண்ணாகிக்கிடப்போர் எண்ணற்றவர்கள் என்பதும் தெரிகிறது. ஆனால் எனக்குத் துக்கம் மட்டுமல்ல;



வெட்கம் என்றேன்! உண்மையிலேயே நான் வெட்கப்படுகிறேன்!—ஏனெனில் இத்தகைய வீரத்தியாக உள்ளம் கொள்ளமுடியுமா உன்னால் என்று எவரேனும் என்னைக் கேட்டுவிட்டால், நானென்ன பதில் அளிக்க முடியும்! தலையைக் கவிழ்த்துக் கொள்ளத்தான்வேண்டும்—பலகோடி மாந்தரில் ஒருவருக்கு மட்டுமே கிட்டக்கூடியது அந்த வீரத்தியாக உள்ளம், விருதுநகர் சங்கரலிங்கனார், அதனைப் பெற்றிருந்தார். பேதை நான், அதனை உணர்ந்துகொள்ளும் ஆற்றலும் பெற்றேனில்லை! அவர் இறந்துபடுவார் என்று எனக்கு எண்ணவே இயலாதுபோயிற்று. அவரை நான் கண்டேன்; எனினும், அவர் இறந்துபட நேரிடும் என்று எண்ணவில்லை—காரணம். நானோர் ஏமாளி. நாடு அவரை அந்தநிலை செல்லவிடாது, நாடாள்வோர் அவரைக் கைவிட மாட்டார்கள், அந்த அளவு கேவலத் தன்மை நாட்டைப் பிடித்துக்கொண்டில்லை, அவர் கடைசிக் கட்டம் செல்லும் வரையில்கூடக் கன்னெஞ்சம் கொண்டிருப்பர், பிறகோ, பழி பாவத்துக்கு அஞ்சியேனும், பிற்காலத்துக்குப் பயந்தேனும், அறிவுலகம் ஏசுமே என்று எண்ணியேனும், அவர் 'சாவதை'த் தவிர்த்துவிடுவதற்கான தக்கமுறையினை மேற்கொள்வர், என்று என் பேதை நெஞ்சு எண்ணிற்று! பெருநெருப்புக் கிளம்பிற்று, அந்தோ! அந்த வீரத்தியாகியை அணைத்துக் கொண்டது — சங்கரலிங்கனார் நம்மைவிட்டுப் பிரிந்தார்.

எனக்கு, அவரை, இதற்குமுன் தெரியாது—நாடு அவர் புகழ் பாடிட, அவர், 'நடுநாயகமாக' இருந்திடவில்லை—எனினும் இன்று நடுநாயகங்களாகிவிட்ட பலருக்கு, அவர் போன்றாரின் ஆற்றல்மிக்க தேசத்தொண்டு பயன்பட்டு வந்திருக்கிறது. நீண்டகாலமாகக் காங்கிரசில் பணியாற்றியவர், காமராஜர் கதர் அணியக் கிளம்புமுன்பே, கைராட்டையில் நூல் நூற்றவர்; காந்தியார், மகாத்மா ஆகிக்கொண்டிருக்கும்போது, உடனிருந்து அந்த உயர்வு உருவாவது கண்டு உளமகிழ்ந்தவர்; வந்தேமாதரம், தேர்தல் தந்திரமான பிறகு அல்ல, அஃது தேசிய மாமந்திரமாக இருந்த காலத்திலேயே, அந்தக் குரலைக் கற்றுக்களித்தவர், 'சிறை சென்று நலிந்தவர்' வணிகத்துறையிலும் அவருக்கு வெற்றிதான்; சங்கரலிங்கனார், பழம் பெரும் தேசபக்தர் வரிசையைச் சேர்ந்தவர்.

இன்றைய நிதி மந்திரிகளுக்கும், சோப்புச் சீமான்களுக்கும், அவரைத் தெரிந்திருக்க முடியாது.

மாணிக்கவேலர்கள், அவர்பற்றிக் கேள்விப்பட்டிருக்க முடியாது.

நிச்சயமாக சேதுபதிகளின் பார்வையில் அவர் பட்டிருந் திருக்க முடியாது.

இவர்களெல்லாம், நாடு குறித்துக் கவலைகொள்ளும் பக்குவம் பெறுவதற்குப் பன்னெடு நாட்களுக்கு முன்பே, சங்கரலிங்கனுர் 'சத்யாக்கிரகி' ஆகிவிட்டார்! ஆனல், அவர் சபை நடுவே இடம் பிடித்திடும் 'சத்காரியத்தில' ஈடுபட வில்லை! கமிட்டிகளைக் கைவசப்படுத்தும் வித்தையில் ஈடு பட்டாரில்லை! தலைவர்' ஆக மறுத்துவிட்டார்; தன்னல மறுத்து தாய்நாட்டுக்காகப்பணியாற்றி, விடுதலைவிழாக்கண்டு வெற்றிக் களிப்புபெற்று, பெறவேண்டிய பேறு இதனினும் வேறு உண்டோ என்றெண்ணிப் பெருமிதம்கொண்டு இருந்த ஒரு பெரியவர்.

தாயின் மணிக்கொடி பாரீர்
அதைத் தாழ்ந்து புகழ்ந்து பணிந்திட வாரீர்!

என்ற தேசிய கீதம் கேட்டு மகிழ்ந்தவர்.

ஏழை என்றும் அடிமை என்றும்
எவனும் இலலை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதர் என்போர்
இந்தியாவில் இல்லையே!

என்ற சிந்துகேட்டு, செந்தேன் செந்தேன்! இதுநாள் வரை நான் கேட்டறியாத கீதம் என்று கூறிக்களித்தவர்!

தனி ஒருவனுக்கு உணவு இல்லை எனில்
இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்

என்ற வீரக்கவிதை கேட்டு, நெஞ்சம் விம்மிடும் நிலையில், ஆம்! ஆம்! அழிந்துபட்டது ஆங்கில அரசு! செவி குளிரக் கேட்கிறது சுதந்திர முரசு! இனி, பசியும் பட்டினியும் கொட்டுமோ! பஞ்சையும் பராரியும் இருப்பரோ!—என்று எண்ணிக் களிநடம் புரிந்தவர்.

உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்
வீணில் உண்டு கொழுத்திருப் போரை
நிந்தனை செய்வோம்.

என்ற கீதம், ஊரூரும் பாடிடத்தேச பக்தர்கள் கிளம்பிடக் கண்டு, இனிஎன் நாட்டுக்குப் புதுவாழ்வு நிச்சயமாகிவிட்டது, பொழுது புலர்ந்தது, புதுவாழ்வு மலர்ந்தது, என்று பூரித்துக் கூறியவர்.



காங்கிரஸ் அரசாள்கிறது, என்ற நிலைகண்டு, இனி ஜெயமுண்டு! பயமில்லை! மனமே! என்று சிந்துபாடிச்சிந்தை மகிழ்ந்திருந்தார்.

காமராஜர், ஆட்சிப்பீடம் ஏறிஅமரக் கண்டதும், பட்டம் பெற்றறியார், பல்கலைக் கழகம் பார்த்தறியார், பாரதமாதா வின் சேவையன்றிப் பிறிதோர் பயிற்சியும் பெற்ருர் இல்லை, எனினும், இவர் நாடாள வாய்ப்புக் கிடைத்துவிட்டது, பாமர மக்கள் பாராளும் காலம் இது—என்ற கவிதா வாக்கியம், உண்மையாகிவிட்டது; இஃதன்ரே காணக் கிடைக்காத காட்சி என்றெல்லாம் எண்ணி எண்ணி இறும்பூ தெய்தி இருப்பார். ஏன் எனில், காமராஜரும், விருதுநகர்—தொண்டர் குழாத்தில் இருந்த தூயமணி!

இவ்வளவு இன்ப நினைவுகளும், பொடிப் பொடியாகும் படியான பேரிடி அவர் நெஞ்சிலே விழுமென்று யார் கண்டார்கள்—

இந்தப் படுபாவிகள் இவ்வளவு மோசமாகிப் போவார்கள் என்று நாங்கள் எண்ணவில்லையே! எவ்வளவோ பாடுபட்டு, இவர்கள் ஆட்சிக்கு வர உழைத்தோம்...எல்லாம் வீணாயிற்றே...

என்று என்னிடம் அவர் கூறியபோது, தம்பி, உள்ளபடி, அவருடைய கண்களில் நீர் துளிர்த்துக் கொண்டிருக்கக் கண்டேன். அப்போதுகூட, நான், அவர் இறந்துபடுவார் என்று எண்ணிடவில்லை—காரணம், அவர் அவ்வளவு தெளி வாக, உணர்ச்சி வயப்பட்டவராக என்னிடம் பேசிக்கொண் டிருந்தார்—அறுபது நாட்களுக்கு மேலாகிவிட்டது உண்ணா விரதம் துவக்கி—எனினும் என்னிடம் அரைமணி அளவுக்கு அவர் பேசுகிருர் என்ருல், நான் என்ன எண்ணிக்கொள்வது. இப்போதல்லவா எனக்குப் புரிகிறது, உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் வேளையிலும் அந்த உத்தமருடைய உள்ளத் தில்-அத்துணை உரம் இருந்திருக்கிறது என்ற உண்மை.

இன்றுபோல் அன்றும் நடுநிசி—நானும். நண்பர்கள் நடராசன், மதுரை முத்து ஆகியோரும், அவரைக் காணச் சென்றபோது, விருதுநகரில், காங்கிரஸ் தியாகி சங்கரலிங்கம் என்பார், உண்ணாவிரதம் இருந்து வருகிருர் என்ற செய்தியைக் கேள்விப்பட்டதிலிருந்தே, எனக்கு அவரைக் காணச் செல்லவேண்டும் என்று அவா. அன்றுதான் முடிந்தது.

அந்தத்திடலில், நான் பலமுறை பேசியிருக்கிறேன்—கடைவீதியை ஒட்டி உள்ள மாரியம்மன் கோயில் திடல். வீரம், தியாகம், வாழ்க்கையை அர்ப்பணிப்பது, எதற்கும் அஞ்சாமல் கடமையைச் செய்வது, இன்னல் எதுநேரிடினும் கலங்காமலிருப்பது என்பனபற்றி, பலர் ஆற்றலுடன் முழக்க மிடுவதற்காக அமைந்துள்ள திடல்—நானும் அங்கு நின்று பேசியிருக்கிறேன். அந்தத் திடலில், வீரமும் தியாகமும் ஒருருவாகி, சங்கரலிங்கனுராகிக் காட்சி தரும் என்று, யார் எண்ணியிருந்திருக்க முடியும். அந்தத் திடலில், ஒரு சிறு ஓலைக்கொத்துக் குடில் அமைத்துக்கொண்டு, ஒரு கயிற்றுக் கட்டிலின்மீது அவர் படுத்துக்கொண்டிருக்கக் கண்டேன். அந்தக் குடிலின்மீது, காங்கிரஸ் கொடி பறந்துகொண்டிருந்தது.

காங்கிரசால் உயர்ந்தவர்கள் ராஜபவனத்தில் சயனித்துக் கொண்டிருக்கக் காண்கிறோம்; கோட்டைகளில் கொலு விருக்கக் காண்கிறோம்; உல்லாச தோட்டக்கச்சேரிகளிலும், நளினிகளின் நாட்டியக் கச்சேரிகளிலும், உலவிக் களித்திடப் பார்க்கிறோம்; மாளிகைகளிலே பலர் குடி ஏறிடக் காண் கிறோம், காங்கிரசின் துணையினுல்; இதோ குடிசையில் படுத்துக்கிடக்கிறுர், உணவு உட்கொள்ள மறுத்துத் திங்கள் இரண்டு ஆகிறது. உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும் நிலையில் கிடக்கிறுர், காங்கிரசை வலிவும் பொலிவும் கொள்ளச்செய்யும் தொண்டாற்றிய வீரர்—முதியவர்.

காங்கிரஸ் கொடி, அந்தக் குடிலின்மீது பறந்துகொண்டிருக்கக் கண்டதும், தம்பி, எனக்குச் சொல்லொணுத வேதனைதான்! உள்ளே உயிர் போகட்டும், கவலையில்லை, உணவு உட்கொள்ளப்போவதில்லை—என்று கூறிக்கொண்டு ஒரு முதியவர் சாகும் நிலைக்குச் சென்றுகொண்டிருக்கிறுர்—அவர் உண்ணுவிரதம் மேற்கொண்டதே, காங்கிரஸ் ஆட்சி, அலங்கோலங்களைப் போக்கிக்கொண்டு, அறவழி நிற்க வேண்டும் என்பதற்காக; அந்தக் குடிலின்மீது, அவர் உயிரைக் குடித்துக்கொண்டிருக்கும் கொடுமையை விளக்கவா காங்கிரஸ் கொடி பறந்துகொண்டிருக்கவேண்டும்!

நடுநிசி—எனவே அங்கு நான்கைந்து பேர் மட்டுமே இருந்தனர்—ஒரு திரை போடப்பட்டிருந்தது, குடில் வாயிலில்—அதை நீக்கியபடி உள்ளே சென்று பார்த்தேன்—கயிற்றுக் கட்டிலின்மீது சுருண்டுபடுத்திருந்த உருவம் தெரிந்தது—மங்கலான விளக்கொளியில், எனக்கு அவருடைய முகம் தெளிவாகத் தெரியவில்லை! சில விநாடி உற்றுப்பார்த்த பிறகே தெரியமுடிந்தது.



அமைதி குடிகொண்டிருந்த இடம்; நாங்கள், சத்தம் ஏதும் எழலாகாது, அவருக்குச் சங்கடம் ஏற்படும் என்று எண்ணிக்கொண்டபடி உடன் வந்த தோழரை, எழுப்பாதீர் ஐயா! என்று ஜாடை காட்டிச் சொன்னேம். அவரோ, தியாகத் திருவைத் தொட்டுத் தட்டினுர். சங்கரலிங்கனுர் கண் திறந்தார்—தூக்கமல்ல, சோர்வினுல் செயலற்றுப்போன நிலை.

"ஐயா! அண்ணுத்துரை..." என்றுர் அந்த நண்பர், ஒருவிநாடி அவர் என்னைப் பார்த்தார்—அந்தப் பார்வையின் முழுப்பொருளை 'பாவி' நான், அன்று சரியாக உணர்ந்து கொள்ளமுடியவில்லை! செத்துக்கொண்டு இருக்கிறேனடா, செயலறியாதவனே! என்பதல்லவா அந்தப் பார்வையின், பொருள்.

மிகப் பெருங்குணம் வாய்ந்தவர் அந்தப் பெரியவர்.

"அண்ணுத்துரை..." என்று அந்த நண்பர் சொன்னதும், என் இரு கரங்களையும் பற்றிக்கொண்டார்—அவருடைய முகத்தருகே என் கரங்கள்—கண்ணீர் கரத்தில் தட்டுப்பட்டது, என் கண்கள் இருண்டுவிடுவது போன்றதோர் நிலை ஏற்பட்டது.

'தலைமாட்டிலே' நான் உட்கார அவர், இடம் செய்துதர சிறிது, நகர்ந்தார்—நான் அமர்ந்தேன் — அவருடைய போர்வை கலைந்தது, எலும்புக்கூடாகத் தெரிந்தார். பழுத்த பழம்! பேரப்பிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டு காலந் தள்ளிக் களித்திடவேண்டிய வயது—உண்ணுவிரதம் மேற்கொண்டு அறுபது நாட்களுக்கு மேலாகிவிட்டன. பச்சைத் தமிழர்தான் பரிபாலனம் செய்கிறுர், பாதி உயிர்போய்விட்டது என்று கூறுமற் கூறிக்கொண்டு குமுறிக்கிடக்கிறுர், காங்கிரஸ் ஆட்சியைக் காணவேண்டும் என்பதற்காக, கடமை உணர்ச்சியுடன் தொண்டாற்றித் தொண்டு கிழமான அந்தத் தூயவர்.

அவர், உண்ணுவிரதம் மேற்கொள்வதற்கான காரணங்களை விளக்க வெளியிட்ட அறிக்கையையும், அவர் வெளியிட்டகோரிக்கைகளையும் நான் பார்த்திருக்கிறேன் அதிலே ஒன்றுகூட சொந்த நலன்பற்றியது என்று சுட்டிக்காட்ட, சூட்சித்திறன் மிக்கோரால்கூட, முடியாது. நாடே கேட்கும் கோரிக்கைகள். நல்லோர் எவரும் மறுக்கமுடியாத கோரிக்கைகள். நாடாள்வோரின் கவனத்துக்கு நாள்தவருமல் பல கட்சிகளும் வைத்த வண்ணம் இருக்கும் கோரிக்கைகள், இவைகளை நிறைவேற்றி வைப்பதாலே,

காங்கிரஸ் ஆட்சி அழியாது இந்திய ஐக்யம் பாழ்படாது, எந்த வகுப்பாருக்கும் கேடுவராது, பெரும்பணச் செலவு ஏற்படாது, சட்டச் சிக்கல் எழாது.

மாற்றுக் கட்சிகளுக்கு மணிமகுடம் கிடைத்து விடாது.

பச்சைத் தமிழரின் பரிபாலனத்துக்குக் கூடக் குந்தகம் ஏதும் நேரிட்டுவிடாது.

அவர் கோரிக்கை மொத்தம் 12—அதிலே 10, மத்திய சர்க்காரைப் பொறுத்தது, இரண்டே இரண்டுதான், மாகாண சர்க்கார் சம்பந்தப்பட்டது என்று திருப்பூரில் முதலமைச்சர் என்ற முறையில் காமராஜர், விளக்கம் அளித்திருக்கிறார்.

முதலமைச்சர் பேசினார், காங்கிரஸ்காரர் பேசவில்லை! மந்திரிப் பதவி பேசிற்று, மனிதாபிமானம் பேசவில்லை.

விளக்கம்தரப்பட்டது, இதயம் திறக்கப்படவில்லை.

கேட்டது 12-அதில் 10-மத்திய சர்க்கார் சம்பந்தப்பட்டது என்று சட்ட நுணுக்கம் காட்டும் முதலமைச்சர் செய்தது என்ன? சங்கரலிங்கனாரின் கோரிக்கைகளை டில்லிக்கு அறிவித்தாரா? அறிவித்து ஆவன செய்வதாக, அந்தப்பெரியவருக்குத் தெரிவித்தாரா? தெரிவித்துவிட்டு, என்னால் ஆனதைச் செய்வேன் என்று வாக்களித்தாரா?

இல்லை! இல்லை! இப்போது விளக்கம் அளிக்கிறார்!

நாம் எதைச் சொன்னாலும் கேட்டுத் தீரவேண்டிய பக்குவத்தில் நாடு இருக்கிறது, நமகென்ன என்று பேசினாரேயன்றி, இதயத்திலிருந்தா எண்ணம் வெளிவந்தது!

மத்ய சர்க்கார் சம்பந்தப்பட்ட பத்து இருக்கட்டும்—இவர் சம்பந்தப்பட்ட இரண்டு இருக்கிறதே, அதற்கென்ன பதில் அளித்தார்! இப்போது விளக்கம் அளிக்கிறார். இவருடைய விளக்கம் அந்த வீரத்திருவிளக்கு அணைந்தபிறகு வெளி வந்திருக்கிறது. எத்துணை அன்பு ததும்பும் நெஞ்சம், தம்பி, நமது முதலமைச்சருக்கு. எனக்குப் பழக்கமில்லை, உனக்குத் தெரிந்திருக்காது, சங்கரலிங்கனாரை, காமராஜருக்குத் தெரியாதா? இப்போது காமராஜர், காரில் போவார், நடந்து செல்லும் நண்பர்களைக் கண்டு உறவாட இயலாது; முதலமைச்சர் என்ற முறையில் அது முடியாததாகிவிட்



டிருக்கக்கூடும்; முன்பெல்லாம், கடைவீதியில் கண்டிருப்பாரே அந்தக் கடமையாற்றிய வீரரை, திடலில் பார்த்திருக்கக் கூடுமே அந்தத் தியாகியை! விருதுநகர்தானே அவர் இருப்பிடம்! ஏன், சங்கரலிங்கனாரின் மாண்பை மறந்திடத் துணிந்தார்? யார் கேட்கமுடியும்? ஆச்சாரியாராக இருந்தால் கேட்கலாம்—கேட்கலாமா—கடாவலாம், சாடலாம், கிளர்ச்சி செய்யலாம், கவிழ்த்தேவிடக் கிளம்பலாம் — காமராஜர் பச்சைத் தமிழராயிற்றே! சங்கரலிங்கனார் உயிர்த் தியாகம் செய்துகொண்டாரே, என்பாய். ஆமாம்—என்ன செய்வது—பரிதாபமாகத்கான் இருக்கிறது—இருந்தாலும்......' தம்பி! இப்படிப் பேசிட முடிகிறதே, இன்று. இப்படிப்பட்ட தமிழகத்தில், எப்படி இருப்பார், சங்கரலிங்கனார். மரணம்! மேல், என்றார்.

"ஐயா! இன்றைய ஆட்சி கருணைக்குக் கட்டுப்படுவதாகக் காணோமே. ஆட்சியை நடத்தும் கட்சி, இது பற்றிக் கவலைப்படுவதாகத் தெரியவில்லையே. எத்துணை பயங்கரமான பலி கொடுத்தாலும், திருந்தும் என்று தோன்றவில்லையே. இந்த ஆட்சியிலே, உண்ணாவிரதம் இத்துணை உறுதியுடன் இருக்கிறீரே...பலன் இராதே..."

என்று நான் கூறினேன்—தட்டுத் தடுமாறிக்கொண்டுதான்-அவரோ அனுவபமிக்கவர், நான் பள்ளிச்சிறுவனாக இருந்த நாட்களிலேயே பரங்கி ஆட்சியை எதிர்த்திடும் பணியில் ஈடுபட்டவர்—அவருக்கு நான், யோசனை கூறுவது என்றால், சரியான முறையாகுமா என்ற அச்சம் என்னைப் பிய்த்தது. இவ்வளவு இன்னலை, இந்தத் தள்ளாத வயதிலே அனுபவிக்கத்தான்வேண்டுமா என்று நான் பதறியதால் கேட்டேன், தம்பி! அவர் சொன்ன பதில், என்னைத் திடுக்கிடவைத்தது அப்போது; இப்போது கண்களைக் கலங்கச் செய்கிறது; இல்லை...நான் செத்துவிடுகிறேன்...பிறகாவது பார்ப்போம்... சண்டாளர்கள்...எவ்வளவோ கண்டித்துக் காட்டுகிறீர்கள்... திருந்துகிறார்களா......என்று அவர் சொன்னார், நெஞ்சு உலர்ந்ததை அறிந்து, பக்கத்தில் ஒரு நாற்காலிப் பலகைமீது இருந்த தண்ணீர்க் குடத்தைப் பார்த்தார். மண்பாண்டம் தம்பி குளிர்ந்த தண்ணீர்! பக்கத்தில் ஒரு முழுங்கு தண்ணீர் மட்டுமே கொள்ளத்தக்க சிறு மண்குடுவை! அதிலே தண்ணீர் நிரப்பி, அவர் வாயருகேகொண்டு சென்றேன்—நாகரீக உணர்ச்சியை அந்த நேரத்திலும் காட்டியதைக் கேள் தம்பி—அந்தக் குடுவையை அவர்தம் கரத்தால் வாங்கி, இரண்டு கரண்டி அளவு தண்ணீர் பருகினார்.

பிறகு, அவர், மெள்ளப் பேசலானுர்—எனக்கு, அவருக்குக் களைப்பு மேலிட்டுவிடுமே என்று பயமாக இருந்தது; அவரோ, தமக்கு 'முடிவு' விரைவிலே இருக்கிறது என்ற எண்ணத்தினலோ என்னவோ, என்னிடம் பேசவேண்டியதைப் பேசிவிடவேண்டியதுதான் என்று எண்ணிக் கொண்டவர் போலப் பேசினுர்.

எல்லையை வாங்க முடியாதா?

இதில் என்ன கஷ்டம்?

இதய சுத்தியோடு இரண்டு மணி நேரம் ஆந்திர சர்க்காருடன் பேசினுல், காரியம் நடக்காதா...?

என்று கேட்டார்...பதில் நானு கூறவேண்டும்...நாடு அல்லவா அந்த நல்லவரின் கேள்விக்குப் பதில் அளிக்க வேண்டும்.

கவர்னருக்கு ஏன் இலட்ச இலட்சமாகச் சம்பளம்? ஒரு வடநாட்டான்... நீங்கள் கண்டித்தீர்கள்... நியாயம்... ஏன், வீண் செலவு...என்ன பிரமாதமான வேலையாம், கவர்னருக்கு...காலணு செலவில்லாமல், கச்சிதமாக எங்கள் வி.வி. சண்முகநாடார் பார்ப்பாரே, இந்தக் கவர்னர் வேலையை...

என்று, அவர் கூறியபோது, நான் உருகிப்போனேன்.

சங்கரலிங்கனுர், காங்கிரஸ்காரர்—என்ருலும், காரிய மாற்றும் ஆற்றல் கொண்டவர் வி.வி. சண்முகம், எனவே அவர் காங்கிரஸ்காரராக இல்லாதுபோயினும் பரவாயில்லை, என்று எண்ணிய அரசியல் கண்ணியம் என்னை உருகச் செய்தது.

எனக்கு அவர், பேசப்பேச, நாம் அவருக்கு மெத்தச் சங்கடம் தருகிருேமே, என்ற பயமே மேலிடத் தொடங்கிற்று. அவரோ பேசுவதையும் நிறுத்திக்கொள்ளவில்லை, என் கரங்களையும் விடவில்லை.

இந்த அளவுக்கு அவர் பேசினதாலேதான், நான், அவர் உயிருக்கு ஆபத்து இராது, என்றுகூட எண்ணிக் கொள்ள நேரிட்டது.

காமராஜர் வரப்போகிருர், இரண்டோர் நாட்களில் என்று நான் கேள்விப்பட்டதால், ஒரு தைரியம் கொண்டிருந்தேன்—காமராஜர், கனிவு காட்டுவார், கோரிக்கைகளிலே சிலவற்றையாவது நிறைவேற்றிவைத்து, அந்தக்



குணவானுடைய உயிரைக் காப்பாற்றிவிடுவார் என்று எண்ணிக்கொண்டேன்.

நான் கண்டேனு, நாடாள வந்தவர்கள், மனதை இரும்பாக்கிக் கொள்ளவேண்டும் என்பதை. காமராஜர், அது போலவே, மலைகுலைந்தாலும் மனம் குலையாத தமிழனல்லவா! அதனுல், பிணமானுலும் பரவாயில்லை, கோரிக்கைகளுக்கு இணங்குவதாகக் கூறமாட்டேன், கூறினுல் 'கௌரவம்' என்ன ஆவது, என்று கருதுபவர் போலத் தம் போக்கால் காட்டிக்கொண்டார்; சங்கரலிங்கனுர், எழுபது நாட்களுக்கு மேல் உண்ணுவிரதமிருந்து, மூர்ச்சையாகிவிட்ட பிறகு, மதுரை மருத்துவ விடுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு மறைந்து போனுர். அவருடைய உயிர்தான் போயிற்றே தவிர, முதலமைச்சர் பதவிக்கு உள்ள 'கௌரவம்' இருக்கிறதே, அது போகவில்லை! போகவிடவில்லை காமராஜர்! சங்கரலிங்கனுர்கள் சாகலாம், பிழைக்கலாம், காமராஜர், முதலமைச்சர் பதவிக்கு உள்ள கௌரவத்தைக் குலைத்துக் கொள்வாரா! உறுதியாக இருந்துவிட்டார்.

உண்மையிலேயே மோசமாகிவிட்டது.

உயிர் ஒட்டிக்கொண்டுதான் இருக்கிறது.

பேச்சு நின்றுவிட்டது; ஊமை மூச்சுதான் இருக்கிறது.

எந்த விநாடியும் உயிர் போய்விடக்கூடும்.

மேல் மூச்சு வாங்குகிறது; கண் மூடிவிட்டது; கால் வீக்கம் கண்டுவிட்டது.

தம்பி! ஒற்றர் படையினரும்' உற்ற நண்பர்களும், பதவிக்குப் பிறகு பெற்ற தோழர்களும், நிலைமையைக் காமராஜருக்கு, இதுபோலெல்லாம் எடுத்துச்சொல்லாமலா இருந்திருப்பார்கள். என்ன சொன்னுரோ முதலமைச்சர்!

அப்படியா...

ஆமாமாம்...

அட, பாவமே...

நிஜமாவா...

போய்விடும்னே சொல்ருங்களா...

பெரிய தொல்லையாப் போச்சே...

என்ற விதமாகத்தான் அவர் கூறியிருப்பார்; வேறு விதமான பேச்சு இருந்திருந்தால்தான், சங்கரலிங்கனாரை நாடு இழந்திருக்காதே!

துணிவுடன், நடப்பது நடக்கட்டும் என்று இருந்து விட்டிருக்கிறார்.

ஏழை அழுத கண்ணீருக்கே பயப்படவேண்டும், நேர்மையான ஆட்சியாளர் என்கிறார்கள். சுடலையில் தீ கொழுந்துவிட்டு எரிந்தது. காமராஜர் ஒரு சொட்டுக் கண்ணீர்விடவும் மறுக்கிறார்—வேறு வேலை நிரம்ப!

நான் சாவதனாலாவது...

என்று அந்த உத்தமர் என்னிடம் சொன்னார்—தமிழர் சமுதாயம் இன்று அடைந்துள்ள சீர்கெட்ட நிலையை உணராது இதுபோலப் பேசுகிறாரே என்று நான் எண்ணி வருந்தினேன்.

பொட்டி சீராமுலு உண்ணாவிரதம் இருந்தார்—ஆந்திரம் அலறித் துடித்தது—சங்கரலிங்கனார் சாகக்கிடக்கிறார் என்று தெரிந்து, தமிழகம் என்ன கோலம் கொண்டிருந்தது—ஒவ்வொரு காங்கிரஸ்காரரையும் உரைத்தும் நிறுத்தும் பார்த்து, எந்தக் 'கோஷ்டி' என்று கண்டறியும் காரியத்தில் ஈடுபட்டிருந்தது!

எப்போதும்போல, மாணவ மணிகள்தான், தமிழ் இனம் இன்னமும் தலைதூக்கவே முடியாத நிலைக்குத் தாழ்ந்து அழுந்திவிடவில்லை என்பதைக் காட்டும்விதத்தில், மௌன ஊர்வலம் நடத்தியும், அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றியும், தன் கடமையைச் செய்தது.

மதுரையிலும் வேறு இரண்டோர் இடங்களிலும், நமது கழகம் அனுதாபக் கூட்டம் நடத்திற்று.

மற்றப்படி பார்க்கும்போது, தமிழகம், காமராஜ் கோலத்தில்தான் இருக்கிறது!

இந்தத் திங்கள் 21ம் நாள், தமிழகம் தன் கடமையைச் செய்யும்—நாடெங்கும் அனுதாபக் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஒருவகையில் ஆறுதல்தான். ஆனால், தம்பி, அந்த உத்தமர் தம் இன்னுயிரை ஈந்தாரே, நாம் என்ன செய்யப் போகிறோம்.

தமிழ் நாடு என்ற பெயர் பெறுவதற்காவது நாம் முனைந்து நிற்க வேண்டாமா?



ஒப்பற்ற ஒரு உத்தமரின் தியாகம், இதற்குக்கூடவா வழி ஏற்படுத்தாது.

சங்கரலிங்கனாரைத்தான் சாகடித்து விட்டீர்கள், உங்கள் அலட்சியப்போக்கினால். அவருடைய உள்ளத்தில் ததும்பிக்கொண்டிருந்த ஆசையில், ஒன்றே ஒன்றையாவது, தமிழ்நாடு என்ற பெயர் தரும் காரியத்தையாவது செய்யக்கூடாதா என்று காங்கிரஸ் ஆட்சியைக் கேட்கும் அளவுக்காவது தமிழகம் செயல்படலாகாதா?

அந்தோ! அருமைத் தியாகியே! தமிழகத்திலேயன்றோ, உன் அரும்பெரும் தியாகம் கண்டனர்.

தாசர் புத்தி தலைக்கேறிவிட்ட தமிழகமாயிற்றே!

தருக்கரிடம் சிக்கிச் சீரழிந்து கிடக்கும் தமிழகமாயிற்றே!

உண்மைத் தியாகத்தின் உயர்வு அறியாத உலுத்தர்கள் உயர் இடம் பிடித்துக்கொண்டு, அன்பு, அறம், ஆகியவற்றை அழித்தொழிக்கும் நிலைக்கு வந்துற்ற தமிழகமாயிற்றே!

இங்கே அறம் ஏது? வீரம் எங்ஙனம் எழும்? நீதிக்கு வழி ஏது? நிமிர்ந்து நின்று உரிமை பேசுவோர் யார்? என்றெல்லாம் அழுதபடி கேட்கத் தோன்றுகிறது.

அண்ணா! அப்படி ஒரே அடியாகத் தமிழகத்தைத் தாழ்த்திவிடாதே—தமிழகம் தயக்கமடைந்திருக்கிறது, உண்மை; ஆனால் உத்தமரின் உயிர்த்தியாகம், தமிழகத்தின் கண்களிலே குருதி பீறிட்டுவரச் செய்திருக்கிறது; கட்சி பேதமின்றி, இந்தக் கட்டத்தில், சங்கரலிங்கனாரின் தியாகத்தை நினைவிற்கொண்டு, தமிழ்நாடு என்ற பெயர் கிடைக்கச் செய்வதற்கான கிளர்ச்சியினைத் துவக்க ஆற்றல் உள்ளவர்கள் அனைவரும் ஒரு அணிவகுப்பாகுவர், அனுதாபக் கூட்டமே, அதற்கான நாளாகும்.

அந்தச் சூள் உரைத்திடும் நாளாக அமையும்—என்று கூறிடும் எண்ணற்ற தம்பிகளைக் காண்கிறேன். அவர்களிடம் எனக்கு நிரம்ப நம்பிக்கையும் உண்டு.

வீரத்தியாகி சங்கரலிங்கனாருக்கு நாம் அனைவரும், நமது நெஞ்சு நெக்குருக வணக்கம் கூறுகிறோம்.

அவர் காட்டிய தியாகப் பாதையில் செல்வதென்பது அனைவருக்கும் சாத்தியமானதல்ல; ஆனால் அவருடைய தியாகத்தை மதிக்க மறுப்பவர், மறந்து திரிபவர், தமிழராகார், மனிதராகார்!

தமிழகம் விடுதலைபெறுவதற்கே இந்த வீரத்தியாகம் பயன்படப் போகிறது.

பிறபிற இடங்களில், இத்தகைய சம்பவம், கலகத்துக்கு, பலாத்காரத்துக்கு வழிகோலும்—காண்கிறோம்.

தமிழகத்தின் முறை தனித்தன்மை வாய்ந்தது; அறவழியின்படி உள்ளது.


அறம் வெல்லும், நிச்சயமாக வெல்லும்; அறம் ஆர்ப்பரிக்காது, அத்துமீறிய காரியத்துக்கு மக்களைச் செலுத்தாது; அதன் பயணம் துரிதமானதாக இராது—ஆனால் தூய்மையானதாக இருக்கும்.

அறம் நிச்சயமாக வெல்லும்—ஆனால் அது கடுமையான காணிக்கைகளைக் கேட்கும்.

மிகக் கடுமையான காணிக்கை தரப்பட்டாகிவிட்டது; வீரத்தியாகி உயிரை அர்ப்பணித்தார்.

தமிழக விடுதலைக்காக, நாமும் காணிக்கைதரத் தயாராகவேண்டும்; அந்தப் பக்குவம் நமக்கு ஏற்படவேண்டும்; வீரத் தியாகியின் நினைவு, நமக்கு உள்ளத் தூய்மையை, உறுதியை, தியாக சுபாவத்தை தருவதாக அமைதல்வேண்டும். தியாகிக்குத் தலைவணங்குவோம்! தாயகத்துக்குப் பணிபுரிவோம்.

21—10—'56 அன்பன்,



கடிதம்: 71

# நாமாவது......!

**மத்திய அரசை மைசூர் கண்டிப்பு—தியாகி, கித்வாய் அமைச்சர் ஆனமை—கட்டாய இந்தி.**

தம்பி!

எடுத்ததற்கெல்லாம் டில்லி அதிகாரத்தின் உத்தரவுக்குக் கட்டுப்பட்டு நடப்பது என்றால், இங்கு நமக்கு ராஜ்யத்தில் பாராளும் மன்றம் என்ற ஒன்று எதற்கு? என்று கேட்கிறார், அனுமந்தய்யா, முன்னாள் முதலமைச்சர்.

மைசூர் ராஜ்யம், தமிழகத்தைக் காட்டிலும் தொழில் துறையில் வளம் பெற்றது; என்றாலும், அங்குகூட, வடநாட்டு வளம் ஓங்கி வளருகிறது, தென்னகம் தேய்கிறது என்ற எண்ணமும், வடநாட்டின் அதிகாரத்துக்குத் தலையாட்டும் நிலைமைக்குத்தான், இங்கு 'ராஜ்யங்கள்' ஆக்கப்பட்டுள்ளன என்ற எரிச்சலும் இருக்கத்தான் செய்கிறது. அனுமந்தய்யா, இந்த எரிச்சலை வெளியிட்டிருப்பது இது முதல் முறை அல்ல. பதவி பறிபோய்விட்ட ஆத்திரத்தில் இது போலப் பேசுகிறார் என்று அலட்சியமாகக்கூறி, உண்மையை மறைத்து விடலாம் என்று சில காங்கிரஸ்காரருக்கு எண்ணம் ஏற்படும்—ஆனால், அனுமந்தைய்யா இப்போது மட்டுமல்ல, மைசூர் ராஜ்யத்தின் முதல் அமைச்சராக இருந்த நாட்களிலேயே கூட, மத்திய சர்க்காரின் ஆதிக்கத்தைக் குறித்துத் தமது கண்டனத்தை

ஒளிவு மறைவு இன்றிக் கூறியிருக்கிறார் - அவருடைய வீழ்ச்சிக்கு உள்ள பல காரணங்களில் இதுவும் ஒன்று என்று கருதுவோர் உளர்.

மைசூர் ராஜ்யத்தின் முதலமைச்சராக அவர் இருந்த நாட்களிலேயே, மத்திய சர்க்காரின் ஆதிக்கப்போக்கைக் கண்டித்ததால், அவர்மீது டில்லி அரசுக்கு ஒரு கடுப்பு வளர்ந்திருக்கக்கூடும்—மைசூர் ராஜ்யத்திலேயே அவருக்கு வேறு காரணத்தால் எதிர்ப்பு கிளம்பியதும், டில்லி அவருடைய வீழ்ச்சியை அனுமதித்து, இருக்கக் கூடும். பெரிய இடத்து விவகாரம்—எனவே முழு உண்மை வெளி வருவது கடினம். ஆனால், ஒரு அரசின் முதலமைச்சராக உள்ளவர் தமது பதவியைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமானால் என்னென்ன முறையைக் கையாளவேண்டும் என்ற சாணக்கிய சூத்திரம் தெரிந்துகொள்ள அல்ல, இந்தச் சம்பவத்தைக் குறிப்பிடுவது. நாடு அறியவேண்டிய மிக முக்கியமான உண்மை, தன் ராஜ்யத்தின் நலனில் அக்கரை கொண்ட தலைவர் யாரும், மத்ய அரசு கொண்டுள்ள போக்கைக் கண்டிக்காமலிருக்க முடியவில்லை, மனக் குமுறல் ஏற்படாமலில்லை, 'ஜாடை மாடை'யாக வேனும் பேசிக் காட்டவேண்டி இருக்கிறது, என்பதுதான்.

சிலர் இதுபோலப் பேசத் தலைப்பட்டதும், டில்லி விழித்துக்கொள்கிறது—ஆசை காட்டியோ அச்சமூட்டியோ, அவர்தம் வாயை அடைத்துவிட முடிகிறது.

கவர்னர் பதவிகளையும், வெளிநாட்டுத் தூதர் பதவியையும், பல்வேறு நாடுகளுக்குப் பவனி செல்லக்கூடிய கமிஷன் பதவிகளையும், வாரி வீசும் அதிகாரம் கையில் இருக்கிறது; முற்றுந் துறந்த முனிவர்களை மயக்கிட கடவுளே, தேவலோக கட்டழகிகளை ஏவுவாராமே! கடவுளின் செயலே இதுவென்றால், ஆதிபத்ய ஆசை கொண்டவர்கள், பதவிப் பாவைகளை ஏவிவிட்டு, இவர்களை இளித்தவாயர்களாக்கி விடுவது, நடைபெறக்கூடாததாகுமா!! சபலம், யாரை விடுகிறது?

"மத்ய சர்க்கார்—மாகாண சர்க்கார் என்று பிரித்துப் பேசுகிறார் பிரபோ!"

"யார், அவ்விதம் பேசுபவர்?"

"இன்ன ராஜ்ய முதலமைச்சர்!"

"முதலமைச்சராக இருந்துகொண்டா அங்ஙனம் பேசுகிறார்? என்ன பேதைமை, என்ன பேதைமை!"



"என்ன போக்கிரித்தனம் என்று சொல்லுங்கள், பிரபோ! நமது தயவைநாடி, துதிபாடி, மற்றவர்கள் தமது ஆட்சியைக் காப்பாற்றிக்கொண்டிருக்க, இந்த முதலமைச்சர் எவ்வளவு துணிவுடன், நமது ஆதிபத்யத்தைத் துச்சமென்று கருதி, யாரோ தம்மை மெச்சிக்கொள்ள வேண்டுமென்பதற்காக, மத்திய சர்க்கார்—மாகாண சர்க்கார் என்று பிரித்துப் பேசுகிறார், உரிமைபற்றிக் கதைக்கிறார்—இதை மகாப்பிரபோ! நாம் அனுமதிக்கலாகாது...ஆபத்தாகும், பிறகு! ஒரு இடத்திலே இந்தத் துணிவு ஏற்பட்டுவிட்டால், ஏற்பட்டது கண்டும் நாம் அதனைக் களைந்து எறியாமலிருப்பது தெரிந்து விட்டால், மற்றவர்களும் கிளம்புவர்—பிறகு பாரதம், களமாகி விடும். எனவே, இதனை உடனடியாக, அடக்கியாக வேண்டும்."

"வீண் பீதிகொள்கிறாய்! ஒரு முதலமைச்சர் முணுமுணுப்பதாலே, நமக்கு என்ன ஆபத்து நேரிட்டுவிடப் போகிறது; நாம் இதன் பொருட்டு, அந்த முதலமைச்சரை அடக்கமுற்பட்டால், ஆ—ஊ—என்று கூவி, மற்றையோரையும் கிளப்பிவிட்டுவிடுவார்..."

"அதுவும் ஒரு வகையில் உண்மைதான்......ஆனால் நமது ஆதிபத்தியத்தைக் கண்டிக்கும் போக்கு வளர விடலாகாது..."

"ஆமாம்! வளரவிடப்போவதில்லை..."

"எப்படி, மகானுபாவா!"

"எண்ணற்ற வழிகள் உள்ளன! அந்த முதலமைச்சருக்கு உள்ள ஆசாபாசங்களை அறிந்துவா; எந்தப் பதவிமீது மோகம் பிறந்திருக்கிறது; ரஷியாபோய்ப் பார்க்கப்பிரியம் ஏற்பட்டு விட்டதா; பாரிஸ் பயணம் தேவையா; அமெரிக்கா சென்று ஆனந்தம்காண விருப்பம் எழுந்திருக்கிறதா; என்னதான் புதிய பசி என்பதை அறிந்துவா; அந்தப் பசிக்கு ஏதேனும் தருவோம்; வாய் தானாக மூடிக்கொள்கிறது; வாழ்த்தி வணங்க ஓடோடி வருவார்"

"எல்லோரும், இதேபோல இருப்பார்களோ?"

"இது ஒன்றுதான், நமக்கு உள்ள முறையோ! பைத்யக்காரா! நமது அம்புறுத்தூணியில் இஃதுமட்டுமா, இருக்கிறது?

ஆசைக்குக் கட்டுப்படாதவர் என்று தெரிந்தால், அச்சத்தை ஏவுவோம்...ஷேக் அப்துல்லா படம் ஒன்று அனுப்பிவைத்தால் தெரிந்துகொள்கிறார்."

''பலே! பலே! நானோர் ஏமாளி! தங்கள் முறையின் நுட்பத்தை அறிந்துகொள்ளும் ஆற்றலைப் பெற்றேன் இல்லை!''

மத்திய சர்க்காரிடம் அளவுமீறிய அதிகாரம் குவிந்து கிடக்கிறது; அதனால் ராஜ்ய சர்க்கார் தரம் இழந்து, திறம் அற்று, பெரியதோர் பஞ்சாயத்துபோர்டாக வாழ்க்கையை ஓட்டவேண்டி நேரிட்டுவிடுகிறது என்ற கருத்து குடையும் மனத்தினராகி, மனதிற்பட்டதை எடுத்துக்கூறும் துணிவினைப் பெற்றுவிட்டால், அவரைப் பற்றி, டில்லி தேவதைகள், இது போல் பேசிக் காரியமாற்றும் போலத் தெரிகிறது.

மகாவீர் தியாகி என்றோர் மந்திரி இருக்கிறார், டில்லியில்—இவர் டில்லி பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்த நாட்களில், சர்க்காரின் செயலில், திட்டத்தில், போக்கில், காணக்கிடைக்கும் 'ஓட்டைகளை'க் காட்டிக் காட்டிச் சாடுவார்! பல இலாகாக்களிலே மலிந்துகிடக்கும் ஊழலை அம்பலப்படுத்துவார்! அமைச்சர்களின் தவறுகளைக் காட்டிக் கேலி பேசுவார். அவருடைய கேள்விகள், சர்க்கார் தரப்பினரைத் திணறவைத்திடும்! அவர் தரும் புள்ளி விவரங்கள், சர்க்காருக்கு மண்டைக் குடைச்சல் ஏற்படுத்தும்.

இந்தவிதமாக இடித்துக்கொண்டிருந்த தியாகி இப்போது அமைச்சராகிவிட்டார்!

ஏன்? அழைத்தார்கள்! எப்படி? அதுதான் இன்று டில்லி கையாளும் அரசியல் செப்படிவித்தை. தியாகியைத் தீர்த்துக் கட்டவேண்டும்! தீபோலச் சுடுகிறார்; சர்க்காரின் போக்கைச் சாடுவதிலே சமர்த்தராக இருக்கிறார்; இவரை வெளியே விட்டு வைத்தால், இது போலத்தான் தொல்லை தந்தபடி இருப்பார்; எனவே இவரைப் பிடித்து 'உள்ளே' போடவேண்டும்; அமைச்சராக்கிவிடுங்கள்! ஆசாமி பிறகு வெல்வெட்டு மெத்தையில் சாய்ந்துகொள்வார், எதிர்ப்புமாய்ந்துபோகும்!—என்று டில்லி தீர்மானித்தது; தியாகிக்கு அமைச்சர் வேலை கிடைத்தது, சர்க்கார் தரப்புக்கு தலைவலி குறைந்தது.

உணவுத்துறையிலே அமைச்சராக உள்ள கிருஷ்ணப்பா என்பவரை, இப்படித்தான், கித்வாய் கண்டெடுத்தார், என்று, பெருமையுடன் பேசுகிறார்கள், கேட்கிறோமல்லவா! ரபி அகமத் கித்வாய், உணவுத்துறைக்கு மந்திரியாக இருந்த போது, கிருஷ்ணப்பாவெறும் உறுப்பினராக இருந்துகொண்டு, ஓயாது கேள்விகள் கேட்டுக் கேட்டுக் குடைவாராம்! கித்வாய் இந்த ஆசாமியை இழுத்துவாருங்கள் என்று கூறி, வந்த வருக்கு ஒருவெல்வெட்டு மெத்தையைக் கொடுத்து,



''உட்கார்! நீர் மெத்த சுறுசுறுப்பும் சூட்சமமும் உள்ளவர்! மந்திரிவேலை பாரும்!'' என்றாராம். கிருஷ்ணப்பா இப்போது மந்திரியாகி, ''பஞ்சமா? யார் சொல்வது, பொய்! பொய்! என்கிறார். 'விலை ஏறிவிட்டது, மக்கள் சொல்லொணக் கஷ்டம் அனுபவிக்கிறார்கள்' என்று முறையிட்டால், விலை ஏறினால் என்ன, தானாக இறங்கிவிடும்—என்று சமாதானம் பேசுகிறார்.

இதே முறையிலே காரியமாற்றும் பழக்கம் ஏற்பட்டு விட்டதால், மத்திய சர்க்காரின் போக்கை எவரேனும் கண்டிக்கக் கிளம்பினால், அவர்களை, ஆசைகாட்டி, மடக்கி விடலாம் என்ற நம்பிக்கை, டில்லிக்கு இருக்கிறது.

குறை கூறியும், கண்டனக் குரல் எழுப்பியும், உரிமை முழக்கமிட்டுக் கொண்டும், வெளியே தலைநீட்டுகிற காங்கிரஸ் தலைவர்களிலே பலரும், தமது திருவும் உருவும் டில்லிக்குத் தெரிந்து, 'தூது'வராதா என்ற ஆசையினால் உந்தப்பட்டும், என்னை இப்படியே நீங்கள் வாளா இருக்கவிட்டுவிட்டால், வேறு வேலை இல்லாத காரணத்தாலும், அலட்சியப்படுத்தி விட்டார்களே என்ற எண்ணத்தாலும், நானும் ஏதாவது செய்யமுடியும் என்பதைக் காட்டித் தீரவேண்டிய அவசியத்தினாலும், மத்திய சர்க்காரின் போக்கை எதிர்த்துப் பேசக் கிளம்புவேன்—என்று டில்லிக்கு மிரட்டல் பாணம் ஏவ, இந்தப் போக்கினைக் கொள்கிறார்கள்.

இல்லையென்றால், மத்திய சர்க்கார் ஆதிக்கம்செய்கிறது, இது நியாயமல்ல, நல்லதல்ல; ராஜ்ய சர்க்காரின் தரமும் திறமும் கெட்டுவிடுகிறது என்று கூறிடும் அனுமந்தய்யாக்கள், நெஞ்சார இதை உணர்ந்து, நேர்மைவழி நின்று இதனை எடுத்துரைக்க முன்வருகிறார்கள் என்றால், இதற்குப் பரிகாரம் கூறவேண்டாமா? மக்களின் ஆதரவினை, இந்தத் தம் கருத்துக்குத் திரட்டிக் காட்டவேண்டாமா? நாட்டுக்கான சட்டதிட்டங்கள் குறித்து, கலந்து பேசி முடிவெடுக்கும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிகளிலே, இதுபற்றி, அச்சம் தயை தாட்சணியத்துக்குக் கட்டுப்படாமல் எடுத்துரைக்க வேண்டாமா? நேரு பண்டிதரிடம் வாதாடவேண்டாமா? செய்கின்றனரோ? இல்லை! வாய்ப்புகள் கிடைக்கும் போதெல்லாம் வாயடைத்து இருந்துவிடுகிறார்கள்; மத்ய சர்க்கார் என்ற முறையே இத்தகைய கொடுமையை, எதேச்சாதிகாரத்தை, சர்வாதிகாரத்தைத்தான் மூட்டிவிடும். எனவே, தனியாட்சியாக ராஜ்யங்கள் இருத்தல்வேண்டும், ஒன்றுக்கொன்று நேசமாகவும் பாசத்துடனும், தோழமையுடனும் இருக்க வழிசெய்துகொள்ளலாம். ஒற்றுமையின்

பேரால், இந்தக் கொடுமைக்கு இடமளித்துவிட்டு, மத்திய சர்க்காரிடம் எதற்கெடுத்தாலும் மண்டியிட்டுக் கிடக்கும் கேவல நிலைமை கூடாது. அதனைப் போக்கிக்கொள்வோம், என்று நாம் கூறும்போது, இதே அனுமந்தய்யாக்கள் பேசும் பாணி என்ன? பாரதம் ஒரு தேசம்—ஓர் அரசு—இந்த ஐக்யத்தை நாசம் செய்தல்கூடாது—என்றல்லவா பேசுகிறார்கள்!! நமது உரிமை முழக்கத்தை வரட்டுக் கூச்சல் என்று ஏசுகிறார்கள்; நமது 'தனி நாடு' கோரிக்கையை, 'நாட்டைப் பிளவுபடுத்தும் நாசசக்தி' என்கிறார்கள்!!

மத்திய சர்க்கார் தலையிட்டுத் தொல்லை தருகிறது—எதற்கெடுத்தாலும் டில்லி உத்தரவு பிறப்பிக்கிறது, நாம் அதன் கட்டளைப்படி ஆடவேண்டி இருக்கிறது—செச்சே! இது மகாகேவலம்!!—என்று பேசிக் கைபிசைந்து கொள்ளும் இந்தக் கண்ணியவான்கள், ஆசைக்கு ஆட்படாமலும், அச்சத்துக்கு இடமளிக்காமலும், கொள்கைக்கு மதிப்பளித்து, மக்கள் மன்றததிலே அந்தக் கொள்கைக்கு ஆதரவு திரட்டி வரும், நம் போன்றோர்மீது காய்வது ஏன? பாய்வது எதன் பொருட்டு!!

பாரதம் ஒரு தேசம்...என்ற தத்துவத்தைப் பேசும் போதும், இவர்கள் உள்ளொன்று வைத்துப புறமொன்று பேசுகிறாகள்! மத்யசர்க்கார் எதிலும் குறுக்கடுகிறது, எதறகெடுத்தாலும் கட்டளை பிறப்பிக்கிறது, நாங்கள் கைகட்டிச் சேவகம் செய்யவேண்டிய கேவலம் ஏற்படுகிறது என்று மனக் குமுறலுடன் பேசும்போதும், அவலை நினைந்துக்கொண்டு உரலை இடிக்கிறார்களே தவிர கொள்கைப்பற்றினால் செயலாற்றக் கிளம்புகிறார்கள் இல்லை!

குமாரசாமி ராஜா, கவர்னர் கோலத்திலேயே கோவை வந்ததும், அங்கு பிரமுகர்களும் தொழில அதிபர்களும் கூடியிருந்த ஓர் அவையில், டில்லியின் போக்கினையும், தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருப்பதையும், வடநாட்டு ஆணைத் திட்டங்களில் பணம் பாழாக்கப்படுவதையும், கேட்போர் பதறித் துடித்து எழும் விதத்தில் பேசியதையும், அறிவாய்.

"இவ்வளவுதான் என்று எண்ணாதீர்கள்! இன்னும் சொல்லவேண்டியவை ஏராளமாக உள்ளன. இந்தக் கவர்னர் வேலையிலிருந்து விலகியதும் அவ்வளவையும் சொல்லிவிடுகிறேன்" என்றல்லவா முழக்கமிட்டார்.

பத்திரிகைகளெல்லாம் பத்தி பத்தியாக வெளியிட்டன; கொட்டை எழுத்திலே தலைப்புகளிட்டன; குமாரசாமிராஜா



இவ்விதம் பேசிடக் காரணம் என்ன என்பதுபற்றி 'நிருபர்கள்' தமது கருத்துகளைத் தொகுத்தனர்; நாட்டு மக்கள், வியந்தனர்; பலர் பாராட்டினர்; இஃதன்றோ அஞ்சா நெஞ்சம்! கவர்னர் பதவியில் இருப்பதாலேயே கண்மூடி மௌனியாகிவிடமாட்டேன்! அக்ரமமும் அநீதியும் கண்டால், எடுத்துக் காட்டிக் கண்டிக்கத்தான் செய்வேன்! என்று கூறிடும் போக்கிலல்லவா குமாரசாமிராஜா பேசியிருக்கிறார். தென்னாட்டுத் தலைவரில் ஒருவர் இப்படி வீரதீரமாகப் பேசுகிறார் என்பதறிந்தால், வடநாட்டுச் சர்வாதிகாரிகள்கூடச் சிறிதளவாவது அச்சம் கொள்வார்கள்; எதையோ காட்டி மயக்கிவிடலாம் என்று யாரைக் குறித்துவேண்டுமானாலும் நம்பலாம், குமாரசாமி ராஜா அப்படிப்பட்டவரல்ல. கவர்னர் வேலை கொடுத்தோம், அதிலே இருந்துகொண்டே நமது போக்கைக் கண்டிக்கிறார். ஏ! அப்பா! பொல்லாத ஆசாமி! இவரிடம் நாம் சர்வ ஜாக்ரதையாக நடந்துகொள்ள வேண்டும், என்றெல்லாம் வடநாட்டுத் தலைவர்கள் எண்ணிக் கொள்வார்கள். இப்படிப்பட்ட அஞ்சாநெஞ்சு படைத்தவர் முதலமைச்சராக இருந்தால், தேவிகுளம் பீர்மேடு பறி போகுமா, திருத்தணி திருப்பதியை இழந்து நிற்போமா, என்றுகூட எண்ணிக்கொள்வார்கள்; அவ்வளவு பட்ட வர்த்தனமாகப் பேசினார், கவர்னர் பதவியில் இருந்து கொண்டே! ஆனால்...? என்ன ஆயிற்று!

இலவு காத்த கிளி என்பார்கள், அந்த உவமை போத வில்லை!! குமாரசாமிராஜா, சின்னாட்களுக்கெல்லாம் மென்று விழுங்கினார், நான் சொன்னதை மிகைப்படுத்திவிட்டார்கள் என்று மழுப்பினார், நானென்றும் வடநாடு தென்னாடு என்று பேதம் பேசுபவனல்ல என்றார், அப்படிப் பேசுபவர்கள்மீது பாய்ந்து தாக்குவேன் என்றார்! கடைசியில் நம்மீதுதான் அவர் தமது கோபத்தை திருப்ப முடிந்ததேயொழிய கோவைப் பேச்சைத் தொடர்ந்து செல்லமுடியவில்லை!!

நிதி அமைச்சர் சுப்பிரமணியனார், சில வேளைகளில், இதேபோல ஓசை எழுப்பி மகிழ்கிறார்.

தொழில் வளம் தென்னாட்டில் போதுமானதாக இல்லை; புறக்கணிக்கப்பட்டிருக்கிறது; நமக்கு இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை மிகக் குறைவு—என்றெல்லாம் அவரும், 'இடம் பொருள் ஏவல்' கவனித்து, வீரத்தை விவேகத்தை அள்ளி வீசுகிறார்! வீசிவிட்டுச் சுற்று முற்றும் பார்க்கிறார்!! டில்லி, சவுக்கு எடுக்கும் என்று தெரிந்தால், கிலி பிடிக்கிறது. உடனே, 'என்றாலும்' என்ற பதத்தைத் துணைக்கு அழைத்துக்கொண்டு, வடநாடு தென்னாடு

என்று பேசுவது மடத்தனம், போக்கிரித்தனம், பைத்யகாரத் தனம் தேசத் துரோகம் என்று சுடுசொல் வீசுகிறார் நம் மீது. இதென்ன பைத்யக்காரத் தனமாக, புத்தி கெட்டதனமாக, துடுக்குத்தனமாக, சுப்பிரமணியம் வடநாடு தென்னாடு என்ற பேதம் தொனிக்கும்படி பேசினாராமே, என்று டில்லி கேட்க, அது கேட்டு ஏற்பட்ட அச்சத்தால் அமைச்சர் தாக்கப்பட்டு, "தாசனய்யா நான்! தர்ம துரைகளே! என்னைத் தவறாக நினைத்துக்கொள்ள வேண்டாம்! இதோ எண்ணிக்கொள்ளுங்கள் 'தோப்புக்கரணம்' போடுகிறேன்—என்று டில்லியை நோக்கிக் கூறுவதாகத்தான் நமக்கு அவர் பேச்சுப் படுகிறது—நம்மை நிந்திப்பதாகக்கூடத் தெரியவில்லை.

நேர்மையில்லை, எனவே நெஞ்சிலே உறுதி இல்லை!

பற்றற்ற தன்மை இல்லை, எனவே பயமற்ற போக்குக் கொள்ள முடியவில்லை.

தெளிவும் இல்லை, துணிவும் எழவில்லை; தோத்தரித்துத் துதிபாடினால் துரைத்தனத்தில் பங்கு கிடைக்கிறதே, இதனை இழந்துவிடுவதா என்ற எண்ணம் குடைகிறது, வடநாடாவது, தென்னாடாவது பதவி, பதவி, பதவி! அது போதும்! அது இனிக்கிறது! சுவைப்போம், கிடைக்குமட்டும்!! என்ற திருப்தி ஏற்பட்டுவிடுகிறது; பதவியில்பதுங்கிக்கொள்கிறார்கள்.

இவர்களை எல்லாம் கூட விட்டுவிடு, தம்பி, விவேகத்தில் இவர் வசிஷ்டர், வைராக்யத்தில் விசுவாமித்திரர், தந்திரத்தில் சாணக்கியர், தத்துவார்த்த விவாதத்தில் குல்லூக பட்டர், என்றெல்லாம் புகழ்கிறார்கள் இராஜகோபாலாச்சாரியாரை! அவர் போக்கு என்ன?

இந்தி மொழிமீது அவர் போர் தொடுத்திருக்கிறார்! பேச்சளவில்!

ஆங்கிலத்தைக் கைவிடுவது முட்டாள்தனம் என்று பேசுகிறார்.

இது குறித்து அவர் தம் கருத்துகளைத் தெரிவிக்கும்போது முடுக்கும் மிடுக்கும் களிநடனம் புரிகின்றன! எதற்கும் அஞ்சேன்! எவருக்கும் தலைவணங்கேன்! என்று கூறிடும் கெம்பீரம் காண்கிறோம்.

ஆச்சாரியார், இந்தியைப் புகுத்தும் டில்லியின் போக்கைக் கண்டிக்கும போக்கிலே, நூற்றிலே ஒரு பாகம், நாம் பேசினால், காங்கிரஸ் நண்பர்களுக்குக் கண்கள் சிவந்துவிடும், மீசை துடிக்கும், கோபம் வெடிக்கும். அவர் 'அநியாசமாக' வடநாட்டுப் போக்கைக் கண்டித்துப் பேசுகிறார், எழுதுகிறார்.



இதென்ன பைத்யக்காரப் போக்கு!

இந்த அநீதியை நான் அனுமதியேன்;

சர்வாதிகார வெறி கூடாது.

மனம் பதறுகிறது—மானமும் போகிறது.

என்றெல்லாம், 'காரசாரமாக'ப் பேசுகிறார். அறிக்கைமேல் அறிக்கை விடுகிறார்!

பெரியார்

பி. டி. ராஜன்

ராஜா சர்.

ம. பொ. சி.

சேதுப்பிள்ளை

டாக்டர் மு. வ.

இராமசாமி சாஸ்திரியார்

கிருஷ்ணசாமி ஐயர்

வடபாதிமங்கலம்

திருச்சி விசுவநாதன்

நாவலர் நெடுஞ்செழியன்

போன்ற தலைவர்களை எல்லாம், தமிழ் வளர்ச்சியில் பேரார்வம் காட்டும் அன்பர் சுப்பையா அவர்களின் 'தமிழகம்' எனும் இல்லத்தில் கூட்டிவைத்துப் பேசி, அனைவரிடமும், 'இந்தியை அரசாங்க பாஷை' ஆக்கும் போக்கைக் கைவிட்டு விட வேண்டும், மாகாணத்துக்கு மாகாணம் தொடர்பு வைத்துக் கொள்ளவும், மாகாணத்துக்கும் மத்திய சர்க்காருக்கும் தொடர்பு வைத்துக்கொள்ளவும் ஆங்கிலம்தான் தகுதியானது, வசதியானது, என்ற அறிக்கையில் கையொப்பமிடச் செய்தார். நானும் உடனிருந்தேன்.

இவ்வளவு செய்தவர் யார்? கட்டாய இந்தியை முதல் அமைச்சராக இருந்தபோது புகுத்திய ஆச்சாரியார்!!

கட்டாய இந்தியைப் புகுத்தி, அதை எதிர்த்ததற்காகப் பெரியாரைப் பெல்லாரிச் சிறையில் வாட்டியவரும் அவரே!

இந்தியைப் புகுத்தி தமிழரை நாசமாக்காதீர்கள், ஆங்கிலமே இருக்கட்டும், என்ற தம்முடைய திட்டத்துக்குப் பெரியாருடைய கையொப்பத்தை வாங்கியரும் அவரேதான்!!

ஆச்சாரியார் எப்படிப்பட்ட குணத்தவர் என்பதற்காக இதைக் கூறவில்லை.

கட்டாய இந்தியைப் புகுத்தி, பெரியாரையும் ஆயிரத்துக்கு மேற்பட்ட தொண்டர்களையும், சிறையில் போட்டு வாட்டி வதைத்து, தாலமுத்து நடராசன் எனும் இரு இளைஞர்களின் உயிரையும் குடித்து, கையில் கிடைத்ததைக் கொண்டு அடிப்பேன்! என்று கொக்கரித்துக் கோலோச்சிய ஆச்சாரியார், எங்களை எல்லாம் அழைத்து, அனைவரும் கூடி ஆங்கிலம் கேட்போம் வாரீர் என்று பேசினாரே, இது எத்தகைய விந்தை, எங்களுக்கு எத்துணை பெரிய வெற்றி, என்பது பற்றிப் பேசிட அல்ல, இதனைக் கூறுவது.

இந்தி ஆதிக்கம் புகுத்தப்பட்டபோது, எதிர்த்திட இவர் முன்வரவில்லை; மனம் இல்லை; மாறாக இவரே அந்த ஆதிக்கத்தைப் புகுத்த முனைந்து நின்றார்; எதிர்த்தோரை அடக்கு முறை கொண்டு தாக்கினார்.

காலங்கடந்து கருத்து மலர்ந்தாலென்ன, கருத்து மலர்ந்தது என்பதிலே மகிழத் தானே வேண்டும், என்று கேட்பாய், தம்பி நான் அவர் ஏன் அப்போது அப்படிச் செய்தார், இப்போது ஏன் இவ்விதம் செய்கிறார் என்று கேட்கவில்லை; நான் சொல்வது, இப்போதும் அவர், செய்யவேண்டியதை செய்ய வேண்டிய முறைப்படி செய்யவில்லை என்கிறேன்!

இப்போதும் அவர், காங்கிரஸ் மேலிடத்தில், இதுபற்றி வாதாட, போராட, காங்கிரஸ் இதற்கு இணங்க மறுத்தால், மக்களைத் திரட்டி, அந்தப் போக்கை எதிர்த்திட முன்வர வில்லை!

அதனால் ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகளைத் தாங்கிக் கொள்ளும் துணிவு பெற மறுக்கிறார்!

அன்று அனைவரையும் கூட்டிவைத்து, அருமையாக விளக்கமளித்தார்!

விளக்கத்தில், அருமைப்பாடு இருந்தது. ஆனால் அதற்குத் தேவை இருந்ததா என்றால்; இல்லை என்பதை, அங்கு கூடியிருந்தோரின் பெயர்ப்பட்டியலைப் பார்த்தாலே புரிந்துகொள்ளலாம்.



இந்த நாட்டை ஆள்வது யார்? இராமசாமிப் பெரியாரா? நானா?—என்று ஆச்சாரியார் ஆத்திரத்துடன் கேட்க வேண்டிய அளவுக்கு வீரமான அறப்போர் நடத்திய பெரியாருக்கு, ஆச்சாரியார் இந்தியால் விளையும் கேடுபற்றி விளக்கவேண்டிய அவசியம், என்ன வந்தது?

தமிழ் மொழியின் தொன்மைபற்றி டாக்டர் மு. வ. வுக்கும், பேராசிரியர் சேதுப்பிள்ளைக்கும் இவர் எடுத்துச் சொல்வதா!

ஏதோ, அவர் விளக்கம் அளித்தார்—கேட்டுக்கொண்டோம், இந்த நிலைக்கு அவர் வந்து சேர்ந்தாரே என்ற மகிழ்ச்சியுடன்.

அதற்குப் பிறகு; அவர் வந்து சேர்ந்தாரே என்ற மகிழ்ச்சியுடன்.

அதற்குப் பிறகு; அவர் செய்தது என்ன?

கட்டுரை எழுதுகிறார்—அழகான கட்டுரைதான்—ஆணித்திறமான வாதங்கள் காண்கிறோம்—இது மேதாவித்தனம்; இல்லை என்பார் இல்லை! ஆனால் இது போதாதே!

நயாபைசா அல்லவா நடமாடுகிறது!!

ஆச்சாரியார், இந்தப் போக்கைக் கைவிட்டாக வேண்டும் என்று, நேரு பெருமகனாருக்கு, இறுதி எச்சரிக்கை ஏன்விடக் கூடாது? ஏன் தமது ஒப்பற்ற நண்பர் பெரியாரிடம் கலந்துபேசி, இந்தி ஆதிகக ஒழிப்புக்கான அறப்போர் தீட்டி நடத்தக் கூடாது? செய்கிறாரா? இல்லை! செய்வாரா? அவரா! கனவிலே கூட அப்படி ஒரு காட்சியைக் காண முடியாது.

ஆனால், பேசுகிறார், எழுதுகிறார், இந்தி ஆதிக்கம் ஆபத்தானது, அக்ரமம், அநீதி என்று! அந்தப் போக்கை எதிர்த்து ஒழித்தாக வேண்டும் என்று எக்காளமிடுகிறார், ஆனால் எதிர்ப்பு நடத்த மறுக்கிறார்.

அனுமந்தய்யாவும், சுப்ரமணியனாரும், குமாரசாமி ராஜாவும் வேறு பலரும், எப்படியோ, அப்படியேதான் ஆச்சாரியாரும் இருக்கிறார் இவர்கள் யாவரும் வடநாடு, மெள்ள மெள்ள தன் ஆதிக்கப் பிடியைப் பலப்படுத்திக் கொண்டு வருவதை உணருகிறார்கள். ஓரோர் சமயம் வெளியிலே கொட்டியும் காட்டுகிறார்கள். ஆனால், துணிந்தும் தொடர்ந்தும் பணியாற்றி, வடநாட்டு ஆதிக்கத்தை ஒழித்

திடும் விடுதலைப் போர் நடத்த அஞ்சுகிறார்கள், அந்த அச்சத்துடன், காங்கிரஸ் மேலிடத்தைப் பகைத்துக்கொள்ளாமலிருந்தால், பசையும் ருசியும் இருக்கிறது என்பதைச் சொந்த அனுபவ மூலம் தெரிந்துகொண்டிருக்கிறார்கள், எனவே ஆசையும் அவர்களை ஆட்டிப்படைக்கிறது.

எனவேதான், தம்பி, ஆசைக்கும் அச்சத்துக்கும் ஆட்படவேண்டிய நிலையில் இல்லாத நாம், துணிந்து, தூய உள்ளத்துடன், நமது வசதிக்கும், நமக்கு மக்கள் அளித்திடும் வாய்ப்புக்கும் ஏற்ற முறையில், தாயகத்தின் தன் மானம் காத்திடும் பணியில் ஈடுபட்டு வருகிறோம். நாம், தகுதியற்றவர்கள், என்று கூறுவாருளர். அந்தச் சுடுசொல், நமக்குக் கோபமூட்டக்கூட இல்லை—அந்தக் கட்டத்தையும் கடந்துவிட்டோம், மேலும் தகுதி பெற வேண்டும் என்ற ஆர்வத்தை நமக்குள் தூண்டி விடவே, அந்தத் தூற்றலெல்லாம் பயன்பட்டு வருகிறது.

பெரும் பெரும் தலைவர்கள், துணிவுபெறாமல் தடுமாறிடக் காண்கிறோம்; டில்லியை எதிர்த்து நிற்க முடியாது என்று எண்ணி மருண்டிடக் காண்கிறோம்; கண்ட பிறகும், நாம் நமது பணியினைக் கலங்காது செய்து வருகிறோம்.

அவர்களின் தடுமாற்றத்துக்கு உள்ள காரணம் புரிகிறது. நாம் மேற்கொண்டுள்ள பணியின் தூய்மையும், தெரிகிறது.

நாம், அவ்வளவு பெரிய பணிக்கு ஏற்றவர்கள்தானா என்ற ஐயப்பாடுகூட எழக்கூடும்—விடுதலைப் போர் சாமான்யமானதல்ல.

என்றாலும், நம்பிக்கையுடன் பணியாற்றுகிறோம், மேதைகள் மருண்டோடுகிறார்கள்; நாமாவது, இந்த நற்காரியத்துக்கு நம்மை ஒப்படைத்துவிடுவோம் என்ற எண்ணத்துடன் பணியாற்றி வருகிறோம்.

அந்தப் பணியிலே ஒரு சிறு பகுதி—சுவையும் சூடும் மிகுந்த பகுதி—தேர்தல்.

ஆய்வுக் குழுவினர், தமிழகமெங்கும் சென்று, தோழர்களைக் கண்டு பேசிவிட்டு வருகின்றனர்—அவர்களிடம், நான் கேட்டுப் பெறும் கருத்துரைகளை, தம்பி, உன்னிடம் கூறி மகிழ்ந்திட உள்ளம் துடிக்கிறது—இப்போது உறக்கம் மேலிடுகிறது, மணி விடியற்காலை நாலு.

அன்பன்,

அண்ணாதுரை

28–10–56

கடிதம் : 72

# வாழ்க தமிழகம்!
# வருக திராவிடம்!

*தமிழக அமைப்பு—நேரு பண்டிதரின் திறமை—பாரதத்தில் தமிழ்நாடு.*

தம்பி!

தமிழகம் திருநாள் கொண்டாடுகிறது—தாயகம் விழாக்கோலம் பூண்டிருக்கிறது—திருநாட்டைப் பெற்றோம், இனி இதன் ஏற்றம் வளரத்தக்க வகையிலே பணிபுரிதலே நமது தலையாய கடன் என்று, தமிழ்ப் பெருங்குடி மக்களெல்லாம் உறுதிகொண்டிடும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது -கொடியும், படையும், முரசும் அரசின் முறையும் வேறு வேறு எனினும், எல்லா முற்போக்குக் கட்சிகளும், தாயகத்தின் திருவும் திறனும் செழித்திடப் பணியாற்ற வேண்டும் என்பதிலே, முனைந்து நிற்கின்றன—புதிய தமிழகம் கண்டோம், இது புதியதோர் உலகிலே உரிய இடம் பெற்றுத் திகழ்ந்திட வேண்டும்—நாம் அனைவரும் அதற்கான வழியிலே தொண்டாற்றும் திறன் பெறல் வேண்டும் என்ற ஆர்வம் மலர்ந்திருக்கிறது.

நவம்பர் திங்கள் முதல் நாள், புதிய தமிழகம் உருவாகிறது. ஓர் அரை நூற்றாண்டுக் காலமாக, அரசியல் தெளிவும் நாட்டுப் பற்றும் கொண்டோரனைவரும், நடத்தி வந்த

இலட்சியப் பயணம், தடைபல கடந்து படை பலவென்று, ஆயாச அடவிகளையும். சஞ்சலச் சரிவுகளையும் கடந்து, வெற்றிக் கதிரொளி காணும் இடம் கொண்டுவந்து சேர்த்திருக்கிறது.

இன்று நம்முன் தோன்றி, நம்மை எலாம் மகிழ்விக்கும் இத்தாயகம், புதியதோர் அமைப்பு அன்று—ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே இந்த மாநில முழுதும், மதிப்புப் பெற்றிருந்த மணித்திருநாடாகும். இடைக் காலத்திலே, இடரும் இடியும் தாக்கின, இழிநிலைக்கு இழுத்துச் சென்று அழுத்திவைக்கப்பட்டிருந்தது; இன்று கட்டுண்ட நிலை போயிற்று, தளைகள் நொருங்கின, தமிழகம் புதிய கோலம் காட்டி நம்மை மகிழ்விக்கிறது.

மக்களாட்சியின் மாண்பும் பயனும் மிகுதியும் மொழிவழி அரசு மூலமே கிட்டும் என்று அரை நூற்றாண்டாகப் பேசி வந்தனர் பேரறிவாளர், போரிட்டனர் ஆற்றல் மிக்கோர், அந்த உயரிய குறிக்கோளை அழித்துவிட முனைந்தனர் ஆணவக்காரர், எனினும், எல்லா இடையூறுகளையும் காலச் சம்மட்டி நொறுக்கித் தூளாக்கிற்று. கருத்துக்கு விருந்தாய் அமைகிறது தமிழகம்.

புதிய தமிழகம்—ஏதேதோ புதுமைகள் நிகழ்ந்திடும் என்று எதிர்பார்த்து வரவேற்கப்பட வேண்டிய ஒன்றன்று—அது ஆட்சி அலுவலைச் செம்மையுடையதாகச் செய்விக்கும் ஒரு வசதி தரும் ஏற்பாடு—வேறில்லை—என்று எண்ணுவோர், புதிய தமிழகம் கண்டு, மக்கள் விழாக்கொண்டாடுவதன் கருத்து யாது? அவர்தம் அகமும் முகமும் மலர்ந்திடும் காரணம் என்ன? என்பதறியாது கிடக்கின்றனர். அட்லிக்கும் ஸ்டீவன்சனுக்கும், அபிசீனிய மன்னருக்கும், அயிசனவருக்கும், இது, வெறும் ஏற்பாடுதான்—அரசியல் அலுவலுக்காகச் செய்து கொள்ளப்படும் நிர்வாக அமைப்புத்தான்! அவர்களால், அதற்குமேல் இது குறித்து உணர்ந்திடமுடியாது—அவர்கள் தமிழர் அல்லர் என்ற காரணத்தால். தமிழர்க்கோ, தமிழ்நாடு புதிய அமைப்பாகக் கிடைப்பது, மனஎழுச்சி அளித்திடுவதாகும். முத்தம் வெறும் 'இச்சொலி' தானே, இதிலென்ன சுவை காண்கிறாய் என்று, தான் பெற்றெடுத்த பாலகனை உச்சிமோந்து முத்தமிடும் தாயிடம் கேட்பார் உண்டா! தமிழர், தமிழகம் கண்டோம் என்று களிநடமாடி, விழாக்கொண்டாடும்போது, இதிலே என்ன பெரிய சுவை கண்டுவிட்டீர்கள், முன்பு இருந்த ராஜ்ய அமைப்பு நிர்வாக காரியத்துக்குக் குந்தகம் விளைவிப்பதாக இருந்தது, அதன் பொருட்டு, இப்போது 'ராஜ்ய சீரமைப்பு' செய்துள்ளோம்,



இதனாலேயே தமிழர், ஆந்திரர், கேரளத்தார், கருநாடகத்தார் என்றெல்லாம் கருத்திலே உணர்ச்சிகளை வளரவிட்டுக் கொள்ளாதீர்கள்; அனைவரும் இந்தியர், அது நினைவிலிருக்கட்டும், யாவரும் பாரத நாட்டினர், அதனை மறந்துவிடாதீர்கள் என்று நேரு பண்டிதர்கூடப் பேசுகிறார். அவருடைய மனது குளிர நடந்து கொள்வதுதான் இன்றைய அரசியல் சூழ்நிலையில் பலன் அளிக்கும் என்று எண்ணும் பலரும், அது போன்றே பேசிடக் கேட்கிறோம்.

தமிழருக்குத் தமிழகம் அமைகிறது என்பதனால் ஏற்படும் எழுச்சி, எங்கே, ஊட்டிவிடப்பட்டிருக்கும் பாரதம்—இந்தியர்—என்பன போன்ற போலித் தேசீயத்தைத் தேய்த்து, மாய்த்து விடுமோ, புதிய தமிழகம் என்று பூரிப்புடன் பேசத்தொடங்கி, தாயகம் என்று பெருமையுடன் பேசத் தொடங்கி விடுவார்களோ என்ற அச்சம், எல்லாத் தேசீய இனங்களையும் ஒரே பட்டியில் அடைத்து, எதேச்சாதிகாரத்தால் ஆட்டிப்படைக்க வேண்டும் என்று திட்டமிட்டிருப்போருக்கு இருக்கத்தான் செய்கிறது. எனவேதான் அவர்கள், அட்லிபோலவும், அபிசீனிய மன்னர் போலவும், இதெல்லாம் நிர்வாக ஏற்பாடு என்று கூறுகின்றனர். மாலை விலை ஆறணா என்பது மட்டுந்தான், மலர் விற்போனால் அறிய முடிந்தது—அதனை மங்கை நல்லாளுக்காகப் பெறுகிற மணவாளன் அல்லவா அறிவான், மாலையைக் கண்டதும் கோலமயில் சாயலாள், குமுதவிழிப் பாவையாள், பாகு மொழியாள், அடையும் மகிழ்ச்சி எத்துணை சுவையுள்ளது என்பதனை. தமிழகம் புதிய அமைப்பாகிறது என்பதிலே காணக்கிடைக்கும் எழுச்சியைத் தமிழர் மட்டுமே முழுதும் பெறமுடியும்—மற்றையோர் முயற்சித்தும் பலன் இல்லை. ஓரளவுக்கு இந்த இயற்கையை அறிய முடிந்ததாலேயே, நேருபண்டிதர், காந்தியார் காலத்திலே வாக்களிக்கப்பட்ட திட்டமாகிய மொழிவழி அரசு பற்றி முகத்தைச் சுளித்தபடி பேசவும், அது என்ன பித்தம் என்று கேலி செய்யவும், அது வெறி அளவுக்குச் சென்றுவிடாமற் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று எச்சரிக்கை ஏவவும் முற்பட்டார். உலக அரங்கிலே காணக்கிடக்கும் பிரச்சினைகளை அறிந்தவர், உயர்நிலையில் அமர்ந்திருக்கும் நேருபண்டிதர். தேசீய இன எழுச்சி வரலாறுகளைத் தெரிந்தவர். அழுத்திவைக்கப்பட்ட தேசீய எழுச்சி, என்றேனும் ஓர் நாள் வெடித்துக் கிளம்பிடும் என்ற பேருண்மையை அறிந்தவர். பல தேசீய இனங்களை தலைதூக்கவிடாதபடி அடக்கி ஒடுக்கி ஆட்சி நடாத்தியோர் இறுதியில், என்ன கதியாயினர் என்பதைப் படித்திருக்கிறார். தேசீய இன எழுச்சியை அலட்சியப் படுத்தும், அறிய

மறுக்கும், அப்பாவிகள் பட்டியலில் அவர் பெயரை அறிவிலியும் சேர்த்திடத் துணியமாட்டான். அவர் காண்கிறார், மேலை நாடுகளிலே, காலம் கிடைத்ததும், புயலெனக் கிளம்பிடும் தேசீய இன எழுச்சிகளை. எனவே, நேருபண்டிதர், 'மொழி வழி அரசு' எனும் திட்டத்தை அமுலாக்குவதில், தாமதம், தயக்கம் காட்டினார், காலத்தை ஓட்டினார், பிறகு கட்டுக்கு அடங்காத நிலைகிளம்பும் என்பதற்கான குறிதோன்றியதும், மொழிவழி அரசு எனும் திட்டத்தை மூளியாக்கியே தந்திருக்கிறார். மூளியாக்கப்பட்ட நிலையிலும், மொழிவழி அரசு என்பது, புதியதோர் நம்பிக்கையை, ஊட்டும் என்பதையும் அறிந்து, பாரதத்தை மறவாதீர்! இந்தியர் என்பதை நினைவிலே கொள்ளுங்கள்! இதெல்லாம் வெறும் நிர்வாக ஏற்பாடு! என்று பன்னிப் பன்னிக் கூறுகிறார்—அவருக்குப் பக்கம் நின்று அதே பல்லவியைப் பாடப் பல கட்சிகள் உள்ளன.

வாழிய செந்தமிழ்
வாழ்க நற்றமிழர்
வாழிய பாரதமணித் திருநாடு!

என்று அவர்கள் கீதம் இசைப்பது அனைவரும் வாழவேண்டும் என்ற நல்லறத்தைக் கூறுவதற்காக மட்டுமல்ல—தமிழர்காள் தமிழகம் பெறுகிறீர்கள்! புதிய அமைப்பு! விழாக் கொண்டாடுகிறீர்கள்! உற்சாகம் பெறுகிறீர்கள்! அதுவரையில் சரி—ஆனால் இந்த உற்சாகத்தை உறுதுணையாக்கிக்கொண்டு தனி அரசு என்று பேச ஆரம்பித்துவிடாதீர்கள்—பாரதமணித் திருநாட்டை வாழ்த்துங்கள்!—என்று கூறி, கட்டிவிடப்பட்டிருக்கும் அந்தப் போலித் தேசியத்தைக் காப்பாற்றும் நோக்கத்துடனும்தான், பாடுகின்றனர். பாரத மணித்திருநாடு என்று பாடுவதும், சொந்தம் கொண்டாடுவதும, பரந்த மனப்பான்மை, பண்புக்கு அறிகுறி; தமிழ்நாடு என்று மட்டும் கூறிக் கிடப்பது குறுகிய மனப்பான்மை; கிணற்றுத் தவளைப்போக்கு, அறிவீரா? என்று வாதாடுவோர் உளர்! தம்பி! விரிந்து பரந்த மனப்பான்மையைத் தமிழருக்கு எவரும் புதிதாகக் கற்றுத்தர வேண்டியதில்லை! பாரில் இந்தப் பண்பு பேச்சளவுக்கேனும் வளருவதற்குப் பன்னெடுங் காலத்துக்கு முன்பே 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்று பாட்டு மொழியிற் கூறிய பண்பாளர் தமிழர்! எனவே, பரந்த மனப்பான்மையைத் தமிழர்க்கு அளித்திட ஆசான்கள் தேவை இல்லை—தமிழருக்கு அந்தப் பாடத்தைக் காட்டி, ஓர் பேரரசுக்குக் குற்றேவல் புரியும் எடுபிடியாக்கிடவே முனைகின்றனர் என்று ஐயப்பாட்டுக் கிடமின்றித் தெரிகின்றபோது, எங்ஙனம் அதனை நீதிநெறி விளக்கமென்று கொள்ள முடியும்.



போராற்றலால் பெற்ற வெற்றிகளைப் பேரரசு அமைத்திடப் பயன்படுத்தியவர்களிலே பலரும், தமது இருப்புக் கரத்தின் மூலமே, அந்தப் பேரரசுகளை முடிந்த வரையில் கட்டிக் காத்தனர்—பிறகோ, தேசீய இன எழுச்சி சூறாவளியாகி, சாம்ராஜ்யங்களைச் சுக்கு நூறாக்கி விட்டிருக்கிறது.

கிரேக்க சாம்ராஜ்யம், ரோமானிய சாம்ராஜ்யம், உதுமானிய சாம்ராஜ்யம் என்பவைகளெல்லாம் இன்று பாடப் புத்தகங்கள்—படித்து அதுபோல் சாம்ராஜ்யங்கள் கட்டப் பயிற்சிபெற அல்ல—பேரரசு வேண்டும் என்று தோன்றும் மன அரிப்பை அடக்கிக் கொள்வதற்கான பாடம் பல பெற!

நேரு பண்டிதர் இந்த உண்மைகளை நன்கு அறிவார்—அறிந்த காரணத்தாலேயே, அவர், மிகச் சாமர்த்தியமாக நடந்துகொள்வதாக எண்ணிக் கொண்டு, பல்வேறு முறைகளாலும், மறைமுக வழிகளாலும், பாரதம் எனும் பேரரசுக்குள்ளே அடைத்துவைக்கப்பட்டிருக்கும் பல்வேறு தேசீய இனங்களையும், தத்தமது தேசியத்தன்மையை, நினைப்பை இழந்துவிடச் செய்யப் பார்க்கிறார். இதனை எதேச்சாதிகாரியின் குரலிலே அவர் கூறவில்லை — வரலாறு தெரிந்திருப்பதால்—இனிக்கப் பேசினால் இளித்துக் கிடப்பர் என்று திட்டமிட்டுக் காரியமாற்றி வருகிறார்! கேட்போருக்கு மன மயக்கம் ஏற்படச் செய்யும் விதமான பிரசாரம் நடத்தி, இந்தியா—இந்தியர்—என்பன போன்ற கற்பனைகளைக் கவர்ச்சிகரமானதாக்கிக் காட்டி, போலித் தேசீய போதையை ஊட்டி, தமிழர் போன்ற தேசீய இனத்தவர்களை, தாசர்களாக்கிடப் பார்க்கிறார். மொழி, கலை, ஆகியவற்றால் தனித் தன்மை பெற்றிருப்பதை அழித்திட இந்தியை ஏவுகிறார்...சல்லாபி வடிவத்தில்!! இந்தியை, அஞ்சல் நிலையத்திலும், அங்காடி அலுவலுக்கும், அரசாங்க காரியத்துக்கும், புகுத்தும் நேரத்திலேயும், தமிழ் என்ன சாமான்யமானதா, உயர் தனிச் செம்மொழி என்று மொழி வல்லுநர் பலர் கூறக் கேட்டுள்ளேன், இந்தி மொழி தமிழ் கொலுவிருக்கும் இடத்தருகேயும் வரத் தகுதியற்றது, என்றாலும், வசதிக்காக, நிர்வாக ஏற்பாட்டுக்காக, பாரதத்தின் ஐக்யத்துக்காக இந்தியைத் தேசீய மொழியாகக் கொள்ளத்தான் வேண்டும் என்று பேசுகிறார்.

கிழப்புலி பொன்காப்பு காட்டிய கதை படிக்கிறார்களல்லவா, சிறார்கள்; அதுபோல, எதேச்சாதிகாரம் கிழடு தட்டிய பருவத்திலே இவ்விதமான போக்குத்தான் கொள்ளும்.

நேரு பண்டிதர் இந்த வகையிலே, தம்பி, மிகத் திறமையாகப் பணியாற்றி வருகிறார்—என்றாலும் அவருக்கும், உள்ளூரத் தெரிகிறது, எத்தனை முறைகளைப் புகுத்தினாலும் தேசிய உணர்ச்சி அழிந்து படாது என்ற உண்மை. மொழி வழி அரசு எனும் திட்டம், மெத்தச் சிரமப்பட்டுத் தாம் தயாரிக்கும் போலித் தேசியத்தை நாளா வட்டத்திலே நைந்துபோகச் செய்துவிடும் என்று அவருக்குப் புரிகிறது. எனவேதான் அவர், மொழி அரசு என்ற பிற்போக்குத் திட்டம் கூடாது, ஆகாது என்று அடிக்கடி பேசுகிறார். இதோ, புதிய தமிழக அமைப்புக்கு, விழா நடத்தப்படுகிறதே, இதன் உட்பொருள் என்ன? கம்யூனிஸ்டுக்கு இந்த விழா மகிழ்ச்சி தருவானேன்? பொது உடைமை பூத்தாலன்றோ விழா, கம்யூனிஸ்டு சித்தாந்தப் படி! புதிய தமிழக அமைப்பினைத் திருநாள் ஆக்கி மகிழக் காரணம்? இதனை அறியாயோ, பேதாய்! பேதாய்! புதிய தமிழக அமைப்பு, பொது உடைமை அடைவதற்கான பாதையிலே ஓர் கட்டமாக்கும்! என்று கடிந்துரைப்பர் கம்யூனிஸ்டுகள்! தம்பி! அவர்கள் கோரும் கம்யூனிசம், பாரதம் முழுவதற்கும்—எனவே, அதிலே, தமிழகம் என்று ஓர் எல்லை தேவை கூட இல்லை! எனினும் எல்லை கிடைத்து, புதிய தமிழகம் எனும் அமைப்பு ஏற்பட்டதும் அவர்கள் மகிழத்தான் செய்கிறார்கள் - மகிழ வாரீர் என்று மக்களையே கூட அழைக்கிறார்கள்! ஏன்? அவர்களையும் அறியாமல் அவர்களை ஆட்கொண்டிருக்கும், தேசிய இன உணர்ச்சி என்பதன்றி வேறென்ன! அவர்களிடம் கூறாதே, தம்பி. நாம் கூறுவதனாலேயே அவர்களுக்கு அது கசக்கும், அவர்கள் போலந்து ஹங்கேரி இப்படிப்பட்ட இடங்களிலே வெடித்து, சிதறி, இங்கு வந்து துண்டு துணுக்குகள் வீழ்ந்த பிறகுதான், இவைகளை உண்மைகள் என்று மதிப்பளிக்க முன் வருவார்கள். நாம் சொல்லியா ஏற்றுக் கொள்வார்கள்!

புதிய தமிழக அமைப்பு, எல்லாக் கட்சியினருக்கும் மகிழ்ச்சி அளிக்கிறது.

ஆச்சாரியார் மட்டும் பாபம், துக்கமாக இருக்கிறார்!

ஐயோ! மெலிந்துவிட்டதே! சிறியதாகிவிட்டதே! சென்னை ராஜ்யம் என்றிருந்தபோது, எவ்வளவோ பெரிதாக இருந்தது—இப்போது ஆந்திரம், மலையாளம், இவை பிரிந்த நிலையில், தமிழ்நாடு என்பது சிறிய அளவாகி விட்டது—என்று வருத்தப்படுகிறார்:



அவருக்கு இது விழாவாக இல்லை; விசாரப்படுகிறார்!

காரணம் காட்டாமலிருக்கிறாரா? அவராலா, முடியாது? காரணம் தருகிறார்!

பாரதத்தில். தமிழ்நாடு எனும் அமைப்பு மிகச் சிறிய ராஜ்யம்—அதனால் அதற்குச் செல்வாக்கு மத்திய சர்க்காரில் இருக்காது—பாரதத்தில் உள்ள மற்ற ராஜ்யங்கள் அளவில் பெரிது, அவைகளின் செல்வாக்கு மிகுதியாக இருக்கும் என்று ஆச்சாரியார் காரணம் காட்டுகிறார்.

ஆச்சாரியாரும் நமது கம்யூனிஸ்டு நண்பர்கள் போலவே, 'பாரதம்' எனும் திட்டத்தை ஏற்றுக்கொண்டுதான் பேசுகிறார்.

பாரதத்தில் ஓர் அங்கமாக, தமிழ்நாடு இருக்கிறது, இதன் பலனாக, எதிர்காலம் ஒளியுள்ளதாகும் என்பது கம்யூனிஸ்டு களிப்புடன் காட்டும் வாதம்.

கவலையுடன் ஆச்சாரியார் கூறுவது, பாரதத்தில் ஓர் அங்கமாக அமையும சென்னை ராஜ்யம், அளவில் மிகச் சிறியது, எனவே அதற்கு மத்திய சர்க்காரில் மதிப்பும் செல்வாக்கும் கிடைக்காது, என்பதாகும்.

சரி, அண்ணா! காமராஜர் என்ன கருதுகிறார் என்று என்னைக் கேட்டுவிடாதே தம்பி. நான் இப்போது, சிந்தித்துக் கருத்தளிக்கக் கூடியவர்களைப்பற்றிக் கூறுகிறேன்; எஜமானர்களின் உத்தரவை நிறைவேற்றி வைக்கும் ஊழியம் செய்து வரும் சம்பளக்காரர்களைப்பற்றி அல்ல.

காமராஜரைத்தான் நாடு நன்றாக அறிந்துகொண்டு வருகிறதே! குளமாவது, மேடாவது! என்பவர்தானே, அவர்!!

ஏதோ, நேரு பெருமகனார் சம்மதமளித்ததால், குமரி கிடைத்தது! 'இல்லை' என்று டில்லி கூறிவிட்டிருந்தால் இவர் என்ன சீறிப் போரிட்டா பெற்றிருப்பார்! குமரியாவது கிழவியாவது, உள்ளது போதும், போ, போ! என்றல்லவா பேசுவார்! இனி சிந்தித்துக் கருத்தளித்திடுவோர் குறித்துக் கவனிப்போம் வா, தம்பி, நமக்கேன், நாடாள்வதால் நாலும் செய்யலாம் என்ற போக்குடன் உள்ளவர் பற்றிய கவலை.

பாரதம் என்ற பேரரசு இருக்கும்—புதிய தமிழகம் அதிலே ஓர் ராஜ்யம்—என்ற ஏற்பாடு, நிரந்தரமாக இருக்க வேண்டும் என்ற கருத்துடன்தான், கம்யூனிஸ்டும் ஆச்சாரியாரும் பேசுகின்றனர்.

தமிழ்நாடு தனி அரசு ஆகவேண்டும் என்று சொன்னலே அவர்களுக்குத் தலை சுற்றும்!!

ஆச்சாரியார், சென்னை ராஜ்யம் அளவில் சிறியதாகும்; எனவே மத்திய சர்க்காரிலே செல்வாக்குக் கிடைக்காது என்று கூறுகிருர்—இதன் அடிப்படை உண்மை என்ன?

மத்ய சர்க்கார் நீதியாக நடக்காது

மத்ய சர்க்கார் பெரிய ராஜ்யத்துக்குத்தான் ஆதரவு தரும்.

என்ற கருத்து, வலுத்தவன் இளைத்தவனைக் கொடுமை செய்வான், பணக்காரன் ஏழையை அடிமை கொள்வான், என்பதுபோல இல்லையா! மத்ய சர்க்கார் என்ற அமைப்பிலே இருந்துகொண்டு நாம் செல்வாக்குப் பெறவேண்டுமானல், அதற்கு ஏற்ற கெம்பீரம் இருக்க வேண்டுமாம்!! இதிலிருந்தே தெரியவில்லையா, மத்திய சர்க்காருடைய போக்கின் இலட்சணம்!!

ஏதேதோ சொல்லவேண்டுமென்று எண்ணிக்கொண்டு, எதைச் சொன்னல் தாட்சணியக் குறைவு ஏற்பட்டுவிடுமோ என்று பயந்து பயந்து, ஆச்சாரியார் பேசுகிருர். மத்திய சர்க்கார் என்ற திட்டத்தை ஏற்றுக் கொள்ளும்போது, அதிலே சிறிய ராஜ்யமென்ன—பெரிய ராஜ்யமென்ன!! செல்வாக்கும் மதிப்பும் பெறவேண்டிய அவசியம் என்ன வந்தது மத்திய சர்க்கார், நீதியாக, நேர்மையாக நடக்காது என்ற சந்தேகம் கொள்வானேன்! அந்தச் சந்தேகத்துக்கு இடமிருக்கிறபோது, மத்திய சர்க்கார் என்ற திட்டத்துக்கு ஒப்பம் அளிப்பானேன்! ஆச்சாரியார் இதற்குப் பதிலளிக்கக் கடமைப்பட்டவர்—கிலியை அவரே கிளப்பி இருப்பதனல்.

கம்யூனிஸ்டுகளுக்கு இந்த அச்சம் இல்லை—அவர்கள் உத்தரப்பிரதேசத்தைவிடச் சென்னைப் பிரதேசம் அளவில் சிறியதாயினும், அதன் காரணமாக, மத்திய சர்க்கார் பாரபட்சமாக நடந்துகொள்ளாது—என்று தைரியமளிக்கிருர்கள்.

தம்பி! நாமோ, இருவரும் அஞ்சிடும் திட்டம் கூறுகிருேம்—எதற்காக, மத்திய சர்க்காரின் ஆதிக்கத்தில், தமிழ் அரசை உட்படுத்துகிறீர்கள்—பிறகு, அங்கு நீதி கிடைக்குமா கிடைக்காதா என்று விவாதம் நடத்திக் கொண்டு அல்லற் படுவானேன்—தனி அரசாக இருந்தால் என்ன? என்று கேட்கிருேம். உடனே, மாறுபாடானகருத்துக்களைவிநியோகித்துக் கொண்டிருக்கும் ஆச்சாரியாரும் கம்யூனிஸ்டும்



கைகோர்த்துக் கொண்டு, நம் எதிரே வந்து நிற்கிருர்கள்—தனி நாடா!! ஆகாது! ஆகாது! கூடாது! கூடாது!! பாரத் மாதாகீ ஜே!! என்று கோஷமிடுகிருர்கள்.

தமிழ்நாடு—அளவில் சிறியது என்று ஆச்சாரியார் கூறும்போது, கம்யூனிஸ்டுகள், அளவுபற்றி என்ன கவலை, அதற்காக அச்சம் கொள்வானேன் என்று பேசுகிருர்கள்!

தமிழ்நாடு கூட அல்ல, தமிழ் நாடு, ஆந்திரம், கேரளம், கருநாடகம்—இந்த நான்கும் மொழிவழி அரசுகளாக இருக்கும் நிலையில், ஓர் கூட்டாட்சி அமைத்துக்கொண்டு, பாரதப் பிணைப்பை நீக்கிக்கொண்டால் என்னய்யா, என்று நாம் கேட்கும் போதோ, ஆச்சாரியாரும், அவரை நோக்கி அஞ்சாதீர் என்று கூறிய கம்யூனிஸ்டும் கூடிக்கொண்டுவந்து நம்மைக் குட்டியபடி, ஏடா! மூடா! சிறுசிறு நாடுகளாகப் பிரித்தால் சீரழிவுதானே ஏற்படும், என்று குடைகிருர்கள்.

தம்பி! இவர்தம் போக்கை என்னென்பது!

ஆச்சாரியார் கொண்டுள்ள அச்சத்தைப் போக்கிக் கொள்ள அவர் காட்டும் பரிகாரம், தட்சிணப்பிரதேசம். அது கலவை! தமிழகம், ஆந்திரம், கேரளம், கருநாடகம் எனும் மொழி வழி அரசுகள் கூடாது, கிடையாது—இவையாவும் ஓரே கொப்பரையில் போட்டுக் கொதிக்க வைத்துக் குழம்பாக்கி, ஒரு வார்ப்படமாக்க வேண்டுமாம்—தட்சிணப் பிரதேசமென்று—இதை வார்த்தெடுத்து, டில்லியிடம் காட்டி 'முத்திரை' பொறித்துக்கொள்ள வேண்டுமாம்—இது ஆச்சாரியாரின் அவியல்!!

கம்யூனிஸ்டு திட்டம் மொழிவழி அரசு இருக்கும்; ஆனல் அது டில்லி காட்டும் வழி நடக்கும் என்பதாகும்.

நாம் கூறுவது, மொழிவழி அரசு அமையட்டும்; பிறகு, ஓர் திராவிடக் கூட்டாட்சி அமைத்துக்கொண்டு, டில்லியின் பிடியிலிருந்து விலகுவோம் என்பது!

கூட்டாட்சிக்கு, 'திராவிட' என்ற அடைமொழி கொடுப்பதற்குக் காரணம், தமிழ், தெலுங்கு, மலையாளம், கருநாடகம் ஆகிய நான்கும் திராவிட மொழிகள் என்பதாலும் திராவிட இனத்தவர் இந்த நால்வர் என்பதாலும் ஆகும்.

தட்சிணப் பிரதேசம் என்ற நாமகரணத்தைக் காட்டிலும், திராவிடநாடு—திராவிடக் கூட்டாட்சி என்று பெயரிடுவது, வரலாறு, இலக்கியம், கல்வெட்டு, மொழிநூல்

அறிவு எனும் பல்வேறு ஆதாரங்களைத் துணைகொண்ட தாகும்.

ஆனால், அதனைக் கூறுகிற நாம், தம்பி, சாமான்யர்கள்! ஏழையின் பேச்சு அம்பலம் ஏறவில்லை!!

எனவே தம்பி, புதிய தமிழகம் அமைகிறது—அதிலே நமது நம்பிக்கையும் மலர்கிறது. மொழிவழி அரசு—திராவிடக் கூட்டாட்சிக்குத்தான் வழிகோலும் என்பது, நமது திடமான நம்பிக்கை.

அந்த நம்பிக்கையுடனேயே நாம், புதிய தமிழக அமைப்பை, விழாவாகக் கொண்டாடுகிறோம்.

தீபாவளியுடன் அந்தத் திருநாள் இணைந்துவிட்டது—எனவே, திராவிட முன்னேற்றக் கழகம், இந்த விழாக் கொண்டாடி, இதிலிருந்து பெறக் கிடைக்கும் கருத்துகளை நாட்டு மக்களுக்கு எடுத்துக்கூற, வேறோர் நாளைக் குறித்திட வேண்டும் என்று, உன் சார்பிலும் என் சார்பிலும், நமது பொதுச் செயலாளரை நான் கேட்டுக்கொள்கிறேன். வாழ்க தமிழகம்! வருக திராவிடம்!!

அன்பன்,

அண்ணாதுரை

4—11—1956



# மூவர் முரசு

இத்தாலி நாட்டில் ஒரு கொடிய நிகழ்ச்சி—அமைச்சர் பதவியும் சுப்ரமணியமும்—வடக்கும் தெற்கும்—ஆச்சாரியார்.

தம்பி!

படித்து முடித்ததும், அந்தப் பாவை என் மனக்கண்முன் தோன்றிடவே "வீர வணக்கம், வனிதாமணியே! உலகிலே மாண்பும் அறமும் அடியோடு அழிந்து படாமலிருப்பது, உன்போன்ற ஆரணங்குகள் ஒரு சிலர் அவ்வப்போது ஆற்றலுடன் பணிபுரிவதனாலேதான்! தாய்க்குலத்தின் தனிப் புகழைத் தரணிக்கு விளக்கிய ஒளிவிளக்கே! உன் தாள் பணிகிறேன்! தையல் என்போர் மையல் ஊட்டும் மைவிழியும், களிப்பூட்டும் கொவ்வைக் கனிவாயும், தாலாட்டும் திருக்கரமும் மட்டுமே கொண்டவர்கள்; அவர்கள் மெல்லியலார், சுடு சொல் கூறிடக் கேட்டாலே அவர்தம் அகம் அல்லற்படும், முகம் போலிவிழந்து விடும்; அனிச்சப்பூ போன்றோர் அரிவையர், என்று மட்டுமே பேசுவர். ஆனால் பிறர் திகைத்துப் போயிருக்கும் நேரத்தில், அம்மையே! நீ காட்டிய அஞ்சா நெஞ்சு, அவனிக்கே ஓர் அணி எனலாம்!! வாழ்க உன் திருப்பெயர்! வளர்க மகளிர் மாண்பு"—என்றெல்லாம், கூறிக் கூறி வியந்து பாராட்டினேன். ஆமாம்,

தம்பி, அனைவருமே போற்றிடத்தக்க வீரச் செயலைப் புரிந்தார் அந்த மாதர்குல மாணிக்கம்.

ஏழு நூறு போலீஸ் வீரர்கள் தடியும் துப்பாக்கியும் தயாராக வைத்துக்கொண்டுள்ளனர்—ஆனால் செய்வது யாது என்று அறியாமல் திண்டாடித் தவிக்கின்றனர்; கட்டிடத்துக்கு வெளியே இருந்தபடி. உள்ளே இருந்தோ ''ஐயய்யோ! அம்மம்மா! ஆபத்து! ஆபத்து! ஆண்டவனே! காப்பாற்று! ஓடிவாருங்கள். வாருங்கள் ஓடி!'' என்ற கூக்குரல் பீறிட்டுக் கொண்டு வருகிறது. துப்பாக்கி வேட்டுக் கிளப்பி உள்ளே நுழையலாம்!! ஆனால், துப்பாக்கியால் சுட்டால், கொடுமைக்காரர்மீது குண்டு பாய்ந்திடாமல், ஆபத்தில் சிக்கிக் கிடப்போர்மீது வீழ்ந்தால், என்ன ஆவது என்ற அச்சம், போலீசாரைச் செயலற்றவர்களாக்கி விட்டது.

பள்ளிக்கூடக் கட்டிடம் தம்பி, உள்ளே தாளிடப்பட்டுக் கிடக்கிறது—ஆறு வயதிலிருந்து பத்து வயது வரையில் உள்ள சிறார்கள் சிறுமியர்கள்—அந்தச் சிட்டுகள் உள்ளே சிக்கிக்கொண்டன, சித்திரவதை செய்யப்போகிறோம். வெட்டிக் கண்டதுண்டமாக்கி வீசி எறியப்போகிறோம் என்று வெறியர் இருவர் கொக்கரிக்கின்றனர். எப்படியோ, பள்ளிக்கூடத்துக்கு உள்ளே நுழைந்துவிட்ட இரண்டு வெறியர்கள், பள்ளி மாணவர்களின் கைகாலைக் கட்டிப் போட்டு விட்டனர்; ஆசிரியர்களையும் சிறைப்படுத்தி விட்டனர்—வெறியர் கரத்தில் கத்தியும் இருக்கிறது, துப்பாக்கியும் இருக்கிறது. எவ்வளவு பதைபதைத்திருக்க வேண்டும் அந்தப் பாலகர்கள்!!

ஆறுமணி நேரம். 92 குழந்தைகள், மூன்று ஆசிரியர்கள் இப்படிச் சிக்கிக் கொண்டனர்—இரண்டு வெறியர்கள் உள்ளே இருந்துகொண்டு கொக்கரிக்கிறார்கள்—மரியாதையாக நாங்கள் கேட்பதைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, உங்கள் குலக்கொழுந்துகளை மீட்டுக்கொண்டு செல்லுங்கள்! தாக்கிட நுழைவீரேல், நாங்கள் பிடிபடுமுன்பு, குழந்தைகளை வெட்டிக் குவிப்போம்!!—என்கிறார்கள்.

அந்தக் கொடியவர்கள் கொண்டுவந்து கொடுக்கும்படி கேட்டது என்ன தெரியுமா, தம்பி, கேள், *18,24,000* ரூபாய் வேண்டும் என்கிறார்கள்!!

உள்ளே, துள்ளி விளையாடும் பிள்ளைப் பருவத்தினர்—அவர்களை உயிரோடு திரும்பப் பெறவேண்டுமானால், பதினெட்டு இலட்சரூபாய் தரவேண்டும் என்கிறார்கள்—கூறுபவர்கள் கரத்தில் கத்தி, துப்பாக்கி! வெளியே பல நூறு



போலீஸ்!! வந்தது வரட்டும் என்று உள்ளே நுழையலாம். ஆனால், பாதகர்கள், மிரட்டுகிறபடியே, குழந்தைகளைக் கொன்றுவிட்டால்...?

அவ்வளவு வெறிபிடித்தவர்களா என்ற சந்தேகத்துக்கு இடமேயில்லை—ஏனெனில், குழந்தைகளைக் கட்டிப்போட்டுவிட்டு, கொண்டுவா, பணத்தை!—என்று கொக்கரிக்கும் இருவரும், பைத்யக்காரர்கள்! மிகப் பயங்கரமான போக்குடைய பித்தர்கள்! பித்தர்கள் விடுதியிலிருந்து தப்பி ஓடிவந்துவிட்டவர்கள்!

இப்போது, ஒருமுறை அந்தக் காட்சியை மனக்கண்ணாலே பார் தம்பி! உள்ளபடி, திடுக்கிடச் செய்கிறதல்லவா?

அப்படிப்பட்ட சமயத்திலேதான், அந்த ஆரணங்குக்கு எங்கிருந்தோ ஓர் வீர உணர்ச்சி பொங்கி எழுந்தது! குலக்கொடிகள், உயிரோவியங்கள், கட்டப்பட்டு, கண்ணீர் வடிக்கின்றன! கொஞ்சி விளையாடும் சிறார்கள், சிறுமிகள்! கன்னக்குழியைக் காட்டி மகிழ்விக்கும் ஓர் சிட்டு, கண்ணில் குறும்பு காட்டி களிப்புறச் செய்யும் ஓர் மான், இசைபாடி இன்பமூட்டும் ஓர் குயில், களிநடம் காட்டி கவலையைப் போக்கிடும் ஓர் கலாபம், மழலையால் மனதுக்கு மதுரம் தரும் பருவத்தினர், தாய் உச்சிமோந்து முத்தமிட்டு பள்ளிக்கு அனுப்பி வைக்கும் பருவத்தினர்—பாதகர் இருவர், பயங்கரம் பேசுகின்றனர். அவர் தம் கரத்தில் கத்தியும் இருக்கிறது, புத்தியிலோ கோளாறு! எதையும் செய்வர்! எதற்கும் அஞ்சார்! பாதகம் இது, தீது, ஆகாது என்ற பாகுபாடு அறியா மனம்! எந்த நேரத்திலும், சுட்டுத் தள்ளிவிடக் கூடும், வெட்டிச் சாய்த்துவிடக் கூடும்!!

குழந்தைகளைப் பார்க்கப்பார்க்க, குபுகுபுவெனக் கண்ணீர் கிளம்புகிறது! பயன்? எதையாவது செய்து, ஆபத்தைப் போக்கியாக வேண்டும். அதுவும் விரைவில்!

பூவை புலியானாள்! வெறியன்மீது பாய்ந்தாள்—அஞ்சாமையன்றி வேறோர் ஆயுதம் இல்லை! ஆனால் அஞ்சாமையைவிட ஆற்றலளிக்க வல்ல ஆயுதம் வேறென்ன உண்டு! பாய்ந்தாள்—பித்தன் கரத்திலிருந்த கத்தியைப் பறித்துக்கொண்டாள். அந்தக் கத்தியைக்கொண்டே அவன் மண்டைமீது தாக்கவே, மதி குழம்பிக்கிடந்த அந்த வெறியனின் மண்டை பிளந்தது, கீழே சாய்ந்தான்! வெற்றி—முதல் கட்டம்! கட்டிடக் கதவினைத் திறந்திட முடிந்தது. காரிகையைக் கொன்றுபோடக் கிளம்பினான் மற்றோர் பித்தன்! அவனைச் சுட்டுச் சாய்த்தது, உள்ளே நுழைந்த போலீஸ்,

குழந்தைகள் பிழைத்துக்கொண்டன! ஊரார் குதூகலமடைந்தனர்! இரு பித்தர்களில் ஒருவன் மருத்துவமனையில் இறந்தொழிந்தான்—மற்றவன் கூண்டில் தள்ளப்பட்டுக் கிடக்கிருன்.

தெய்வமே! தெய்வமே! எங்கள் குடும்பத்துக்கு நீயே கண்கண்ட கடவுள்!—என்று பலரும் கண்கசியும் நிலையில் நின்று, அன்பைக் காணிக்கையாக்கி அந்த ஆரணங்கின் காலடியில் கொட்டி இருப்பர். நமக்கே தோன்றுகிறதே, அந்த நல்ல பெண்மணியின் நாமத்தை வாழ்த்த வேண்டும் என்று. தம்பி! கார்ட்டோரி என்பது அந்தக்காரிகையின் பெயர். பித்தர் இருவரில், ஒருவன் பெயர் ஆர்ட்டுரோ, மற்றவன் பெயர் ஆஸ்வால்டோ. பெயர், அந்த நாட்டுக்குத் தக்கபடி, மொழியின் தன்மைக்கேற்ப அமைந்திருக்கட்டும்—அந்த அணங்கு காட்டிய தீரத்துக்குத் தக்கவிதத்தில், பெயர் சூட்டி நாம் மகிழலாம், தப்பி, மறக்குடி மகள்!!

மகளிர் குலத்தின் மாண்பினை விளக்கிடும் நோக்குடன் யாரோ ஆசிரியர் ஆர்வத்துடன் கட்டினுர் போலும்—வீரக் காதை தீட்டும் புலமை இதிலே விளக்கமாகத் தெரிகிறது என்று எண்ணிக்கொண்டுவிடாதே தம்பி, இது கதை அல்ல; உண்மை நிகழ்ச்சி—சென்ற திங்களில், இத்தாலி நாட்டில் டெராஜானே, எனும் ஊரில் நடைபெற்றது.

இந்த வீரக்கதையை நான் படித்ததும்,வியப்புற்றேன்—பலப்பல கருத்துக்கள் அலை முறையில் தோன்றிடலாயின!

கொடுமை இந்த அளவுக்கெல்லாம் செல்லுகிறதே என்று ஓர் எண்ணம் குடைந்தது—உலகு இன்றளவும் நாகரீகத்தைக் கடைப்பிடிக்கக் காணுமே என்ற கவலை மனதினை அரித்தது.

அந்த வனிதையின் வீரமே வீரம் என்ற எண்ணம் வந்தது—ஆம்! ஆம்! உலகு கெட்டுக் கிடப்பினும், நம்பிக்கைக்கு இன்னமும் இடமிருக்கிறது, இத்தகைய நாரீமணிகள் இருக்கத்தான் செய்கிருர்கள்—என்ற மகிழ்ச்சி மலர்ந்தது.

அந்த இரண்டு பித்தர்களை எண்ணிக்கொண்டேன்—கள்ளங்கபடமற்ற அந்தக் குழந்தைகளிடம் தமது கொடுவாளைக் காட்டி நின்றனரே!—என்பதை நினைத்தபோது நடுக்கமே எடுத்தது. இவர்களிடம் மனிதத்தன்மை மாண்டொழிந்தது ஏனோ என்று எண்ணினேன்—பித்தர்களன்ரு! அவர்கட்கு, தாம் எது செய்கிருேம், எதற்காகச் செய்கிருேம்



என்று என்ன தெரியும்—குழம்பிய மனம்—என்பதை எண்ணினேன், ஓரளவு சாந்தி பெற்றேன். அதிலிருந்து தம்பி, என் மனம், நமது நாட்டு அரசியலுக்குத் தாவிற்று—என் மனக்கண்முன், மூன்று தலைவர்கள் போர்க்கோலம் பூண்டு, மும்முரமாகப் பரணிபாடி பவனி வரும் காட்சி தெரியலாயிற்று.

கெடுமதியுடையோய்! எதையோ சொல்லி வருகிருய் என்றெண்ணிப் படித்துக்கொண்டே வந்தால், இடையிலே நீ எமது தலைவர்களை இழித்துப் பேசும் கட்டத்தைப் புகுத்துகிருயே, பித்தர்களின் பேய்ச் செயலைப்பற்றிக் குறிப்பிட்டுவிட்டு, எமது 'மூவர்' பற்றிப் பேச வருகிருயே, அங்ஙனமாயின், எமது 'மூவர்' பித்தர் என்று கூறவா துணிகிருய், விடமாட்டோம் உன்னை...என்று கோபத்துடன் கூறிடக் கிளம்பும் காங்கிரஸ் நண்பர்கட்கு, என் விளக்கத்தைத் துவக்கத்திலேயே கூறிவிடுகிறேன்—நான் காட்டிய நிகழ்ச்சியில், விவரமறியாச் சிறுவர்கள் கட்டிப் போடப்பட்டு, கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, கொடியவர் இருவரின் பயங்கர ஆயுதங்களுக்கு இரையாகும் ஆபத்துக்கு உட்படுத்தப்பட்டார்களே, அதுவரையில்தான், நம் நாட்டு அரசியல் நிலைமையுடன் ஒப்பிடத்தக்கதாக இருக்கிறது என்று கூறிவிடுகிறேன். இத்தாலி நாட்டிலே இரு பித்தர்கள் செய்த வெறிச்செயல் போன்றதோர் நடவடிக்கை தமிழக அரசியலிலும் இதுபோது நடை பெற்றுக்கொண்டிருப்பதாக எனக்குத் தோன்றுகிறதே தவிர, இங்குள்ள காங்கிரஸ் தலைவர்கள், பித்தர்களாகத் தெரிகிருர்கள் என்று கூறவில்லை. எனவே நமது தலைவர்களைப் பித்தர் என்று தூற்றுகிறேனே என்றெண்ணிக் கோபம் கொள்ளற்க! என்று நான் கூறுவதாகத் தம்பி! காங்கிரஸ் நண்பர்களுக்குச் சொல்லிவிடு. நமக்கேன் நல்லவர்களின் பொல்லாப்பு!

இத்தாலி நாட்டு இரு பித்தர்கள் பள்ளிச் சிறுர்களைக் கட்டிப் போட்டு,கத்தி'காட்டி,கொன்று போடுவதாக மிரட்டி, பணத்தைக் கொள்ளை அடிக்க முயற்சித்ததுபோல, இந்நாட்டு மக்களைத் தெளிவுபெருத நிலையில் தள்ளிவைத்துவிட்டு, அடக்குமுறை, பணபலம் எனும் இரு பயங்கரக் கருவிகளைக் காட்டி, அழித்தொழித்து விடுவதாக மிரட்டி, காங்கிரஸ் கட்சியினர் ஓட்டுகளைக் கொள்ளையிடத்'திட்டமிட்டு வேலைசெய்து வருகின்றனர். மற்றவர்கள் திகைத்துப்போய், செயலற்றவர்களாகிக் கிடந்தபோது ஓர் ஆரணங்கு, அஞ்சாது போராடி, கொடியவர்களின் கொலைபாதகச் செயலைத் தடுத்து வெற்றி கண்டதுபோல, நாம், இந்தத் தேர்தலிலே, காங்கிரசை எதிர்த்து நிற்கிருேம். அந்த ஆரணங்குக்கு

இருந்த அஞ்சா நெஞ்சம், நம்மில் ஒவ்வொருவருக்கும் தேவை—எங்ஙனம், கயவர்களிடம் கத்தி இருக்கிறதே, காட்டுக் கூச்சலிடுகிறார்களே, துப்பாக்கி இருக்கிறதே, துடுக்குத்தனமாகத் தாக்குகிறார்களே, என்பதுபற்றித் திகில் கொள்ளாமல், அந்த மங்கையர் திலகம், கொடியவனின் கொடுவாளைப் பறித்து எறிந்தாளோ, அதுபோல் செயலாற்ற, நமக்குத் துணிவுவேண்டும். ஏனெனில், துரைத்தனத்தில் அமர்ந்துள்ளவர்களிடம், படைக்கலன்கள் மிகுதியாக உள்ளன என்பதுமட்டுமல்ல, அவர்களில் மிகப்பலருக்கு, வெறி அளவுக்கு நம்மீது கோபம் பிறந்துவிட்டிருக்கிறது. அதிலும் நம்மை எல்லாம் ஆளாக்கிவிட்ட பெரியாரையே அன்புக் கயிற்றினால் கட்டிப்போட்டுவிட முடிந்தது, இந்தப் 'பொடியன்கள்' அல்லவா போரிடக் கிளம்புகிறார்கள் என்று எண்ணும்போதே, அவர்களுக்குக் கோபம் கோபமாக வருகிறது. அது நமக்கு நன்றாகப் புரிகிறது! கடந்த பத்து நாட்களாக, பவனி வரும் 'மூவர்' செல்லுமிடமெல்லாம் சீறிச் சீறிப் பேசுகிறார்கள்—இதுகளை ஒழித்துக்கட்டுவோம் என்று உறுமுகிறார்கள்! தேர்தலுக்காகச் செலவிடத் தம்மிடம் குவிந்துகிடக்கும் பணத்தையும், மேலும் இலட்சக் கணக்கில் கொட்டித்தர, கொள்ளை இலாபக்காரரும் கள்ளமார்க்கட் அதிபரும் காத்துக்கிடக்கும் காட்சியையும், தமது வீரதீரம், அறிவு ஆற்றல், பக்தியுக்தி பற்றி எல்லாம் புகழ்பாடிட, பத்திரிகைகள் பல பராக்குக்கூறிக் கிடப்பதையும் காணும் போது, அவர்களுக்கு ஏன் அந்த அளவுக்கு ஆணவம் பிறக்காது! அம்மி குழவியையே அப்பளமாக்கிவிட்டோம், இந்த இஞ்சி பச்சடிகள் எம்மாத்திரம் என்று எக்காளமிட்டு வருகிறார்கள்.

கொப்பம்பட்டியிலே தமது 'குரலை' உயர்த்திய காமராஜர்' ஒரு பத்து நாள் படபடவெனப் பேசிவிட்டு, அதன் பலனாக ஆயாசம் தவிரப் பிறிதொன்று காணாததால், சிறிதளவு அமைதி பெற்றார், வாய்மூடிக் கிடந்திடலானார். இப்போது, 'மூவர்' கிளம்பியுள்ளனர், முரசு அறைந்திட!

ஆஹா! தம்பி! இந்த 'மூவர்'களின் பொருத்தம் இருக்கிறதே, சொல்லி முடியாது.

பெரியார், நாட்டுக்கு ஒவ்வோர் நாளும் எடுத்துச்சொல்லி வருவது தெரியுமல்லவா? காமராஜர் நல்லவர், நம்மவர், ஆனால் இந்தச் சுப்பிரமணியம் இருக்கிறாரே, ஆபத்தான 'பேர்வழி'-ஆச்சாரியாரின் கையாள்—சமயம் பார்த்துக் குழி பறிப்பவர்—சந்தர்ப்பம் பார்த்துத் தட்சிணப் பிரதேசத் திட்டத்தைப் புகுத்திவிடக் காத்துக்கிடப்பவர்-என்பது



பெரியாரின் ஆய்வுரை. அவர் கூறுவதற்கேற்பவே, காமராஜர் தட்சிணப் பிரதேசம் கேட்பவர்களைத் தாக்கிப் பேசினார், சுப்பிரமணியனார், தட்சிணப் பிரதேசத்தின் அவசியத்தைச் சிலர் உணராமலிருக்கிறார்களே, என்ன அறிவீனம் என்று கேலி பேசுகிறார்.

ஆச்சாரியாரின் குலக் கல்வித் திட்டத்துக்கு, கனம். சுப்பிரமணியம் தாலாட்டும் பாடினார், பிறகு அதை அவரே சவக்குழியில் புதைத்துவிட்டு, ஒப்பாரி வைத்தாலும், பதவி பறிபோய் விடுமோ என்ற அச்சத்தால், ஒரு சொட்டுக் கண்ணீரும் விடாமலிருந்துவிட்டார்.

ஆச்சாரியார் காலத்திலே, இந்த ஆற்றல்மிக்க அமைச்சர், கொதித்ததையும் குதித்ததையும், நாடு கண்டது. குலக் கல்வித் திட்டத்தை இந்தக் கொள்கை வீரர், விட்டுக் கொடுக்கவேமாட்டார், பதவிப் பிசின் அவரை ஒன்றும் செய்யாது, தன்மானம் பெரிது, கேவலம் பதவி அல்ல என்று கருதும் தமிழர் இவர், இவரிடம் கொங்குநாட்டு உறுதிபபாடு உள்ளத்தில் குடிகொண்டிருக்கிறது என்று பலரும் கருதும்படி பேசினார்—மறுப்புக் கூறினோரை ஏசினார்! கல்வித்துறையில் இந்தத் திட்டத்தைப் புகுத்தாவிட்டால், இந்த 'ஜென்மம்' கடைத்தேறுது என்று 'கர்ஜனை' செய்தார்.

நாடு சீறிற்று—காமராஜர் கண் சிமிட்டினார்—காங்கிரஸ் கமிட்டிகளே களமாயின! ஆச்சாரியார் கவிழ்ந்தார்—காமராஜர் துறவறத்தைத் துறந்து, தமது ஒய்வைத் தியாகம் செய்துவிட்டு, பதவியில் வந்து அமர்ந்தார்; பக்கத்திலேயே பல்லை இளித்துக்கொண்டு நின்றார் இந்தப் பண்பாளர்! நான், நாட்டுக்குத் தந்த நல்ல திட்டத்தை, ஆயிரம் எதிர்ப்புகளையும் கண்டு நான் அஞ்சாமல் திணித்த இந்தத் திட்டத்தைக் குப்பைக் கூடையில் போட்டுவிட்ட இந்த அமைச்சர் அவையில் நான் இடம் பெற்றால், எவர்தான் என்னை மதிப்பர், காலம் முழுவதும் கைகொட்டிச் சிரிப்பரே, பதவி மோகம் விட்டதா பார் என்று கேலி பேசுவரே, நான் எப்படி இந்த அமைச்சர் அவையில் இருக்கலாம்—வேண்டேன்! என்று கூறிவிட்டு, கோவை சென்று, வக்கீல் வேலையை விட்ட இடத்திலிருந்து துவக்குவார், குருநாதர் இராமாயணம் பற்றி எழுத, இவர் பாரதம் பற்றி எழுதுவார், என்று பலரும் எதிர் பார்த்தனர்.

ஆனால் அமைச்சர் பதவி என்ன சாமான்யமானதா! அந்த வெல்வட்டு மெத்தையின் சுகம் வேறு எங்கு கிடைக்கும்! ஆனந்தமாக அங்கு அமர்ந்துகொண்டு, அலட்சியமாக

மற்றவர்களைப் பார்த்துக் கொண்டு, ஆணவமாக எவரையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசிடும் வாய்ப்பை இழக்க மனம் வருமா! பில்லை போட்ட சேவகர்கள் எத்துணை பேர்! பிரியத்தைக் கொட்டிடத் துடிப்போர் எத்துணை! சீமான்கள், கட்டியங் கூறி நிற்கிறார்கள், காலையையும் தன்னையும் ஒரே விதமாகப் பார்த்து வந்த பட்டக்காரர்களெல்லாம், 'கனம்' ஆன பிறகு, கைலாகு கொடுக்கிறார்கள். கொடுத்துவிட்டு, கை வலிக்கிறதோ!—என்று கனிவுடன் கேட்கிறார்கள்! இந்தச் சுகானுபவத்தை இழக்க மனம் வருமா! தோட்டக் கச்சேரிகள், அதிலே வந்து கலந்துகொள்ளும் துதிபாடகர்கள்! மாநாடுகள், அதிலே, மதிப்பளிக்க வரும் மகானுபாவர்கள்! கலைக் காட்சியைத் திறந்திட, கானமழையில் நனைந்திட 'கனம்' ஆக இருந்தால், தனிக் கவர்ச்சி காணலாமே! இசைவாணரிடமே இசை இலக்கணம் பற்றிப் பேசி, ஆசான் கோலமே காட்டலாம்! தமிழ்ப் பேராசிரியரிடமே, தமிழ்மொழியில் என்ன இருக்கிறது என்று கேட்டுவிட்டு, அவர் முகம் சுளிக்கிறதா என்றுகூடக் கவனிக்கலாம்? நடனக் கச்சேரிகளில் தலைமை தாங்கி, "மனிதனைத் தேவனுக்கும் மதுரமான கலை! அம்பலத்தானின் அடிபணியும் பக்தியை ஊட்டும் லளிதக் கலை! கண்டேன்! களிப்புக் கடலில் மூழ்கினேன்! அந்தக் கட்டிளங்குமரியின் கடை வெட்டினையும் இடை நெளிவையும் கண்டபோது, நான் கைலை சென்றது போன்றே களிப்புப்பெற்றேன்" என்று பேசலாம்! தம்பி! இவ்வளவு இன்பம் கூட்டித்தரும் பதவியை இழக்க அவர் என்ன இளித்த வாயரா?

கல்வித்திட்டம் வேண்டாம் என்கிறீர்கள், அவ்வளவு தானே! உங்களுக்குக் கல்வித் திட்டம் பிடிக்கவில்லை, நான் அல்லவே! சரி! கல்வித்திட்டம் வேண்டாம்! அதைக் குழி தோண்டிப் புதைக்கத்தானே வேண்டும், உமக்கு ஏன் அந்தச் சிரமம், நானே செய்கிறேன்—எனக்குத்தான் அந்தக் குழி எத்துணை ஆழமாக இருக்கவேண்டும் என்பது தெரியும் என்று கூறினார்போலும், பதவியில் ஒட்டிக்கொண்டார்!

அப்படிப்பட்ட தன்மானம் ததும்பும் மனம், தம்பி, இந்த அருமை அமைச்சருக்கு!

அவருடன், காமராஜர்! ஊரிலே, பெரியார் பேசுவதோ, நான், கனம். சுப்பிரமணியம் ஆச்சாரியாரின் கை ஆளாக இருந்துகொண்டு, என் காமராஜரைக் கவிழ்த்து விடாதபடி பாதுகாப்பு அளித்து வருகிறேன், என்பதாகும்.

காமராஜர், பெரியார்மீது அன்பும் பொழிவதில்லை, வம்புக்கும் நிற்பதில்லை.



கனம். சுப்பிரமணியனாரோ, தனக்குப் பெரியார்மீது மட்டுமல்ல திராவிட இயக்கத்தின் மீதே உள்ள, 'துவேஷத்தை'க் கூட்டம் தவறாமல் கக்குகிறார், கூட இருப்பவர்கள், மெத்த நாற்றமடிக்கிறது என்று கூறித் தடுக்கும் வரையில் கக்கித் தீர்க்கிறார்.

அவர் இருக்கிறாரே, பக்தவத்சலனார்—சொல்லத்தேவை இல்லை! மக்கள் பார்த்து, சட்டசபைக்கும் செல்லவிட மாட்டோம் என்று கூறி, தேர்தலில் தோற்கடித்தார்கள். எம்.எல்.ஏ. ஆகத்தானே கூடாது என்றீர்கள், இதோ பாருங்கள் மந்திரியே ஆகிவிடுகிறேன் என்று ஜனநாயகம் செய்து காட்டிய பெருந்தகையாளர்!

இந்த மூவரும் முரசுகொட்ட, ஊர்பல சென்றனர். உள்ளத்துக்கு உற்சாகம் பொங்குமளவுக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தை ஏசினர்—நான்தான் இருக்கிறேனே ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்பார்களே, அதுபோல; என்னை எடுத்து அலசி, ஆராய்ந்து, உரைத்து, நிறுத்து, தூக்கி எறிந்துவிட்டார்கள், கீழே!

வடக்கு—தெற்கு என்று பேசுவது அபத்தம்—ஆபத்து—தீது—அப்படி ஒரு பிரச்சினை கிடையாது.

அப்படியே ஒன்று இருந்தாலும், அதைக்கண்டு அச்சம் கொள்வது கோழைத்தனம்.

இந்த தி.மு.க. கோழைகள்; வெள்ளைக்காரனுக்குக் குலாம்கள்!

இவர்களை ஒழித்துவிடுவோம், அழித்துவிடுவோம்.

மூவர் முரசும் இதைத்தான் ஒலித்தன! இதை ஒலிக்கமட்டுமே இவர்கள் பயின்றுள்ளனர்.

ஆனால் மக்கள் வேறுபல இசைகளைக் கேட்டுப் பழக்கப் பட்டுப் போய்விட்டனர்.

"அண்ணாத்துரை கிடக்கிறானய்யா, அமைச்சர் பெருமக்களே! உங்கள் சங்கதி என்ன? நாடு ஆளும் வாய்ப்பு அளித்தோம், நாங்கள் கண்டது என்ன? வரிச்சுமையைத் தாங்கித் தத்தளிக்கிறோம், வாட்டம் ஓட்டிட நீவிர் வகுத்தளித்தது என்ன? தி.மு.க. இதைச் சொல்கிறது கேளாதீர், அதைக் கூறுகிறது நம்பாதீர் என்று எங்களுக்குப் போதனை புகட்டியது கிடக்கட்டும்—நாங்கள்,

எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

எனும் குறள் வழி நடக்கத் தெரிந்தவர்கள்—எனவே எந்தக் கழகமும் இல்லாதது கூறி எம்மை ஏய்த்திட முடியாது! உண்மையை நாங்கள் தெரிந்துகொண்டோம்.

உமது ஆட்சி எமக்குத் திருப்தி தரவில்லை.

ஊழல், நாற்றமடிக்கிறது.

உழைப்பாளிக்கு உரிமை மறுக்கப்படுகிறது.

விலைவாசியைக் கட்டுப்படுத்தும் வக்கும் உமக்கு இல்லை.

அடக்குமுறையை அவிழ்த்துவிடுகிறீர்கள்.

வரிமேல் வரி போட்டு வாட்டி வதைக்கிறீர்கள்.

வடநாட்டிலே அதிகாரத்தைக் குவித்திருக்கிறார்கள்.

எதற்கும் காவடி தூக்கிக்கொண்டு டில்லி போகிறீர்கள்.

வளமும் செல்வமும் வட நாட்டில் பெருகிக் கிடக்கிறது.

தென்னகம், தொழில் வளர்ச்சியற்றுத் தேய்கிறது.

புதிய புதிய தொழில் திட்டம் தீட்டும் உரிமை சென்னையிடம் இல்லை,— டில்லியின் கரத்தில் இருக்கிறது.

அணையும் தேக்கமும் அங்கு, பிரம்மாண்டமான அளவு.

இங்கு பாசனத்துக்காகச் சிறு அணைகள் — அதற்கும் மக்களிடம் அதிகாரப் 'பிச்சை' எடுத்தீர்கள்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், தென்னகத்துக்குச் செய்யப்பட்ட அநீதியை, 'தேசீய' ஏடுகளே காட்டின— கட்டுரை, கவிதை, படம், போட்டு; நீங்களேகூடச் சில நேரங்களில் கண்ணைக் கசக்கிக்கொண்டும் கையைப் பிசைந்துகொண்டும், சொல்லியிருக்கிறீர்கள்!

தமிழகத்தின் உரிமையைக்கூடக் காப்பாற்றும் ஆற்றல் உமக்கு இல்லை; தேவிகுளம் பீர்மேடு இழந்தீர்கள்.

உம்முடைய வார்த்தைக்கு டில்லி மதிப்பளிக்கவில்லை; மானம் பெரிது என்று கருதி பதவியைத் துறக்கப் போவதாக 'பாவனை'க்குச் சொல்வதற்கும் பயந்தீர்கள்!

ஒரு முதியவர், சாவது தெரிந்தும், ஈவு இரக்கமற்று இருந்தீர்கள்.

தமிழ்நாடு என்று பெயரிடும் அளவுக்கும் உமக்குத் தன்மான உணர்ச்சி இல்லை!

ஆகவே அமைச்சர்களே! அண்ணாத்துரை கிடக்கிறான், அற்பன், அவனுக்கு அரசியல் என்ன தெரியும், சினிமா



வசனம் எழுதுபவன்; பிளேட்டோவுக்குப் பெயர் கிடைத்
ததே, நீவிர் அவர் காலத்தில் இல்லாததால்; அரிஸ்டாடி
லுக்கு அறிவாளி என்ற பெயரே, உம்மை மறந்ததால்
தந்தனர்—அது தெரியும் எமக்கு—எனவே, அவனைத் தள்ளி
விட்டு, தயவுசெய்து இதோ நாங்கள் கேட்கிறோமே, எங்கள்
உள்ளத்தில் குமுறிக்கொண்டிருக்கும் பிரச்சினைகளை, இவை
களுக்கு, ஒளிவு மறைவு இன்றி, உள்ளத் தூய்மையுடன்
பதிலளியுங்களேன் என்று பொதுமக்கள் கேட்கிறார்கள்.

மக்களைக் காணும்போதே இந்தச் சூழ்நிலை புரிந்துவிடு
கிறது, மூவருக்கும் சுரீல் என்று கோபம் கிளம்புகிறது,
கோபத்தைக் காட்ட வேறு வழி? நம்மீது காய்ந்து விழு
கிறார்கள்.

மூவர் முரசு, சென்ற கிழமை மிக மும்முரமாக வேலை செய்தது—இம்முறையில்.

இதிலே, காமராஜர், இப்போது ஒரு புதிய கட்டிடத்தில்
அடி எடுத்து வைத்திருக்கிறார். நான் இதனை எதிர்பார்த்தேன்,
ஆனால் இவ்வளவு விரைவில் நடைபெறும் என்று நினைக்க
வில்லை.

இதுநாள் வரையில், அவர், தமது கோபப் பார்வையை
யும், அலட்சியமான கண்டனத்தையும், நம்மீது மட்டும்தான்
செலுத்தி வந்தார். இப்போது, காலம் கனிந்துவிட்டது
என்று எண்ணுகிறாரோ, என்னவோ, மெதுவாக பெரியார்
மீதும், திராவிட கழகத்தின்மீதும் கூடத் தமது தீ நாவைச்
செலுத்தத் தொடங்கிவிட்டார்.

காமராஜருக்கு, நமது கழகத்தின்மீது கசப்பும் கொதிப்பும்
இருக்கக் காரணம் இருக்கிறது—சீச்சி! இந்தப் பழம்
புளிக்கும்! என்று நரியே சொல்லிற்றாமே, (கதையில்) இந்த
நாடாளும் நாயகர் சொல்லாமலா இருப்பார்! நாம், தனியாக
எம்மிடம் ஒரு கட்சி இருக்கும், கொடி இருக்கும், ஆனால்
உமக்குத்தான் அவ்வளவும் பயன்படும்—என்று கூறி
'குத்தகைக்கு' விடவில்லை, நமது கழகத்தை!!

கண்ணீரும் செந்நீரும் கொட்டி வளர்த்த இந்தக் கழகம்,
விசுவாமித்திரனிடம் ராஜ்யத்தைத் தானமாக்கிவிட்டு,
சுடலைகாக்கச் சென்றானுமே அரிச்சந்திரன், அவ்விதம்,
காமராஜருக்குக் காணிக்கையாக்கிவிட்டு, அவருடைய
திருவைப் பாராட்டும் பஜனை வேலையை மேற்கொள்ளும்,
துணிவு பெறவில்லை.

முடிகிறதோ இல்லையோ, மூலைக்குச் செல்கிறோமோ, காலத்தின் துணைபெற்று வெல்லுகிறோமோ, அது வேறு பிரச்சினை—அது குறித்துக் கவலையற்று, தேர்தலில் 'போட்டி யிடவே முடிவு செய்திருக்கிறோம். எனவே, காமராஜருக்கு, சென்றேன், கண்டேன், வென்றேன், என்று கூறுவதற்கான வாய்ப்பும் பாழாகிவிட்டதே என்பதனால், கோபம் கொப் பளிக்கக் காரணம் இருக்கிறது - சுடு மொழி பேசுகிறார். பேசட்டும். பெரியார்மீது, இழிமொழி வீசக் காரணம் இருக் கிறதா! செய்நன்றி மறப்பவர்பற்றி வள்ளுவர் கூறியதைக் காமராஜருக்குக் கவனப்படுத்தும் ராஜவேலர்கள்கூடக் கிடைத்திருக்கிறார்களே! நான் எந்த நன்றியையும் கொல்வேன் என்று துணிந்து கூறுபவர் போலல்லவா, காமராஜர் பெரியார்மீதே கேலி வீசுகிறார்.

திராவிடர் கழகத்தின் வளர்ச்சியே பாழாவதானாலும் கவலையில்லை, நான் காமராஜரை ஆதரித்தே தீருவேன் என்று பெரியார் பேரார்வம் காட்டி வருகிறார். அவருக்குக் காமராஜர் காட்டும் மரியாதை, நன்றி, என்னவிதமாக இருக்கிறது?

ஆச்சாரியார்மீது காமராஜருக்குக் கோபம் வந்தது. ஆச்சாரியார், காங்கிரசில் சர்வாதிகாரப் போக்கு வளர்ந்து விட்டிருக்கிறது, சீரழிவு ஏற்பட்டுவிட்டது என்று பேசுவது மறைமுகமாகத் தன்னைக் கண்டிப்பது என்று காமராஜர் கருது கிறார், அதற்காக ஆச்சாரியாரைக் கண்டிக்கக் கிளம்புகிறார்.

நாம் கண்டிக்கக் நேரிடும்போது, என்ன சொல்கிறோம்,

குல்லூகபட்டர்

சாணக்கியர்

வர்ணாஸ்ரமி

சனாதன வெறியர்

என்று பல கூறுவோம். தம்பி! நினைவில் வைத்துக்கொள்.

ஒரு குழந்தையைக் கொஞ்சுகிறோம்—செல்லப் பெயரிட்டு அழைத்துக் கொஞ்சுகிறோம், என்னென்ன சொல்கிறோம்,

வாடா என் குரங்கே!

கிட்டே வாடா கோட்டானே!

என்று சொல்வோமா!



தங்கக் கட்டியே

வைர மணியே

வண்ண நிலாவே

பேசும் ரோஜாவே

என்று ஏதேதோ பேசுகிறோம். அதுபோலவே, கண்டிக்கும் போது, பயன்படுத்தப்படும் சொற்களையும், நினைவிலே கொண்டு, வா.

தம்பி! இனிக்கேள், இந்த வேதனை தரும் விஷயத்தை.

ஆச்சாரியாரைக் கண்டிக்கக் காமராஜர் கிளம்பினார்; என்ன கூறிக் கண்டித்தார், தெரியுமா?

என்ன இந்த ராஜகோபாலாச்சாரியார் இப்படிக் கெட்டுவிட்டாரே! வர, வர, இராமசாமிப் பெரியார் தரத்துக்கு கீழே இறங்கிவிட்டாரே!

என்று கண்டிருக்கிறார். எல்லா இதழ்களிலும், வெளியிட் டனர்; ஒன்றுக்கேனும் காமராஜர் மறுப்பு அளிக்கவில்லை.

பெரியார் பற்றிக் காமராஜரின் எண்ணம் எப்படி இருக் கிறது என்பது தெரிகிறதல்லவா!

எவ்வளவு ஏளனம் தொனிக்கிறது, அந்த ஏசலில் என்பதைப் பார்த்துவிட்டு, பெரியார் எத்துணை மும்முரமாக இந்தக் காமராஜருக்கு ஆதரவு திரட்டுகிறார் என்பதையும் பார்க்கும்போது, எனக்கு வேதனையாக இருக்கிறது, முன்னேற்றக் கழகத்தின்மீது இருக்கும் கோபம் காரணமாகக் கருத்துக் குழம்பியுள்ள தோழர்களுக்குத் தவிர, மற்ற தி. க. வட்டாரம், உள்ளபடி வேதனையும் வெட்கமும் அடையத் தான் செய்கிறது.

பெரியார் என்பதற்குக் காமராஜர் கொள்ளும் பொருள், கெட்டுவிட்ட ஆச்சாரியார்! நியாயந்தானா! சகித்துக்கொள்ள முடிகிறதா! என்று கேட்கத் தோன்றுகிறது. எனக்குத்தான் அந்த வாய்ப்பும் உரிமையும் இல்லையே, நான் என்ன செய்வது! யாருக்கேனும் இருக்கக்கூடும், அவர்களேனும், கேட்கட்டும்.

ஆச்சாரியார் தரம் கெட்டநிலையில் இருக்கிறார்—இதை விளக்கக் காமராஜர் கூறுவது, பெரியார் அளவுக்கு இறங்கி விட்டாரே, என்பது.

இன்னும் வெளிப்படையாகவே பேசத் துணிந்து காமராஜர், தஞ்சையில் சென்ற கிழமை பேசும்போது சொல்கிறார்.

> திராவிடர்கழகம் தேர்தலில் ஈடுபடாமலிருப்பது, என்மீது கொண்ட அன்பு காரணமாக அல்ல! தேர்தலில் நின்றால் தோற்றுவிடுவோம் என்று திராவிட கழகத்துக்கு நிச்சயமாகத் தெரியும். அதனால் பயந்துபோய், புத்திசாலித்தனமாக, தேர்தலில் நிற்கப் போவதில்லை என்று திராவிடர் கழகம் சொல்லுகிறது.

இந்தக் கேலி மொழியா, கருப்பஞ்சாறாக இனிக்கிறது, என் அருமை தி. க. தோழர்களுக்கு! நண்பர்களே! நீங்கள் வலிய வலியச் சென்று வழங்கும் ஆதரவு, காட்டும் பரிவு, சொரியும் அன்பு, மொழியும் பாசம், படைத்திடும் நேசம், என்னவிதமான மனப்போக்கைக் காமராஜருக்கு ஊட்டிவிட்டது, பாருங்கள்! என்மீது உங்களுக்கு நிரம்பக் கோபம் இருக்கிறது, நான் அதனை உணருகிறேன், உள்ளம் வருந்தாத நாள் இல்லை—ஆனால் அதன் காரணமாக, காமராஜரிடமிருந்து இத்துணை இழி மொழிகளைக் கேட்டுக்கொள்ள வேண்டுமா!! எண்ணிப் பாருங்கள்.

> ஏதோ நான் தமிழருக்குப் பாடுபடுபவன் என்பதால், பெரியார் என்னை ஆதரிக்கிறார் என்று காமராஜர் பேசியிருக்கக்கூடாதா! பெருந்தன்மை தெரிந்திருக்குமே! கேட்க, இனிக்குமே! அவர்களுக்குத் தேர்தலில் தோல்வி ஏற்படும் என்பது தெரியும—அதனால் என்னை ஆதரிக்கிறார்கள் என்றல்லவா ஏசுகிறார்.

> மருதப்பன், மாப்பிள்ளைத் தோழனாக இருப்பது ஏன் தெரியுமா? இந்த மணப் பெண் மருதப்பனைத் திருமணம் செய்துகொள்ள முடியாது என்று கூறிவிட்டாள்—எனவே, மருதப்பன், எனக்கு, மாப்பிள்ளைத் தோழனானான்.

இப்படிக் கலியாண வீட்டிலே பேசினால், போலீஸ் வந்து, கலகத்தை அடக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும்—நாட்டிலே காமராஜர் இதனைப் பதட்டத்துடன் பேசி வருகிறார்—நண்பர்களே! நீங்களோ, நெறித்த புருவத்தினராகிறீர்கள், என்னைக் காணும்போது!!

> யார் அழைத்தார்கள்?
>
> தானாக வந்தார்கள்!



> வேறு வழி என்ன இருக்கிறது?
>
> வேறு வேலை என்ன இருந்தது?
>
> சும்மாவா, வந்தார்கள்!

என்று, இந்த ஏச்சு, மளமளவென்று வளரும்—ஒருநாள் உட்கார்ந்து இதற்காக உளம் வருந்த நேரிடும்.

மூவர் முரசு அறைந்ததில், என்னைப் பொறுத்தமட்டில், இந்தப் புதிய கட்டத்தில் காமராஜர் காலடி எடுத்து வைப்பது தெரிகிறது.


> இவ்வளவு அதிகமாக நம்மோடு பயணம் நடத்தியாகி விட்டது. இனி இவர்களை என்ன கண்டித்தாலும் கோபித்துக்கொண்டு எங்கே போகமுடியும்!

என்று, காமராஜர் எண்ணிக்கொள்வதாகத் தெரிகிறது.

தம்பி! உள்ளபடியே, காமராஜரின் இந்த இரு தாக்குதலையும் எடுத்துக்காட்டி சில காங்கிரஸ் நண்பர்களே ஏளனம் செய்தனர்; நான் தலையைத் தொங்கவிட்டுக் கொள்ளாமல் என்ன செய்வது!

எனவேதான், இத்தாலி நாட்டிலே இரு வெறியர்கள் பல சிறார்களைச் சித்திரவதை செய்யக் கிளம்பியபோது, வீரமாகப் போரிட்ட வனிதைபற்றிப் படித்தபோது, எனக்கு, இங்குள்ள அரசியல் சூழ்நிலையும், அதிலே நாம் மேற்கொண்டுள்ள பணியும், நினைவிலே வந்தது. உன்னிடம் சொன்னேன்; வேறு யார் தம்பி, இருக்கிறார்கள் நான் கூறுவதைக் கேட்க!

அன்பன்,



11—11—'56

கடிதம்: 74

# இயற்கை கொஞ்சுகிறது! இல்லாமை கொட்டுகிறது!!

**உழைப்பும் சிக்கனமும்—'தினமணி'யின் விளக்கம்—தமிழ்நாட்டுத் தொழில் நிலை.**

தம்பி!

கடந்த ஒரு திங்களாகத் தமிழகத்திம், மாமழை பொழிந்த வண்ணமிருப்பதனால், இப்போது எங்கு பார்த்தாலும், இயற்கை கொஞ்சுகிறது—ஏரி குளங்களில் எழில் வழிகிறது—வயல் வரப்புகளிலே வண்ணம் காணப்படுகிறது—மரம் செடி கொடிகள் யாவும் பசுமை பொழிகின்றன. பாங்கான காட்சி தெரிகிறது. வரண்டுகிடந்த இடங்கள், வெடித்துக்கிடந்த வயல்கள், தூர்ந்து கிடந்த வாவிகள் வாய்க்கால்கள் எல்லாம் புதுக்கோலம் காட்டி நிற்கின்றன. எங்கள் மாவட்டத்தில், பாலாறுகூட 'கலகலென'ச் சிரித்துவிட்டது என்றால் பாரேன்!! பத்துப் பதினைந்து ஆண்டுகளாக, ஈரம் காணாது, இருந்த ஏரிகளெல்லாம் இன்று நிரம்பி வழிகின்றன. 'வெறிச் சென்று' இருந்துவந்த வெளிகள் பெருமழையால் வெள்ளக் காடாயின; மழை நின்றதும், சதுப்பாகி, இப்போது ஈரம் அழகளிக்கும் தோற்றம் தெரிகிறது. வரண்ட மனதினர் போன்றிருந்து வந்த குன்றுகளே இப்போது வளமளிக்கும் வகை பெற்ற நிலையில் இருக்கின்றன! அடவிகளின் நிலையைக் கூறவா வேண்டும்; நள்ளிரவில், நான் நண்பர்



களுடன் கூட்டம் முடித்துக்கொண்டு வருகிறபோது, 'சலசல' வென்ற ஒலி சூழ்ந்து கேட்கிறது! கதிரவனின் பொன்னிறக் கதிர் கிளம்பியவுடன், இயற்கையின் கோலம் காண்கிறேன்; உண்மையிலேயே இயற்கை கொஞ்சுகிறது. துரைத்தனத்தாரின் அலட்சியப்போக்கின் காரணமாகச் சிற்சில இடங்களில் 'உடைப்புகளும்' 'சேதங்களும்' ஏற்பட்டுவிட்டன; பட்டிகள் பலவற்றிலே மக்கள் அல்லற்பட நேரிட்டது; எனினும் மொத்தத்திலே, இயற்கை எழிலுடன் காணப்படுகிறது! இந்தப் பேருண்மை தெரியாமலா, 'மாமழை போற்றுதும்! மாமழை போற்றுதும்!' என்று மனம் கனிந்து பாடினார் இளங்கோ அடிகள்! வெண்ணிற மேகங்கள், உலவிய வண்ணம் உள்ளன—ஆடலழகிகள் நீலநிறத் திரைகொண்ட அரங்கிலே அன்னமென ஊர்ந்தும், அழகு மயிலென நடந்தும் காட்டும் பான்மைபோல! சூல் கொண்ட மங்கை புது எழில் பெறுதல்போல, மழை முத்துக்களைக் கருவிற்கொண்டு கரு நிறம் பெறுகின்றன—காணக் காட்சியாகின்றன—பிறகு, முறையும் நெறியும் மறந்தோரின் பிடியிலே சிக்கிவிட்ட நாட்டவருக்கு நாமேனும் இதம் அளித்திடல் வேண்டுமே என்ற நோக்கு கொண்டதுபோல, இயற்கை தன் அன்பைச் சொரிந்திடக் காண்கிறோம்.

வாரி வாரி இறைக்கிறார்கள் தம்பி, பணத்தை, கோடிக் கணக்கில். கிராமப்புனருத்தாரணம் என்கிறார்கள், தேசீய விஸ்தரிப்புத் திட்டம் என்கிறார்கள், சீரமைப்பு என்று செப்புகிறார்கள், சமாஜப் பணி, மாணவர் சேவை, என்று ஏதேதோ பேசுகின்றனர்—எனினும் இயற்கை மழை பொழிந்தானதும், தம்பி, பல கிராமங்கள் தீவுகளாகிவிடக் காண்கிறோம்—பாதைகள் வாய்க்கால்களாகி விடுகின்றன—கிராமங்கள் சகதிக் காடாகி விடுகின்றன! அந்த இலட்சணத்திலே இருக்கிறது, துரைத்தனம் அமைத்துள்ள பாதைத் தொடர்புகள்! பாலங்கள் ஓலமிடுகின்றன! மழை நீர் ஒழுங்காகச் செல்வதற்கான வழிகால்கள் சரியாக அமைக்காததால், ஆங்காங்கு குப்பை கூள மேடுகள் கிளம்புகின்றன! இத்தனை கேடுபாடுகளையும் நாம் மறந்திடச் செய்யும் விதத்தில், இயற்கை கொஞ்சுகிறது-இன்ப வாழ்வுக்கான வழி அளித்திருக்கிறேன்—வளம் கொழித்திட வகை தந்துவிட்டேன்—மகிழ்ச்சிப் பெருக்கெடுத்திடவேண்டும் என்பதற்காக மாமழை பெய்வித்துள்ளேன், மாந்தரே! காண்மின்! என்மீது குறை ஏதுமில்லை அறிமின்! வாழ்வில் இன்பம் பெறுவதற்குத் தடையாக நான் இல்லை என்பதை உணருமின்! உமக்கு உள்ள கொற்றம், குடிமக்களின் நல்வாழ்வு காணும் குறிக்கோள் கொண்டதாக அமைந்தால், உமக்கு வாழ்வில் இடர் ஏதும் வருவதற்கில்லை.

என் கடமையைக் கனிவுடன் செய்துள்ளேன், காண்மின்! அதோ அருவி! இதோ ஏரி, குளம், மடுவு, வாய்க்கால்! எங்கும் பசுமை! வளம்பெறுவதற்கான வாய்ப்புகள்!! — என்று இயற்கை பெருமிதத்துடன் பேசுகிறது!!

ஆமாம், தம்பி, இயற்கை கொஞ்சுகிறது, எனினும், இல்லாமை கொட்டுகிறது! என் பயணங்களில் நான் இரண்டையும் காண்கிறேன்! எல்லோரும் இன்புற்று வாழ்வதற்குத் தேவையான அளவு செல்வம் செழித்திடத்தக்க சூழ்நிலையை இயற்கை அளிப்பதும் தெரிகிறது! மிகப் பெரும்பாலான மக்கள், இல்லாமையால் இடர்ப்படுவதும் தெரிகிறது!! இயற்கையின்மீது குற்றம் காண்பதற்கில்லை. நில நடுக்கமேற்பட்டு நாசம் விளைதல், நெருப்பைக் கக்கி நாசம் ஏவுதல் போன்றதேதுமில்லை! வெள்ளச் சேதம் சிற்சில இடங்களில் காண்கிறோம். அரசுக்கு ஆற்றல் இருந்தால் தடுத்து, சேதம் ஏற்படாது செய்திருக்க முடியும் என்பதும் தெரியத்தான் செய்கிறது.

இயற்கை கொஞ்சுகிறது, இல்லாமை கொட்டுகிறது! காரணம் என்ன?

வயலிலே பசுமை தெரிகிறது, உழைப்பாளியின் உடலிலே பசைகாணோம்! இயற்கையின் அழகொளி எங்கும் தெரிகிறது! ஏழையின் கண்களோ இருண்டுதான் உள்ளன, ஒளி இல்லை!

இயற்கை வளமளிப்பதாக இருந்தும், இல்லாமை இந்நாட்டு மக்களிலே மிகப் பெரும்பாலோரைக் கொட்டுகின்ற இந்த நிலைக்குக் காரணம் யாது, இந்த நிலையினை மாற்றிட வழி என்ன, இந்த வழியினைக் கண்டறிந்து கடமையினைச் செய்து வெற்றிகாணும் பொறுப்பை ஏன் துரைத்தனம் ஏற்றுக்கொள்ளவில்லை, அங்ஙனம் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளாத துரைத்தனத்தை, மக்கள் எங்ஙனம் அனுமதித்துள்ளனர், ஏன் சுமந்து கிடக்கின்றனர், என்ற இன்னபிற எண்ணங்கள் எழுந்த வண்ணம் இருக்கும், பயணத்தின் போதெல்லாம்.

பொதுக் கூட்டம் நடைபெறும் இடத்திற்கு, சுற்றுப்புறங்களிலிருந்து, பத்து, இருபதுகல் தொலைவிலிருந்தெல்லாம், இளைஞர்கள், இருவர் மூவர் உந்து வண்டிகளில் வந்து குழுமிடக்கண்டு களித்ததுண்டு; இப்போது இலட்சிய ஆர்வம் கொண்ட இளைஞர்கள் மட்டுமல்ல, தம்பி, உழைத்து உழைத்து உருக்குலைந்து போயிருக்கும் விவசாயப் பெருங்குடி மக்கள், தாய்மார்கள் வருகிறார்கள்! கண்டதும் எனக்குக் கவலை குடைகிறது! ஆமாம், கவலைதான்! அவர்கள், உழைப்பின் பெருமையை உற்சாகத்துடன் பேசி வரும் தலைவர்களின்



துரைத்தனத்தினால், என்ன கதிக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது, கவலை குடையாமலிருக்க முடியுமா! கவனித்தாயா, தம்பி, இயற்கை கொஞ்சுகிறது, உழைப்பு நிரம்ப இருக்கிறது, இருந்தும், இல்லாமை கொட்டுகிறது!

மானும் மயிலும் மட்டுமல்ல, பாம்பும் புலியும் பிறவும் பெறுகின்ற வாழ்க்கை வாய்ப்புகள்கூட, இந்தக் கள்ளமில்லா உள்ளம் படைத்த மக்களுக்கு, துரைத்தனம் அளித்திட மறுக்கிறது. அந்தப் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளவே மறுக்கிறது.

பட்டினியும் பசியும், வேலையில்லாக் கொடுமையும் இருந்திடல், அறமல்ல, அந்த அவல நிலையைக்கண்டும் மாற்றிட முனையாத துரைத்தனம், நாகரிகமுள்ளதென்று எவரும் கூறார். இங்கோ இயற்கை அன்பு சொரிகிறது, மக்கள் வியர்வையைக் கொட்டுகிறார்கள். எல்லாம் பதவியில் உள்ளோருக்கும் அவருக்குப் பராக்குக்கூறி வாழ்ந்திடும் செல்வர்களுக்கும் குளித்திடப் பன்னீர் ஆகிறது; உழைத்தும் வாழ்வில் சுகம்காணா மக்கள், கண்ணீர் பொழிகின்றனர்; கண்ணீர்த்துளிக் கட்சி என்று நம்மைக் கேலி செய்வதாக எண்ணிக்கொண்டு சிலர் செப்புகின்றனரல்லவா, இந்த மக்கள், கண்ணீர்த்துளி கட்சி என்றால், அது நம்கட்சி, இனம் இனத்தோடு என்றபடி கண்ணீர் கண்ணீருடன் கலந்து உறவாடலே முறை என்று எண்ணிக்கொண்டனர்போலும்; பல்லாயிரக் கணக்கிலே கூடுகின்றனர்.

ஏத்தாபூர் என்றோர் சிற்றூரில் நான் பேசிக்கொண்டிருந்தேன்—நண்பர் N.V. நடராசன், சென்ற கிழமை முழுவதும், என்னைக் 'கிட்டி' போட்டு வேலை வாங்குவது என்பார்களே, அதுபோல வேலை வாங்கினார்; செல்லுமிடமெல்லாம், தேர்தல் நிதி திரட்டு, நன்கொடைகள், மேலும் மேலும் கேட்டு வாங்கு, பொதுச்செயலாளர் ஐந்து இலட்சம் கேட்கிறார், நிதிதிரட்டு, உடனே, இங்கேயே, பணம் திரட்டிக் கொடு என்று 'சிமிட்டா' கொடுத்தபடி இருந்தார்; நான்கூட குடந்தைக் கூட்டத்தில் சொல்லியும் விட்டேன். N.V. நடராசன் என்பதற்குப் பொருள் என்ன தெரியுமா நண்பர்களே! நன்கொடை வாங்கும் நடராசன் என்பது பொருள்—என்று!

ஏத்தாபூர் கூட்டத்தில் நான் பேசிக்கொண்டிருந்தபோது, கிராமத்து உழைப்பாளி ஒருவர்—முப்பது வயது இருக்கலாம்—அவர் மேனி உழைப்பால் கருத்து இருந்தது போலவே, அவர் கட்டியிருந்த ஆடை காலத்தால் கருப்பாகிக்

கிடந்தது—மேடைக்கு வந்தார்—தேர்தல் நிதி என்றுகூறி, தொகையின் அளவு கூருமல் பணம் கொடுத்தார்—தம்பி, ஒரு அணு!! ஆமாம்! அவ்வளவுதான் இருந்தது அந்த உத்த மனிடம். அதையேனும் கொடுத்தாக வேண்டும் என்ற கடமை உணர்ச்சி இருந்தது அந்தக் கண்ணியவானுக்கு. கனவான்களுக்கு உதிக்க முடியாத கடமை உணர்ச்சி அல்லவா அது! அந்த ஒரு அணுவை, நான் ஒரு இலட்சமாக மதித்து மகிழ்ந்தேன். உபசாரப்பேச்சு அல்ல! அந்த ஒரு அணுவை என்னிடம் கொடுக்கும்போது, நான் அந்த உழைப்பாளியின் முகத்தை நன்ருகக் கவனித்தேன்—இதயம் ஒரு அணுவாக வடிவெடுத்து வந்ததை உணர்ந்தேன். அன்று இரவு பசி நீக்கிக்கொள்ளப் பயன்பட்டிருக்கும், களைப்புப் போக்க தேனீர் அருந்தப் பயன்பட்டிருக்கும், ஆனல் அந்தக் கண்ணியமிக்கவன், நாடு மீளவும் கேடு மாளவும் நான் என்னுலான காணிக்கையை இதோ செலுத்து கிறேன் என்ற எண்ணத்துடன் தருகிருன் ஒரு அணு!

இத்தகைய நல்ல மனம் படைத்தோரெல்லாம், இயற்கை கொஞ்சுகிறது, உழைப்பு நிரம்ப தரப்படுகிறது என்ற நிலை இருந்தும், இல்லாமையால் கொட்டப்படுகிருர்கள்.

இவர்களை ஆளும் காங்கிரஸ் கட்சியினரோ, ஏழைகளை ஈடேற்ற, அவர்களுக்குத் தொழில் தந்து துயர்துடைக்க, ஏற்கனவே இரண்டாயிரம் கோடி ரூபாய் செலவிட்டுவிட்டார் கள், இன்னும் ஒரு ஆறு ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப் போகிருர்கள்!!

உழைத்து உருமாறிக் கிடக்கும் உத்தமர்களே! உங்களுக்கு உள்ள தரித்திரத்தைப் போக்க, துரைத்தனத் தார் இரண்டாயிரம் கோடி ரூபாய் செலவிட்டுள்ளனர். அறிவீரா? என்று நான் பொதுக்கூட்டங்களில் எடுத்துச் சொல்லிவிட்டு, இவர்களின் முகத்தைப் பார்க்கிறேன்—திகைத்துப் போகிருர்கள் இந்த மக்கள். இரண்டாயிரம் கோடியா! எமக்காகவா! ஏற்கனவே செலவிட்டாகிவிட்டதா? நிஜமாகவா? ஏனய்யா இப்படிக் கேலி செய்கிறீர்! வெந்த புண்ணிலே வெந்தழலைப் போடுகிறீர்! பகல் பட்டினி இராப் பட்டினி என்ற நிலையில் இங்கு நாங்கள் அவதிப்படுகிருேம், எங்களிடம் வந்து இரண்டாயிரம் கோடி ரூபாய் எமக்காகச் செலவிட்டாகிவிட்டதென்று சொல்கிறீர்களே என்று, கேட்பது போலிருக்கிறது அவர்கள் பார்வை!

இந்த இலட்சணத்தில் துரைத்தனத்தை தடத்தும் கட்சி யினர் கல்கத்தாவில் கமிட்டி நடத்தி, மக்களுக்குப் புத்திமதி



கூறுகின்றனர்! என்ன அறிவுரை அளித்துள்ளனர் அறிவாயோ, தம்பி, கேள்! கேட்டால், கைகொட்டிச்சிரிக்கத் தோன்றும்.

சிக்கனமாக வாழவேண்டும்

செலவைக் குறைத்துக்கொள்ளவேண்டும்

இதுதான், கல்கத்தாவில் சமதர்மச் சீமான்கள் கூடிக் கலந்து பேசித் தயாரித்த புத்திமதி.

வயிருரச் சோறின்றி, மானமார ஆடையின்றி, குடி யிருக்கக் குச்சிலின்றி, நோய் தீர மருந்தின்றி இருக்கிருர்களே இவர்களைப் பார்த்துத்தான் காங்கிரஸ் தலைவர்கள் சிக்கனம் என்ற அறிவுரை கூறுகிருர்கள். மிக மிக நெஞ்சழுத்தம் இருக்கவேண்டும் இதற்கு! இருக்கிறது, இத்தகைய நெஞ் சழுத்தம், சீமான்களுக்கு!

“எப்போதும், உனக்கு இந்தப் பஞ்சப்பாட்டுதான்! சாமி! சாமி! பணம்! பணம்! பணம்! செச்சேச்சே! இப்படியாடா, உயிரை வாங்குவது. கையைப்பிடிப்பது, காலைப்பிடிப்பது, பணத்தை எப்படியாவது, கெஞ்சிக் கூத்தாடிப் பெற்றுக் கொள்வது; பிறகு கண்ணை மூடிக்கொண்டு, வீண்செலவு செய்வது இதே உனக்கு வழக்கமாகிவிட்டது.” என்று எலும்பு உடையப் பாடுபடும் ஏழை உழவனுக்கு இதோப தேசம் செய்துகொண்டே, வெற்றிலைச் சாறைக் காரித்துப்பு கிருரே, வடபாதி மங்கலத்தார், குன்னியூரார், கோட்டை யூரார், கொடிக்காலுடையார், அந்தச் சாற்றிலே, குங்குமப் பூவும் கிராம்பும், ஏலக்காயும் சாதிக்காய் ஜாபத்திரியும், இருக்கிறது, தம்பி! புளித்துப்போன கஞ்சிக்கு, உறைப்புக் குறைந்துபோன மிளகாய்த் துண்டைத் தேடித் தவிக்கும் உழைப்பாளிக்கு, வீண்செலவு செய்யாதே என்று புத்தி கூறு கிருர்கள். கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் கமிட்டியில், இதே உபதேசம் தரப்பட்டது.

தினமணிக்கே பொறுக்கவில்லை. எவ்வளவு எரிச்சல் ஏற்பட்டிருந்தால், ஆளவந்தார்களின் இருமல் உறுமலைக்கூட இன்னிசை என்று கூறி, கூடச் சேர்ந்து தாளம் தட்டும் தினமணிக்கே கோபம் ஏற்பட்டு, வீண்செலவு செய்யாதீர் என்று ஊராருக்கு உபதேசம் செய்வது இருக்கட்டுமய்யா ஊராள்வோரே! முதலில் உங்கள் ஊதாரித்தனத்தைச் சற்றுக் குறைத்துக்கொள்ளுங்கள் என்று கூறும், என்பதை எண்ணிப்பார், தம்பி.

"பொதுமக்களுக்கு உபதேசம் செய்யும் அநாவசியச் செலவுத் தவிர்ப்பையும் சிக்கனத்தையும், மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்கார்களும் முதலில் தாமே பின்பற்றி பிறருக்கு வழிகாட்டிகளாக இருக்கவேண்டும்"

தினமணியின் திருவாசகத்தில் ஒரு துளி இது!

என்ன பொருள் கிடைக்கிறது இதிலிருந்து? ஊதாரித் தனமாகச் செலவிடுகிறது சர்க்கார் என்ற உண்மை. எப்படிப் பட்ட சர்க்கார் இப்படிப்பட்ட ஊதாரித்தனமாக நடந்து கொள்கிறது? எம்மை மிஞ்சக்கூடியவர்கள் யாரும் இல்லை. எமக்கு நிகர் யாமே!—என்று தம்பட்டமடிக்கும் கட்சியினர். உலகத்திலேயே உத்தமர் என்று பெயரெடுத்த காந்தியாரால், மாணிக்கங்களாக்கப்பட்ட மண்ணுங்கட்டிகளெல்லாம், தம்மை இயற்கைமாமணிகள் என்று கூறிக்கொள்கின்றன! அவர்தம் ஆட்சியிலே நடைபெறும் ஊதாரித்தனம், தினமணிக்கே பிடிக்கவில்லை; குமட்டலெடுக்கிறது!!

தினமணிக்கு ஏதோ கோபம், அதனால்தான் 'எதிர்க் கட்சி' பேசுகிறது, என்று எவரும் எண்ணிவிடக்கூடாது என்பதற்காக, மேலும் விளக்கம் அளிக்கிறது, அந்த ஏடு.

"சர்க்கார்களின் முயற்சிகளில் வீண்செலவு அம்சம் ஒரு அளவு இருக்கிறது என்பது உலகமறிந்த விஷயம். தணிக் கைக் கமிட்டிகள் இவற்றை ஒருவாறு புலப்படுத்தியுள்ளன. இவற்றிற்குமேலாக தண்டச் செலவுகளும் இருக்கக்கூடும். ஏராளமான அதிகாரிகளும், கமிட்டிகளும், கோஷ்டிகளும், ஜமாக்களும், ஆலோசனைகளும், அதிகாரிகளின் மகாநாடு களும், நடந்துகொண்டே இருக்கின்றன. இவற்றில் பெரும் பாலானவை அடிபட்டுப் போகவேண்டும். இதில் ஏற்படும் வீண்செலவும் வேலை நஷ்டமும் கொஞ்சநஞ்சமல்ல."

தம்பி! இயற்கை கொஞ்சுகிறது! இல்லாமை கொட்டு கிறது! இந்த நிலைமைக்குக் காரணமாக உள்ளவர்கள், 'ஜமாக்கள்' அமைத்துக்கொண்டு தண்டச்செலவு செய்து கொண்டு இருக்கிறார்கள். இது உலகறிந்த விஷயம் என்று தினமணி கூறுகிறது.

ஒவ்வொரு முறை தணிக்கைக் கமிட்டி தன் கருத் துரையை வழங்கும்போதும், நடைபெற்ற ஊழல்களை இடித்துக்காட்டுகிறது! எனினும், தண்டச் செலவும், தர்பார் போக்கும் துளியும் குறைவது கிடையாது. எதற்கு எடுத்தா லும் ஒரு கமிட்டி! எந்த விஷயத்தைப் பற்றிப் பரிசீலிக்கவும் ஒரு 'ஜமா'—ஒவ்வொன்றுக்கும் படிச்செலவு! ஒன்றை ஒன்று



மிஞ்சும் விதத்தில் செலவு! ஒரு கமிட்டியின் கருத்துக்கு நேர்மாறாக மற்றோர் கமிட்டியின் கருத்து! இந்தவிதமான ஆட்சியைச் செய்துகொண்டு, பணத்தைப் பாழாக்கி வரு கிறவர்கள்தான், பாட்டாளிகளுக்கு சிக்கனமாக வாழ்க்கை நடத்துங்கள்! வீண்செலவு செய்யாதீர்கள்! என்று உபதேசம் செய்கிறார்கள். இந்த அபாரமான கண்டுபிடிப்புக்காகக் கல்கத்தாவில் கூடினர்! நாடெங்கும் கொட்டமடித்துக் கிடக்கும் எந்தக் காட்டரசனுக்கும் தெரியுமே இந்த உபதேசம்.

பொதுப்படையாகப் பேசுவது போதாது—சுட்டிக்காட்டி யாவது இவர்களைத் திருத்தவேண்டும் என்றுகூடத் தினமணிக்குத் தோன்றி இருக்கிறது. எனவே, துரைத்தனம், எப்படியெப்படி தண்டச் செலவு செய்கிறது என்பதைப் படம் பிடித்துக்காட்டவே முற்பட்டிருக்கிறது.

"ஒரு சிறிய பள்ளிக்கூடத்துக்கு கால்கோல் விழா, சிறிய ஓடைப்பாலத் திறப்புவிழா போன்ற சாதாரண ஸ்தல பணிகளுக்கு மந்திரிகள் அழைக்கப்படுவதும், அநேகமாக எல்லாஜில்லா அதிகாரிகளும் வரவேண்டி யிருப்பதும், சகஜமாகிவிட்டது. இதனால் ஏற்படும் செலவுகள் முற்றிலும் அநாவசியமானவை"

இவ்வளவு பச்சையாக எடுத்துக் காட்டியாவது, திருத் தலாம் என்று தினமணி கருதுகிறது.

அமைச்சர்களுக்குக்கூடச் சிறிதளவு கோபம் உண்டாகும். திண்ணைப் பள்ளிக்கூடத் திறப்பு விழாவும், ஓடைப்பால அமைப்பு விழாவுக்கும் நாம் சென்று வீண் செலவிடுகிறோம் என்று தினமணியே கேலிசெய்கிறதே என்று வருத்தமாக இருக்கும். ஆனால் இதுபோன்ற ஒவ்வோர் விழாவையும், மக்கள் காண நேரிடும்போது எத்துணை வேதனை அடைகிறார் கள் என்பதை இந்த அமைச்சர்கள் உணர்ந்தால்தானே! எத்தனை எத்தனை வீண் விழாக்கள்! தண்டச் செலவுகள்! எத்தனை கால்கோள் விழாக்கள்! கட்டடம் என்றென்றும் எழுப்பப் போவதில்லை என்பது, ஊராருக்கும் தெரியும், இவர் களும் அறிவார்கள், எனினும் அதற்கும் ஓர் விழா! மக்களைக் காணவும், மக்கள் முன்பு தமக்குக் கிடைத்துள்ள புதிய மதிப்பைக் காட்டிக்கொள்ளவும், மாவட்டகலெக்டர் முதற் கொண்டு, தமது ஏவலர்களாகக் கைகட்டி வாய்பொத்தி நிற்பதைக்காட்டவுமன்றோ இந்த விழாக்கள் நடக்கின்றன. வீண் விழாக்கள்! தண்டச் செலவு! என்று கண்டிக்கும் இதே தினமணிகள், இந்த விழாக்களின் கோலத்தை விளக்கத் தனி

நிருபர்களை அனுப்புவதும், படம்போட்டுப் பாராட்டுவதும் கொஞ்சமா! இப்போது, நாற்றம்தாளமுடியாததாகிவிட்ட தால், இந்தத் தண்டச் செலவுகள் ஏன் என்று கேட்டுத்தீர வேண்டி வந்தது இந்த ஏட்டுக்குக்கூட!

''பிறர் நாலணவில் செய்யக்கூடியதை சர்க்கார் செய்தால் எட்டணு ஆகிறது என்ற பழிச் சொல்லுக்கு இடங்கொடுக்கலாகாது. தாம் தரும் வரிப்பணம் அதிக பட்ச சிக்கனமாகவும், நிறம்படவும் பயன்படுகிறது என்ற நம்பிக்கை பொதுமக்களுக்கு ஏற்படவேண்டும்''

என்று 'இரத்தினச் சுருக்கமாக' இன்றைய ஆட்சிமுறையின் யோக்யதையைத் தினமணி அம்பலப்படுத்துகிறது.

இன்றுள்ள ஆட்சிமட்டும காங்கிரஸ் கட்சியுடையதாக இல்லாமலிருந்தால், தினமணியின் எழுத்திலே தீப்பொறி காண்போமே!

ஜஸ்டிஸ் கட்சிக் காலமாக இருந்தால், என்னென்ன எழுதத்தோன்றும், இந்தத் தேசீய ஏடுகளுக்கு!

ஏழை அழுகிருன்; அவனைக் கொள்ளை அடித்துக் கொட்டமடிக்கிருர்கள்.

கமிட்டி கமிட்டி என்று அமைத்துக்கொண்டு, ஏழை யின் பணத்தைப் பகற்கொள்ளை அடிக்கிருர்கள்.

திறப்பு விழாவாம்! மூடு விழாவாம்! இதற்கு பணம்' கொள்ளை போகிறது!

இந்தத் 'தூங்குமூஞ்சிகளை' யார் காண விரும்பு கிருர்கள்! எதற்காக இதுகள் விழா நடத்த வரவேண்டும்!

நாலணு செலவுக்கு நாலு ரூபாய் எடுத்துக்கொண்டு, கொழுத்துவிட்டார்கள்!

என்று காரசாரமாக, நடையை நாராசமாக்கி எழுதுவர்! இப்போது தமது சொந்தக்கட்சியே இத்தகைய கேவலமான நடத்தையில் ஈடுபடுவதால், தினமணியால், இப்படியும் அப்படியுமாகத்தான் இடித்துக்காட்ட முடிகிறது. ஆனல், உண்மையை ஊரார் அறிந்து கொள்வதற்கு இவ்வளவே போதும். இயற்கை கொஞ்சுகிறது, இல்லாமை கொட்டுகிறது, அதற்கான காரணத்தில் ஒன்று ஊராளும் பொறுப்பும் வாய்ப்பும் ஒரு ஊதாரிக் கூட்டத்திடம் ஒப்படைக்கப்பட் டிருக்கிறது என்பது. இதனை உணர்ந்துகொள்ள, தினமணி யின் கண்டனம் போதுமானதுதான்.



இம் முறையில் ஊதாரித்தனமாக நடந்துகொள்ள எப்படி முடிகிறது? கேட்பதற்கு நாதி இல்லை! தினமணி எழுதுவதுகூட குதிரை பறிபோன பிறகு கொட்டிலைப் பூட்டும் கதை போன்றதுதான். கமிட்டிகள், ஜமாக்கள், விழாக்கள், வீண் செலவுகள், இவை கிளம்பும் போதே, ஆட்சி மன்றத்திலே, கேள்விக் கணைகளைப்பூட்டி, தடுத்து நிறுத்த எதிர்க்கட்சி எங்கே இருக்கிறது? கடிவாளம் இல்லை, குதிரை, காடுமேடு தாவிச் செல்கிறது!! எதிர்க்கட்சி இல்லை, எனவே, ஊரார் பணம் ஊதாரிச் செலவுக்குப் பாழாக்கப் படுகிறது!!

இரண்டாயிரம் கோடி என்ன—இருபதினுயிரம் கோடி செலவானுலும், இப்படிப்பட்ட துரைத்தனம் நடத்துவோரின் தர்பாரில் நாடு சிக்கிக் கிடக்கிறவரையில், இல்லாமை கொட் டத்தான் செய்யும்—இதனைத் தம்பி! அரசியல் விளக்க ஏடுகள் படித்தவர்கள் அறிந்து கொண்டிருப்பதைவிட, நான் காட்டினேனே, ஒரு அணு கொடுத்த உழைப்பாளி, அப்படிப் பட்டவர்கள் மிக நன்ருகத் தெரிந்து கொண்டிருக்கிருர்கள்.

இதுதானு இரகசியம்? நீங்கள், இல்லாமைக்குக் காரண மாக இருப்பவர்கள் இந்த ஊதாரித்தனமிக்க ஆட்சியாளர்கள் என்பதை எடுத்துரைக்கிறீர்களா—? இதைக் கேட்கத்தான், திரள் திரளாக மக்கள் கூடுகின்றனரா? அப்படியானல், நாங்களும் அதனையேதானே செப்புகிருேம்? உம்மைவிடச் சற்று அதிகமான வீரதீரத்துடன், காரசாரமாகவே சொல் கிருேமே......என்று கேட்கும், மற்ற மற்ற கட்சிகளைக் காண்கிறேன்.

தம்பி! இயற்கை வளமளித்தும், உழைப்பு உற்பத்தி அளித்தும்கூட, இல்லாமை கொட்டுவதற்குக் காரணம், ஆட்சியாளர்களின் ஊதாரித்தனம் மட்டுந்தான் என்று கூற வில்லை. பல காரணங்களிலே இது ஒன்று என்பதை விளம்கி விட்டு, ஊதாரித்தனமாக நடந்துகொள்ளாதீர்கள், ஊருக்குப் பயந்து ஆட்சி நடத்துங்கள், ஏழையின் வயிறு எரியச் செய்யாதீர்கள், என்று அறிவுரை கூறித் திருத்த முற்பட்டா லும், ஆட்சிக் குழுவினரையேகூட மாற்றி அமைத்தாலும், பலன் கிடைக்காது; ஏனெனில், நந்தம் நாட்டைப் பொறுத்த மட்டில், ஆட்சியிலே வீற்றிருப்போருக்கு, அளிக்கப்பட்டுள்ள அதிகாரம் மிகமிகக் குறைவு; ஆட்டிப்படைத்திட டில்லியிலே ஓர் பேரரசு இருக்கிறது, இங்கு உள்ளது, பேருக்குத்தான் அரசு என்ற உண்மையை எடுத்துக் காட்டுகிருேம்.

இதுபோது காணக்கிடைக்கும் இயற்கை அழகு ஒருபுறம் இருக்கட்டும், தம்பி, திராவிடம் முழுவதும்கூட அல்ல, தமிழகம் வரையிலேயே வேண்டுமானால், பார்க்கச் சொல்லு, பரந்த மனப்பான்மையினரை, என்ன வளம் இங்கு இல்லை? என்ன பொருள் கிடைக்கவில்லை?

தமிழ்நாடு எல்லை, சிதைக்கப்பட்டு, உரிய இடங்கள் பறிக்கப்பட்டுப் போன நிலையிலும், தனி அரசு செலுத்தி மதிப்புடன் வாழ்ந்து வரும் பல சுதந்திர நாடுகளைவிட, அளவிலும் வளத்திலும் பெரிதாகவே இருக்கிறது.

50,170 சதுர மைல் அளவுள்ளது இன்றைய தமிழகம்!

தமிழகத்து மக்கள் தொகை மூன்றுகோடி—இதில் 2,65,46,764 மக்கள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்.

விளைநிலம் மட்டும் 15,878,000 ஏக்கர் உள்ளன என்று புள்ளி விவரத் தயாரிப்பாளர்கள் கூறுகின்றனர்.

விளைநிலம் ஆகத்தக்கதும், இன்று ஆட்சியாளரின் அசட்டையால் கரம்பாகிக் கிடப்பதும் மட்டும் 37 இலட்சம் ஏகருக்கு மேலிருக்கிறதாம்.

காட்டு வளத்துக்கும் குறைவு இல்லை.

விஞ்ஞானத் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான கனிப் பொருள்கள் ஏராளமாக உள்ளன, பூமிக்கடியிலே தூங்கிக் கிடக்கின்றன!

இன்று புதியமுறை தொழில்களுக்காக,

குரோமைட்

மோனசைட்

சில்மனைட்

கார்னெட்

என்றெல்லாம் கூறுகிறார்களே, அப்பொருள்களும், உலகத்தின் போக்கையே மாற்றி அமைக்கத் தக்கதான.

தோரியம்

யுரேனியம்

ஆகியவைகளும் தமிழகத்தில் ஏராளமான அளவுக்குக் கிடைக்கின்றன.



பொன்னும் மணியும் ஒரு நாட்டுக்கு வாழ்வும் வளமும் அளித்திடாது; ஆனால் எந்த நாடும் பொன்னாடு ஆகத்தக்க நிலையை ஏற்படுத்த இரும்பும் நிலக்கரியும் இருக்கவேண்டும். இந்த இரு செல்வங்களையும் தமிழகம் தன்னகத்தே கொண்டிருக்கிறது. நெய்வேலி பழுப்பு நிலக்கரியின் பாங்கினைப் பாராட்டாத நிபுணர் இல்லை; மிக உயர்தரமானது என்கின்றனர்; கிடைக்கும் அளவும் மிகப்பிரம்மாண்டமானது; பல நூற்றாண்டுகள் கிடைக்குமாம்!

கஞ்சமலை, கோதுமலை, கொல்லிமலை, கொத்தளமலை, பச்சைமலை, பெருமாமலை, தீர்த்தமலை, சித்தேரிமலை ஆகிய இடங்களில், இரும்பு சிறைப்பட்டிருக்கிறது, விழிப்புற்று எழுச்சிபெற்ற தமிழகம் அமையுமானால், தூங்கிக் கிடக்கும் இந்தக் கருப்புத் தங்கத்தை வெட்டிக் கொணர்ந்து, தமிழகத்தைத் தொழிலகமாக்கிச் செழிப்பினைக் காணலாம். சேலம் மாவட்டத்திலே இரும்பு! தென் ஆற்காடு மாவட்டத்திலே நிலக்கரி! சேலத்து இரும்பு 30 கோடி டன் என்கிறார்கள். நெய்வேலி நிலக்கரி 100 சதுரமைல் அளவுக்கு அடைந்து கிடக்கிறதாம், 200 கோடிடன் அளவு நிலக்கரி உள்ளது என்கின்றனர்.

சேலம் சேர்வராயன் மலையில் பாக்சைட், மாக்னசைட், திருச்சி அரியலூர் வட்டாரத்தில் ஜிப்சம், குமரி முனையில் தோரியம்,—தம்பி! காவிரிப் பகுதியில் பெட்ரோலாம்! எந்தெந்தப் பொருள் கிடைக்காமல் நாடு பல திண்டாடுகின்றனவோ, அந்தப் பொருள் யாவும் இங்கு நமக்காக இயற்கை, கட்டிக் காத்து வருகிறாள்—கனிவுடன் அழைக்கிறாள், ஆனால், வெட்டி எடுக்க நமக்கு உரிமை ஏது!

கட்டித் தங்கமடா, மகனே! பலகாலமாக உனக்காக நான் காத்து வந்திருக்கிறேன், வெட்டி எடுத்துக்கொள் என்று வாஞ்சையுடன் தாய் அழைக்கிறாள், தனயன், "அந்தோ அன்னையே! என் கரம் கட்டுண்டு கிடக்கிறதே!" என்று கண்ணீர் பொழிந்து நிற்கிறான்.

சேலத்து இரும்பு சிறைப்பட்டிருக்கிறது—டாட்டா கம்பெனிக்கு நாம் கப்பம் கட்டுகிறோம்.

நெய்வேலி நிலக்கரி வெளிவர மறுக்கிறது, இங்கு ஏழையின் கும்பி, இல்லாமையால் எரிகிறது! காடு போதும், நாட்டுக்கு செல்வமளிக்க! எனினும் இங்கு நஞ்சை கரம்பாகிறது—கரம்பு கள்ளிகாளான் படரும் இடமாகிறது. பச்சை மாமலைகளும், பளிங்கன்ன நீரோடைகளும்,

இங்கு இருந்தும், பசி! பசி! என்று பதறிக் கதறி, வேலை கிடைக்காததால் வேற்றுச் சீமைகள் சென்று சோற்றுக்கு அலைகிறார்கள், நேற்றுவரையில் நானிலம் போற்றிடத்தக்க நல்லாட்சியில் இருந்தவர்கள்.

கத்துங் கடலில் முத்து எடுத்து கடலகமெனத்தகும் கலம்தனில் ஏறிச்சென்று, காற்றை அடக்கி, யவனம் சென்று வாணிபம் நடத்தி, பொன்னும் புகழும் ஈட்டினர் முன்னோர்.

நாமும் தமிழரே! நாமமதில் தமிழர் என்றாரே, பாரதியார், அந்தத் தமிழர்! நாம், நமது உடன்பிறந்தாரை, மலாய்க் காட்டுக்குத் துரத்திவிட்டிருக்கிறோம்! பர்மாவில் ரப்பர் பால் எடுக்கிறார்கள்—தாயகத்தின் கோலத்தை எண்ணி அழுகின்றனர்! இங்குள்ள ஏழை எளியவர்களோ இல்லாமை கொட்டும்போது, 'அக்கரை' சென்றாலாவது அரை வயிறு கஞ்சி நிச்சயமாகுமே, போகலாமா, என்று எண்ணி ஏங்கிக் கிடக்கின்றனர்.

கட்டழகி, கன்னிப் பருவத்தினள் கலகலெனச் சிரித்தபடி, மணமிகு சந்தனம் குழைத்துப் பூசி, மகிழ்தல் போல பொன்னி எனும் பேரழகி பூரிப்பை அள்ளித் தெளிக் கிறாள். காவேரி தண்ணீர் பட்டால் கன்னியர் மேனி தங்கம், தங்கம்! என்று கவி சுரக்கிறது, அவள் எழிலை எண்ணும்போதே.

செந்நெலைக் கண்டு செங்கமலம் சிரிக்கிறாள்—அன்னம் அதுகண்டு நின்ற நிலையிலன்றோ நீ இருப்பாய், என்போல் குடைந்தாடி மகிழவல்லாயோ என்று கேட்டு, கவர்ச்சியூட்டக் காண்கிறோம்.

கன்னல் விளைகிறது, காரமிக்க மிளகுக் கொடிகள் படரு கின்றன!

உலகின் தொழில்துறை பலவற்றுக்கும் தேவையான ரப்பர் விளையும் காடுகள்—மனைக்கும் மரக்கலத்துக்கும் தேவையான தேக்கு—ஓங்கி வளரும் தெங்கும், ஒயிலாகக் காட்சி தரும் கமுகும், என்னென்ன எழில், எத்துணை வளம், எல்லாம் நந்தம் இன்பத் தமிழகத்தில்!

முல்லை மணமும், காட்டிலே விளைந்துள்ள சந்தன மரத்திலே உடலைக் களிறு தேய்ப்பதினாலே எழும் நறுமண மும், தென்றலிற் கூடிக் கலந்து வந்து, தமிழகத்துக்கு என்றோர் தனிமணமல்லவா தருவதாக உளது.



எனினும், வறுமை முடை நாற்றமன்றோ அடித்திடக் காண்கிறோம்.

சந்தன மணத்தைச் சாகடிக்கும் அளவுக்குச் சஞ்சலச் சாக்கடை நாற்றமடிக்கிறது.

இத்தனை இருந்தும் இல்லாமையை விரட்டிட ஓர் மார்க்க மின்றி இடர்ப்பட்டுக் கிடப்பதற்குக் காரணம், உள்ளத் தெளி வற்றோர், ஊதாரிகள், மக்களாட்சியின் மாண்பினை மாய்த் திடுவோர் பிடியில் ஆட்சி சிக்கிவிட்டது என்பது மட்டுமல்ல, இவர்களின் அதிகாரம் என்பது செல்வர் சிலருக்குச் சுக போகம் வழங்கிடவும், செல்லரித்துப்போன வாழ்வினர், பெருமூச்சினைச் சிறிது உரத்துக் காட்டினாலே, பிடி! அடி! சுடு! என்று அடக்குமுறை வீசவுமான அளவுக்குத்தான் அமைந் திருக்கிறது!! தமிழகத்தைத் திருநாடு ஆக்கும் திட்டம்தீட்டிச் செயல்படும் உரிமை இவரிடம் இல்லை! மக்களின் வாழ்க்கை யில் உள்ள வாட்டத்தை ஓட்டிட, இயற்கை வளத்தையும் மக்களின் உழைப்பின் திறத்தையும் ஒன்று கூட்டிட, அதன் பயனாகக் கிடைக்கும் செல்வத்தைச் சமுதாய உடைமை யாக்கிட இவர்கட்கு, உரிமை கிடையாது. எனவே, இயற்கை கொஞ்சியும் இல்லாமை மிஞ்சுகிறது என்றால், அதற்கான காரணங்களிலே மிக முக்கியமானது, இங்கு அமைந்துள்ளது பேருக்குத்தான் அரசு—சிலருடைய பெருமைக்குத்தான் அரசு—உண்மையில் முழு அதிகாரம் படைத்த அரசு அல்ல.

இது பிரசாரம்—தீதான பிரசாரம் என்கின்றனர் டில்லி யிடம் வரம் கேட்டு வாங்கி வாழ்க்கையை நடத்தி வருவோர்.

இது குறுகிய மனப்பான்மை, குறை நெளியும் கொள்கை, தவறுள்ள தத்துவம் என்கின்றனர், அகிலமெல்லாம் கட்டி ஆளும் ஆற்றலைப் பெற்றோம் என்ற ஆசைக்குப் பலியான வர்கள்.

அமைச்சர்கள்—அதிலும் அமைச்சர் அனைவருக்கும் 'வாய்' அளித்திடும் நிதி அமைச்சர்—டில்லியின் ஆதிக்கம் என்பது அபத்தம் என்று அறைகிறார்.

ஆனால், இவர்களில் ஒவ்வொருவரும், தத்தமது தலையில் குட்டு, எரிச்சல் ஏற்படும் அளவுக்குப் பலமாக விழும்போது, பதறிப்பதறிக் குளற முன் வருகின்றனர்—ஆமாம்! டில்லி யிடம் கேட்கவேண்டும்! எம்மிடம் இல்லை! என்று பேசு கின்றனர்.

முதலமைச்சர் காமராஜரே கூடப் பேசுகிறாரே, உயிர் நீத்த உத்தமர் சங்கரலிங்கனாரின், கோரிக்கைகள் 12ல், 10 மத்திய சர்க்காரைப் பொறுத்தது என்று.

அமைச்சர்களாக ஆக்கப்பட்டுள்ள இவர்களுக்கு, டில்லியின் தயவு இருக்கும் வரையில்தான் 'பதவி பவிசு எல்லாம், டில்லியின் முகம் சிறிதளவு சுளித்திடும் அளவில் இவர்களின் போக்கு இருப்பினும்கூடப் போதும், காஷ்மீரச் சிங்கத்தின் கதிதான்!

பாகிஸ்தானில் உள்ளவர்கள் உன் இனத்தவராக இருக்கலாம், பழக்க வழக்கத்தால், நடைநொடி பாவனைகளால், அங்கு உள்ளோர் நமது இனத்தவர், என்று தோன்றக் கூடும் —ஆனால் அந்தச் சபலத்துக்கு இடமளித்தால், உமது சுதந்திரம் சுக்குநூறாகும்—என்று அன்பு சொட்டச் சொட்டப் பேசி, காஷ்மீர் சிங்கம் ஷேக் அப்துல்லாவை வலையில் போட்டுக்கொண்டு, பாரதம் முழுவதும் உலாவரச்செய்து, அவரைக் கொண்டே ஜனப் ஜின்னாவை ஏசச்செய்து, பாகிஸ்தானை எதிர்க்கச்செய்து, இவ்வளவுக்குப் பிறகு, அவர் காஷ்மீர் இந்தியாவின் நேசநாடாகமட்டும் இருக்கும், ஆனால் அடிமை நாடு ஆகாது, தனி நாடாகத்தான் இருக்கும் என்று கூறத் துணிந்ததும், அவர் வாயை அடைத்து, கைகாலைக் கட்டி, சிறையில் போட்டுப் பூட்டி, வழக்கும் போடாமல், வாட்டுகிறார்களே! சிங்கத்துக்கே இந்தக் கதி என்றால் சிறு நரிகள் கதியாதாகும்!! இந்த அச்சம், நமது அமைச்சர்களைப் பிடித்தாட்டுகிறது.

இந்த நிலைமையைக் தம்பி, நாம் ஒவ்வோர் நாளும் கூறுகிறோம், ஒவ்வோர் துறையிலே கிளம்பிடும் பிரச்சினைகளையும் எடுத்துக் காட்டிக் கூறுகிறோம்.

நமக்கு ஏன் இந்த வம்பு என்று இருக்கும் இயல்பினர் கூட தமக்குத் தனி அக்கரையுள்ளதென்று உள்ள பிரச்சினைகளிலே, டில்லியின் இரும்புக் கரம் அழுத்தமாக விழுகிற போது, அலறித் துடித்துக் கிளம்புகின்றனர்.

இறக்குமதி ஏற்றுமதி சம்பந்தமாக நீதி கிடைக்க வேண்டும், டில்லியிடம் நீதி கிடைக்கவில்லை, என்று மனம் உறுத்தும்போது வாணிபத்துறையினர், வாய் திறக்கின்றனர். எல்லாம் டில்லியிடமா! ஈதென்ன முறையற்ற செயல்!!— என்று குமுறுகின்றனர்.

தொழில் துவக்குவோர், துவக்கிடும் தொழில் துவண்டிடக் காண்போர், மனம் நொந்த நிலை பெறுகிறபோது, எழுகின்றனர், எல்லா வளமும் வடக்கேதானே! தெற்கையார் கவனிக்கிறார்கள்? என்று கேட்கின்றனர்.



அவ்வப்பொழுது அனந்தராமகிருஷ்ணன் எனும் தொழிலதிபர், பேசிடக் கேட்கிறோமல்லவா?

அமைச்சர்களேகூடச் சிலவேளைகளில், பேசிவிடுகின்றனர்—பிறகு அஞ்சி ஆமையாகிவிடுகிறார்கள்.

குமாரசாமி ராஜா அவர்கள் குமுறிய உள்ளத்தோடு பேசத் தலைப்பட்டதை, நாடு எங்ஙனம் மறந்துவிடும்! எல்லாம் மத்திய சர்க்காரில் என்று இருக்கும் நிலைமையை எதிர்த்துப் போரிடவேண்டிய காலம் விரைவில் வரும் என்றல்லவா கூறினார்.

தமிழகம், அவர் இந்தத் துறையில் முனைந்து நிற்பாரானால், வாழ்த்தி வரவேற்றிருக்கும், வணங்கி அவர் தலைமையைப் பெற்றிருக்கும்.

கோவையில் கொதித்தெழுந்தவர், பிறகு ஏனோ மௌனமாகிவிட்டார். காலம் கனியவில்லை என்று கருதுகிறாரோ— என்னவோ!

எனினும் அவரவருக்கு முக்கியமானது—உயிர்ப் பிரச்சினை என்று கருதத்தக்க கட்டம் கிளம்பும்போது, அவர்களெல்லாம், டில்லியின் ஆதிக்கம் ஆகாது, கூடாது, பெருந் தீது! என்று பேசுவது காண்கிறோம்.

இவர்களெல்லாம் தொடர்ந்து இந்தக் கருத்தை நாட்டிலே எடுத்துரைத்து, மக்களைப் பக்குவப்படுத்தலாகாதா என்று ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கிறோம். பிறகோ அவர்கள், வாய்மூடிடக் கண்டு வாடுகிறோம்; சரி, சரி, இன்னும் இவர்களே பக்குவப்படவில்லை என்றெண்ணிக் கொண்டு, நாம் நமது பணியினைத் தொடர்ந்து செய்து வருகிறோம். ஒரு அணா கொடுத்தானே, உழைப்பாளி, அவன் இதை அறிவான்!! நம்மிடமிருந்து தொடர்ந்து இந்தப் பணியை எதிர்பார்க்கிறான். சோர்வடையாதீர்கள்! என்னால் ஆன உதவியை நான் அளிப்பேன் என்று சொல்லால் அல்ல, செயலால் காட்டுகிறார்கள், இத்தகைய செம்மல்கள். அவர்களை அமைச்சர்கள் அறிவதில்லை.

இந்தியாவிலிருந்து கலைத் தூதுக் குழுவினர் பலர் பலமுறை வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கின்றனர்...மக்கள் போற்றி மகிழும் கலைஞர்கள் தமிழ்நாட்டிலிருந்து தூதுக்குழுவுக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பப்படவில்லை. ஊர்பேர் தெரியாத யாரோ ஒரு சிலர் தமிழ் நாட்டின் கலைஞராகப் போய்வருகிறார்

கள். காரணம் என்ன? மக்களின் மனதை அறிந்து நடக்கும் ஆட்சி இல்லை. மத்திய அரசியலார், பாராளுமன்றத்தில் ஒரு சிலரைமட்டும் நம்புகிறார்கள். அவர்கள் மனம்போல் எல்லாம் நடக்கிறது. மத்திய அரசியலாரின் போக்கை மாற்றவோ திருத்தவோ இங்குள்ள அரசியலார் முன்வருவதில்லை! அச்சம் தடுக்கிறது.

தம்பி! பிரச்சினை, கலைத்துறை பற்றியது—எனினும் என்ன—எந்தத் துறையில் அநீதி காணப்பட்டாலும் அதனைக் கண்டித்துக் களைந்து எறியத்தானே வேண்டும்.

மத்திய அரசியலாரின் போக்கைக் கண்டிக்கிறார்—இதனை மாற்றாது இருக்கும் இங்குள்ள நமது பேர் அரசையும் கண்டிக்கிறார்.

அச்சம் தடுக்கிறது இவர்களை என்றார்.

பயந்தாங்கொள்ளிகள்—தொடை நடுக்கம் கொண்டோர்—கோழைகள்—என்றெல்லாம் அந்த அச்சம் என்பதற்குப் பல பொருளைப் பெறலாம். அச்சம் தடுக்கிறது! என்ன அச்சம்! அதுதான் தம்பி, ஷேக் அப்துல்லா பற்றிச் சொன்னேனே, அந்த அச்சம்தான். பதவியும் பவிசும் போய் விடுமே என்ற அச்சம்—வேறென்ன? போனால் என்ன? மானமன்றோ பெரிது! நாடல்லவா பெரிது! என்று ஒரு அணா கொடுப்போன் கேட்பான்—ஆமாம்—அவனிடம் அணாக்கள் தானே உள்ளன. பதவியில் உள்ளவர்கள், மானத்தை இழந்து விட்டாலும், இலட்சாதிபதியாகிறார்களே—அதிலே அவர்களுக்குத் திருப்தி—பெருமை—பாசம்! ஆசை ஊட்டவும் அச்ச மூட்டவும், டில்லிக்கு முடிகிறது.

டில்லிக்கு இந்த நிலை இருக்கும்வரையில், இங்கு அரசுக் கட்டிலில் அமருவோர் அடங்கி ஒடுங்கி 'அடைப்பம்' தாங்கு மட்டும் கொலுவிருக்கலாம். ஏனென்று கேட்கத் துணிந்தால், ஷேக் அப்துல்லாவாக வேண்டும். இந்த அச்சம் தடுக்கிறது!

எனவேதான் தம்பி, ஆட்டிப்படைக்கும் டில்லியின் பிடியில் திராவிடம் சிக்கிக் கிடக்கும் நிலைமை ஒழிந்தாக வேண்டும் என்று நாம், கூறுகிறோம்.

தமிழ்நாட்டு மக்களின் பலவகைக் கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. எல்லைப் பிரச்சினையைத் தமிழ்மக்கள் முன் ஒருமுறை எழுப்பியபோது, ''கேட்கத் துணிந்துவிட்டீர்களா? கேட்டால் உள்ளதும் போய்விடும்''



என்று' செங்கோட்டையை எடுத்துப் பிறருக்குத் தந்தனர். மீண்டும் ஒருமுறை கேட்டபோது ''அப்படியா? இன்னும் உங்கள் துணிவு போகவில்லையா? தமிழ்நாடு என்று நாடும் இல்லாமல் செய்துவிடுவோம். தட்சிணப் பிரதேசம் என்று உங்களில் சிலரைக் கொண்டே மாற்றியமைத்துவிடுவோம். எங்களால் முடியும், தெரியுமா?'' என்ற மிரட்டலே கிடைத்தது. அமைதியான கிளர்ச்சி ஒன்று நடந்தபோது ''இவ்வளவா, தமிழ்நாடு என்ற பெயரும் கிடையாது, போ'' என்று விரட்டலே கிடைத்தது.

தெளிவாக, நிலைமை விளக்கப்பட்டிருக்கிறதே, படம் பிடித்துக் காட்டுவது போலிருக்கிறதே, யார் இப்படி விளக்கமாகத் தந்திருப்பவர்—என்று கேட்கத் துடிக்கிறாய் அல்லவா?


தம்பி, மிரட்டல், விரட்டல், என்று கூறியிருப்பது கேட்டு ஆட்சியாளர்கள் மனம் 'சுருக்'கெனத்தான் தைக்கும். ஆனால், நிலைமை இதுதான். அச்சத்தால், இங்குள்ள அமைச்சர்கள் காலமெலாம் வாயடைத்துத்தான் கிடக்கின்றனர்—எப்போதோ ஓர் சமயமாகிலும், பொதுமக்கள் பொங்கி எழுவது கண்ட பீதியால், எதிர்க்கட்சிகளின் ஏளனம் குத்துவதால், ஓரோர் சமயம் உள்ளமே சுடுவதால் துடித்து எழுந்து, நீதி கேட்கின்றனர். அப்போது டில்லியிடமிருந்து அவர்கட்குக் கிடைப்பது என்ன? மிரட்டல்—விரட்டல்!

ஆமாம், டில்லியின் போக்கையும் இங்குள்ள நம் அமைச்சர்களின் நிலையையும் அழகுபட எடுத்துரைத்துள்ள இவர் யார், என்றுதானே கேட்கிறாய்.

தம்பி, இவர் நமது கழகம் அல்ல. எந்தக் கழகத்தினரும் அல்ல, அரசியல்வாதியே அல்ல.

அப்படியா? அப்படியானால்...யார்.....என்று கேட்கிறாய், தெரிகிறது...கேட்டுப்பார், நண்பர்களை, இப்படி, டில்லி—சென்னை நிலைமைகளைப் படம் பிடித்துக் காட்டுபவர், யார் என்று; நீயே கூடத்தான் கண்டுபிடியேன் பார்க்கலாம். அடுத்த கிழமை நான் அவரை உனக்குக் காட்டுகிறேன்.

அன்பன்,



18—11—'56

கடிதம்: 75

# மிரட்டல்! விரட்டல்!

**டாக்டர் மு.வ.வின் கருத்தும் டில்லி அரசினர் போக்கும்—டில்லியின் ஓரவஞ்சனை—கல்வி, கலை, அரசியலில்.**

தம்பி!

தக்கோரைத் தேர்ந்தெடுத்து கலைத் தூதுக்குழுவிலே அனுப்பும் திறம் மத்திய சர்க்காருக்கு இல்லை. தட்டிக் கேட்கும் துணிவு, சென்னையில் இல்லை. அமைச்சர்களை அச்சம் தடுக்கிறது, துணிந்து சில வேளைகளில் கேட்டாலோ மிரட்டல், விரட்டல் தான் கிடைக்கிறது என்று கூறினவர் யார் என்ற ஆவலை கொண்டிடச் செய்தேன் அல்லவா—கோபமில்லையே என்மீது அதற்காக!!

மனம் நொந்து அவர் இதுபோல் கூறுகிறார்—அரசியல் துறையிலே ஈடுபாடு கொண்டவரல்ல—ஆசிரியத் தொழிலில் இருப்பவர்—அமைதியில் ஆனந்தம் காண்பவர்—அனைத்தையும் துருவித் துருவிக் கண்டறிவார். அவ்வளவும் சொல்லிவிடக்கூடமாட்டார் — இவ்வளவு போதும் — கோடிட்டுக் காட்டினாலும் போதும்—இப்போதைக்கு இவ்வளவுபோதும்—என்று அவ்வப்போது அளந்து அளந்து கருத்து அளித்து வருபவர்—என் நண்பர்—தமிழருக்கு நல்லபல ஏடுகளைத் தந்துள்ளவர்—பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப்பெரும் பேராசிரியராக இருப்பவர், டாக்டர். மு. வரதராசன்.

பழைய நாட்களிலே, தம்பி, எவருடைய இடித்துரைக்கும் கலங்காது காட்டாட்சி நடத்துபவருங்கூட, புலவர்கள்



புத்தி புகட்டுகின்றனர் என்றால், வெட்கப்படுபவர், வேதனைப் படுவர், திருந்திக்கொள்ள முற்படுவர் என்று இலக்கியங்களிலே காணுகிறோம்.

இன்றைய ஆட்சியினரோ, மக்களைப் பார்த்து, "பாமரர் நீவிர்! உமக்கு இதெல்லாம் என்ன தெரியும்!" என்று கூறியும், புலவர்களைப் பார்த்து, "ஏடு தூக்கிடும், உமக்கு ஏனய்யா இந்த வீண் வேலை" என்று ஏளனம் செய்தும், இறுமாந்து கிடக்கின்றனர்.

அதிலும், தமிழாசிரியர்கள்—அதிலும் குறிப்பாகத் தமிழ் இனத்துக்கென்று ஓர் தனி வாழ்வு அமைதல்வேண்டும் என்ற ஆர்வம் கொண்டவர்—ஆரியம் இது, தமிழ்நெறி இது என்று பிரித்துக் காட்டிடும் போக்கினர் என்றால், பெருங்கோபம் பீறிட்டுக்கொண்டு கிளம்புகிறது.

அவர்களை, 'நாத்திகர்' என்று நிந்திக்கவும், ஆட்சியாளர்கள் துடித்தெழுகின்றனர்.

எனவே, டாக்டர். மு.வ.வின் இந்தக் கருத்துரை கேட்டு ஆட்சியாளர் திருந்த முற்படுவர் என்றுநான் எண்ணவுமில்லை, எதிர்பார்க்கவுமில்லை—அவருக்கும் அந்த நம்பிக்கை எழுமா என்பது ஐயப்பாடுதான்! நேரடியாக அரசியல் துறையிலே ஈடுபாடு கொள்ளாதவரும், இன்றைய அரசியலில் நெளியும் நிலைமையைக் கண்டு மனம் பொறாது பேசவேண்டி வந்ததே என்பதை நாடு காண்கிறது! அதன் பயன் மிகுதியும் உண்டு என்பது என் எண்ணம்.

அரசியல் துறைக்குத் தம்மை ஒப்படைக்காமல், பேதம் பிளவு என்பவை தீது, ஒற்றுமை சமரசம் என்பன நற்பண்புகள் என்பதை வலியுறுத்தத் தவறாமலிருக்கும் தமிழ்ப் பேராசிரியர்களே, டில்லியிடம் சிக்கிக்கொண்டு, நமது அமைச்சர்கள் அச்சத்தால் தாக்குண்டு கிடக்கும் நிலை கண்டு மனம் வெதும்புகின்றனர்.

பலருக்கு, பாரதம் ஒரே நாடு, இதனைத் தனித்தனி நாடுகளாக்கிவிட்டால் ஒற்றுமை குலைந்துபோகும் என்று டில்லிப் பெரியவர்கள் பேசும்போது, ஆம் என்றுதான் கூறத்தோன்றுகிறது. அதிலும் தமிழாசிரியர்கள், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற நெறியினைப் பாராட்டுபவரல்லவா! எனவே, பாரதநாடு ஒரே ஆட்சியின் கீழ் இருத்தல் முறை என்று கூறப்படும்போது அவர்கள் இசைவு அளிப்பது மட்டுமல்ல, எம்மனோர் உலகு முழுவதையுமே ஒரே நாடு என்று எண்ணிச் சொந்தம் கொண்டாடிய பெருநோக்கினர்! இமயத்துடன்

நிற்பானேன்—கடலேயும் கடந்து எல்லா எல்லேக் கோடுகளே யும் கலேத்தொழித்துக்கூட 'உலகு ஒன்று' என்ற உன்னதம் காணலாம் என்று உள்ளன்புடன் கூறத் தயங்குவதில்லே.

ஆனுல், அவர்கட்கும் ஒற்றுமை ஓரரசு பேரரசு என்பதன் பேரால் அநீதி நடந்திடும்போது மனம் வெதும்புகிறது—இடித் துரைக்க முற்படுகின்றனர். ஆட்சியாளர்களோ, அரசியல் துறையினர் பேசும்போது, இதெல்லாம் அரசியல் வாதிகள் கிளப்பிவிடும் கேடுகள் என்று சுடுசொல் கூறியும், தமிழாசிரி யர்கள் பேசும்போது, ஆத்திசூடியும் கொன்றை வேந்தனும் படித்துக்கொண்டு கிடப்பதைவிட்டு இந்த ஆசிரியர்கள் ஏன் அரசியலில் தலேயிடவேண்டும் என்று அலட்சியமாகப் பேசி யும் ஆணவப்போக்குடன் உள்ளனர்.

விரட்டல் மிரட்டல் டில்லியிடமிருந்து நாம் பெறுவது இவையே என்று கூறுமுன்னர், டாக்டர் பல நூறு முறை தயங்கியிருப்பார்—சொல்வதா வேண்டாமா? சொல்லிப் பயன் காணமுடியுமா? சொல்வது கேட்டு, நம்மை இன்னுர் என்று கண்டுகொண்டு காய்ந்திடமட்டுமே பயன்படுமோ? என்று பலப்பல வகையில் யோசித்துவிட்டு, முடிவிலேதான், இதனேச் சொல்லியே தீரவேண்டும் என்று துணிந்து கூறிவிட் டிருக்கிறுர்.

தம்பி! கலேத்துறைப் பிரச்சினேயில் மட்டுமே இந்த நிலேயா என்றுல் இல்லே, இல்லே, கலேத்துறைப் பிரச்சினேயி லும் இது, என்றுதான் கூறவேண்டி இருக்கிறது. எந்தத் துறையிலும் இதே நிலேதான்! எந்தத் துறையிலும் டில்லி துரைத்தனம், தமிழர்க்கும் தமிழகத்துக்கும் இதே விதமான மிரட்டல் விரட்டல் அளித்துக் கொண்டுதான் அமுல் நடத்தி வருகிறது. அவ்வப்போது, ஒவ்வோர் துறையினர் உள்ளம் வெதும்பிப் பேசுவர்! மற்றத் துறையினர் அதுபோது, பிரச்சினே, எந்தத் துறையினர் மனம் நொந்து பேசு கின்றனரோ, அந்த ஒரு துறைக்கு மட்டுமே உரியது என்று எண்ணி, தமக்கு உரிய பிரச்சினே அல்ல என்று எண்ணிக் கொண்டு விடுகின்றனர்.

டாக்டர் மு.வ. கலேத்துறையில், டில்லி காட்டும் கருத் தற்ற போக்கினேயும், சென்னேயில் உள்ள அச்சத்தையும எடுத்துக் காட்டும்போது, வாணிபத் துறையினர், இது தமக்குத் தொடர்பற்ற பிரச்சினே என்று இருந்துவிடுகின்றனர்; அதுபோன்றே வாணிபத்துறையில் எழும் பிரச்சினேயில், டில்லி காட்டும் ஆணவப்போக்கினே,வணிகர் சங்கம் கண்டித் தெழும்போது, டாக்டர் மு.வ. போன்ற தமிழாசிரியர்கள்,



இது வணிகர்களின் பிரச்சினே, நமக்கு உரியதல்ல என்று ஒதுங்கி நிற்பர். எனவே கூட்டு எண்ணம், ஏற்படவழி கிடைப்பதில்லே. தம்பி! நாம், எந்தத் துறையுடன் நேரடி யாகத் தொடர்புகொண்ட பிரச்சினேயாக இருப்பினும், அந்தப் பிரச்சினே, 'டில்லி—சென்னே தொடர்பினே' எடுத்துக் காட்டு வதாக அமைந்தால், அந்தப் பிரச்சினேயை நமக்கு உரிய பிரச்சினே—நாட்டு மக்கள் கவனிக்கவேண்டிய பிரச்சினே என்றுதான் கொள்கிறோம். இது தமிழாசிரியர் கவனிக்க வேண்டிய பிரச்சினே, இது துரைத்தன ஊழியருக்கு மட்டுமே உரிய பிரச்சினே, இது பாட்டாளிகளுக்கு மட்டுமே சொந்த மானது என்று எந்தப் பிரச்சினேயையும் நாம் ஒதுக்கி விடுவ தில்லே. காரணம், நமக்கு எந்தப் பிரச்சினேயும், அந்த ஒரு பெரும் பிரச்சினே இருக்கிறதே, தனி அரசுகளே விழுங்கிக் கொழுத்துப் பேரரசு ஒன்று உருவெடுக்கும் பிரச்சினே, அதனுடைய பல கூறுகளிலே ஒன்ருகவே படுகிறது.

கைகால் பிடிப்புக்காரன், தைலம் தடவியும், வலியுள்ள இடத்தை நீவியும் நலன் பெற முயல்வது இயல்பு என்றுலும், வலிக்கு உள்ள காரணம் களேந்திடுவதற்கான மருத்துவம் பார்த்துக் கொண்டாக வேண்டுமல்லவா! நாம் அந்த நல்ல மருந்து தேடுகிறோம். அதுபோது, ஐயோ முதுகு எலும்பு வலிக்கிறதே! கண் எரிச்சல் தருகிறதே! கைகால் பிடிப்பு ஏற்பட்டுவிட்டதே! குமட்டலெடுக்கிறது, குடைச்சலுமிருக் கிறது! என்று அவரவர் தத்தமக்குவந்து தாக்கும் வலிபற்றி வாய்விட்டுக் கூறிடக் கேட்கிறோம்—கேட்கும்போது நமக்கு, இவையாவும், தனித்தனி நோய்களல்ல, வெறும் குறிகள், என்று புலப்படுகிறது.

கலே, மொழி, எல்லே எனப்படும் துறைகளிலே மட்டுமே தமிழருக்கு மிரட்டல்—விரட்டல் டில்லியிடமிருந்து கிடைக்கிறது, மற்ற மற்ற துறைகளிலே அரவணேப்பு கிடைக் கிறதா! எல்லாத் துறைகளிலும், ஏன்! என்ற குரல் கேட்கும் போதெல்லாம், மிரட்டல்—விரட்டல்!!

தம்பி! டில்லியில், சென்ற திங்கள், இந்தியப் பேரரசு பல்கலேக் கழக இளேஞர் விழா நடத்திற்று. இதில் 34 பல்கலேக் கழகங்கள் கலந்துகொண்டன. 1600 மாணவர்கள் சென் றனர். நேருபண்டிதர் இதில் கலந்துகொண்டு சிறப்பளித் தார்.

சென்னேப் பல்கலேக் கழகம் மட்டும் இந்த விழாவிற்குப் பிரதிநிதிகளே அனுப்பிவைக்கவில்லே.

பாட்டும், கூத்தும், கேளிக்கையும் நிறைந்த விழா— ஒவ்வோர் பல்கலைக் கழகமும் தத்தமது கோட்டத்தில் வளர்ந்துள்ள கலைத்திறனைக் காட்டிடும் வாய்ப்பு—இதிலே சென்னைப் பல்கலைக் கழகம் கலந்து கொள்ளவில்லை. காரணம் என்ன?

இந்தியப் பேரரசு, சென்னைப் பல்கலைக் கழகத்தின் வேண்டு கோளைப் புறக்கணித்தது. மதியாதார் தலைவாசல் மிதிக்கமாட்டோம் என்று சென்னைப் பல்கலைக் கழகம் கூறி விட்டது.

இந்த விழா, ஆண்டுதோறும் டில்லியிலேயே நடத்துகிறீர்கள்—இது சரியல்ல—ஒவ்வோர் ஆண்டு ஒவ்வோர் 'ராஜ்ய'த்தில் நடத்துவதுதான் நல்லது என்று சென்னைப் பல்கலைக் கழகம் கூறிற்று இந்தச் சாதாரணமான நியாயத்தைக்கூட ஏற்றுக்கொள்ள டில்லிக்கு விருப்பம் இல்லை.

*டில்லி ஒரு திட்டம் வகுப்பது, அதை முறையில்லை; சரியில்லை என்று கூறி, சென்னை மறுப்பதா!*

*நந்தா! உனக்கேன் இந்தப் புத்தி!*

டில்லியின் போக்கு இது போலிருந்திருக்கவேண்டும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் யோசனையைப் புறக்கணித்தது.

*புண்பட்ட மனம்; சென்னைப் பல்கலைக் கழகம், இதனைக் காட்டவும், தன் கண்டனத்தைத் தெரிவிக்கவும் டில்லி விழாவில் கலந்துகொள்ளவில்லை.*

சென்னைப் பல்கலைக் கழகத்தில் பல பாடங்கள் போதிக்கப்படுகின்றன, ஆனால் திராவிட நாடு திராவிடருக்கே என்பது பாடமாக்கப்பட்டதில்லை! சென்னைப் பல்கலைக் கழகம் கேட்டதெல்லாம் 'விநயமான கோரிக்கை'—அதற்கே டில்லி இணங்கவில்லை.

சென்னைப் பல்கலைக் கழகம் என்ன செய்யும்? என்ன செய்தார் டாக்டர் மு. வ! கலைத் தூதுக்குழு சம்பந்தமாக டில்லி காட்டும் போக்கைக் கண்டு மனம் வெதும்பி—மிரட்டல்—விரட்டல் என்று கூறினர். சென்னை பல்கலைக் கழகம், விழாவில் கலந்துகொள்ளாது ஒதுங்கி நின்றது! அவ்வளவுதான்!!

சென்னைப் பல்கலைக் கழகம் இதுபோல் நடந்து கொண்ட காரணம் என்ன என்பதுகூடப் பொது மக்களுக்குத் தெரியாது. தெரிவிக்கப்பட்டாலும், மற்றத் துறையினர் இது குறித்து அக்கரை காட்டி, இது டில்லி



ஆதிக்கத்தின் ஒரு 'கூறு' தான் என்று கூறிட முன்வந்திருப்பார்களா என்பதும் சந்தேகமே!

ஒன்றுபட்டு, தமிழகம் தன் உள்ளக் கொதிப்பை எடுத்துக் காட்டும் வாய்ப்பே ஏற்படவில்லை.

கலை, கல்வித்துறை பற்றிய பிரச்சினை நம்முடையதல்ல என்று மற்றவர்களும், எல்லை, உரிமை, என்பன அரசியல் வாதிகளின் ஆயாசப் பேச்சு என்று கலை கல்வித் துறையினரும், வாணிபம், இலாப வேட்டைக் காரர் பிரச்சினை, இதில் நமக்கென்ன அக்கரை என்று பிற துறையினரும், இவ்விதம், ஒவ்வொருவர் ஒவ்வோர் 'முனை'யில் மட்டும் பார்வையைச் செலுத்திக் கொண்டு, பிற பிரச்சினைகளில் கருத்தைச் செலுத்துவதே தேவையில்லை என்று எண்ணும் போக்குக் காண்கிறோம். அது மட்டுமல்ல; இவர் ஒவ்வொருவரும், எதற்கும் 'பிள்ளையார் சுழி' போடுவது என்பார்களே, அதுபோல, டில்லியின் போக்கைக் கண்டிக்கக் கிளம்பும்போதே, எமக்கு இந்தியா ஒரு நாடு என்பதிலோ, இந்தியர் ஓர் இன மக்கள் என்பதிலோ, ஐயம் இல்லை. நாங்கள், நாடு துண்டாடப்பட வேண்டும் என்ற தீய கொள்கை கொண்டோரல்ல! இந்தியாவின் ஐக்யமே, எமது பேச்சு, மூச்சு என்ற 'துதி' பாடிவிட்டுத்தான், தமது கண்டனத்தை வெளியிடுகின்றனர். இப்படிப்பட்ட 'அடக்கமான'வர்களுக்கே, டில்லி வழங்குவது, மிரட்டல், விரட்டல்!

எத்தனை காலத்துக்கு, எத்தனை பிரச்சினைகளுக்கு, இப்படி இருகரம் கூப்பி, ஐயா! ஐயா! என்று இறைஞ்சி நின்று, இடியும் கடியும் பட்டுத் தீரவேண்டும் என்று இவர்கள் எண்ணுகிறார்களோ, தெரியவில்லை.

தம்பி, ஒன்று புரிகிறது. இன்று எனக்கு வந்த தபாலில், டில்லியிலிருந்து வெளியாகும், இந்துஸ்தான் டைம்ஸ் இதழிலிருந்து ஒரு துணுக்கு வெட்டி அனுப்பி வைத்திருந்தார் ஒரு நண்பர். இந்த இதழ் மகாத்மாவின் புத்ரரும் ஆச்சாரியாரின் மருகருமான தேவதாஸ் காந்தியை ஆசிரியராகக் கொண்டது.

இடியும் கடியும் பொறுத்துக் கொண்டு, வலியையும் வெளியே தெரியவிடுவது நாகரிகமல்ல வென்று கருதிக் கொண்டு, கரம் கூப்பிச் சிரம் தாழ்த்தி, கண்ணீர் பொழிந்து கனிவு பெறலாம் என்று காத்து நிற்போர் மட்டுமல்ல, தமிழகத்தில் விளைவு விபரீதமாகுமோ, அடக்குமுறை அவிழ்த்து விடப்படுமோ என்பது பற்றிய அச்சமற்று, வடநாட்டு ஆதிக்

கத்தை எதிர்த்து நிற்கும் ஓர் கழகம் இருக்கிறது, அது, தி. மு. க. என்பதை, டில்லி வட்டாரத்து ஏடு புரிந்துகொண்டிருப்பது. நன்றாகத் தெரிகிறது.

இந்துஸ்தான் டைம்ஸ் இதழில், தி. மு. க. தேர்தலில் ஈடுபட இருப்பது பற்றிய குறிப்புரை வெளிவந்திருக்கிறது.

வழக்கமான வசையும்—சாபமும் காண்கிறேன், குறிப்புரையில்.

கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு காமராஜர் கிளம்பி விட்டார், எனவே இந்த தி.மு.க. தோற்று அழிந்துபோகும் என்று அந்த இதழ் 'ஜோதிடம்' கூறுகிறது.

பிறகோ, அந்த ஜோசிடத்தில் அதற்கு நம்பிக்கையில்லாமல், இந்த தி. மு. க. திராவிட நாடு. தனி நாடு என்றெல்லாம் பேசுகிறது—இப்படிப்பட்ட பேச்சுக்கு இந்திய அரசியல் சட்டத்தில் இடமில்லை என்று எடுத்துக் காட்டி, வக்கீலாகிறது; வழக்கறிஞர் வேலையில் மற்றவர்களும் ஈடுபட்டு, இந்திய அரசியல் சட்டத்தில் அதற்கு இடம் இல்லை என்றால் என்ன, ஐயா! அதற்கு இடம் இருக்கும் வகையில், இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என்பதை எடுத்துக் காட்டி, மக்களிடம் பேசலாமல்லவா, என்று வாதாடக்கூடுமே என்ற அச்சம் பிறக்கிறது. உடனே, வழக்கறிஞர் வேலையை விட்டுத் தொலைத்து, போலீஸ் வேலையை இந்த இதழ் மேற்கொண்டு, தி. மு. கழகத்தை இனியும் சும்மா விட்டு வைக்கக்கூடாது! இராஜத்துரோகக் குற்றம் செய்கிறது இந்தக் கழகம்! உடனே தகுந்த நடவடிக்கை எடுத்து, தி. மு. கழகத்தை ஒடுக்கித் தீரவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கிறது.

ஜோதிடர் வேடம் கண்டு சிரிப்பு வருகிறது, வழக்கறிஞர் கோலம் காணும்போது பரிதாபமாக இருக்கிறது, போலீஸ் குரலில் பேசக் கேட்கும்போதோ, இந்த இதழிடம் எனக்கு அனுதாபம்கூட ஏற்படுகிறது. எவ்வளவு கிலி, பாபம், இந்த இதழுக்கு.

இந்துவும் மித்திரனும் இடம் அளிப்பதில்லை, கல்கியும் விகடனும் கவனம் செலுத்துவதாகக் காட்டிக்கொள்வதில்லை, காட்டுக் கூச்சல், கவைக்கு உதவாப் பேச்சு என்று காமராஜர்கள் கூறிவிடுகின்றனர். இந்த நிலையிலேயே, டில்லியில் உள்ள ஏடு, தீபட்டது போலத் 'தகதக'வென ஆடி, தடி எடு! தடைபோடு! தடைபோடு! என்று கொக்கரிக்கிறது. தம்பி! நீயும் நானும் விரும்புகிறபடியும் நாட்டில் நல்லோர்



பலரும் எதிர்பார்க்கிறபடியும், பொதுத் தேர்தலிலே நமக்குச் சிறப்பான வெற்றி கிடைத்து, நாம் ஆட்சி மன்றத்திலேயும் அமர்ந்து, நமது உரிமை முழக்கத்தை நடத்தினால் ஏ! அப்பா! இந்துஸ்தான் டைம்ஸ் போன்ற ஏடுகள் என்ன பாடு படுமோ என்று எண்ணும்போதே எனக்குச் சிரிப்பு வருகிறது. இந்த அரியவாய்ப்புக்காக நாம் அரும்பாடுபடும்போது, 150 ரூபாய்க்காக இதுகள் ஆலாய்ப் பறக்கின்றன, என்று நம்மவர்களிலேயே சிலர் கூறுவது கேட்கும்போது, நெடுந்தொலைவிலிருக்கிற இந்துஸ்தான் டைம்சுக்கும் புரிகிறதே, இவர்களுக்கு ஏனோ வயிறு எரிகிறது என்றெண்ணி ஆயாசமடைகிறேன்.

நாங்கள் எவ்வளவு அரும்பாடுபட்டு, சில வேளைகளில் கனிவு காட்டி மகிழச்செய்கிறோம், மற்றும் சில வேளைகளில் உருட்டுவிழி காட்டி மருளச் செய்கிறோம், எனினும் எல்லாம் எதன் பொருட்டு? நாம் ஒன்றாக வாழலாம், ஒரே நாடாக இருக்கலாம், ஓரரசுக்குள் இருந்திடலாம், தனித்தனி நாடுகள் தனித்தனி அரசுகள், வேண்டாம், கவி பாடியும் கதை கூறியும் நாங்கள் இதனைத்தானே எடுத்துக் கூறுகிறோம் ஒற்றுமைக்காக ஓயாது உழைக்கிறோம், ஏன் உமக்கு மட்டும் இந்த உயர்ந்த நோக்கம் ஏற்படவில்லை, எதனாலே உமக்குமட்டும், பேதபுத்தி, பிளவு மனப்பான்மை ஏற்படுகிறது, கங்கைக் கரைக்கும் காவிரிக் கரைக்கும் பேதம் ஏன் காணவேண்டும்? காசி காஞ்சி என்று ஏன் பிரித்துப் பிரித்துப் பேசுகிறீர்கள்? எல்லாம் பாரதநாடு என்று பரிவுடன் எண்ணிடலாகாதா? என்று தலைவர்கள் பேசத்தான் செய்கிறார்கள்—கேட்கும்போது சிற்சில வேளைகளிலே எனக்குக்கூடத் தம்பி! நாம்தான் ஒருவேளை தவறாக நடந்துகொள்கிறோமோ, வீணான பேதபுத்தி நம்மைப் பிடித்தாட்டுகிறதோ, ஒற்றுமையின் மேன்மையை, ஓரரசின் உன்னதத் தன்மையை, ஒரு பெரும் நாடு என்ற திட்டத்தின் அருமை பெருமையை அறிந்து போற்றிடும் அறிவற்றுப் போனோமோ, என்றெல்லாம் தோன்றச் செய்கிறது. எனினும் மறுகணம், நம் நாட்டின் இயல்பும் அதற்கேற்ப வளர்ந்துள்ள வரலாறும், அதன் பயனாக நாம் பெற்ற பெருமைகளும் வந்து நிற்கின்றன. "ஏடா! மூடா! என்னை மறந்திட, துறந்திடத்தக்க நிலையிலா உன் மூதாதையர் காலமுதற்கொண்டு உன் காலம் வரையிலே நான் வாழ்ந்து வந்துகொண்டிருக்கிறேன்—இயற்கை எழிலும் வளமும் ஈந்த என்னை, உன் அன்னை என்று ஏற்றுக் கொள்ளவுமா உனக்குக் கூச்சம் ஏற்படுகிறது! உனக்கென்று ஓர் தனி இயல்பும், தனிவாழ்வு முறையும், கிடைத்திட அல்லவா, பாலூட்டிச் சீராட்டி வளர்த்து வந்தேன்! புன்னகை பூத்து நிற்கும் பூவையரெல்லாம் தாய் ஆவரோ?

அவரிடம் பகை கொள்ளச் சொல்கிறேன் இல்லை! அவர்கள் அன்புடன் உன்னை அழைத்திடும்போது, அருவருப்பு அடைந்து வெறுத்து ஒதுக்கிவிடு என்று பேசினேன் இல்லை! ஆயிரம் கனிவு காட்டலாம் அம்மையே! எனினும் இதோ என் அன்னை! என்று பெருமையுடன் என்னைச் சுட்டிக்காட்டிடவா நீ தயக்கமடையவேண்டும்! மதியற்றவனே! நேசம் வேறு, தாய்ப்பாசம் என்பது வேறு! கன்னல் மொழி பேசக்கூடும் மற்றவர்—உன் தாய் சிலவேளைகளிலே கடிந்துரைக்கக் கூடச் செய்வாள்—எனினும் ‘தாய் அன்பு’ என்பது தனியானதல்லவா—பிற எங்கும் பெறமுடியாததோர் பேரன்பு அல்லவா! பெற்றமனம் கொண்டிடும் பாசத்தை வேறு எங்கு காண இயலும்! இதனையுமா கற்பிக்கவேண்டும்? கடுவனிடமும் கொல்லும் புலியிடமும்கூடக் காண்கிறோமே இதனை. கருத்தற்றவனே! உன்னிடம் அகமும் புறமும் அளித்து, அணி ஆரமும் மேகலையும் தந்து, அறநெறியும் பிற பெருமைகளையும் தந்து, அழகியதாய் விழுமியதாய் உன் வாழ்வு அமைவதற்கான வாய்ப்புகளைத் தேடித்தேடித் தந்து, நீ ஏற்றம் பெற்று, கொற்றம் நடாத்தி, ஏறுநடை போட்டு, எங்கணும் சென்று, என் வீரமும் அறிவும் எனக்கு என் அன்னை அளித்தாள்! என்று கூறி எனக்குப் பெருமை தேடித் தருவாய் என்று பார்த்தால், பெற்றவளை மறந்திடத் துணியும் பேதையே! கற்றதை மறந்திடும் கசடனே! என்னை மகனாக்கிக்கொள்ள ஒரு மகராசி, அழைக்கிறாள்—அவள் தன் வயிற்றில் பிறக்காதவர்களாயினும் வாஞ்சனை காட்டுவதாக வாக்களிக்கிறாள்—உச்சி மோந்து முத்தமிட்டு, உன் தாயாக நான் இருக்கிறேன்! உனக்கும் உன்போலப் பல பிள்ளைகட்கும் நான், தாய்வேலை பார்க்கும் பேராவல் சுரந்திடும் உள்ளம் கொண்டேன்’, எனவே உத்தமனே! உன் தாய் என்று அவளையும் இவளையும் காட்டி அழாதே! நான் தாயானேன், நீ என் மகனாய் என்று அழைக்கிறாள், நான் இனி அந்த அம்மைக்கு மகனாகி விடுகிறேன், தாயே! விடைகொடு! என்று துணிந்து என்னைக் கேட்கிறாயே! பெற்ற வயிறுபற்றி எரிகிறதே! அந்த வேளையிலும், உன்னைப் பாவி! பழிகாரா! படுநாசமடைவாய்! என்று கூறவும் மனம் கூசுகிறதடா, பாலகனே! என்னைப்பார்! என் தாய்! என்று நீ கூறிப்பெருமைப்படத்தக்க நிலையில் நான் இல்லையா?...என்னிடம் என்னடா மகனே! குற்றம் கண்டாய்? என்னை வெறுத்துவிட்டு வேறோர் வேற்றுச் சீமையாளிடம் ‘தத்து’ போகவேண்டிய நிலையா வந்துற்றது? நான் என்ன நீ பசியால் துடித்து, பதறிக் கதறிடும்போது உன் முகத்தையும் பார்த்திடாமல், என் சுகத்தைக் கவனித்துக்கொண்ட மாபாவியா? உன்னை மாடாய் உழைக்கச் செய்து, நான் உலவி மகிழ ஒரு மாடி கட்டிக்கொண்டேனா! உழைப்பால் நீ ஓடானா



லும் பரவாயில்லை, எனக்கு ஓர் உல்லாச ஓடம்வேண்டும், அதனை நான் களிப்புக் கடலில் செலுத்தி மகிழப்போகிறேன் என்று செப்பிய வன்னெஞ்சக்காரியா! என்ன குறை கண்டாயடா மகனே! புதிய தாய் தேடிடவேண்டிய விபரீதம் நேரிட்டதா, மகனே! மகனே! மதி இழந்தனையோ! மயக்கமுற்றனையோ! பேதை மகனே! எதனையும் பெறலாம், அதற்கும் ஓர் வழி கிடைக்கும், ஆனால் அன்னையின் அன்பு என்பதனை, அறியாச் சிறுவனே! விலைபோட்டு வாங்க இயலுமா! அன்னையின் அன்பு, பெற்றவள் பாசம், மலிவு விலைக்குத் தருகிறோம், வருக! பெறுக! என்று யாரோ அங்காடியில் கூவிக்கூவி விற்பதாகக் கூறுகிறாயே! விளையாட்டுப் பருவத்தினன் நீ எனினும், கூடுகட்டி வாழும்குருவிகளைப் பார்க்கத் தெரியுமே உனக்கு - தாய்க் குருவியிடம் தானே குஞ்சுகள் தீனியைக் கேட்கின்றன—ஊட்டப்பெறுகின்றன! மடியிலே பாலைச் சுமந்து நிற்கும் பசு எதுவோ அதுவே நமக்குத் தாய் என்று ஊட்டிடச் செல்லும் கன்று, நீ பார்த்ததுண்டா! ஏடுகள் புகட்டுவதைக்கூடக் கவனிக்க வேண்டாம்; பக்குவம் வேண்டும் அதற்கு! கண்ணுள்ளோர் காணக்கூடிய காட்சிகளடா இவை குருவிக் கூட்டிலே காணப்படும் குடும்ப பாசமும், துள்ளிடும் கன்றுக்குப் பாலும் அளித்து பரிவுடன் உடலை நாவினால் நீவியும்விடும் தாய்ப்பசுவின் பாசமும்!! இந்தக் காட்சிகள் போதுமே, தாய் உள்ளத்தைத் தாயிடம்தான் பெறமுடியும் என்ற உண்மையை உணர்த்த!” என்றெல்லாம் தம்பி! தாயகம் கேட்கிறது! நான் காணுகின்ற வயலும் அதற்கு வளமூட்டும் நீர் நிலையங்களும், அந்த வளத்தை விளக்கக் குலுங்கிடும் மணியும் கனியும், அவைதமைப் பெற உழைப்பு நல்கிடும் உத்தமரின் வியர்வையும், குன்றும் குளமும், கூத்தும் பாட்டும், மக்களின் மாண்பும் பிறவும, எல்லாம் எனக்கு இதனைத்தான் காட்டுகின்றன! உனக்கு மட்டுமென்ன, நீயும் இதே எண்ணம்தான் பெறுகிறாய்!!

தம்பி எனக்கும் உனக்கும் காமராஜருக்கும் என்றுகூட வேண்டுமானால் சேர்த்துக்கொண்டே பேசுவோம், தேசிங்கு ராஜன் என்ற உடனே சுரக்கும் வீர உணர்ச்சி, வங்கத்திலும் கலிங்கத்திலும் ஏற்படமுடியுமா? பாக்தாதிலும் டமாஸ்கசிலும் எப்படி தேசிங்கு ராஜன் கதை கேட்டால், வியந்து பேசுவரோ அவ்வளவுதான் கல்கத்தாவிலும் கான்பூரிலும்! கட்டபொம்மன் என்றதும் இங்கு தோள் பூரித்து, மாற்றானின் தாள் வணங்கமாட்டேன், என் கரத்தில் வாள் உண்டு! என்று ஆர்த்தெழத்தக்க வீரம் நமக்கு எழுவதுபோல, பிற எங்கு காணமுடியும்? பாஞ்சாலங் குறிச்சியின் வீரக் காதையைக்

கூறினுல், பாஞ்சாலத்தில் உள்ளவர்கள் மனதிலே சொந்தம் எழாதே! வியப்பு தோன்றக்கூடும்! சுவை மிக்க வீரக்கதை கேட்டோம் என்ற மகிழ்ச்சி பிறக்கக் கூடும்! எனக்குத் தம்பி! சாதாரணமாக நெல் காணும்போது ஏற்படும் நம் பொருள் என்ற உணர்ச்சி கோதுமையைக் காணும்போது ஏற்பட மாட்டேனென்கிறதே, என்ன செய்வேன்!

நம் நாடு—நம் இனம்—நம் நாட்டு இயல்பு—நமது வரலாறு—நம் நாட்டு வீரக் காதைகள்—நம்நாட்டு எழில்—நம்நாட்டு முறைகள்—என்பன, தம்பி! தாயிடம் சேய்கொள்ளும் பாசம் போன்றது, இயற்கையாகச் சுரப்பது, இந்தப் பாசம், பெற, தம்பி! எத்தனை எத்தனை தலைமுறைகளாயின என்று எண்ணிப்பார்! காவிரி குறித்தும், தமிழகத்து வீரக் காதைகள் குறித்தும், இந்நாட்டுக் குன்று குறித்தும் நம்மவர் கொண்டிடும் கொள்கை குறித்தும், எத்தனை எத்தனை தலைமுறைகளாகப் பேசிப் பேசிப் பேசி; அந்தப் பாசம் நிலைத்து நிற்கிறது!

சேரன் செங்குட்டுவன் காலமுதற்கொண்டு சொல்லிச் சொல்லிச் சுவை ஊறி ஊறி, நமக்கென்று ஓர் சுபாவம் அமைந்துவிட்டது—அதனை சுப்பிரமணியனர் பார்த்து சூ! மந்திரக் காளி! ஓடிப்போ! என்று சொல்லுவாராம் அந்த 'பாசம்' ஓடியே போகுமாமே! இந்தக் கேலிக்கூத்தை என்னவென்று சொல்வது!

நம் நடிகமணி டி. வி. நாராயணசாமி, 108-நாட்கள் சிவலீலா நாடகத்தில் சிவபெருமான் வேஷம் போட்டார்—பித்தளைப் பாம்புகள், கிரீடம்—ஏகப்பட்ட 'பாரம்'—அந்தப் பழக்கத்தில், காலவேளைகளிலேயே கூட, அந்த நாடகம் முடிந்து பல நாட்களுக்குப் பிறகும் நண்பர் நாராயணசாமி என்னிடம்வந்து பேசிக்கொண்டிருக்கையில், 'பாரம்' சுமந்து கொண்டிருக்கும் தோற்றமே இலேசாகத் தென்படும்! தம்பி, தாய்நாட்டுப் பாசம், நாராயணசாமி சுமந்தது போன்ற பாரம் அல்ல—அதுதான் தேசியம்—பாரம்பரியம் என்கிறுர்களே அது. அதனை விலங்குகளும் அடியோடு இழந்துவிட முடியுமா என்பது ஐயப்பாடுதான்—நாம் எங்ஙனம் அதனை இழந்துவிட முடியும்—அமைச்சர்கள், அதனை இழந்தால் தானே எமக்கு அமைச்சர் வேலை கிடைக்கிறது என்று வாதாடக் கூடும்—தம்பி! அது அவர்கள் கீழ்நிலை சென்றுவிட்டதைக் காட்டுவதாகுமே தவிர, நாட்டுப்பற்று எனும் மாண்பு பொருளற்றது என்பதையா காட்டிடும்!



தலைமுறை தலைமுறையாக வளர்ந்து நமது குருதியுடன் கலந்துள்ள தாய்நாட்டுப் பாசத்தை, ஒரு உத்தரவு பிறப்பித்து ஒழித்துவிட முடியும் என்று எண்ணுகிறுர்களே, இவர்களை என்னென்று கூறுவது!

சின்ன வயதிலே சந்தைப் புறத்திலே காணமற்போய் விட்ட குழந்தை, வேற்றுரிடம் வளர்ந்து, பெரியவனுனலும், பிறகோர் நாள், உண்மை தெரிந்ததும், தாயின் பாதத்தைத் தன் கண்ணீரால் கழுவிடக் காண்கிறோம்—கதைகளில்! தலைமுறை தலைமுறையாக தொல்காப்பியரும், வள்ளுவரும், இளங்கோவும் காக்கைப்பாடினியாரும், சீத்தலைச் சாத்தனும் கோவூர் கிழாரும், கணியன் பூங்குன்றனுரும், கபிலரும், திருத்தக்கரும், நக்கீரரும், நாகனுரும், நச்செள்ளையாரும், (மற்றவர் பற்றிய முறையான பெயர் வரிசையை நமது நாவலரிடம் கேட்டுப் பெறுக) ஊட்டி வளர்த்து, உருவாக்கி வைத்துள்ளதை, ஊராளவந்தவர்கள் உத்தரவு போட்டு உருக்குலைத்துவிடுவதாமே! இப்படியொரு 'உற்பாதம்' நேரிட விடலாகுமா!

எனவேதான் தம்பி, பாரத நாடு—இந்தியா—இந்தியர்—என்று இவர்கள் இட்டுக்கட்டி இதுகாலை திணிக்க விரும்பும் போலித்தேசீயம், முளைவிட மறுக்கிறது. நீண்ட நெடுங்காலமாக நமது பரம்பரைக்குக் கிடைத்து, கண்ணீரும் செந்நீரும் வியர்வையும் அதற்கு அளித்து, செழிப்புறச் செய்து, எந்த இயல்பு—தாய்நாட்டுப்பற்று தேசீயம்—நம்மிடம் குருதியிற் கலந்திருக்கிறதோ, அதனை அழித்திட முற்படுவது அறிவீனம் என்பது மட்டுமல்ல, ஆகாத காரியம், அடாத செயல் என்பதுடன், இவர்கள் எக்காரணம்பற்றியோ வெற்றி நிலை எய்தினுலும், இவர்கள் பிடியில் சிக்கிவிட்ட மக்கள், இருந்ததையும் இழந்து, புதியதோர் இயல்பும் பெருமல், ஏதுமற்றவர்களாக, பட்டியில் மாடென உழல வேண்டி நேரிடுமேயன்றி, எமது! எம்மவர்! எமது இயல்பு! எம்வீரர்! எமது புலவர்! எமது நெறி! என்று கூறிப் பெருமைப்பட, அறிவாற்றல் பெறமுடியாததோர் நிலை பெறுவர்! நாடு இருக்கும், அதிலே மக்கள் இருப்பர்—ஆனுல் இரண்டினையும் ஒன்று ஆக்கிடும் பாசம்—பற்று—தேசியம்—இருக்காது!! வீட்டிலே இருக்கும்போது, நம்முடன் இருப்போரைவிட, அதிகமான அளவில்தான் ஆட்கள் இருக்கிறுர்கள் இரயில் பயணத்தில். வீட்டிலே காணப்படுவதைவிட சிற்சில வேளைகளிலே இரயிலில் குதூகலமும் கூடக் காணப்படும்—எனினும் அதிலே செல்லும் எவரும்—இரயிலைத் தமது வீடு என்று கொள்வதில்லையே!! சிறு குடில் எனினும், அதனிடம் ஏற்படும் பாச உணர்ச்சி, புதுமெருகுடன் கூடியதாக இருப்பினும், இரயி

லிடம் ஏற்படுகிறதா!! புதிய போதகர்களோ, குடிலையும் அழித்துவிடுங்கள், நாங்கள் அமைந்திருக்கும் கூடாரத்தை உமது மனையென்று கொள்ளுங்கள் என்கின்றனர்! முடியாது ஐயன்மீர், ஏனெனில் அது முடியக்கூடிய செயலல்ல என்கிறோம். விடாதே! பிடி! சிறையில் அடை! என்று இந்துஸ்தான் டைம்ஸ் கொக்கரிக்கிறது!

இதிலிருந்து தம்பி, நான் துவக்கத்தில் எடுத்துக்காட்டிய படி, அங்கு வரையில், நமது கழகம் மணம்பரப்பிவிட்டிருக்கிறது என்ற பேருண்மை தெரிகிறது.

இதுபோல, எங்கும் நமது கழகநிலை தெரிந்திடவேண்டும் என்பதற்காகவேதான் தம்பி, நானும் துணிந்து ஆங்கிலக் கிழமை இதழ், ஜனவரித் திங்களிலிருந்து வெளியிடுவது என்று ஏற்பாடுகளைத் துவக்கிவிட்டேன். சென்ற ஆண்டு, எப்படியும் இந்த இதழ் துவக்கி நடத்துவது என்று, ஏற்பாடுகளை என் நண்பர் S. S. P. லிங்கம் அவர்களைக்கொண்டு துவக்கினேன். அவரும் மிக ஆர்வத்துடன் பணியாற்றினர்—ஆனால், என் சுபாவம்தான் உனக்குத் தெரியுமே, புதிய பொறுப்பாயிற்றே! எப்படி இதனையும் கவனித்துக்கொள்வது! என்ற அச்சம் குடைந்தது. மெத்தச் சமாதானம் சொல்லி, நண்பர் லிங்கத்தை, இப்போதைக்கு வேண்டாம், பிறகு பார்ப்போம் என்று கூறினேன். இப்போது சென்னையிலிருந்து நடத்துவதைவிட காஞ்சியிலிருந்து வெளியிடுவது, சிறிதளவு வசதி தரும் என்ற எண்ணத்துடன், ஏற்பாடுகள் செய்துவருகிறேன். தம்பி! நான் அதற்காகக் கேட்கும் ஆதரவு—நன்கொடை அல்ல—துவக்கத்திலேயே எனக்குத் தெம்பும் தைரியமும் வருவதற்காக, ஆயிரம் சந்தா தேவை என்று கேட்டேன்.

நான் இதுபோலக்கேட்கும்போது, தம்பி, நீ மட்டுமல்ல கேட்டுக்கொண்டிருப்பது.

மாற்றுக் கட்சியினர் கேட்டுக் கொண்டுள்ளனர்; சர்க்காரும் உற்றுக் கேட்கிறது.

என் வேண்டுகோளைத் தம்பி, நீ அன்புடனும் அக்கறையுடனும் நிறைவேற்றி வைத்தால், உனக்கும் எனக்கும் உள்ள உறவு எவ்வளவு உயர்தரமானது என்பதை அறிவதுடன், நமது கழகத்துக்கு எத்துணை செல்வாக்கு இருக்கிறது, காரியத்தை வெற்றிகரமாக்கும் ஆற்றல் நமது கழகத் தோழர்களிடம் எவ்வளவு இருக்கிறது என்பதை, மாற்றுக்கட்சியினரும், சர்க்காரும் அறிவர்!



உன் அன்பும் அக்கறையும், ஆங்கில ஏடு பொறுத்த வரையில், நான் மகிழத்தக்க வகையில் இன்னும் உருவெடுக்கவில்லை என்பதைக் கூறிக்கொள்ள வருந்துகிறேன். எனினும் சொல்லிவைக்கிறேன், நிலைமையை அறிந்து விரைவினில் ஆதரவு திரட்டி அளித்திடும் ஆற்றல் உன்னிடம் நிரம்ப இருக்கிறது என்று அறிந்தவன் என்பதனால்.


இந்துஸ்தான் டைம்ஸ் போன்ற பல, வளமான ஆங்கில ஏடுகளை மட்டுமே வெளி உலகு காண்கிறது. எனவே திராவிடம் தெரிவதில்லை.

டாக்டர். மு.வ. கூறுவதுபோல, சென்னை அமைச்சர்களையோ அச்சம் தடுக்கிறது; எப்போதேனும் அவர்கள் துணிந்து நீதி வழங்கும்படி கேட்டாலோ, மிரட்டலும் விரட்டலுமே கிடைக்கிறது. பல்கலைக் கழகத்தினரின் நியாயமான கோரிக்கையையும் டில்லி புறக்கணித்து விடுகிறது, மதிப்பளிக்க மறுக்கிறது. இப்படி ஒவ்வோர் முனையிலிருந்தும் டில்லியின் தாக்குதல் கிளம்புவது கண்டு, மனம் நொந்து போயுள்ள நம்மையோ நாட்டிலே நடமாடவிடுவதே கூடாது, ஒழித்துக்கட்டவேண்டும் என்று டில்லியிலுள்ள இந்துஸ்தான் டைம்ஸ் கூறுகிறது. இந்நிலையில், நமது கழகத்தைப் பிறர் அறிவதற்காகவாவது ஒரு ஆங்கில ஏடு—கிழமை இதழாவது வேண்டும் அல்லவா!

இதை அறிந்துள்ள உனக்கு ஆதரவு திரட்டி உடனே அனுப்பி வைக்கும்படி, தம்பி, நான் பன்னிப் பன்னிக் கூறத் தேவையில்லை என்று எண்ணுகிறேன்.

கலை, கல்வி, அரசியல், எனும் மூன்று துறைகளிலே, டில்லு வழங்கியுள்ள மிரட்டல் விரட்டல் கண்டோம்—இனித் தம்பி, தொழில் துறையிலிருந்து கிளம்பும் ஒரு துயரக் கீதம், கேள். அதைக் கூறு முன்பு, நமது நிதி அமைச்சர் உருவத்தையும் உரையையும் நினைவிலே கொண்டுவந்து நிறுத்திக் கொள்ளவேண்டுகிறேன்!! அடுத்த கிழமை அந்தத் துயர கீதம் பற்றிக் கூறுகிறேன்.

அன்பன்,



25—11—'56

கடிதம் : 76

# சுகஸ்தான் வாசி...

தொழில் துறையில் வடக்கும் தெற்கும்—ரோச்விக்டோரியாவும் T.V.S.ம்

தம்பி!

அமைச்சர் அடித்து அடித்துப் பேசுகிறாராம், வடக்கு தெற்கு என்றெல்லாம் பேசுவது தவறு – பெருந்தவறு—விஷமிகளின கூக்குரல் என்று பேசுகிறாராம, போகுமிடமெல்லாம்!!

தெற்கே தொழில் சிறிதளவு குறைவுதான்—என்கிறார், உடனே மக்கள் ஆரவாரம் செய்கிறார்கள்—செய்ததும், குட்டம் பிடித்தவனைக் காணபவர்கள், ஐயா! கொஞ்சம் எட்டி நில் ' என்று கூறியதும், கோபம்கொண்டு கண்டபடி ஏசுவானல்லவா, அந்நிலை பெற்றவராகி, ''இதற்காக ஏன் கத்துகிறீர்கள்! யார் உங்களைத் தொழில் நடத்தவேண்டாமென்று சொன்னவர்கள்? யார் உங்கள் கையைப் பிடித்துத் தடுத்தவர்கள்?'' என்று வெளுத்து வாங்குவதாக எண்ணிக்கொண்டு, வகைமுறை கெட்ட நிலையில் வசைமாரி பொழிந்து கொண்டு வருகிறாராம்!

இது, தம்பி! தொழில் நடத்த விரும்பியவரின் கையைப் பிடித்து மட்டுமல்ல, அவருடைய முதுகில் குத்தி, மூக்கினை அறுத்து, மூலையில் டில்லி உட்காரவைத்த சோகக்காதை.

வடக்கே தொழில்வளம் பெருகிவிட்டதே, தெற்கு தேய்ந்துவிட்டதே என்று பேசிக்கொண்டு இருப்பவர்களின்



போக்குக்கூட இருக்கட்டும், தெற்கிலே தொழில் வளர வேண்டும், பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு பிழைக்கும் வழி கிடைக்கவேண்டும், - நேரு பண்டிதர் ஓயாமல் வற்புறுத்தி வருகிறாரே அதற்கேற்ப, உற்பத்தி பெருக வேண்டும், செல்வம் கொழிக்கவேண்டும் என்பதைப் பேச்சளவில் விட்டுவிடாமல், செயலுக்குக்கொண்டுவர விரும்பி, துவக்கிவிட்டுத் துடிதுடிக்கும் தொழிலதிபரின் துயரகீதம் இது.

தூத்துக்குடியிலும் அதன் வட்டாரத்திலும், உப்பளம் ஏராளம். இங்கு கிடைக்கும் இயற்கைப் பொருள்களைக் கொண்டு, மிகப்பெரிய சோடா உப்பு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கத் திட்டமிட்டார்கள்.

சோடா உப்பும், அதனைத் தயாரிக்கும்போது உடன் தயாராகக்கூடிய குளோரைன்—குளோரைட்—இலிமினைட்—போன்றவைகளும், கனரகத் தொழிற்சாலைகளுக்கு மிகமிகத் தேவைப்படுவன.

தெற்கே, கனரகத் தொழில் வளர்ச்சி காணவேண்டுமானால், குளோரைட், குளோரைன், இலிமினைட், காஸ்டிக் சோடா, போன்ற இவைகளின் உற்பத்தி வளமாகவேண்டும்.

இந்தப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு ஏற்றது, தூத்துக்குடி வட்டாரம், என்ற உண்மையை நிபுணர்கள் ஒப்புகின்றனர்.

சோடா உப்பும், இதுபோன்ற பொருள்களும், வெளிநாடுகளிலிருந்தே வரவழைக்கப்படுவது பொருள் பாழாகும் முறை, இந்த முறை நீடிக்குமட்டும் இங்கு புதுப்புது கனரகத் தொழில் வளருவது கடினம், எனவே சோடா உப்பு உற்பத்தி செய்யும் பெரிய தொழிற்சாலை அமைப்பது அவசியம்தான் என்பதை, இந்திய சர்க்காரின் பாதுகாப்பு அமைச்சர் குழுவே எடுத்துக் காட்டிற்று.

நிபுணர்கள் ஒப்பம் அளித்தனர், ஆய்வுக்குழுவினர் திட்டம் தேவைதான் என்றனர், இந்தப் பொருள்களை உபயோகிக்கும் பல்வேறு தொழிற்சாலையினரும், வரவேற்றனர்.

குறிப்பாக ஜவுளி ஆலைத் தொழிற்சாலையினர் மகிழ்ச்சி தெரிவித்தனர்; அனைவரும்கூடி இந்திய சர்க்காரிடம் முறையிட்டு, தூத்துக்குடியில் இந்தத் தொழில் துவக்கிட ஆதரவு அளிக்கவேண்டுமென்று வலியுறுத்தினர்.

இதுபோன்ற தொழிற்சாலை பெரிய அளவில், வேறு எங்கும் இல்லை.

இதற்கு கனரகத் தொழிற்சாலை ரசாயனப் பொருள் உற்பத்திக் கம்பெனி; அமைக்கப்பட்டது. மூலதனம் ஒரு கோடி ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டது.

1953ம் ஆண்டில், இந்த ஒரு கோடி ரூபாய் கம்பெனியின் துவக்கவிழா விமரிசையாக நடந்தேறியது.

துவக்க விழா நடத்தினவர் மைசூர் மகாராஜா!!

தம்பி! இப்போது அந்தத் தொழிற்சாலை இயங்கவில்லை!!

அது குறித்தே இந்தத் துயரகீதம் வெளிவந்திருக்கிறது.

ஒரு கோடி ரூபாய் முதல் திரட்டி, நடத்தத் திட்டமிட்டு மும்முரமாக ஆரம்ப வேலைகளை நடத்தி வெற்றி பெற்று, 17 இலட்ச ரூபாய் வரையிலே பங்குத் தொகை திரட்டிவிட்டனர். சென்னை சர்க்காரும், 10 இலட்ச ரூபாய் அளவுக்கு இந்தத் தொழிற்சாலையில் பங்கு எடுத்துக்கொள்வதாக வாக்களித்தது.

இங்ஙனம் நிபுணர்களின் ஆதரவைப் பெற்று, பிரமுகர்களின் ஆசியைப்பெற்று, துவக்க விழாவிலே மைசூர் மகாராஜாவின் வாழ்த்துகளைப் பெற்றுத் துவக்கப்பட்ட தொழிற்சாலை, இன்று மூடுவிழாவுக்கு முகூர்த்தம் பார்க்க வேண்டிய நிலைக்கு வந்துவிட்டிருக்கிறது! ஏன் என்று நிதி அமைச்சரைக் கேள் தம்பி, ஏனு? உங்களால் முடியவில்லை! உங்கள் தெற்குக்கு அவ்வளவுதான் யோக்யதை!'' என்று கொதித்துக் கூறுவார் ஆனால் அவருக்கும், உண்மை விளங்கினுல், கோபமல்ல, கண்ணீர் வரும்.

தொழிற்சாலை அமைப்புக்காக நூறு ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது; பாதைகள், பாதை ஓரத்தில் மரம் செடி கொடிகள், காரியாலயக் கட்டிடங்கள், அவைகளைச் சுற்றி கிராதிகள், காம்பவுண்டுகள், வேலிகள், தோட்டங்கள், யாவும் கட்டப்பட்டன.

சுவிட்சர்லாந்து நாட்டு விஞ்ஞானத் தொழில் நிபுணர்களின் கூட்டுறவு கேட்டுப் பெறப்பட்டது.

கிரெப் கம்பெனியார், இதற்கான இயந்திரம் தரவும், தொழிற்சாலையில் பணியாற்றவும் இசைந்ததுடன், தங்கள் பங்குத் தொகையாக 6-இலட்ச ரூபாய் அளிக்கவும் ஒப்புதல் அளித்தனர்.



சுவிட்சர்லாந்து நாட்டு நிபுணர்களுக்கான வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன!

சுவிட்சர்லாந்து நாட்டிலிருந்து இயந்திரக் கருவிகள் வருவதற்கான ஏற்பாடு முடிந்துவிட்டது.

கிராம்ப்டன் கம்பெனியார் மின்சார சம்சார சம்பந்தமான இயந்திரங்களை அனுப்பிவைத்துவிட்டனர்.

தொழிற்சாலை அமையும் இடத்தருகே வசதிக்காக இரயில்லே இலாகாவினர் விடுதி அமைத்தளித்துவிட்டனர்.

குடிதண்ணீர் வசதிக்காகப் பெரிய கிணறுகள் தோண்டப்பட்டாகிவிட்டன.

தொழிலாளருக்கான விடுதிகள் கட்டுவதற்கான திட்டம் தயாராகி வேலை துவங்கிவிட்டது.

தொழிற்சாலையின் தேவைக்காகவென்றே, பாளையங்கோட்டையிலிருந்து தூத்துக்குடி வரையில் புதிய பாதை அமைக்க ஏற்பாடாகி வேலை நடந்தேறி வருகிறது.

தம்பி! இந்த ஒவ்வொரு வேலை துவக்கப்பட்டு நடந்தேறியபோதும் தொழிற்சாலை நடத்தவேண்டுமென்று திட்டமிட்டவர்களின் மனதிலேயும், தொடர்புகொண்டவர்களின் மனதிலேயும், எத்தனை ஆசை ஊறியிருக்கும்:

வேலையற்ற மக்களில் எத்தனை ஆயிரம் பேர், இந்தப் புதிய தொழிற்சாலை எழுவது கேட்டும் கண்டும், இனித் தங்கள் கஷ்டம் தீரும் என்று கருதியிருப்பர்.

ஆனால், தம்பி! 1953-ல் மைசூர் மகாராஜாவால் துவக்கப்பட்ட இந்தத் தொழிற்சாலை, இப்போது எந்த நிலையில் இருக்கிறது தெரியுமா? 1956 செப்டம்பர் திங்களில், துயரகீதம் பாடுகிருர்கள்!

துரோகம்! வஞ்சகம்! நம்பவைத்துக் கழுத்தறுப்பது! நம்பினேரை நட்டாற்றில் தள்ளுவது! தூங்கும்போது கல்லைத் தூக்கித் தலையில் போடுவது!—என்று பலப்பல கூறப்படுகிறதே, இந்தத் தொழிற்சாலை சம்பந்தமாக நடைபெற்றுள்ள சம்பவம், இவைகளை எல்லாம் தூக்கி அடிப்பதாக இருக்கிறது.

கனரகத் தொழிலுக்குத் தேவையான ரசாயனப் பொருள்களைத் தயாரிப்பதற்காக ஒரு கோடி ரூபாய் மூலதனத்துடன்

நடத்துவது என்று திட்டமிட்டுத் துவக்கப்பட்ட இந்தத் தொழிற்சாலையின் வளர்ச்சிக்காக ஒரு முறையும் வகுத்தனர்.

முதல் தவணை-அல்லது முதல் கட்டம் ஒன்று; இந்த முதல் கட்டத்தில் நாளொன்றுக்கு ஐந்து டன் சோடா உப்பு தயாராகும் அளவு வேலை நடத்துவது என்றும், ஐந்தாண்டு கள் இம்முறையில் வேலை செய்தான பிறகு, தினசரி பத்து டன் சோடா உப்பு தயாராகத்தக்க விதத்தில் தொழிற் சாலையை விரிவுபடுத்துவதென்றும், முறை வகுத்துள்ளனர்.

தென்னாட்டிலே தொழில் வளம் ஏற்படவில்லை என்பதை அமைச்சர்களே ஒப்புக்கொண்டுள்ளனர்! வேண்டுமென்றே தென்னாடு புறக்கணிக்கப்படவில்லை; ஓரவஞ்சனை நடைபெற வில்லை என்று சமாதானம் கூறுகின்றனர். தென்னாட்டிலே தொழில் நடத்த, பணம் படைத்தோரும், பணத்தைத் திரட்டக்கூடியவர்களும் முன் வரவேண்டும் என்று யோசனை கூறினர்; டாட்டா, பிர்லா என்றுகூறி வயிற்றெரிச்சல்பட்டு என்ன பிரயோஜனம்,உங்களுடைய அழகப்பாக்களை அழைத் துத் தொழில் நடத்தச் சொல்லுங்களேன் என்று கேலி பேசினர். அவ்விதம் புதிய தொழில்கள் துவக்கப்பட்டால் துரைத்தனம் வரவேற்கும், ஆதரவு அளிக்கும் என்று வாக்க ளித்தனர். இதனைக் காங்கிரஸ் பேச்சாளர்கள் நமக்கு அவ் வப்போது எடுத்துக் காட்டியும் வருகின்றனர்.

இப்போது, நடைபெற்று வரும் வேடிக்கையைக் கேள், தம்பி! கேள்!

இவ்வளவு வேலைகள் நடந்தான பிறகு—அதற்காகப் பல இலட்சம் செலவான பிறகு—மைசூர் மகாராஜாவின் திருக்கரத் தால் அஸ்திவாரம் அமைத்து, புதிய தொழிற்சாலைக்கான துவக்க ஏற்பாடுகள் பல செய்து முடித்து, நிபுணர்களை நியமித்து, வேலையைத் துவக்கியான பிறகு, இந்திய சர்க்கார் இந்தத் தொழிற்சாலை, தகுந்தபடி நடத்தப்படுமா என்பதிலே எமக்குச் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது, என்று ஒரு 'கரடி'யை அவிழ்த்துவிட்டிருக்கிறது.

நாளொன்றுக்கு 5-டன் சோடா உப்பு தயாராகும் என் கிறீர்களே—இதுதான் உமது உற்பத்தியின் அளவு என்றால், கட்டிவராதே, தொழிலில் இலாபம் வராதே, வீண் கஷ்ட நஷ்டமல்லவா ஏற்படும்—இந்த நிலையில், புதிய தொழிற் சாலையை ஏன் கட்டிக் கொண்டு மாரடிக்கிறீர்கள்—விட்டுத் தொலையுங்கள் என்று இந்திய சர்க்கார், தமது மேலான, ஆலோசனையைக் கூறுகிறது.



எப்படி இந்தத் தொழிற்சாலையைச் சரியான முறையில் நடத்தமுடியும்—செலவுக்கும், போடும் முதலுக்கும், எடுத்துக் கொள்ளும் கஷ்டத்துக்கும் ஏற்ற பலன் கிடைக்காதே, இதற்கு என்ன சமாதானம் சொல்கிறீர்கள் என்று இந்திய சர்க்கார், கேள்வி கேட்கிறது.

தம்பி! எல்லா விவரமும் ஆதாரமும் தேடித்தந்து, புள்ளி விவரக்கணக்குக் காட்டி, திட்டத்தை விளக்கி, திட்டத்துக்கு நிபுணர்கள் ஒப்பம் அளித்ததையும் எடுத்துக் காட்டித்தான், 1953-ல், இந்திய சர்க்காரிடமிருந்து அனுமதி பெறப்பட்டது—இந்தப் புதிய தொழிற்சாலை துவக்க.

இப்போது, இரண்டாண்டுகளுக்குப் பிறகு, துவக்கவிழா நடத்தி, ஊன்றிய விதை செடியான பிறகு, கல்லி எடுத்து வேர் ஆழச்சென்றிருக்கிறதா என்று பார்க்கச் சொல்வது போல, இந்தத் தொழிற்சாலை நடத்துவது இலாபகரமான தாக இருக்குமா என்பதுபற்றி எமக்குப் பலமான சந்தேகம் ஏற்பட்டுவிட்டிருக்கிறது, என்ன சொல்கிறீர்கள் என்று டில்லி யில் உள்ள சர்க்கார் கேட்கிறது.

மகள் ஆறுமாத கர்ப்பிணியான பிறகு, என் மருகன் குடும்பத்தை வளரச் செய்யக்கூடியவன்தானா என்பதுபற்றிய ஐயப்பாடு எனக்கு ஏற்பட்டுவிட்டது. எனவே என் இல்லத் துக்கே அழைத்துச் செல்ல எண்ணிவிட்டேன் என்று கூறு பவர் உண்டா! டில்லி இருக்கிறது! ஆண்டு மூன்று ஆகிறது, அஸ்திவாரம் போட்டு! பல இலட்சங்கள் செலவாயின, துவக்க வேலைகளுக்கு! தொழிற்சாலைக்கான தளம் எழும்பி விட்டது, பாதைகள் அமைந்துவிட்டன! இவ்வளவுக்கு பிறகு, இந்திய சர்க்காருக்கு, பிள்ளை பிழைக்குமா? என்ற சந்தேகம் ஏற்பட்டுவிட்டதாமே, கேட்டனையோ இந்த வேடிக் கையை!!

துவக்கச் சொல்லேன் புதிய தொழிற்சாலைகளை, என்று பேசும் அமைச்சர்களுக்கு, தம்பி! துவக்கிய பிறகு ஏற்பட் டுள்ள இந்தத் துயரச்'சேதி' தெரிந்திருக்க வேண்டும் அல்லவா? என்ன செய்தார்கள்? கேட்டுப்பாரேன், காங் கிரசில் உள்ள நல்லவர்களை.

வெடி குண்டு வீசுவது போல, இந்திய சர்க்கார் வீசிய கேள்வி இருந்தது என்னும் புதிய தொழிற்சாலை அமைப்பா ளர்கள், இந்திய சர்க்காரின் சந்தேகத்தைப் போக்க, புள்ளி விவரங்களை மீண்டும் விளக்கி, 5-டன் உற்பத்தி என்பது, முதல் கட்டத்தில்தான், இரண்டாவது கட்டத்திலேயே நாளொன்றுக்கு பத்து டன் உற்பத்தியாகும், தொழில் கட்டி

வரும், பணம் விரயமாகாது, உழைப்பு வீண்போகாது என்றெல்லாம் எடுத்துக் காட்டினர்.

இந்தச் சமாதானத்துக்கு, விளக்கத்துக்கு, இந்திய சர்க்கார் மறுப்பும் தரவில்லை, தமது பழைய புகாரையும் விட்டு விடவில்லை.

தம்பி! நட்டாற்றில் விடுவது என்கிருர்களே, இது வேறு என்ன?

தூங்கும்போது கல்போடுவதும், துவக்கிட அனுமதி தந்து, வேலைகள் மளமளவென்று வளர்ந்திடும்போது, 'கட்டை' போடுவதும் வேறு வேரு!!

எண்ணிப் பார்க்கச் சொல்லு, நம்மை எல்லாம் பேதம் பிளவு பேசுவோர் என்று எண்ணிக்கொண்டு நிந்திக்கிருர்களே, காங்கிரஸ் நண்பர்கள், அவர்களை!

இத்துடன் இந்தச் சோகக் காதை நின்றுவிடவில்லை. இது போதும், வேதனையைக் கிளற, கதர்ச்சட்டையைக் கழற்றி எறிந்துவிட்டு கழகத்தில் சேர! எனினும், மேலும் நடந்திருக்கும் 'வேலை'யையும் கூறுகிறேன், கேள், தம்பி.

1953-ல் ஆதாரம் காட்டி, அவசியத்தை வலியுறுத்தி, புள்ளி விவரம் காட்டி, நிபுணர்களின் ஒப்புதலைத் காட்டி, இந்தத் தொழிற்சாலை அமைக்க அனுமதி பெற்றனர்.

1955-ல் தூத்துக்குடிக்கு அருகேயே, இது போன்ற வகையான புதிய தொழிற்சாலை அமைக்க, வேருேர் தரப்பினருக்கு, இந்திய சர்க்கார் அனுமதி அளித்தனர்.

1953-ல் அனுமதி அளித்து வேலையைத் துவக்கிய தொழிற்சாலை, உற்பத்தி செய்யும் அளவு போதாது என்பதைக் கண்டான பிறகு,மேலும் உற்பத்தியை அதிகமாக்கும் வழி அந்தத் தொழிற்சாலைச்கு இல்லை என்பதைக் கண்டறிந்த பிரகு, மற்ருேர் தொழிற்சாலைக்கு அனுமதி தந்தனரா இந்திய சர்க்கார்? இல்லை, தம்பி, இல்லை.

1953-ல் துவக்கப்பட்ட தொழிற்சாலை, உற்பத்தி செய்திடும் நிலைக்கு வரவில்லை—முயற்சி மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தச் சமயத்திலே, அதே வட்டாரத்தில் வேருேர் தொழிற்சாலைக்கு அனுமதி அளிப்பது ஏன்?

நீதியும் நியாயமும் மடிந்திடக்கூடாது என்ற நல்லெண்ணம் கொண்ட எவரும், அவர் எந்தக் கட்சியில் இருப்பினும், கேட்க வேண்டிய கேள்வி அல்லவா இது? கேட்பார்களா?



1953-ல் அனுமதி அளித்தது, சோடா உப்பு தயாரிக்க! 1955 ல் புதிய தொழிற்சாலைக்கு அனுமதி அளித்திருக்கிருேம். என்ருல், அது சோடா உப்பு தயாரிகக அல்ல, சோடா சாம்பல் தயாரிக்க!—என்று சமாதானம் கூறிட சர்க்காருக்கு மனம் இடம் தருகிறது.

தம்பி! பெயர் ஒன்றுக்கு சோடா உப்பு—Caustic Sodo—மற்ருென்றுக்கு Soda Ash—சோடா சாம்பல் என்று இருக்கிறதே தவிர, தொழில் முறை, உற்பத்தி வகை ஆகியவை ஓரேவிதம்தான்! எனினும், சர்க்கார் நடத்திய இந்தத் திருவிளையாடலை, சொற்சிலம்பம் செய்து மறைத்திட முயற்சிக்கிறது!

பல் ஆஸ்பத்திரிக்குப் போவானேன்—பல ரூபாய் பாழாக்கிக் கொள்வானேன் என்பதற்காகத்தான், நாலைந்து அறை கொடுத்து இவனுடைய பற்கள் கீழே உதிர்ந்திடச் செய்தேன் என்று போதையில் உள்ள காலிகூடப் பேசமாட்டான். பொறுப்பு அறிந்த சர்க்கார், பொன்னுடாக இருந்த தென்னகம் தேய்ந்திருக்கிறது, மீண்டும் இங்கு திருவும் தெம்பும் ஏற்படப் புதிய தொழில்களை அமைத்தாக வேண்டும் என்ற நோக்கத்துடன் பணியாற்ற வேண்டிய சர்க்கார்,

> உங்கள் தொழிற்சாலை, 'கட்டி வரக்கூடிய' முறையில் இல்லை என்று நாங்கள் கருதுவதால், இது நடைபெறுவதைக் குறித்துப் பலமாகச் சந்தேகப்படுகிருேம் என்று சாக்குக் கூறிவிட்டு, இது போன்ற வகையினதாகவே வேருேர் தொழிற்சாலை நடத்த, மற்ருெருவருக்கு அனுமதி அளித்திருக்கிறது.

இதனை அறம் என்று கூற, யார் முன் வருவர்?

இதனை நேர்மையான அரசியல் என்று கூறும் துணிவு கூட எவருக்கும் எழாதே!

1953-ல் ஏற்பட்ட தொழிற்சாலை Caustic Soda தயாரிக்க; 1955-ல் அனுமதி பெற்றிருப்பது Soda Ash தயாரிக்க என்று சொல்லை வைத்துக்கொண்டு 'ஜாலம்' செய்தார்கள்!!

உன் கடையில் இட்லி சாம்பார்! அவன் கடை உன் கடைக்குப் போட்டியாக நான் கிளப்பிவிடுவது என்று எண்ணிக் கொள்ளாதே, அவன் கடையில் இட்லி சட்னி தான், சாம்பார் கிடையாது, என்று சொன்னுல், அதற்குப் பெயர் சமாதானமா!!

சிலநாள் தான் இந்தப் போலிவாதம் கூட!

இப்போது, 1955-ல் அனுமதி பெற்ற, புதிய தொழிற்சாலையினர் (Caustic Soda) சோடா உப்பு தயாரிக்கவும் உரிமை பெற்றுவிட்டார்கள்!

இப்போது நிலைமை என்ன என்பதை எண்ணிப் பார்த்திடலாம், வா, தம்பி!

ஒரு கோடி ரூபாய் மூலதனம் ஏற்பாடு செய்து, அதற்கான பங்கு பெற, என்னென்ன முயற்சிகளில் ஈடுபட வேண்டுமோ அவை யாவும் செய்து முடித்து, துவக்க விழா நடாத்தி, வேலையைத் துரிதப்படுத்திக் கொண்டிருக்கிறது, 1953-ல் அனுமதி பெற்ற கம்பெனி.

இதற்குக் கழுத்தில் கத்திவைப்பது போல, அதே தூத்துக்குடி வட்டாரத்திலேயே, வேறோர் அமைப்புக்கு அனுமதி வழங்கிற்று, டில்லி.

வாழவைக்கும் வழியா இது? தொழிலை வளர்த்திடும் இலட்சணமா? மூன்று ஆண்டுகள் முயற்சியும், செலவான பணமும் குப்பைதானே!!

தம்பி! இனி, இந்தத் துயரச் சேதியின் உச்சத்தைக் கவனி.

1953ல் அனுமதிப் பெற்று, இப்போது ஊசலாடிக் கொண்ருக்கும் கம்பெனிக்கு அமைப்பாளர், ரோச் விக்டோரியா!

1955ல் அனுமதி பெற்றுக் கிளம்ப வந்திருக்கும் கம்பெனி T. V. சுந்தரம் ஐயங்காருடையது!!

பக்கத்திலே, யாராவது, 'பாரத மாதாவின் பிள்ளை' இருந்தால், இந்தச் சேதியைக் கூறிவிட்டு, அவர் முகத்தைக் கவனித்துப்பார், தம்பி!

ரோச்விக்டோரிய தூத்துக்குடித் தொழிலதிபர்—காங்கிரஸ்காரர், இப்போதைய M. L. A. முன்னாள் காங்கிரஸ் அமைச்சர்!

T. V. சுந்தரம் ஐயங்கார், காங்கிரஸ்காரராக இருந்ததில்லை!

ரோச் விக்டோரியாவின் முயற்சியில் மண்ணைப் போடுவானேன்? சுந்தரம் ஐயங்கார் கம்பெனிக்கு சந்தன தாம்பூலம் அளிப்பானேன்?



ரோச் விக்டோரியா மூன்றாண்டுகளாக எடுத்துக்கொண்ட முயற்சி என்ன கதி ஆவது?

அஸ்திவார விழாவன்று அவர், பாபம், மைசூர் மகாராஜாவின் பக்கத்திலே நின்றுகொண்டு, பூரிப்புடன், புதிய தொழிற்சாலை பற்றிப் பேசியபோது, அவருடைய மனக்கண் முன்பு ஓங்கி நிற்கும் புகை போக்கிகளும், உருண்டு கிடக்கும் இருப்புச் சக்கரங்களும், உற்பத்தியாகும் சரக்குகளும், அவைகளை ஏற்றிச் செல்லும் பெட்டிகளும், கிடைத்திடும் இலாபத்தைக் கொட்டிவைத்திடும் கொட்டடியும், இலாபம் தேடித்தர உழைத்திடும் பல்லாயிரம் பாட்டாளிகளும், தோன்றி இருந்திருக்கக் கூடும்!

நாமோ காங்கிரஸ்காரர், கழகம் அல்ல!

பிரமுகர் வரிசையிலே மட்டுமல்ல, தொழில் அதிபர் பட்டியலிலே, நமது பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது!

காங்கிரஸ் அமைச்சராகவேகூட இருந்திருக்கிறோம்.

வல்லவனுக்கு, வடக்காவது தெற்காவது—எல்லாம் ஒன்றுதான்!!

டில்லியில் நமது குரலுக்கு மதிப்பு எப்படியும் இருந்தே தீரும் என்று பலப்பல எண்ணிக்கொண்டிருந்திருப்பார்.

எல்லாவற்றிலும் இடிவிழுவதுபோல, 1955ல் T.V.S. கம்பெனிக்கு அனுமதி அளித்தது, இந்திய சர்க்கார்.

இப்படி ஒரு பேரிடி வந்து விழும் என்று, ரோச் எப்படிக் கருதியிருக்கமுடியும்! தொழிற்சாலை அமைப்பிலே தீவிரமாக ஈடுபட்டார். தேவையான இயந்திரங்கள் அனுப்பப்படுவதிலே தாமதம் ஏற்படுகிறது என்பதால், ரோச் விக்டோரியா, சுவிட்சர்லாந்து நாட்டுக்கே சென்று, இயந்திரங்களைச் சேகரம் செய்தாராம்!

தொழிற்சாலையோ புதிது, ஆனால் தேவையானது; மூலதனமோ ஒருகோடி; முயற்சியில் ஈடுபட்டவரோ தொழிலதிபர்; வளர்ச்சியோ குறிப்பிடத்தக்க அளவில்; எனினும் 1955-ல் T.V.S. கம்பெனிக்குப் புதிய அனுமதி கிடைக்கிறது! நிலைமையை, இப்போது ஆராய்ந்து பார்க்கலாம், நமது காங்கிரஸ் நண்பர்கள்!

வெட்கமாகவும் இருக்கிறது, வேதனையாகவும் இருக்கிறது என்று கூறுவர் இரண்டோர் காங்கிரஸ்காரராவது; அவர்களைக் கண்ணீர்விடச் சொல்லாதே, தம்பி, இன்னுமோர்

'சேதி'யைக் கேட்டுவிட்டு, பிறகு வேண்டுமானல், வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொள்ளட்டும்.

ரோச்விக்டோரியாவின் முயற்சிக்கு உலைவைக்கத்தக்கதாக T.V.S. கம்பெனியார், புதிய தொழிற்சாலைக்கு அனுமதி பெற்ருர்களல்லவா, அவர்கள் அந்த அனுமதியை தாரங்க தரா ரசாயன தொழிற்சாலை எனும் வேருேர் கம்பெனிக்கு மாற்றிக் கொடுத்துவிட்டார்கள்! இந்தக் கம்பெனி, வட நாட்டுக்காரருடையது!

தம்பி! சம்பூரணமாகிவிட்டதல்லவா, நேராயணம்! இப் போது, சொல்லச் சொல்லு வடநாடு என்ன போக்கில் தென்னுட்டை நடத்துகிறது என்று.

துக்கம் தொண்டையை அடைக்கிறது என்பர் தூய உள்ளத்தை இழந்திடாத, காங்கிரசார்.

சென்னை சர்க்காரிடம் முறையிடலாமே! காமராஜர், தமிழராமே! தமிழ் நாட்டுக்குந் தாழ்வு வரவிடமாட்டாராமே! அவரிடம் மனுச்செய்யலாமே!-என்று முணுமுணுப்பர், சிலர்.

எல்லா முறைகளையும் செய்து பார்த்து, மூக்கறுபட்ட நிலைக்கு வந்துற்ற பிறகுதான், மாஜிமந்திரியும், இன்றைய காங்கிரஸ் M.L.A.யுமான, ரோச்விக்டோரியாவே 1956 செப்டம்பரில், இந்தத் துயரச் 'சேதி'யை அச்சிட்டு, அனைவருக்கும் வழங்கி இருக்கிருர்!

இப்படியெல்லாம் இடுக்கண் வந்துற்றதால், என் முயற்சியை விட்டுவிடுகிறேன் என்று அவர் அந்த அறிக்கையில் கூறவில்லை.

இப்படி எல்லாம் நடப்பதால், நண்பர்களே! நாட்டவரே! விழிமின்! எழுமின்! இந்த விபரீதப்போக்கைக்களைமின்! என்று முழக்கமிடும் முறையிலே அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் மாளிகையின் பெயர் சுகஸ்தான் என்று தெரிகிறது! தம்பி! சுகஸ்தானில் இருப்பவருக்கே, திராவிடஸ்தான் அமைந்தாலன்றி நாடு வாழ வழி ஏற்படாது என்று புத்துணர்வு ஏற்பட்டிருக்கவேண்டும் என்று எண்ணுகிறேன்—அவ்வளவு வேதனைக்குரல் தெரிகிறது அந்த அறிக்கையில்.

சென்னை சர்க்காரால் செயலாற்ற முடியவில்லை.

சென்னை சர்க்காருக்கு அதிகாரம் இல்லை.



மத்திய சர்க்காருடைய 'லகா'னில் நாம் இருக்கிருேம்.

இந்த நிலை இருக்குமட்டும் இங்கு வாழ்வும் வளமும் கிடைக்காது.

எனவே அனைவரும் ஒன்றுகூடி எழுமின்.

இந்த இராஜ்யத்துப் பொருளாதார சுதந்திரம் பறி போகாமல், தடுத்து நிறுத்த வேண்டும்.

உடனே! உடனே! அனைவரும் அனைவரும்!!

இந்த முறையிலே இருக்கிறது. சுகஸ்தானத்திலிருந்து வெளிவரும் அறிக்கை!

பட்டால்தான் தெரிகிறது பலருக்கும்.

உன் அண்ணன், துரும்பைத் தூணாக்கிக் காட்டுகிருன், ரோச்விக்டோரியா காங்கிரஸ்காரர், அவர் இதுபோலெல்லாம் கூறியிருக்கமாட்டார் என்று, தம்பி, உன்னிடம், யாரேனும் சில காங்கிரஸ் நண்பர்கள் வாதாட வருவர் அவர்களின் மேலான பார்வைக்கு, இதோ இந்தப் பகுதியைக் காட்டு; இது ரோச் விக்டோரியா வெளியிட்ட ஆங்கில அறிக்கையில் உள்ள வாக்கியங்கள்:

The Madras Government have been approached several times, the Legislators of the Tinnevelly district have also made representations on behalf of the South Indian venture and the public were looking to the state government to give an encouragement to the scheme.

The Madras Government is however helpless in the matter, for the Government of India in the Commerce and industries department are dictating the policy as to what should be done or what should not be done in the State of Madras.

WE ARE TIED TO THE APRON STRINGS OF THE CENTRAL GOVERNMENT.

It is time therefore that all those who are interested in the industrial development of the south, should join hands and see to it that the economic freedom of the State in particular and the South as a whole, is not taken away from us.

சென்னை சர்க்காரிடம் பலமுறை முறையிட்டோம்—பயனில்லை, காரணம், இந்திய சர்க்காரிடமே இந்த அதிகாரம் இருக்கிறது, மத்திய சர்க்காரின் முந்தானையில் முடி போட்டு வைக்கப்பட்டிருக்கிறது சென்னை-தென்னகத்துத் தொழில் வளர்ச்சியில் அக்கரை கொண்டோரனைவரும் செயலாற்றி, இந்த இராஜ்யத்துக்கு சிறப்பாகவும், பொதுவாகத் தென்னகத்துக்கும் உள்ள பொருளாதார சுதந்திரம் பறிபோகாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும் என்ற கருத்தை, காரசாரமான முறையிலே, ஆங்கில மொழியிலே, ரோச் வெளியிட்டிருக்கிறார்.

தாம் ஈடுபட்ட ஒரு தொழில் முயற்சியிலே ஏற்பட்ட இடுக்கண், அதிலே டில்லி சர்க்கார் காட்டிய போக்கு, அதிலே சென்னை சர்க்காரின் செயலற்ற தன்மை, அதிகாரமற்ற நிலை, இது மனதிலே உறுத்தியதும், ரோச்விக்டோரியா, தாமோர் காங்கிரஸ்காரர், அமைச்சராகக்கூட இருந்தவர், பாரதநாடு என்ற பரந்த மனப்பான்மையைக் கொள்ள வேண்டியவர் என்ற எதற்கும் கட்டுப்படமுடியா நிலைபெற்று, கொதித்தெழுந்து, கேண்மின்! தோழர்காள்! கேண்மின்! என்று கூவுகிறார். எங்கே போயிற்று, டில்லி போதிக்கும் தேசீயம்!! போலிதானே!! சமயத்தில்லை, அந்தத் தேசீயம், தேய்கிறது மாய்கிறது, இயற்கை உணர்ச்சிதான் மேலோங்கி வருகிறது!!

ரோச்விக்டோரியா இந்த நிலையைக் கண்டதால், இனி நாட்டுக்கு மத்திய சர்க்காரின் ஆதிக்கப் போக்கை எடுத்துக் காட்டி, இந்த இராஜ்யத்துக்கும், தென்னகத்துக்கும், பொருளாதார சுதந்திரம் கிடைத்திடச் செய்யும் பணியில் ஈடுபடமுற்படுவாரா என்று என்னைக் கேட்டுவிடாதே. நான் திருப்பி உன்னைக் கேட்பேன், கவர்னராக இருந்த நிலையிலேயே, கொதித்துப் பேசினாரே இதுபோல், குமாரசாமி ராஜா, அவர் என்ன செய்தார் பிறகு, என்று!

இவர் போன்றோரின் பேச்சு, நாம் மேற்கொண்டுள்ள கொள்கை, அப்பழுக்கற்றது என்பதை நமக்கு உறுதிப்படுத்த உதவுவது, வேறு விளைவுகளை நாம் அவர்களிடமிருந்து எதிர் பார்த்துப் பயன் இல்லை.

சோடா உப்புக்கு அனுமதி கிடைத்தும் பயனில்லை என்றால், இத்தகைய முதலாளிமார்களுக்கு சுவை ஊட்ட டில்லியிடம் வேறு பண்டங்களா கிடைக்காது! இவர்களும், நாடு வஞ்சிக்கப்படுகிறது. நாங்கள் இதற்கு உடந்தையாக இருக்கமாட்டோம், உயர்பதவி தந்தாலும் வேண்டோம்,



இலாபச்சுவை ஊட்டினாலும் சீந்தமாட்டோம், என்று சீறிப் போரிடக் கிளம்புவர்?

சுகஸ்தானத்தில் அல்லவா அவர்கள் வாசம்!


தம்பி! உனக்கும் எனக்கும், நம்போல, உள்ளவர்களுக்கும்தான் இந்தப் பிரச்சினை குறித்து தொடர்ந்து பணியாற்றி வெற்றிகாணும் பொறுப்பு ஏற்பட்டுவிட்டிருக்கிறது. அந்தப் பணியில் நாம் ஈடுபட்டு வருகிறோம் இடையிடையே எரிச்சல் காரணமாகவோ ஏமாற்றம் கண்டதாலோ, இப்படிச் சிலர், உண்மை நிலைமையை எடுத்துக் கூறும்போது, நாம் மேற்கொண்டுள்ள பணி நியாயமானதுதான் என்று நமக்கு உறுதியும் உவகையும் ஏற்படுகிறது! அதுவரையில் அவர்கட்கு நாம் நன்றி கூறிக்கொள்ளத்தானே, வேண்டும்.

நாளைக்கே, ரோச் விக்டோரியாவுக்கு சாந்தியும் சமாதானமும் சந்தோஷமும்கூட அளித்திடும் சக்தி டில்லிக்கு உண்டு—பெற்றுத் தருவதாகச் சாகசம் செய்யும் திறம் காமராஜ் சர்க்காருக்கு நிரம்ப உண்டு! எனவே, மீண்டும் அவர்கள் இந்தியா—இந்தியர்—என்று பஜிக்கத்தொடங்கி விடக்கூடும். ஆனால், அவர்களின் இந்தத் தேசிய பஜனை, உதட்டளவு என்பதும், உள்ளத்தில் இடம்பெற்றதல்ல என்பதும், அவ்வப்போது, பீறிட்டுக்கொண்டு வருகிற பேச்சுகளிலே தெரிகிறதல்லவா! அது நல்லதல்லவா, நமக்கும் நாட்டுக்கும்! அதனாலேயே, இந்தச் சம்பவத்தை எடுத்துக் கூறினேன், உனக்கும் உன் மூலம், நாட்டவருக்கும்.

ஆனால், இதுமட்டும் போதுமா! பிறஇடங்கட்கும், உலகுக்கும். இந்தச் சம்பவங்களை எடுத்துக் காட்டி, நமது கழகத்தின் நோக்கத்தை விளக்கவேண்டாமா? ஆங்கில ஏடு மூலம்தானே அதனைச் செய்ய முடியும்.

ஆம்! அண்ணா! என்றுதான் சொல்கிறாய்! அன்புடன் சொல்கிறாய்! ஆனால், சந்தா? அது வரக்காணோமே!!

அன்பன்,



2—12—1956

கடிதம் 77

# வெற்றிபுரி செல்ல...

**தமிழ் நாட்டில் வறுமை—தேர்தல் கால அரசியல்.**

தம்பி!

மருத்துவ விடுதிக்கு உன்னை அழைத்துச் செல்லப் போகிறேன், வருகிறாயா? ஒவ்வொரு அண்ணன் தன் உடன் பிறந்தானை, புதிதாகக் கட்டிய மாளிகை, மணம் பரப்பும் மலர் வனம், அருவிக்கரை, என்பன போன்ற இடங்களுக்கு அழைத்துப் போய்க் காட்டுவார்கள்—குறைந்தபட்சம் ஒரு சிற்றுண்டிச் சாலைக்காவது அழைத்துச் செல்வார்கள்—எனக்கும் ஒரு அண்ணன் இருக்கிறானே, மருத்துவமனைக்கு அழைத்துப் போகிறேன் என்றுகூறிட, என்று கூறிக் கோபித்துக் கொள்ளாதே, சோகமடையாதே! காரணம் இருக்கிறது, உன்னை அங்கு அழைத்துச் சென்றிட. வா, தம்பி, வா!

அதோ பார்! பாபம்! உடலெங்கும் புண்!! உடனிருந்து அவனுக்கு உபசாரம் செய்து கொண்டிருக்கிறாரே, அண்ணன் போல! அவர் எதிர்வீட்டுக்காரர், அண்ணன் அல்ல! துடி துடிக்கிறான் இளைஞன்.

பயப்படாதே, மகனே! பயப்படாதே! ஆபத்து இல்லை என்று மருத்துவர் கூறுகிறார், பயம் இல்லை. உனக்கு ஒரு குறையும் நேரிடாது! கொஞ்சம் பல்லைக் கடித்துக்கொண்டு வலியைப் பொறுத்துக்கொள்!—என்று கனிவுடன் கூறிக் கொண்டே, தளும்பும் தன் கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறார்களே ஒரு அம்மையார், அவர்கள் அவன் தாய் அல்ல!!



உடனே இங்கே அழைத்து வந்தது நல்லதாயிற்று! பைத்தியக்காரத்தனமாக, எண்ணெய் தடவலாம், பச்சிலை வைத்துக் கட்டலாம் என்று இருந்துவிட்டிருந்தீர்களானால், இந்நேரம் 'ஜன்னி' பிறந்து மிக மிக ஆபத்தாகிவிட்டிருக்கும். இப்போது ஒரு பத்து நாள் படுக்கையில் இருக்கவேண்டும், அவ்வளவுதான், உயிருக்கு ஒரு துளியும் ஆபத்து இல்லை—என்று உள்ளன்புடன் பேசுகிறாரே, டாக்டர். அவர் வழக்கமாக வாங்கும் கட்டணத்தை வாங்காதது மட்டுமல்ல, அவரே பணம் போட்டு வாங்கி கொடுத்ததுதான், தட்டில் இருக்கும் பழம், மேஜைமீது இருக்கும் வலி வளிக்கும் பானம், எல்லாம்! டாக்டர், இந்த இளைஞனுக்கு நீண்ட நாளாகப் பழக்கமானவரல்ல—முதல் முறையாகத்தான் சந்தித்தார்!!

தெரிகிறது அண்ணா! தெரிகிறது. இவர் யாரோ சீமான் வீட்டுச் செல்லப்பிள்ளை, அதனாலேதான் அனைவரும் இவ்வளவு கனிவு காட்டுகிறார்கள் என்று சொல்லத் தோன்றுகிறதல்லவா!

இதோ! இந்தத் தனி அறைப் பக்கமாகப் போகலாம் வா, தம்பி!

உஸ்! பேசாதே! மெல்ல நட!—என்று உத்தரவிட்டுக் கொண்டு நிற்கிற இந்த ஆசாமிக்கு, மாதம் அறுபது ரூபாய் சம்பளம்! அதோ இரண்டு நர்சுகள் பேசிக் கொள்கிறார்கள்—என்னவென்று கவனிப்போம்.

"வாடி, லிலி! இனி நீ போய் அந்தச் சனியனைப் பார்த்துக்கொள். எனக்குத் தலைவலிக்கிறது. கண்றாவி"

"கிரேஸ்! எனக்கு மட்டும் வேதனையாக இருக்காதா? என்ன சொல்லுகிறது கிழம்?"

"யார் பேசினார்கள் அதனிடம்! அருகே நெருங்கினாலே, குமட்டலல்லவா எடுக்கிறது, ஓரே நாற்றம்"

"டாக்டர், என்ன சொல்கிறார்?"

"அவர் ஒன்றும் சொல்லுவதில்லை. வருகிறார், மருந்து பூசுகிறார், கட்டுகிறார்கள். கிழம், இளிக்கிறது. இன்னும் எத்தனை நாள் ஆகும் என்று கேட்கிறது. நானென்ன ஜோதிடனா? என்று அலட்சியமாகப் பதில் அளிக்கிறார் டாக்டர்."

"நல்ல வேலை செய்கிறீர், ஆமாம். இந்த ஆசாமியிடம் யார்தான் முகம் கொடுத்துப் பேசுவார்கள்?"

லிலியுடன், தம்பி, நாமும், உள்ளே எட்டிப் பார்க்க லாமா? அதோ பார்! உடலிலே பல இடங்களிலே புண்!! ஆசாமிக்கு வலி அதிகம்தான். முகத்திலே பார், சவக்களை என்பார்களே, அப்படி இருக்கிறதல்லவா?

மேலே மின்சார விசிறி இருந்தும், பக்கத்தில் நின்றபடி மயில் விசிறி கொண்டு வீசிக்கொண்டு நிற்கிறானே, அவன் பாபம், நான்கு குழந்தைகளுக்குத் தகப்பன்—நாய் பிழைப்புத் தான்! இருந்தாலும் என்ன செய்வது! என்று சகித்துக் கொண்டு ஊழியம் செய்கிறான்.

அதோ அந்த அலங்கார ஆசனத்தில் அமர்ந்துகொண்டு இருப்பவன், படுக்கையில் உள்ளவருக்கு மருமகன். எப்படி இருக்கிறது என்று விசாரித்துவிட்டுப் போகத்தான் வந்தான். இப்போது அவன் கரத்தில் இருப்பது ஒரு கதைப் புத்தகம்—படத்தைப் பார்த்து இரசித்துக் கொண்டிருக்கிறான்.

தம்பி! இந்த ஆசாமிதான் உண்மையில், சீமான்!

முதலில் கண்டோமே அவன் அன்றாடம் உழைத்துப் பிழைப்பவன்—பாட்டாளியாக இருப்பதால் பராரியாகாம லிருப்பவன்! தனி அறையில் உள்ள தனவான் இரும்பு வியாபாரத்தால் கொழுத்தவர்—பெயர் தங்கப்பர். பாட்டாளி யாக இருப்பவன், இரும்புப் பட்டறையில் வேலை செய்பவன், பெயர் ஆண்டியப்பன்.

ஆண்டியிடம் இவ்வளவு அன்பு காட்டுகிறார்கள்—உடன் இருப்போர், மருத்துவர், அனைவரும்.

சீமான் தங்கப்பரிடம் மருத்துவரும் மருகரும், பணியாளும் பாங்கியரும், அனைவரும் அருவருப்புக் காட்டுகின்றனர்.

தங்கப்பர், மருத்துவ விடுதிக்கு ஆயிரக்கணக்கில் நன்கொடைகூடத் தரக்கூடும்—வசதி உண்டு.

ஆண்டிக்கு, பழவகையே டாக்டர் தம் செலவில் வாங்கிக் கொடுத்தார்.

காரணம் என்ன, நிலைமைக்கு? எண்ணிப்பார்!

இதிலென்ன சிரமம்? இந்த மருத்துவ விடுதி ஏழைக்கு இரங்கும் நெஞ்சம் படைத்தவர்களால் நடத்தப்பட்டு வருகிறது; செல்வச் செருக்கர்களைச் சீந்துவதில்லை; சரியான முறைதான்—நல்லது...என்று மகிழ்ச்சியுடன் கூறப்போகிறாய். தம்பி! இங்கு நீ காணும் இந்தப் போக்குக்குக் காரணம், இது அல்ல. இது மட்டுமல்ல.



படுக்கையில் துடித்துக் கொண்டிருக்கும் ஆண்டியப்பன், உடலில் தீப்புண்கள் ஏற்பட இருந்த காரணம் வேறு—சீந்து வாரற்றுச் சாய்ந்து கிடக்கும் அந்தச் சீமானுடைய உடலிலே காணப்படும் புண்களுக்குக் காரணம் வேறு—இந்த இரு வேறு காரணங்கள்தான், இருவேறு விதமான மனப்பான்மையை, காண்போருக்கும் உடன் இருப்போருக்கும் உண்டாக்கிவிட் டிருக்கிறது.

ஆண்டியின் உடலில் ஏற்பட்டுள்ள தீப்புண்களைக் காணும்போது, ஐயோ பாவம்!—என்று இரக்கமும் அன்பும் கலந்த குரலில் கூறுகிறார்கள்—சீமான் தங்கப்பன் உடலில் உள்ள புண்களைக் கண்டதும், “சனியன்! கண்றாவி!” என்று அருவருப்புடன் பேசுகிறார்கள்.

ஆண்டி உழைத்து அலுத்த நிலையில் தன் குடிசைக்குத் திரும்பிக் கொண்டிருந்தான்—இருட்டும் சமயம் ஐயயோ! என்ற கூக்குரல் கேட்டது, தெருக் கோடியில் ஒரு வீடு, தீப் பிடித்து எரிந்துகொண்டிருந்தது—பலர் பதறினர்—தண்ணீர் இறைத்தனர்—மணல் வாரி வாரி வீசினர். ஒரு மூதாட்டி, தலைவிரி கோலமாக நின்றுகொண்டு, ஐயோ! குழந்தை, தொட்டிலில்...தொட்டிலில் குழந்தை...” என்று கதறி நிற்கக் கண்டனர் பலரும். பெரு நெருப்பாகிவிட்டது வீடு—உள்ளே நுழைய யாருக்கும் துணிவு இல்லை. உள்ளே ஓடமுயன்ற மூதாட்டியை மட்டும் தடுத்து நிறுத்திவிட்டனர். ஆண்டி வந்தான்—அலறல் கேட்டான்—உள்ளே, குழந்தை, தொட் டிலில்—என்ற மூன்றே வார்த்தைகள்தான்—எதிரே பெரு நெருப்பு—பாய்ந்தோடினான் உள்ளே!

ஐயோ ஐயோ! என்று அலறினர்—ஆண்டியின் காதில் மூதாட்டியின் குரலொலி தவிர, வேறு எதுவும் விழவில்லை.

இரண்டோர் விநாடியில் ஆண்டி, குழந்தையுடன் ஓடி வந்தான் வெளியே! குழந்தையை ஒரு பெரிய சாக்குப் போட்டு மூடி இருந்தான்—குழந்தை பிழைத்தது, ஆண்டி யின் உடலெல்லாம் தீப்புண்!!

சீமான் தங்கப்பன் தன் தோட்டத்தில் குடிசை போட்டுக் கொண்டு குடியிருந்து வந்த குற்றேவல்கார முனியனை, பக்கத்து ஊருக்கு ஒரு வேலையாக அனுப்பிவிட்டு, பசுமாடு இளைத்துவிட்டதே, சரியாக தீனி போடுவதில்லையா? என்று அதிகாரம் பேசும் பாவனையில் இரவு எட்டு மணிக்குமேல் குடிசைக்குச் சென்று, “சத்யத்துக்குப் பொதுவாக நடக்கி றோம் எஜமான்! சாமி சாட்சியா, பசுவுக்குச் சரியானபடி தீனி போடுகிறோம் எஜமான். சந்தேகப்படாதீங்க” என்று

சமாதானம் கூறிய குப்பியை......! பசுமாடு, அவள் போட்ட கூச்சலில் மிரண்டு, கட்டு அறுத்துக்கொண்டது—சீமான் அதனிடம் சிக்கிக் கொண்டான்—அன்ருடம் தீனிபோட்டு அன்புடன் பராமரிக்கும் குப்பியின் கற்பைக் காப்பாற்றும் கடமையை அந்தப் பசு மேற்கொண்டது—சீமான் உடலிலே புண் இந்த வகையில் ஏற்பட்டது!

ஆண்டியிடம் அனைவரும் அன்பு காட்டுவதற்கும் சீமானிடம் அருவருப்பு அடைவதற்கும் இப்போது காரணம் விளக்கமாகிவிட்டதல்லவா! இந்த விளக்கம் பெறத்தான், நாம் மருத்துவ மனை வந்தோம். இனி வா, தம்பி, வேருேர் காட்சி காண்போம்.

விளக்கம் சரி, அண்ணு! ஆனால் இப்போது இந்தக் காட்சியும் அது அளித்திடும் கருத்துரையும், என்ன காரணத் துக்காக, என்று இப்போது கேட்கவேண்டாம்—மற்ருேர் காட்சியையும் பார்த்துவிட்டுப் பேசுவோம்.

அதோ பார், ஏழ்மையாலும் அடியோடு அழித்திட முடியாத அழகும் அதற்குப் பெட்டகமாக விளங்கும் இளமை யும் கொண்ட பெண் மயில்!! பொன்னகை ஒன்றுகூட இல்லை—அந்தப் புன்னகை ஒன்று போதாதா என்று அவளைத் தன் குடும்ப விளக்காகப் பெற்ற குணவான் கூறிக் களிப்படை கிருன் போலும். ஆடையிலே அழுக்கு! கூந்தலில் நெய் இல்லை! ஆனால் கண்களிலே ஓர் கனிவு கவர்ச்சி அளிக்கிறது. போனமாத வாடகை பாக்கிக்காக 'மூக்குத்தி'யை மார்வாடி யிடம் விற்றுவிட்டு, பத்தரை ரூபாய் வாங்கிக்கொண்டு செல் கிருள் அந்தப் பாவை. கலியாணத்தன்று அவள் அத்தை வீட்டார் கொடுத்த இரவல் நகையைப் போட்டு அலங்கரித் துக்கொண்டு, எடுத்த போட்டோ படத்துக்கு கண்ணுடி போட எண்ணினுள்—அதற்கு இரண்டு ரூபாய் கேட்டான் கடைக்காரன்—அவ்வளவுக்குச் சக்தி இல்லை என்று கூறி விட்டுத் திரும்பினுள். மடியில் இருக்கிறது படம்! வயிற்றிலே தவழ்கிறது செல்வம்!!

"லட்சுமீ! எங்கேடிம்மா போய்விட்டு, வர்ரே?"

"மார்வாடி கடைக்குத்தான் மாமி"

"எதை வித்துப் போட்டு வந்துட்டே?"

"மூக்குத்தியை......"

"அதுவும் தொலைஞ்சுதா........"



"மூக்குத்தி போனு என்ன மாமி! மூக்கு, இருக்கு தேல்லோ......"

"போடி, போக்கிரிப் பெண்ணே! மூக்கு இருக்கு தாம், மூக்கு! இருக்கு, மூக்கும் முழியும், ராஜாத்திக்கு இருக்கிறது போலத்தான் இருக்கு. இருந்து? தரித்திரம் பிடுங்கித் திங்குதே..."

"அதனாலே என்ன மாமி! நகை போட்டாத் தானு..."

"உன்னேடு யார் பேசுவாங்க...அதிகமாக எதுவும் வேணும்...மூக்குத்தி, காதுக்குக் கம்மல்...கையிலே ஒரு இரண்டு வளை......"

"கழுத்துமட்டும் என்ன குத்தம் செய்தது, மாமி. இரண்டு 'வடம்' செயின் போடக் கூடாதா அதுக்கு..."

"குறும்புக்காரப் பொண்ணு. அதெல்லாம் போட்டா பதினயிரம் கண்ணுவேணும் பார்க்க, என்பாங்களே, அப்படி இருக்கும். உம்! பகவான் அழகைக் கொடுத்தாரு, அதுக்கு ஏத்த அந்தஸ்து கொடுத்தாரா......?"

"போ, மாமி! எத்தனையுன்னுதான் அவரும் கொடுப்பாரு......"

சிரித்துக்கொண்டே செல்கிருள் செல்லாயி!

"அவலட்சணம்னு, சொல்லி முடியாது, டோய்! அட்டைக் கருப்பு! மாறுகண்ணு! உதடு, தடிம்மனு, என்னமோபோல இருக்குது. காது, துளிண்டு, எலி காது போல...செச்சே! இராத்திரி வேளையிலே, பார்த்தா, பயமே வந்துவிடும். அந்தச் சனியனுக்குக் குரல் இருக்கு பாரு, அசல் ஆந்தையேதான்......"

செல்லாயி புருஷன், தம்பி, இதுபோலப் பேசுவது. மெகானிக் மாதவனிடம் பேசுகிருன். யாரைப்பற்றி இந்த வர்ணனை தெரியுமோ? தன் எஜமானருக்கு வந்துள்ள மருமகப் பெண்ணைப்பற்றி. செல்லாயி புருஷன் சிகப்பண்ண னுக்கு, மோடார் ஓட்டும் வேலை மோட்டூரார் வீட்டில்!!

அந்த மருமகள் அவ்வளவு அவலட்சணம் என்ருனே, வா, போய்ப் பார்ப்போம்.

இதோ இதுதான், மோட்டூரார் மாளிகை!

ஊஞ்சலில் தெரிகிறதா, உருவம்...மூக்கும் முழியும், கையும் காலும், சரியாகத் தெரியவில்லையே என்கிறாயா, தம்பி, தெரியாது. எல்லாம் சேர்ந்துதான் ஒரு மாமிசப் பிண்ட மாகத் தெரிகிறதல்லவா—மோட்டூரார் மருமகள் கமலாம்பிகா வைக் காண்கிறாய்.

கூடவே நீ காண்பது என்னென்ன தெரியுமா, தம்பி, அதை மறந்துவிடாதே!

காதிலே மூவாயிரம் ரூபாயில் வைரத் தோடு! தலைச் சடையில் ஆயிரத்தைந்நூறு ரூபாய் பெறுமானமுள்ள வைரத் திருகுபில்லை. மூக்குத்திகள் பச்சை! இரண்டாயிரம்! கழுத்திலே புரளும் தங்கமும் வைரமும், பத்தாயிரத்துக்கு மேல் பெறுமானமுள்ளது! இடுப்பில் காணப்படும், ஒட்டி யாணத்தைச் செய்யும்போது 'பத்தர்' வீட்டிலே, ஒரே சிரிப்பு—இது என்ன இடுப்புக்கா, அல்லது நெல்கொட்டும் குதிருக்கா என்று கேட்டுக் கேலி செய்து, வீட்டார் சிரித்தார் கள்! கல் இழைத்தது! மயில் தெரிகிறதா? அருமையான வேலைப்பாடு! ஆறாயிரம் மதிப்பிடுகிறார்கள். காலில், கமலாம்பிகா அணிந்திருப்பதை, அவர்களாலும் காண முடியாது, நாமும் பார்க்கமுடியாது; ஆடை தரையிலே புரளு வதால், நகை மறைந்து கிடக்கிறது நமக்குத் தெரியவில்லை! கமலாம்பிகாவின் உடல் அமைப்பு, பாபம், குனிந்து, தன் காலில் உள்ளதைக் காணவிடவில்லை! ஆபரணச் சுமை தாங்கி, தம்பி, இந்தக் கமலாம்பிகா!

செல்லாயிக்கு மூக்குத்தியும் இல்லை—முகம் செந்தாமரை யாக இருக்கிறது.

காணச் சகிக்கவில்லை இந்தக் கமலாம்பிகையை—பூட்டி யிருக்கும் நகைகளின் மதிப்பு மட்டும் பலப் பல ஆயிரம்!

இந்த அவலட்சணத்துக்கு இவ்வளவு நகை இருக்கிறது! நகைகளின் அழகே பாழாகிறது, இந்தச் சனியன் மேலே பூட்டியதும். மரத்தாலே பாவை செய்து, பூட்டி வைத்தால் கூட, இந்த நகைகளைப் பார்க்க இலட்சணமாக இருக்கும், என்றுகூடப் பேசிக்கொள்கிறார்கள்!

மூக்கும் முழியும் ராஜாத்திபோல இருக்கிறது, செல்லா யிக்கு; மூக்குத்திக்குக்கூட வழி இல்லை!

இதோ, மூலைக்கோயில் காளி உருவாரம் போலக் காணப் படும் கமலாம்பிகையின் உடலில ஆபரணச் சுமை!!



தம்பி! செல்லாயி, கமலாம்பிகை—இருவரில் யாரைக் கண்டதும், முகம் மலரும் சொல்லு.

ஆண்டி—தங்கப்பன் மருத்துவமனையில்!

செல்லாயி—கமலாம்பிகா அவரவர் மனையில்!!

இந்தக் காட்சிகள், ஏன் நான் காணச் சொன்னேன் தெரியுமா?

தம்பி! நமது முன்னேற்றக் கழகம், தீப்பிடித்துக் கொண்ட குடிசைக்குள்ளே தீரமாக நுழைந்து, தொட்டிலில் இருந்த குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்து காப்பாற்றிய தால், உடலெங்கும் தீப்புண் ஏற்பட்டு, மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டு, அனைவராலும் அன்புடன் பராமரிக்கப்பட்டுவரும், ஆண்டியப்பன்!

வாடகை பாக்கிக்காக மூக்குத்தியை மார்வாடிக்கடை யிலேவிற்று விட்டு வீடு திரும்பும், அழகி செல்லாயிபோல என்றும் சொல்லலாம். காங்கிரஸ், கமலாம்பிகை போல ஆபரணச் சுமைதாங்கியாகக் காட்சி அளிக்கிறது! நம்மை, செல்லாயிபோல மூக்கும்முழியும், பார்த்தால் ராஜாத்தி போல இருக்கிறது என்று நல்லமனம் படைத்தோர் பாராட்டத்தான் செய்கிறார்கள். கமலாம்பிகையின் உடலில் புரளும் நகைகளைப் பார்த்தவர்கள், இந்த அவலட்சணத்துக்கு இவ்வளவு ஆபரணச்சுமை கிடைத்திருக்கிறது என்று அருவருப்புடன் பேசுவது போலத்தான் இன்று, பொதுமக்கள், காங்கிரசிடம் உள்ள பணபலம் பற்றி அருவருப்புடன் பேசுகிறார்கள்.

இந்தக் கருத்தை எடுத்துக் காட்டவே நான் உனக்கு இந்த இருவேறு காட்சிகளைக் காட்டினேன்.

ஆபரணச் சுமை தாங்கியாக உள்ள கமலாம்பிகையின் மாளிகையில் வேலை செய்து பிழைக்கும் சிகப்பண்ணனே அல்லவா, அந்த மாது இருக்கும் அவலட்சணத்தை எடுத்துக் காட்டி அருவருப்பாகப் பேசுகிறான்—அது போன்றே காங் கிரஸ் கட்சியின் ஆட்சியினால் அவதிப்பட்டு வரும் மக்கள், அந்தக் கட்சியிடம் குவிந்து கிடக்கும் பணபலத்தைக் கண்டு அருவருப்புடன்தான் பேசுகிறார்கள். செல்லாயி விஷயத்தில் ஆதரவு காட்டிப் பேசுவது போலத்தான், பணபலமற்ற நமது கழகத்தைக் குறித்துப் பேசுகின்றனர்.

ஊழல் மிகுந்த ஆட்சி, உதவாக்கரைத் திட்டமிடும் ஆட்சி, முதலாளிக்குச் 'சலாமிடும்' ஆட்சி, வெளிநாடு

களில் கடன்படும் ஆட்சி, அடக்குமுறை அவிழ்த்துவிடும் ஆட்சி.

என்று அடுக்கடுக்காக, அருவருப்புடன் காங்கிரஸ் ஆட்சியின் அவலட்சணத்தை எடுத்துக் காட்டுகின்றனர்; எனினும் இறுதியில், ஒரு பெருமூச்சுடன் இவ்வளவு அக்ரமம் செய்த ஆட்சிதான் என்றாலும், தேர்தலில் மக்களை வளையவைப்ப தற்குத் தேவையான பணபலத்தை மலைபோலப் பெற்றிருக் கிறதே! பாபம், திராவிட முன்னேற்றக் கழகத்தார், ஓயாது உழைக்கிறார்கள், உள்ளன்புடன் பாடுபடுகிறார்கள், ஏச்சும் இழிமொழியும் பழிச்சொல்லும் வீசப்படுகிற போதும் தாங்கிக் கொண்டு பணியாற்றுகிறார்கள். எனினும் தேர்தலில் ஈடுபடு வதற்குத் தேவையான பணபலம் இல்லையே—ஏராளமான செலவு இருக்கிறதே, எப்படிச் சமாளிக்க முடியும் என்றுதான் பேசிக் கொள்கிறார்கள். நமது கழகத் தோழர்களிடையேகூட இந்தப் பேச்சு எழக் கேட்டிருக்கிறேன்.

தம்பி! ஆண்டியப்பனைப் பார்த்தோமல்லவா! அது போலத்தான், நமக்குக் கையிலே போதுமான பணவசதி இல்லாதிருக்கலாம்; ஆனால் நாம், பொதுமக்களிடம் ஆற்றி வரும் பணி வீண்போகப் போவதில்லை; அவர்களிடம் பணம் இல்லை; எனவே, செலவுக்கு அவர்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கலாகாது, நம்மாலானதையெல்லாம் நாம் செய்து தரவேண்டும் என்ற ஆர்வத்துடன், தூய தொண்டுக்கு துணை நிற்க வேண்டும் என்ற நல்லமனம் படைத்தோரெல்லாம் முன்வரத்தான் செய்வார்கள்.

தம்பி! அரசியலில், அதிலும் தேர்தல் கால அரசியலில், பணத்துக்கு இருக்கிற செல்வாக்கையும் கண்டிருக்கிறேன்; பணபலத்தையும் சுக்கு நூறுக்கக்கூடிய மக்கள் சக்தி வீறு கொண்டெழுந்ததையும் பார்த்திருக்கிறேன்; எனவே நான், நமது கழகத்துக்குப் போதுமான தேவையான பணபலம் இல்லை என்பது பற்றி எண்ணும்போது மிகவும் இல்லை, சில வேளைகளிலே ஏக்கம்கூட அடைகிறேன். ஆனால் உன்னிடம் சொல்லு வதிலே மகிழ்ச்சி அடைகிறேன். மனம் உடைந்து போக வில்லை—அந்த நிலை ஏற்படவிடக்கூடாது என்று நமது கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும், ஆண்டியப்பனுக்கு இலவசமாக மருந்துவமும் பார்த்து, பழம் பண்டமும் வாங்கித் தந்த டாக்டர் போல, பரிவுடன் நடந்துகொள்ளக் காண் கிறேன், மகிழ்ச்சி அடைகிறேன்.

சென்ற கிழமை சென்னை மூலக்கொத்தளம் வட்டாரத்தில் நடைபெற்ற கூட்டத்தில், தேர்தல் நிதி 100 ரூபாய் தருவ



தாகச் சொன்ன நமது தோழர்கள், 50 மட்டுமே கொடுத்தனர்—எனக்கு பேச்சே எழவில்லை! அதனை நான் கூட்டத்தி லேயே குறிப்பிட்டுக் கூறினேன்—பெருமையும் நம்பிக்கையும் கொள்ளச் செய்யும் சேதி கேள், தம்பி—நான் சிறிதளவு சலிப்புடன் பேசுவது கண்ட தோழர்கள் கூடிக் கலந்து பேசி, என்னிடம் தெரிவித்தனர், இந்த வட்டாரத்தின் சார்பாக நமது நண்பர் துரைராஜ் அவர்கள் ஆயிரம் ரூபாய் தேர்தல் நிதி அளிக்க இசைந்திருக்கிறார்—என்று கூறினர். மகிழ்ந் தேன்! கூட்டத்தில் இதனை அறிவித்தேன்—அப்போது மக்கள் அந்தச் சந்தோஷச் செய்தியை எத்துணை ஆர்வத் துடன் வரவேற்றனர் என்பதைக் கண்டு நான் பூரித்துப் போனேன்! பழம் வாங்கி வந்து தந்ததும், ஆண்டியப்பன் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருப்பான்—அதுபோலானேன்!

நமது கழகத்தின் வரலாற்றிலே, மிக முக்கியமான கட்டம், இந்தத் தேர்தல்.

நம்மைச் சுற்றி நச்சு நினைப்பினர் ஏவிவரும் பொச்சரிப்பு கள் கொஞ்சமல்ல. நம்மைப்பற்றி, நடமாடவிடும் நிந்தனை களின் அளவும் அதிகம், வகையும் பலப்பல ஒரு முகாம், இருமுகாமிலிருந்து மட்டுமல்ல, பல்வேறு முகாம்களும் மும்முர மாக இந்தத் திருத்தொண்டில் ஈடுபட்டு, தத்தமது முழுச் சக்தியையும் பயன்படுத்துகின்றன. இதை நான் எதிர் பார்த்ததுண்டு. எளிதிலே வழிவிடுவார்கள் என்று எண் ணிடும் ஏமாளியா, நாம்; அல்லவே!!

பொது வாழ்வுத் துறையில் புதியவர்கள் என்று அலட்சிய மாகப் பேசுவது மட்டுமல்ல, புகக்கூடாதவர்கள் என்று வெறுப்புடன் பேசுவோர் நிரம்பிய நிலையை நான் அறிவேன். அவர்கள், நாம் ஈடுபடும் இந்தத் தேர்தல் முயற்சியில், முதல் கட்டத்திலேயே தடுத்து நிறுத்தி, தகர்த்து அழிக்காவிட் டால், ஒரு முறை 'உள்ளே' போக இடமளித்துவிட்டால், பிறகு, அந்தக் கழக வளர்ச்சியைத் தடுக்கமுடியாது என்ற திகில்கொண்ட நிலையில், முதல் முயற்சியையே, முழுப்பலம் கொண்டு தாக்கி முறியடித்தாக வேண்டும் என்ற எண்ணத் துடன் பணியாற்றுவர் என்பதை எதிர்பார்த்தவனே! நான் இப்போது காணும் நிலைமை, நான் எதிர்பாராததுமல்ல, என்னைத் திடுக்கிடச் செய்யக்கூடியதுமல்ல. என் நிலையே அது என்றால், தம்பி, எனக்கு அன்பும் ஆதரவும் அளிப்பதன் மூலம் ஆற்றலைத் தரும் உன் நெஞ்சு உரத்தை விளக்கவா வேண்டும்!

ஒன்று நான், காண்கிறேன்! எனக்கே, உள்ளத்தில் ஓர் சாந்தியும் மகிழ்ச்சியும் ஏற்படுகிறது; நமது கழக வரலாற்றின் ஒவ்வோர் கட்டம் தெரியும் போதும், நாம் அதனைக் கடந்து செல்ல முடியுமா; அல்லது பயணம் அந்த இடத்துடன் நின்று போகுமா என்ற ஐயப்பாடு—உனக்கோ உன் போன்ற எண்ணற்ற தம்பிகட்கோ அல்ல—எனக்கு ஏற்படுவதுண்டு! ஆனால், நாட்டிலே, தம்பி, நீ நற்பணியாற்றி அதன் மூலம் திரட்டித் தரும் ஆற்றல், என் ஐயப்பாட்டினைத் துரத்தி அடிக்கிறது, அச்சத்தை அயர்வைப் போக்குகிறது, வெற்றி முரசு ஒலிக்கிறது; ஒவ்வோர் கட்டத்தின் போதும்.

இதனை, நான், நமது கழகத் துவக்கத்திலிருந்து காண்கிறேன்.

பெரியாருடைய திருமணத்தால், மனதிலே பேரிடி விழுந்த நிலை பெற்று, குருசாமியார் ஓடோடி வந்து, என்னைப் பிடித்திழுத்து கச்சையை வரிந்து கட்டிவிட்ட நாளிலிருந்து, இன்று என் செயலை, பிச்சுப்பிள்ளை விளையாட்டு என்று எண்ணிக்கொண்டு எச்சில் துப்புகிறாரே, இந்த நாள்வரையில், ஒவ்வோர் கட்டத்திலும், நான் இந்தக் கவர்ச்சியூட்டும் உண்மையைச் சந்திக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம்—என்று பெயரிட்டுக் கொண்டு, முன்பு போலவே நாம் தொடர்ந்து பணியாற்ற வேண்டும்—என்று, சென்னை முத்தியாலுப் பேட்டையில் ஓர் இல்லத்தில், ஆலோசனைக் கூட்டம் நடத்திய போது, நான் சொன்ன நேரத்தில், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களிலிருந்து, பொறுமைக்கு இருப்பிடம் எனத்தகும் நமது பொதுச் செயலாளர் வரையிலே கொதித்து எழுந்து, கோபம் கொப்பளிக்கும் நிலைபெற்று, நாம் ஏன் பெயர் மாற்றிக் கொண்டு போக வேண்டும், நமக்குத்தான் ஜனநாயக முறைப்படி பழைய பெயர் சொந்தம் என்று வாதாடிய காட்சி இப்போதும் நான் காண்கிறேன்.

அன்று, நாம் இந்த அளவிலும் வகையிலும் வளருவோம் பொதுவாழ்வு துறையில் இந்தவிதமான நிலை பெறுவோம், ஒரு பொதுத் தேர்தலில் ஈடுபடும் கட்டம் காண்போம் என்று எண்ணியவர்கள் எத்தனை பேர் இருக்கமுடியும் என்று எண்ணுகிறாய்!! ஆனால் அந்தக் கட்டம் காண்கிறோம். காண்பாய்! காண்பாய்! மூடா, கேள், என் ஆரூடத்தை! இதுதான் நீ காணப்போகும் கடைசிக் கட்டம் என்று மனக்கசப்பு முற்றி விட்ட காரணத்தால் பகை பேசும் நிலைக்குச் சென்றுவிட்ட சிலர் கூறுகின்றனர். தம்பி! நான் என் வரையில் பேசுவ



தானால், இதனைக் கூறுவேன்; இது கடைசிக் கட்டம் ஆகிவிட்டால்கூட நான் கவலைப்பட மாட்டேன்; ஏனெனில் இவர்கள் 'ஆரூடம்' பலிக்கத் தக்கதானால், நான் இந்தக் கட்டத்தையேகூட எட்டிப் பார்த்திருக்கக் கூடாது. இந்தக் கட்டம் அளவுக்கு 'ஆயுள்'—இவ்வளவு ஆரூடத்துக்குப் பிறகும் இருந்ததல்லவா என்றுகூட எண்ணி மகிழ்ச்சி கொள்வேன். என் சுபாவம் அப்படிப்பட்டது. ஆனால் கழகத்தின் சார்பில் பேசுகிறேன்—ஆரூடம் முன்பு பலித்ததில்லை, இம் முறையும் பலிக்காது! தம்பி! ஒவ்வொரு கட்டமாக நினைவிலே கொண்டு வந்து பார், நான் கூறுவதன் உண்மை தெரியும்! எத்தனை எத்தனை பழிச் சொற்களை, நம் வழியிலே கண்டோம்—பயணம் குந்தகப்படவில்லையே! காரணம் என்ன? ஐயப்பாடு, அச்சம், அயர்வு, எழும்போதெல்லாம், ஆர்வத்துடன், நமக்கு ஆதரவு அளித்திடப் பொது மக்கள் மகிழ்ச்சியுடன் முன் வருகின்றனர்! அண்ணன் அல்ல, பரிவுடன் பேசுகிறார்! தாய் அல்ல, ஆனால் பாசம் காட்டுகிறார்! டாக்டர், ஆனால் கட்டணம் வாங்கவில்லை! ஆண்டியப்பனைக் கண்டோமல்லவா—அது போலவே என்ன செய்வது என்று திகைக்கும் போதெல்லாம், என்ன நேரிடுமோ என்று கை பிசைந்து கொள்ளும்போதெல்லாம், நமக்கு உறுதுணையாக மக்கள் ஆதரவு வந்து சேருகிறது. அந்த ஆதரவே 'அறிவகம்'—அச்சகம்—திடல் பல ஊர்களில் கழகப்பணி மனைகள்—இப்படி, உள்ளன. இரண்டு கிழமைகளுக்கு முன்புதான், குளித்தலைக்குப் பக்கத்திலே பணிக்கம்பட்டி என்ற சிற்றூரில் சிறிய அளவில் சிங்கார மாளிகை எனத்தகும் கழகக் கட்டிடம் ஒன்றினைத் திறந்துவைக்கும் வாய்ப்பினை, தோழர்கள் எனக்கு அளித்தனர். (அடுத்த கிழமை, படம் காணலாம்) அன்று நான், அந்தச் சிற்றூருக்குச் செல்வதற்கு, கடுமழையையும் கடந்து செல்லவேண்டி இருந்ததால், நீண்ட நேரம் தாமதமாகிவிட்டது—எனினும் பல்லாயிரவர், மழை மிரட்டியது கண்டும் மனம் கலங்காமல் திடலில் இருந்தனர். அவர்கள் காட்டிய உற்சாகத்தை நான், காலங்கடந்து சென்ற பொறுப்புக் குறைந்த போக்குடன் ஒப்பிட்டுப் பார்த்தபோது, நானே சிறிதளவு வெட்கப்பட்டுப் போனேன். கழகப்பணி மனையைத் தோழர்கள் என்னிடம் காட்டியபோது, அவர்கள் முகம் எத்துணை பொலிவு பெற்றது.

இந்த எழுச்சி எல்லாம் கிள்ளுக்கீரை என்று கருதிக் கொண்டு, காரமான பேச்சினாலேயே நம்மை ஒழித்துவிடலாம் என்று எண்ணுவோர் குறித்து நான் என்ன கருதுவது!!

ஆண்டியப்பன், பாபம், விளைவு தெரியாமல், நெருப்பை எதிர்த்துக் கொண்டான். உடலெல்லாம் தீப்புண், நல்ல

சிகிச்சை செய்து கொள்ளக்கூட, பணவசதி கிடையாது. என்ன ஆகுமோ தெரியவில்லை—என்று பலரும் பரிதாபத்துடன் பேசிக் கொண்டிருக்கக்கூடும்; ஏனெனில் அவனிடம் பணம் இல்லை என்பது மட்டுமல்ல, அவனிடம் பரிவு காட்டிய பலரிடம் நல்ல மனம் இருந்தது, இருந்த பணம், போதுமானது அல்ல. எனவேதான் அவர்கள் எல்லோருமே திகைத்தனர்; ஆனால், யாரோ ஒருவன் துணிந்து, தூய உள்ளத்துடன் துவக்கினான்—நாம் ஆளுக்குக் கொஞ்சம் செலவிட்டால், சிறு துளி பெரு வெள்ளம் ஆகாதா என்றான்—ஆண்டியப்பனுக்கு நல்லவிதமான மருத்துவ உதவி கிடைந்தது. அது போலத்தான், தம்பி, பெரிய செலவு, மிகப் பெரிய செலவு, பல இலட்சம் வேண்டும், என்று நாம் திகைத்தும், செயலற்றும் இருந்துவிடாமல், சிறு துளி பெரு வெள்ளம் என்ற முறையிலே, பணியைத் துவக்கி இருக்கிறோம்—நமக்கு நம்பிக்கை வளருகிறது.

பணபலம்கூட இருக்கட்டும், அறியாச் சிறுவர்கள் ஆழம் தெரியாமல் காலைவிடுவதுபோல, ஏதோ சில குறிப்பிட்ட தொகுதிகளாகப் பார்த்து, பக்குவமாக நின்று பலன் காண்போம் என்று எண்ணாமல், அகலக் கால் வைக்கிறார்களே!—என்று ஆயாசக் குரலில் சிலர் பேசுவது கேட்கிறோம்.

நம்மிலே, சிலர் எப்படியாவது, சட்ட சபைக்கு உள்ளே நுழைந்தாக வேண்டும் என்ற அரிப்பு இருந்தால் இந்த முறைதான் சாலச்சிறந்தது; ஐயமில்லை! ஆனால் நமது நோக்கம், எத்தனை தொகுதிகளிலே போட்டியிட்டு எத்தனை தொகுதிகளிலே வெற்றி காண்கிறோம் என்று கணக்கெடுத்துப் பார்த்து, அதற்குத் தக்கபடி 'கீர்த்தி—கித்தாப்பு' தேடிக்கொள்ள வேண்டும் என்பது அல்ல. எவ்வளவு பரந்த அளவில் ஜனநாயகக் கடமையைச் செய்ய முடிகிறது—எத்தனை விரிவான முறையில், தேர்தல் காலத்தில் அரசியல் எழுச்சி—விளக்கம் அளிக்க வசதி இருக்கிறது, என்பதைச் செயல்படுத்திப் பார்க்கவேண்டும் என்பதுதான். ஜனநாயகத்துக்கான சூழ்நிலையை எந்த அளவுக்கு உருவாக்க முடிகிறது என்பதுதான், இந்தத் தேர்தலில் நமக்கு உள்ள முக்கியமான பணி.

அரசியல் கட்சிகள் தேர்தல்களில் ஈடுபடும்போது, ஏற்படும் வெற்றி தோல்விகள்—ஓட்டு எண்ணி அறிவிக்கப்படும் முடிவுகள் காட்டும் பாடத்துடன் நின்றுவிடுவதல்ல. ஒரு கட்சியின் தாங்கும் சக்தியைக் கணக்கெடுப்பதே, இதிலே மிக முக்கியமான பாடமாகக் கொள்ளவேண்டும்.




இந்தக் கருத்தைத் தெளிவாக உணரவேண்டும் என்பதற்காக, நான், சென்ற கிழமை பிரிட்டனில், நடைபெற்ற பல தேர்தல்களின் கருத்துரையைக் காட்டும் ஏடொன்று படித்தேன்; நான் அதிலே கண்டவற்றில், சில இதுபோது தம்பி! உனக்குகூறி வைப்பது முறை என்று எண்ணுகிறேன்; அரசியல் கட்சிகள், தேர்தல்களில் ஈடுபடுவதை, அங்கு எவ்வளவு முக்கியமான ஜனநாயகக் கடமையாகக் கருதுகிறார்கள், வெற்றி தோல்வி பற்றி எந்த வகையில் பொருட்படுத்தாமல் கடமையாற்றுகிறார்கள், வெற்றி தோல்வி என்பது எப்படி எப்படி மாறிமாறி அடிக்கிறது, என்ற இன்னபிற பாடங்களை, அந்த ஏடுகாட்டுகிறது. எனவே, நாம், சிந்தனைக் குழப்பத்துடன் இந்தப் பொறுப்பான காரியத்தில் ஈடுபடவில்லை; நல்ல தெளிவுடன், ஜனநாயகக் கடமை என்ற உணர்ச்சியுடன், இதிலே ஈடுபடுகிறோம்; மக்களின் ஆதரவு நிச்சயமாகக் கொண்டு வருகிறது.

இடையில் நாம் காணும் இடையூறு அவ்வளவும், இயற்கையாக எழுந்து தீரவேண்டியவை அது கண்டு நாம் ஆயாசப்படப்போவது இல்லை; நமது கழக வரலாறு நமக்குக் காட்டும் பாடம் நமக்குத் துணை நிற்கும்.

"என் தொல்லைகளுக்கு எல்லையே கிடையாதா? என்று துயரப்படாதே! வைரம் என்பது நெடுங்காலமாய் நெருக்கிக் குறுக்கி வைத்த ஒரு துண்டு நிலக்கரியே என்ற உண்மையை நினைவுகொள்" என்று நான் படித்த நினைவு வருகிறது. உனக்கு, அதனைக் கூறுகிறேன். வெற்றிபுரி செல்ல வேதனைபுரத்தைத் தாண்டித்தான் ஆகவேண்டும், தம்பி, மறவாதே.

அன்பன்,



9—12—1956

கடிதம் 78

# எரிகிற தழலில்...!

தேர்தலுக்கு நேரு வருகை—அரியலூர் விபத்து—பெரியாரும் காமராஜரும்.

தம்பி!

நேரு பண்டிதர் வருகிறாராம்! தமிழ் நாட்டில் தேர்தல் பிரசாரத்தைத் துவக்கி வைக்கப் போகிறாராம்!! வேறு சில ஊர்களுக்கும் சென்று பிரசாரம் செய்வாராம். பெருமையுடனும் பூரிப்புடனும் காமராஜர் இதனை அறிவித்திருக்கிறார்.

''கமிட்டிகளிலே கவலையுடன் பேசினீர்களே! எவ்வளவு பணம் கரைந்து போகுமோ, எவனெவனுடைய கையைக் காலைப் பிடித்துக்கொண்டு கெஞ்சவேண்டிவருமோ, எப்படி எப்படி எல்லாம் நாட்டிலே பிரசாரம் செய்வார்களோ, மாற்றுக் கட்சிக்காரர்கள் என்றெல்லாம் ஏங்கித் தவித்துக் கிடந்தீர்களே! இதோ கேளுங்கள் பெருமைக்குரிய செய்தியை; நம்பிக்கை தரும் செய்தியை; நான் நிலைமையை எடுத்துக் கூறி, நமது நேரு பண்டிதரை இங்கு வந்திருந்து தேர்தல் பிரசாரத்தைத் துவக்கித்தரச் சொல்லிக்கேட்டுக் கொண்டேன், அவரும் அன்புடன் இசைந்துவிட்டார், இனி என்ன பயம் உங்களுக்கு? துவக்குங்கள் வேலையை, துரிதமாகக் கிளம்புங்கள்!'' என்று, காங்கிரஸ் சார்பில் தேர்தலில் ஈடுபடும் கனதனவான்களுக்குக் காமராஜர் கூறிவிட்டார்!!

எனக்கு, தம்பி! இதிலே வருத்தந்தான்—அதற்குக் காரணம் இரண்டு.



சென்ற திங்களில்தான், இந்தப் பரந்த உபகண்டத்திலேயே, மிகப் பயங்கரமானதும், மிக மிகக் கோரமானதுமானதோர் இரயில் விபத்து நேரிட்டது—சர்க்கார் கணக்களித்துள்ளனர் 152 பிணங்களைக் கண்டெடுத்தோம் என்று—மற்றப்படி, கூழாகிப்போன உடலங்கள் ஏராளம்! குவியலாகக் கொட்டிக் கொளுத்தியே விட்டார்களாமே!! தொலைவிலே நின்றுகொண்டு, தீ மூண்டு எழுந்தது கண்டு ஐயோ! என் மகன்! அப்பா! என் தாய்! ஐயயோ! என் கணவன்! ஐயகோ! எனதருமை மனைவி! என் அண்ணன்! என் தம்பி! என்றெல்லாம் கதறினராம், சென்றவர்கள் பிணமாகக்கூடத் தம்மிடம் ஒப்படைக்கப்படாத நிலைபெற்ற துர்ப்பாக்கியவான்கள்!! ஆற்றிலே மூழ்கி, இறந்து, உடலை, மீனினங்கள் கொத்திக் கெடுத்துவிட்ட நிலையிலும், அழுகிப்போன நிலையிலும், பல சடலங்களை ஆங்காங்கே கண்டெடுத்தனர்! இது போன்றதோர் கோரமான விபத்து நேரிட்டதில்லை என்று உயர் நிலையில் உள்ளவர்களே ஒப்புக் கொள்கின்றனர். விபத்து நடந்த இடத்தருகே செல்லவே முடியவில்லை. அவ்வளவு கோர நிலைமை என்கின்றனர் 'கனம்'கள்.

அப்போது, அரியலூர் வருவார்! ஆறுதல் அளிப்பார்! விபத்துக்குக் காரணமானவர்களைக் கண்டிப்பார்! விழியைத் துடைத்துக் கொள்ளுங்கள், மனம் உடையும் துக்கம் நேரிடும் போதுதான், மகத்தான மனோதிடம் காட்டவேண்டும்! என் அனுதாபம் உங்கட்குத்துணை நிற்கும்!!—என்றெல்லாம் நேரு பண்டிதர் பேசுவார்; கேட்டு மக்கள் தமக்கு வந்துற்ற அவதியையும் ஓரளவுக்கு மறந்து, நமது முடிசூடா மன்னர், நமது குடும்பப் பெரியவர் போன்றவர், எத்துணை மனம் உருகிப் போயிருக்கிறார், நாம் அடைந்துள்ள அவதி கண்டு அவர் ஆறாத்துயரம் அடைந்துள்ளார், அவர் கூறுவது போல, நமக்கு இப்படிப்பட்ட சமயத்திலேதான் மனதிடம் வேண்டும், ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ! என்ன செய்வது, தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும் என்று கூறியும் எண்ணியும் மனதுக்கு ஓர் சாந்தி தேடிக் கொண்டிருந்திருக்கக்கூடும்.—இப்படியெல்லாம் நடக்கும் என்று எதிர்பார்த்தனர்.

நேரு பண்டிதரே நேரடியாக விபத்து நடைபெற்ற இடத்துக்கு வருகிறார் என்ற உடன், அந்த வட்டாரத்து அதிகாரிகள் குழாமே அலறிப்புடைத்துக் கொண்டு நிவாரண வேலையை மும்முரமாக்கி இருக்கும். நீயும் நானும் சென்றிருந்தால், என்ன நடைபெறும்! கதறுவோருடன் கூடி நாமும் அழுதிருப்போம்! ஐயய்யோ எனும் ஓலம் கேட்டு நாமும் துடித்

திருப்போம். நேரு பண்டிதர் வந்திருந்தால் நிலைமையில் நிச்சயமாக ஓர் மாற்றம் தெரியும், ஆட்சித் தலைவருக்கு நம் மக்களிடம் எத்துணை அன்பு இருக்கிறது என்று தெரிந்திருக்கும். ஆனால், நேரு பண்டிதர் அரியலூர் வரவில்லை! பிணமலையும் இரத்த வெள்ளமும் கண்டு தமிழகம் துடிதுடித்து அழுதபோது ஆறுதல் அளித்திட நேரு பண்டிதர் இங்கு வரவில்லை. தாலி இழந்த தாய்மார்கள், மகனை இழந்த மாதாக்கள், கதறினர், அம்மையே! அழாதே! வந்துற்ற விபத்து வேதனை தருவதுதான், எனினும், என் செய்வது, தாங்கிக் கொள்ளத்தானே வேண்டும்! என்று தைரியம் பேசிட, ஆறுதல் அளித்திட நேரு பண்டிதர் வரவில்லை.

அரியலூர் விபத்தின்போது வராத நேரு பண்டிதர், ஓட்டுக் கேட்க மட்டும் ஓடோடி வருகிறாராம்!

வெட்கப்படுகிறோம், வேதனைப்படுகிறோம்!—என்று பொறுப்பை மறவாத, மனிதாபிமானத்தை இழந்திடாத காங்கிரஸ் நண்பர்கள் கூறிக் குமுறுவது தெரிகிறது, தம்பி. ஆனால் நேரு பண்டிதருடைய உள்ளப்பாங்கு எப்படி இருக்கிறது என்று எண்ணிப் பார்த்தாயா? எத்துணை அலட்சியம் இருந்தால், எந்த அளவுக்கு பந்த பாசம் இல்லாதிருந்தால், இங்கு 152 பிணம் கண்டெடுத்தோம் என்று சர்க்காரே கணக்குக் கொடுத்தனர், மற்ற உருவங்கள் உடலங்களாகக்கூட இல்லை, தலைவேறு உடல் வேறு, கால் வேறு கரம் வேறு என்று ஆகிவிட்டன, ஆகவே அடையாளம் கண்டறியவும் முடியவில்லை, இத்தனை பேர் என்று கணக்கு எடுக்கவும் இயலவில்லை என்றுகூறி, குழி வெட்டி அதிலே போட்டு மொத்தமாகக் கொளுத்திவிட்டோம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்; காணச் சகிக்காத காட்சியாக இருக்கிறதே, கண்றாவிக் கோலமாக இருக்கிறதே என்று பத்திரிகைகள் எடுத்துக்காட்டின; இவ்வளவுக்குப் பிறகும், நேரு பண்டிதருடைய உடல் ஆடவில்லை, அசையவில்லை, ஓடோடிச் சென்று, அந்த மக்கள் மத்தியில் நின்று, மாரடித்து அழும் அந்த மக்களுக்கு ஆறுதல் அளிப்போம் என்று இரக்கம் எழவில்லை! இப்போது வருகிறாராம், எல்லோரும் காங்கிரசுக்கே ஓட்டு அளியுங்கள்! என்று உத்தரவு பிறப்பிக்க! ஒரு வேளை, மக்களைப் பார்த்து அந்த மகானுபாவர் கோபித்துக் கொண்டால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை; "மக்களே! என்ன உங்கள் புத்தி வரவர இப்படிக் கெட்டுப் போகிறது! எதற்காக இரயிலைக் கவிழவிட்டீர்கள்! அதனாலே இரயில்வே இலாகாவுக்கு எவ்வளவு பெரிய நஷ்டம். அதுதான் போகட்டும் என்றால், எவ்வளவு பேர் செத்துவிட்டார்கள்—அதனால் எங்கள் கட்சிக்கு எத்தனை 'ஓட்டு' நஷ்டம் தெரியுமா? இனி இப்படியெல்லாம், சாகாதீர்கள்—எப்படியும் ஐந்தாண்டுக்கு ஒரு தடவை எங்கள் கட்சிக்கு ஓட்டுத் தரவேண்டுமே அதை மறந்துவிட்டு, மடிந்து போகிறீர்கள்—இது மன்னிக்கமுடியாத குற்றம்! எனினும் பொறுத்தேன்—இனி இந்தத் தேர்தலில் அனைவரும் கூடி, ஐந்தாண்டுத் திட்ட பஜனைபாடி, ஓட்டுச் சாவடிக்கு ஓடி, மாட்டுப் பெட்டியை நிரப்புங்கள்—என்று கூடப் பேசுவார்.



தமிழ் நாட்டிலே, இந்த அரியலூர் விபத்தின்போது மட்டுமல்ல தம்பி, முன்பு இருமுறை புயலால் பேரிழப்பு நேரிட்டபோதும், நேரு பண்டிதர் வரவில்லை. உனக்கு நினைவிருக்கும், புயல் நிவாரண நிதிக்காகப் பணியாற்றியிருக்கிறாயே! காங்கிரஸ் நண்பர்களுக்கு நினைவில் இருக்காது; நினைவிற்குக் கொண்டு வருவது என்றாலும், அவர்களுக்குச் சங்கடமாக இருக்கும்.

ஆனால் நாடு எப்படி மறக்கமுடியும்? தமிழகத்தில் புயலாலும் வெள்ளத்தாலும் இரயில் விபத்தாலும் பயங்கரமான அழிவு நேரிட்டு, அழுகுரல் பீறிட்டுக் கிளம்பிய நேரத்திலெல்லாம், நேரு பண்டிதர் வரவில்லை.

தமிழகத்திலே தேர்தல் பிரசாரத்துக்கு இப்போது வருகிறார்; முன்பும் வந்திருந்தார்!

தேர் திருவிழாப் போல நடத்தப்படும் கோலாகலங்களிலே கலந்துகொள்ள, அடிக்கடி வருகிறார்—ஆனந்தத்தோடு வருகிறார்!

சங்கீத வித்வத் சபையின் துவக்க விழாவா? வருகிறார்!

கண் காட்சி துவக்கவேண்டுமா? வருகிறார்!

திருவிதாங்கூர் சமஸ்தானத்துக் காட்டிலே, கண்ணாடி மாளிகையிலே தங்கி இருந்து, கரிகளின் காதல் விளையாட்டினையும், புலியாரின் களியாட்டத்தையும் கண்டு களிக்கலாம் என்று அழைப்பு விடுத்தனர்; சென்றார், கண்டார்!

தமிழ் இசையை நான் அறியேன்! இசையே கூடப் பொதுவாக எனக்குப் புரியாது! எனினும் சுப்புலட்சுமியின் கானம் கேட்கும்போது, விவரிக்க முடியாததோர் ஆனந்தம் எழத்தான் செய்கிறது. சுப்புலட்சுமியார் சங்கீத ராணி!—என்று நெஞ்சு நெக்குருகப் பேசினார்!

எல்லா விழாக்களுக்கும் அழைப்பு அனுப்பினால், தமிழகம் வருகிறார்—விபத்து, அழிவு நேரிடுகிறது என்றால்,

வருவது இல்லை. வரவேண்டும்—ஆறுதல் அளிக்கவேண்டும் என்ற பாசம் எழுவதில்லை; டில்லியிலேயே நமது வல்லத்தரசு தான் குழந்தைபோலத் தேம்பித் தேம்பி அழுதார் என்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன; நேரு பண்டிதருக்கு ஏற்பட்ட வருத்தமெல்லாம் தமது ஆருயிர்த்தோழர் லால் பகதூர் சாஸ்திரி, இந்தக் காரணத்துக்காக மந்திரிப் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டாரே என்பதுதான்.

நேரு பண்டிதரின் இதயம் ரொம்ப மென்மையானது—அவரால் அவதியை, அழுகுரலைச் சந்திக்க முடியாது—விபத்து, வேதனை என்றால் அவரால் காணச் சகிக்காது—அதனாலேதான் அவர், தமிழகத்தில் புயலும் வெள்ளமும் புகுந்து அழிவு ஏற்படுத்திய நேரத்திலும், இப்போது அரியலூர் இரயில் விபத்தால் பயங்கர நாசம் ஏற்பட்ட நேரத்திலும், நேரடியாக வந்து ஆறுதல் கூறவில்லை. அறிமின்! அறிவிலிகாள்! இதைக் காட்டிக் கரிபூசாதீர்! துரும்பைத் தூணாக்காதீர்! என்று வாதாடும் வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். உண்மையா அது என்று பார்த்தால், அல்ல, அல்ல, என்று விளக்கமாகத் தெரிகிறது.

வடக்கே எங்கு எவ்விதமான விபத்து நேரிட்டுவிட்டாலும், நேரு பண்டிதர், உடனே பறந்து சென்று, பாசமும் நேசமும் காட்டுகிறார்; அன்பும் ஆறுதலும் பொழிகிறார்; இதனை இல்லை என்று எவ்வளவு துணிவு பெற்ற காங்கிரஸ் காரரும் சொல்லிவிட முடியாது.

கோசி நதியால் வெள்ள விபத்து

கட்சு பூகம்ப விபத்து

அசாமில் வெள்ள விபத்து

உத்தரப்பிரதேசத்தில் வெள்ள விபத்து

இந்தச் சந்தர்ப்பங்களிலெல்லாம் நேரு பண்டிதர் சென்றதும், ஜீப்பிலும் விமானத்திலும் பயணம் செய்து, மக்கள் மத்தியில் நடமாடி ஆறுதல் அளித்ததும், காங்கிரஸ் நண்பர்களுக்குத் தெரியும்.

அங்கெல்லாம் அவதி நேரிட்டபோது, ஓடோடிச் சென்று உருக்கம் காட்டிய நேரு பண்டிதர், தமிழகத்திலே அழிவு நேரிட்டு, மக்கள் கதறும்போது மட்டும், நேரில் சென்று துக்கத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டும், ஆறுதல் கூறிச் சோகத்தைத் துடைக்கவேண்டும் என்று எண்ணவில்லை. அந்த எண்ணம் இயல்பாக எழாத காரணம் என்ன? ஏன்



அந்த மனம் வடக்கே காணப்படும் விபத்துகளின்போது அனலிடு மெழுகாகிறது, தமிழகம் தலைவிரி கோலமாகும்போது மட்டும், பாறையாகிவிடுகிறது? இந்த விசித்திரமான போக்குக்குக் காரணம் என்ன? நாம் கூறும்போது பலருக்குக் கோபம்கூட இருக்கிறது. கவைக்கு உதவாத காட்டு மிராண்டிக் கருத்தென்று ஏசக்கூடச் செய்கிறார்கள். எனினும், இத்தகைய சம்பவங்களின் போதாவது, சிறிதேனும் ஆழச் சிந்திப்பார்களானால், சீற்றமடையும் நண்பர்கள், நாம் வலியுறுத்தி வரும் உண்மையை உணருவார்கள்—வடக்கு வேறுதான்—தெற்கு வேறுதான்!!

தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் என்பார்களே—அது தமிழகத்தில் விபத்து நேரிடும்போது நேரு பண்டிதருக்கு ஏற்படுவது இல்லை.

ஆனந்த விகடனுக்கே இது ஆச்சரியத்தை மூட்டிவிட்டிருக்கிறது; சிறிது ஆயாசமும் எழுத்திலே தொனிக்கிறது; எண்ணத்தில் மட்டும் நாம் கூறிவரும் உண்மை இடம் பெற மறுக்கிறது! எனினும் ஆச்சரியத்தையேனும் தந்திருக்கிறதே என்று எனக்கு ஓரளவு திருப்திதான். தம்பி! நேரு பண்டிதருடைய இந்தப் போக்கு விகடனுக்கு விசாரம் தருகிறது.

> "நமது பிரதம மந்திரி நேருஜீ, அரியலூர் விபத்து நடந்தவுடனேயே ஒரு நிபுணர் கோஷ்டியுடன்கூட, விபத்து நடந்த இடத்துக்கு நேரில் வந்து பார்த்திருக்க வேண்டும் என நாம் கருதுகிறோம், அவர் ஏன் அப்படிச் செய்யவில்லை என்பது ஆச்சரியமாக இருக்கிறது. கோசி நதியில் வெள்ளம் வந்து சேதம் விளைவித்தபோது, அவர் அந்தப் பிரதேசங்கள்மீது பறந்து பார்வையிட்டார். கட்சில் பூகம்பம் நாசம் விளைவித்தபோதும், அசாமிலும் உத்திரப்பிர தேசத்திலும் வெள்ளம் ஏற்பட்ட போதும், அவர் அங்கெல்லாம் நேரில் விஜயம் செய்து பார்வையிட்டார். இதனால் கஷ்டப்படும் மக்களுக்கு ஆறுதல் பெற முடிந்ததோடு நிவாரண வேலைகளும், பாதுகாப்பு ஏற்பாடுகளும், உடனடியாக நடப்பது சாத்தியமாயிற்று"

இவ்விதம் ஆனந்த விகடனே எழுத நேரிடுகிறது.

அரியலூர் விபத்து, நேரு பண்டிதரை இங்கு வரவழைக்கவில்லை; ஆனால் தேர்தல் ஆபத்து அவரை இங்கு ஓடோடி வரச் செய்கிறது.

அரியலூர் விபத்தின்போது நேரு பண்டிதரை, இங்கு வரச்சொல்லி அழைத்து, தமிழ் மக்களின் துயரத்தைக்

கண்ணாலே பாருங்கள், என்று காட்டிட, காமராஜருக்கு எண்ணம் எழவில்லை, தேர்தல் ஆபத்து என்ற உடன், வாருங்கள்! ஓட்டு வரம் தாருங்கள்!—என்று ஏத்தி ஏத்தித் தொழுது, நேருபண்டிதரை இங்கு அழைத்து வரவேண்டும் என்ற அவசியம் காமராஜருக்குச் சுரக்கிறது.

தம்பி! என் துக்கத்துக்கு மற்றோர் காரணம் என்ன தெரியுமா? இங்கு, காமராஜரையும் அவருடைய கூட்டாளிகளையும் இந்தத் தேர்தலிலே வெற்றி பெறச் செய்வதே இப்போதைக்கு அவசரமான அவசியமான கடமை என்று என்று கூறி, உள்ளன்புடன் பெரியார் பாடுபடுகிறார்—அவருடைய இன்றைய நண்பர்களோ, அந்த நோக்கத்துடன், தீனாமூனாகானாக்களுடைய பெட்டியிலே, ஒரு ஓட்டு கூடப் போடக்கூடாது, மண்ணை அள்ளிப் போடுங்கள் என்று கூறும் அளவுக்குப் பிரசார இயந்திரத்தை முடுக்கிவிடுகிறார்கள்—காமராஜரின் யோக்யதை என்ன, உன் யோக்யதை என்ன! அட பாவி! அவரைப் போய் எதிர்க்கக் கிளம்புகிறாயே!—என்று மனம் நொந்து பேசுகிறார்கள். காமராஜர் பக்கம் அணிவகுத்து நிற்கிறார்கள்!

இருந்தும், பார் தம்பி! காமராஜர், நேரு பண்டிதரைத் தான் அழைத்து வருகிறார், தமிழகத் தேர்தல் பிரசாரத்துக்காக!!

சென்ற பொதுத்தேர்தலின்போது, பெரியார், காங்கிரஸ் கட்சியை ஒழித்துக்கட்டுவதற்காகப் பெரும்பணியாற்றினார். அப்போது அவருடைய பலமான எதிர்ப்பைச் சமாளிக்க, நேருபண்டிதர் தேவைப்பட்டார்; வரவழைக்கப்பட்டார். இப்போதுதான், பெரியாரின் பேராதரவு காமராஜருக்குக் கிடைத்திருக்கிறதே. நேரு பண்டிதர் வந்திருந்து உதவிசெய்ய வேண்டிய அவசியம் என்ன?

முன்பு இருந்ததைவிடத் தமிழகத்தில் காங்கிரசுக்குச் செல்வாக்கு அமோகமாகிவிட்டது; காமராஜரின் வீரமும் தீரமும் வேலைப்பாடும் மிகுந்த நன்மை தரும் திட்டங்களின் காரணமாக, எதிர்ப்புகள் பட்டுப்போயின, புது உறவுகள் பூத்துக் காய்க்கின்றன என்கிறார்கள்—எதிர்த்து நிற்கும் நாமோ, அற்பர்கள், அலட்சியப்படுத்தத் தக்கவர்கள் என்கிறார்கள்; இந்த நிலையில் காமராஜர் ஏன், நேரு பண்டிதரை வரவழைக்கிறார்!

பெரியார் எனக்காகப் பிரசாரம் செய்கிறார்—செய்யட்டும்—ஆனால் அது போதாது—காங்கிரசுக்கு வெற்றி கிடைக்க வேண்டுமானால், பாரெல்லாம் புகழ் பெற்ற பஞ்சசீலப்



பண்டிதர், நேரு, வரவேண்டும்—அப்போதுதான் இலட்சக் கணக்கிலே மக்கள் கூடுவர், கொண்டாடுவர், அப்போது தான் ஓட்டுகள் குவியும் என்று அல்லவா, காமராஜர் எண்ணுவதாகத் தெரிகிறது!! இது எனக்கு ஏற்பட்டுள்ள, துக்கத்துக்கு உள்ள இரண்டாவது காரணம்.

பெரியாரின் பேரன்பர்கள் இதற்கெல்லாமா மனம் உடைந்து போவார்கள்! என்ன ஆணவம் இந்தக் காமராஜருக்கு! நமது பெரியாரின் பேராதரவு இடைவிடாது கிடைத்திருக்கும்போது, இந்தக் கண்ணீர்த் துளிகளையும் கம்யூனிஸ்டுகளையும், பிரஜாக்களையும், சோஷியலிஸ்டுகளையும், உதிரிகளையும் பூண்டோடு ஒழித்துக்கட்டிவிட்டு, பிறகு திராவிட நாடு பெறுவதுபோன்ற வேலையில் ஈடுபடுவோம் என்று சூள் உரைத்து விட்டு, சுறுசுறுப்புடன், விறுவிறுப்புடன் நாம் பணியாற்றி வருகிறதைக் கண்ணாலே கண்டான பிறகு, இந்தக் காமராஜர் தேர்தல் பிரசாரத்துக்காக, நேரு பண்டிதரை வரவழைக்கிறேன் என்று அறிவிக்கிறாரே! இது தகுமா? முறையா? தேவையா? நம்மைப்பற்றி அவர் இவ்வளவு தாழ்வாகவா கருதுவது! என்றெல்லாம் எண்ணவா போகிறார்கள்!! நான் அப்படி நினைக்கவில்லை. இந்த ராஜகோபாலாச்சாரியார் என்ன இப்படிக் கெட்டுவிட்டாரே! ராமசாமிப் பெரியாரின் தரத்துக்கு வந்துவிட்டாரே! என்று காமராஜர் கேவலப்படுத்திப் பேசியதைக் கேட்டே சகித்துக் கொண்டவர்கள், இப்போது ஏன் கோபம் கொள்ளப்போகிறார்கள்!

"நல்ல பிரபலமான சர்ஜனை வரவழைத்துக் காட்டப் போகிறேன்" என்று கூறுவது கேட்டால், அதுவரை வைத்தியம் பார்த்து வந்த டாக்டருக்குக் கோபம் வரும்—தன்னை மரியாதைக் குறைவாக நடத்துகிறார்கள் என்று மன வேதனை ஏற்படும். காமராஜரோ துணிந்து நானென்றும் பெரியாரை நம்பிக்கொண்டில்லை, பெரியாரின் பிரசாரம் போதும் என்று திருப்திப்பட்டுக் கொண்டில்லை, பெரியாரின் துணை தேர்தலில் வெற்றி தந்துவிடும் என்று சும்மா இருந்து விடமாட்டேன். நான், என் நேருவை வரவழைக்கிறேன் என்று சொல்லுகிறார்.

இந்த அவருடைய மனப்பான்மை எனக்குத் துக்கத்தைத் தருகிறது.

எப்படியோ ஒன்று, நேரு பண்டிதர் வருகிறார், தேர்தல் பிரசாரம் செய்ய—அரியலூர் விபத்தின் போது தமிழகத்தை அலட்சியப்படுத்தியவர். புயல் வெள்ளக் கொடுமையின்

போது தமிழகத்தை எட்டிப் பார்த்திட மனமற்று இருந்தவர், தேர்தலுக்காகத் தமிழ்நாடு வருகிறார்! வரட்டும்! தமது செல்வாக்கை வழங்கட்டும்! ஈளைகட்டி இருமிக்கொண்டிருக்கும் நோயாளியைப் பிழைக்கவைக்கட்டும்—தம்பி—எனக்கு அது பற்றித் துளியும் கவலை இல்லை. ஆனால் இதுபோன்ற சம்பவங்கள், தமிழ் நாட்டை எவ்வளவு உதாசீனப்படுத்துகிறார்கள், எத்துணை அலட்சியம் காட்டப்படுகிறது என்பதை எடுத்துக்காட்டப் படுவதாக அமையும் போதுதான் வேதனை குடைகிறது!

ஒவ்வொரு முனையிலும் இந்த நிலை காண்கிறோம்—ஒவ்வொரு முனையிலும், இந்தப் போக்கினாலே கஷ்ட நஷ்டம் அடைபவர்கள், மனம் குமுறுகிறார்கள்; சில வேளைகளிலே கண்டனத்தைக் கூட வெளியிடுகிறார்கள்—ஆனால், தொடர்ந்து நடைபெறும் இந்த ஓரவஞ்சனையை—மாற்றாந்தாய் மனப்பான்மையை—மாற்றிடப் பொதுவான, பலமான, முயற்சி எடுத்திட முன்வருவதில்லை! ஆபத்தின்போது அவரவர்கள் தத்தமது உயிரையும் உடமையையும் பாதுகாத்துக் கொண்டால் போதும் என்று இருந்து விடுவதுபோல, நம் வரையில் சலுகை கிடைத்து விட்டால் போதும், ஊர்த் தொல்லையைத் தூக்கி நாம் நம் தோளில் போட்டுக் கொள்வானேன் என்று இருந்து விடுகிறார்கள். இந்தப் போக்குத் தெரிகிறது பண்டிதருக்கு; எனவேதான் அவர் அரியலூர் விபத்தின்போது கண்ணீரைத் துடைக்க இங்கு வரவில்லை, ஓட்டுகளைத் தட்டிப் பறித்திடமட்டும் வர இருக்கிறார்.

இவருடையஇந்தப் போக்கு நியாயமா? இவர் ஈவு இரக்கம், மனிதாபிமானம், மக்களாட்சிக்குத் தேவையான கடமை உணர்ச்சி ஆகிய தூய்மைகொண்ட உள்ளத்தினர்தானா என்றெல்லாம் ஆராய்வதற்காக நான் இதனை விளக்கினேன் இல்லை! நமது நாட்டுக்குத் தரப்படும் நிலையைப்பற்றி, நாட்டுப்பற்றுக் கொண்டோரனைவரும் எண்ணிப் பார்த்திட வேண்டும் என்பதற்காகவே, இதனை விரிவாகக் கூறினேன்.

தமிழ்நாடு, இந்தத் தாழ்நிலைக்குக் கொண்டுவந்து வைக்கப்பட்டிருப்பதைக் காட்டிடும் நிகழ்ச்சிகள் பலப்பல. அதில் இது ஒன்று.

தமிழகம் தவித்தபோது இங்கு வராத நேருபண்டிதர், ஓட்டுக் கேட்கமட்டும் வருகிறார், என்பது வேதனை தருகிறது; அதுபோலவே காங்கிரசுக்கு ஓட்டு அளிக்கும்படி மக்களிடம் பேசிட, தமிழகத்துக்குத்தான் நேரு வருகிறாரே தவிர, வங்கத்துக்குக் காமராஜர் போகிறார் இல்லை, பாஞ்சாலத்துக்கு பக்தவத்சலம் பறக்கிறார் என்று இல்லை, இது வெட்கமும்



வேதனையும் தருகிற நிலைமையாகும்- ஆனால் இரண்டு என்ன—எத்தனையையும் ஏற்றுக் கொண்டு பதவியில் ஒட்டிக் கொண்டிருக்க இங்கு காங்கிரஸ் கனவான்கள், தயாராக இருக்கிறார்கள்.

தேவிகுளம்

பீர்மேடு

நெய்யாற்றங்கரை

கொச்சின்—சித்தூர்

பாலக்காட்டுத் தமிழ்ப் பகுதி

தமிழருக்கு இல்லை! என்று டில்லி உத்தரவு பிறப்பித்தது—ஐயனே!—மெய்யனே! இதோ பாரும் புள்ளி விவரம்! இந்தப் பகுதி எல்லாம் தமிழருக்கே உரியது என்பது விளங்கும் என்று 'இருந்து முகந்திருத்திக்' கூறினர்; "என்னிடம் புள்ளி விவரம் காட்டவா துணிகிறீர்கள்!" என்று நேரு பண்டிகர் உருட்டுவிழி காட்டினார். "எமை ஆளும் கோவே! பிழை பொறுத்திடுக! பெருங்கோபம் விடுத்திடுக! குளமாவது மேடாவது! குணாளா! உன் குளிர்மதிப் பார்வைபோதும் எமக்கு! தேவிகுளம் போனாலென்ன, தேவதேவா! உன் திருப்பார்வை பட்டால் போதாதா! அந்தப் பகுதி அனைத்தும் அளித்து விடுகிறோம். அதுமட்டுமல்ல, எமை ஆளாக்கி விட்ட ஆற்றலரசே! செங்கோட்டையில் ஒரு பாதியையும் தருகிறோம், பெற்றுக் கொள்க!—என்று கூறிவிட்டு வந்தவர்களல்லவா கோலோச்சுகிறார்கள்.

இலங்கையில் தமிழர்களைப் படுகொலை செய்கிற பண்டாரநாயகாவின் ஆட்சியின் போக்குப்பற்றி, ஒருதுளியும் டில்லி நடவடிக்கை எடுத்ததில்லை—சிறிதளவு அதட்டிக் கேட்கலாகாதா, அவனி புகழ ஒரு காலத்தில் வாழ்ந்த இனமாயிற்றே எமது தமிழர், சிங்களத்தை எமது மன்னன் வென்று, அந்தப் போரிலே பிடிபட்ட சிங்களவர்களைக் கொண்டு, காவிரிக்குக் கரை அமைத்தான் என்று கல்லில் பொறித்திருக்கிறார்களே! அத்தகைய வீரமரபினர், இன்று ஒட்டாண்டிகளாக மட்டுமல்ல, நாடற்றவர்களாக ஆக்கப்படுகிறார்களே, கள்ளத்தோணிகள் என்று கேவலப்படுத்தப்படுகிறார்களே—இதற்குப் பரிகாரம் காண ஒரு சிறு முயற்சி எடுத்திட வேண்டாமா?—பாதகம் விளைவிக்கும் பண்டாரநாயகாவின் ஆட்சிக்கு நல்லறிவு கொளுத்த வேண்டாமா? என்று கேட்டனரோ நமது மந்திரிமார்! இல்லை! கேட்டால்,

மந்திரி பதவி நிலைக்காதே என்ற மருட்சியால், வாய் அடைத்துக் கிடந்தனர்!

ஒவ்வோர் சமயத்திலும் இதே போக்குத்தானே கண்டோம். மனம் குமுறிப் பேசினர் பலரும். எனினும் நிலைமையில் எந்த மாறுதலும் ஏற்படவில்லை: ஒவ்வொரு துறையிலும் டில்லி ஆதிக்க உணர்ச்சியையும், தமிழரின் நியாயமான 'கோரிக்கைகளை'க் கூட அலட்சியப்படுத்தும் போக்கையும் காட்டிக்கொண்டேதான் வருகிறது.

சென்னை மந்திரிமார்களிலேயே மார்தட்டிப் பேசுவதில் முதல் தாம்பூலம் பெற்றவர், நிதி அமைச்சர்.

நமது கழகப் பெயர் கேட்டாலே அவர் நெரித்த புருவத்தினராகிறார்.

நமது கழகத்தைத் தாக்கிப் பேசக் கிளம்பினாலோ, பற்களை நறநறவெனக் கடிக்கிறார்.

அப்படிப்பட்ட 'வீரதீரமிக்கவர்' இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில் துறையிலே பின்தங்கி இருக்கும் சென்னைக்கு முதல் ஐந்தாண்டு திட்டத்திலே புறக்கணிக்கப்பட்டுப்போன சென்னைக்கு, 400-கோடி ரூபாயாவது தரவேண்டும் என்று கேட்டார்: கரம் கூப்பினார், கண்ணைப் பிசைந்துகொண்டார், 'கஷ்டத்தைப் பார்த்துக் கூலிகொடுங்கள் எஜமானே! உங்கள் வாய்க்கு வெற்றிலைபாக்கு, நம்ம வயிற்றுக்குச் சோறு!' என்று கெஞ்சுவார்களே—அதுபோலெல்லாம் கேட்டுப் பார்த்தார். என்ன நடந்தது என்பதைத் தம்பி நாடறியுமே! கேட்டது 400-கிடைத்தது 170 இந்த இலட்சணத்தில் இருக்கிறது தொடர்பு! காட்டும் வீரம் அத்தனையும், இங்கே, நம்மிடந்தானே! டில்லி சென்றதும், எவ்வளவு அடக்க ஒடுக்கம்! பயபக்தி, ஏ! அப்பா! என்ன சொன்னால், நேருபண்டிதருக்குக் கோபம் வந்து விடுமோ—அதன் பயனாகப் பதவிக்கு ஆபத்து நேரிடுமோ என்ற திகில், இவர்களை தஞ்சாவூர் தலையாட்டிப் பொம்மைகளாக்கி விடுகிறது! இங்கே, பார் வீரதீரத்தை! குட்டுபவனுடைய கரத்தில் மோதிரம் இருந்தால், வலியையும் தாங்கிக்கொண்டு ''ஆஹா! அருமையான வைரம்! அற்புதமான பூரிப்பு;'—என்று பாராட்டுகிறார்கள்.

கலைத்துறை, கல்வித்துறை, வணிகத்துறை எனும் பல்வேறு துறைகளிலே நடைபெறும் அநீதிமிக்க போக்கை, தம்பி! நான் அவ்வப்போது விளக்கித் தருகிறேன் இதனைக் கண்ணுறும் காங்கிரஸ் நண்பர்கள் என்ன எண்ணுகிறார்களோ தெரியவில்லை. நாடு, மட்டும் நிச்சயமாக, அறிந்து



ஆறாத் துயரம் கொண்டிருக்கிறது. நேருபண்டிதரைக் கண்டால் அந்தத் துயரமும் கோபமும், பகலவன் முன்பனி போலாகும் என்று காமராஜர் கருதுகிறார்—பலமுறை அது போலாகி இருக்கிறது—இம்முறை அது பலிக்கப் போவதில்லை; மக்கள் மனம், கொந்தளித்துக் கொண்டிருக்கிறது.

நாம் மட்டுமல்ல தம்பி, நாட்டிலே உள்ள பல்வேறு முற்போக்குக் கட்சிகளும, தமிழர் மிகப்பெருவாரியாகக் குடியேறி உள்ள வெளிநாடுகளுக்காகிலும், தமிழர்களையே தூதுவர்களாக அனுப்பி வைக்க வேண்டும்—இது உரிமைப் பிரச்சினை என்றுகூட அல்ல, வசதியைக் கவனித்தாலே, இதுபோலச் செய்வதுதான் திறம் தரும் என்பதை வலியுறுத்திக் கூறியபடி உள்ளன.

பொதுக் கூட்டங்கள் பலவற்றிலே, மன்றங்களிலே, மாநாடுகளிலே, விளக்கப்பட்டு வேண்டிக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

தமிழர்களைத் தூதுவர்களாக அனுப்புவதால், டில்லிக்கு நஷ்டம் ஏதும் ஏற்படப்போவதுமில்லை, அதனைச் செய்வதிலே நஷ்டமும் எழாது.

இங்குள்ள தமிழர்களும் இதை விரும்புகிறார்கள், குடியேறியுள்ள தமிழர்களும் ஆவலுடன் வரவேற்கிறார்கள்.

எனினும் இந்த ஒரு சிறிய காரியத்திலேகூட, டில்லி தன் போக்கை மாற்றிக் கொள்ளவில்லை! மேதைகள் கேட்கிறார்கள், காதிலே ஏறவில்லை! அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட பிரமுகர்கள்கூடக் கேட்கிறார்கள், அதனையும் டில்லி பொருட்படுத்த மறுக்கிறது. தொடர்ந்து, துணிந்து, எல்லா இடங்கட்கும் வடக்கிலிருந்தே தூதுவர்களை அனுப்புகிறது—அதிலும் குறிப்பாக, தமிழர்கள் மிகப் பெருவாரியாகக் குடியேறியுள்ள நாடுகளில்! நியாயமா? கேட்டுப்பாரேன், காங்கிரஸ்காரர்களை. ''என்ன தோழரே! செய்வது?'' என்று பரிதாபத்தோடு சிலரும், ''இதெல்லாம் ஒரு பெரிய, பிரமாதமான பிரச்சினை அல்ல' என்று அலட்சியமாகச் சிலரும் பேசுவர்—ஆனால் அந்தக் காங்கிரஸ்காரர் மனதிலெல்லாம் நிச்சயமாக, கசப்பு முற்றிக்கொண்டுதான் வருகிறது. இதை, நேருவின் விஜயம் மாற்றி விடாது.

நேருபண்டிதர் தமிழகத்துக்கு வந்து பிரசாரம் செய்தால்தான், காங்கிரசை எதிர்த்துத் தேர்தலில் ஈடுபடும் நமது கழகத்தின் செல்வாக்கைச் சிதைத்திட முடியும் என்று காமராஜர் கணக்குப்போடுவது, தவறு என்பது மட்டுமல்ல

அவர் அந்தக் கணக்குப் போடுவதன் மூலம், நமது கழகத்திடம் எவ்வளவு கடும் கோபம் கொண்டிருக்கிருர் என்பது தெரிகிறது மட்டுமல்ல, பெரியாரின் துணையை அவர் போதுமானது என்று எண்ணவில்லை.

காமராஜர் கருதுவதுபோல் நேருபண்டிதர் இங்கு வந்து பேசுவதன் மூலம், நமது கழகத்துக்குப் புதிதாக ஏதேனும் ஓர் எதிர்ப்பு கிளம்பும் என்று நான் நம்பவில்லை! நேரு பண்டிதருக்குப் 'பாவம், சர்வதேச நிலைமையை விளக்கிட, தனக்கும் பிறநாட்டுத் தலைவர்களுக்கும் உள்ள தொடர்பு களைச் சித்தரித்துக் காட்டவே நேரம் போதாது! மேலும் தம்பி; நமது கழகத்திலுள்ள பணியாளர்களை, குறிப்பாக உன் அண்ணனைப் பற்றி,

அடுத்துக் கெடுப்பவர்

உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்வோர்

ஊர் சுற்றிகள்

என்று கடுமையாகவும், காரசாரமாகவும் பேசிடவா தெரியும்! அதற்கெல்லாம் பெரியார் இருக்கிருர்! வேறு எதற்காக நேரு பண்டிதரைக் காமராஜர் வரவழைக்கிருரோ தெரியவில்லை.

காரணம் எதுவாயினும், தம்பி, நேரு பண்டிதரின் 'விஜயம்', இங்குள்ள பொதுமக்கள் மனதிலே, பல்வேறு சம்பவங்களின் மூலமாக மூண்டு கிடக்கும் கசப்பினைப் போக்கிடப் போவதில்லை என்பது மட்டும் உறுதி.

நேரு பண்டிதரைப் பார்க்கும் போதே, புயலின்போது நாம் புலம்பிக் கிடந்தபோது வராத நேரு, வெள்ளக் கொடுமையிலே மூழ்கி வதைபட்டபோது வராத நேரு, அரியலூரில் விபத்தினல் கதறித் துடித்தகாலை வராத நேரு, இப்போது ஓட்டுக்காக மட்டும் வந்திருக்கிருர், பாரீர்! என்ற எண்ணத்தை உமிழும் கண்களுடன்தான் மக்கள் இருக்கப் போகிருர்கள்.

ஒவ்வொரு துறையிலும் தமிழர்களின் முகத்தில் கரி பூசப் படும் கொடுமைக்கு யார் தலைமை வகிந்திருக்கிருரோ, அந்த நேரு இவர்தான் என்றுதான் பார்க்கப்போகிருர்கள்.

''தமிழ் மக்கள் குடி ஏறி இருக்கும் நாடுகளான இலங்கை, பர்மா, மலேயா, தென்னுப்பிரிக்கா, முதலிய நாடுகளில், தமிழர்கள் தூதுவர்களாக நியமிக்கப் படுவதே, பொருத்தமுடையதாகும். தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவர்கூட கவர்னராயில்லாவிட்டாலும், தூதுவர் பதவிகளிலாவது தமிழர்களுக்குச் சிறப்பளிக்கக் கூடாதா? உலகமெல்லாம் புதுப்புது இடங்களில் தூதுவர் கள் நியமிக்கப்பட்டு வரும்போது எங்காவது ஒரு தமிழருக்குக்கூட இடமில்லை என்பது வருந்தத்தக்கது. தமிழ்நாட்டு அரசியலில் காங்கிரசு கட்சியிலும், பிறகட்சி களிலும், கட்சிச்சார்பற்ற நிலையிலும், கல்விச் சிறப்பு, கலைப் பண்பு, பிறநாட்டு அனுபவம் முதலிய தகுதி களுடைய சிலர் கூடவா, புதுடில்லி அரசினருடைய தொலை நோக்கிற்குப் புலப்படவில்லை? மேலும் தமிழர் களே மிகப் பெரும்பான்மையினராகவுள்ள புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளுக்கு ஒரு தமிழரை, இந்தியப் பிரதிநிதியாக ஏன் நியமிக்கக் கூடாது? மக்களுடைய மொழியறியாத ஒருவரை எதற்காக நியமிக்கவேண்டும்?



தம்பி! இப்படி எழுதும் ஏடு, தி.மு.க. முகாமைச் சேர்ந் தது அல்ல! மதுரை 'தமிழ்நாடு'—நேருபண்டிதரின் விஜயத்தின்போது, இந்த ஏட்டதிபரின் மாளிகைக்குக்கூடச் செல்லக்கூடும் — வேண்டியவர்தான் ஆட்சியினருக்கு — எனினும், மனம் வெதும்பத்தான் செய்கிறது, இவர் போன்ருருக்கும். காரணம் என்ன? தொடர்ந்து தமிழர் அவமதிக்கப்பட்டு வருவது, வெளிப்படையாகவே அவ மதிக்கப்படுவது, சுயநலத்தால் பீடிக்கப்பட்டுப்போனவர் களுக்குத் தவிர, பிற அனைவருக்கும், மனவேதனையைத் தருவதாகத்தான் இருக்கிறது.

அந்த வேதனையை நேரு பண்டிதரின் விஜயம் போக்கி விடாது—எரிகிற தழலுக்கு எண்ணெய் தானுகும்!

'தனி நாடு' என்றுகேட்பது தவறு, தீது, தேவையற்றது என்று காரணம் காட்டி, நம்மீது கடிந்துரைக்கும் போக்கின ரெல்லாங்கூட, எல்லா அதிகாரங்களும் வசதிகளும், வாய்ப்பு களும் உரிமைகளும் டில்லியில் —மத்திய சர்க்காரில் குவிந்து விட்டிருப்பதைச் சுட்டிக் காட்டி, இது தவறு, தீது, தேவை யற்றது என்று எடுத்துக் காட்டுகிருர்கள்.

இந்த நிலைமை மாற்றப்பட்டாகவேண்டும் என்று வலியுறுத்துகிருர்கள்.

மாகாணங்களுக்கு—மாநிலங்களுக்கு—இராஜ்யங்களுக்கு இன்று உள்ள அதிகாரங்கள், போதாதன; இந்த அளவுக்கு அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளதால், அந்தந்த மாநிலங் கள் தத்தமது ஆட்சியின் கீழ் உள்ள மக்களின் செல்வ வளர்ச்சிக்கான, நல் வாழ்வுக்கான திட்டங்களை நிறைவேற்றி வைக்க முடியவில்லை என்று குறைபட்டுக் கொள்கிருர்கள்.

வடக்கு வேறு, தெற்கு வேறு என்று பேசுவது அவ களுக்குக் கசப்பாக இருக்கிறது.

இனப் பிரச்சினையை எழுப்பினுலே, கடுப்பெடுக்கிறது.

எனினும், அவர்கள் அனைவருக்குமே எங்கோ ஓர் 'சுருதி பேதம்' இருப்பது தெரிகிறது.

அவர்கள், மாகாணங்களுக்கு அதிகமான உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்று வாதாடுவதும், வாதங்கள் பலிக்காது போனல் போராடுவதும்தான் அரசியல்; வடநாடு-தென்னுடு என்று குறிச் சொற்களைக் காட்டிப் பேசுவது 'காட்டுமிராண்டித்தனம் என்று எண்ணிக் கொள்கிருர்கள்; தம்பி, இவர்களின் அரசியலாவது வெற்றிபெறுகிறதா? அது தான் இல்லை.

ஏற்கனவே உள்ள அதிகாரங்கள் போதாமல், மேலும் மேலும் மத்திய சர்க்காரிலே அதிகாரங்களைக் கொண்டுபோய்க் குவித்துக் கொள்ளும் போக்குத்தான் காண்கிருேம்.

வடக்கு—தெற்கு என்று பேசுவது அறிவுடைமை அல்ல என்று கருதும் ''நகாசு'' வேலைக்காரர்களையே கேட்கிருேம், அந்தப் பேதம் ஆகாது என்ருல், ஏன் தமிழனுக்கு உரிமை தரவில்லை, தமிழனை ஏன் உயர் பதவியில் அமர்த்தவில்லை? தமிழனை ஏன் தூதுவர்களாக்கவில்லை என்று எப்படிக் கேட்கத் தோன்றுகிறது!

லங்காஷயர்காரருக்கே பதவியா? வேல்ஸ்காரருக்கே விருதுகளா? ஷெப்பீல்டுகாரர்களுக்கே பட்டமா? என்று இங்கிலாந்தில் கேட்பதில்லை; காரணம், அங்குள்ள மக்கள் அனைவரும் தம்மை ஆங்கிலேயர் என்று நம்புவதால்—அந்த எண்ணம் குருதியில் கலந்துவிட்டிருப்பதால்!

இங்கும் அதுபோல, நேருபண்டிதரும், அவர் கூறுகிருரே என்பதாலே பிறரும், அனைவரும் இந்தியர் என்று பேசு கிருர்கள்.

இந்தப் பேச்சு உண்மை உணர்ச்சியை, இயற்கையைக் காட்டுவதாக இருந்தால், அடிக்கடி பல்வேறு துறைகளிலே யும், நம்மைப் புறக்கணித்து விட்டார்கள், நமது நலன்கள் பாழாக்கப்பட்டுவிட்டன; நமது உரிமைகள் அழுக்கப்படு கின்றன; என்ற குமுறல் எழக் காரணம் என்ன?

''இன்று இந்தியாவில் எந்த இராஜ்யத்திலும் தமிழர், கவர்னராக இல்லை. இந்தியாவின் மற்றப் பகுதி



களில் கிடைக்காத பதவி தமிழருக்கு தமிழ் நாட்டிலே யாவது கிடைக்கட்டுமே.

தமிழ் நாட்டுக்கு ஒரு தமிழ்க் கவர்னரை நியமிக்க வேண்டும் என்று நமது அமைச்சரவை மத்திய அரசாங் கத்தைக் கேட்டுக்கொண்டால், டில்லியில், யாருக்கும் மூர்ச்சை போட்டுவிடாது.''

தம்பி! 'குமுதம்' இதுபோல் எழுதிடக் காண்கிறேன்! ஏன், இந்த ஆவல் எழுகிறது! தமிழனுக்கு இந்தியாவிலே எந்த இடத்திலும் கவர்னர் பதவி இல்லையே என்ற ஏக்கம் ஏன் எழு கிறது!

தமிழருக்குத் தமிழ் நாட்டிலேயாவது

என்பதிலே தொக்கி நிற்கும் துயரத்துக்குக் காரணம் என்ன?

இந்தியர் என்று பேச முடிகிறதே தவிர, பேசுவது இன்றைய அரசியல் நாகரீகம் என்று கருதுகிருர்களே தவிர, அதிலே ஆழ்ந்த நம்பிக்கையோ, பற்று பாசமோ இல்லை—இயற்கையாக எழுவதில்லை!

தமிழ்நாட்டுக்குத் தமிழர் கவர்னர் ஆகவேண்டும் என்று எண்ணச் செய்யும் உணர்ச்சிக்கு 'குமுதம்' என்ன பெயரிடு கிறதோ, நான் அறியேன்! எனக்கென்னவோ நாமக்கல் கவிஞரின் பாடல் செவியில் விழுகிறது.

தமிழன் என்ருேர் இனம் உண்டு

தனியே அவர்க்கோர் பண்பு உண்டு

அவ்வளவு பச்சையாகச் சொன்ருல், அண்ணுத்துரைக் கும் நமக்கும் ஒரு வித்தியாசமும் தெரியாமல் போய்விடுமே, நாமென்ன அவன்போலவா, அரசியலில் அந்தஸ்து குறைந்த நிலையில் இருக்கிருேம் என்ற எண்ணம் பலருக்கு உண்டு என்பதை நான் அறிந்திருக்கிறேன்.

தம்பி! இதிலே இன்னெரு வேடிக்கையைக் கவனித் தாயா?

தமிழ் நாட்டுக்குத் தமிழ்க் கவர்னரை நியமிக்க வேண்டும் என்று நமது அமைச்சரவை மத்திய அரசாங் கத்தை கேட்டுக்கொண்டால் டில்லியில் யாருக்கும் மூர்ச்சை போட்டுவிடாது.''

என்ற வார்த்தை இருக்கிறதே, அதிலே உள்ள நயங்களும் அதற்குள்ளே புதைந்துள்ள உணர்ச்சிகளும், பலமுறை படித்துப் படித்துப் பார்த்தால்தான் அறிந்து ரசிக்கமுடியும்.

நமது அமைச்சரவை!

தம்பி! இதிலே, பாசமும் பரிவும், அன்பும் அக்கரையும், உரிமையும் உறவும் எல்லாம் அந்த நமது என்ற சொல்லுக்குள்ளே வைத்து இழைத்துத் தருகிறார் அந்த ஆசிரியர்! வாழ்க, அவர்தம் தமிழ் உள்ளம்!!

நமது அமைச்சரவை, தமிழ் நாட்டுக்கு

நல்லவரை

திறமைசாலியை

அனுபவமிக்கவரை

கவர்னராக நியமியுங்கள் என்று கேட்கவில்லை.

தமிழ்க் கவர்னரை

நியமிக்க வேண்டும் என்று கேட்கிறார்.

இனித் தம்பி, தமிழ் நாட்டின் அவலநிலையைக் காட்டுகிறாரே, அந்தச் சுவையைப் பார்!

தமிழ் நாட்டுக்குத் தமிழ் கவர்னரை நியமிக்கும்படி மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளவேண்டுமாம்.

மத்திய அரசாங்கத்திடம் அந்த அதிகாரம் சேர்க்கப்பட்டிருக்கிறது, என்பது விளங்குகிறது என்பாய். தம்பி! ரசம் அதிலே இல்லை.

மத்திய அரசாங்கம்

என்று மட்டுமே கூற ஆசிரியரின் மனம் இடந்தருகிறது. நமது மத்திய அரசாங்கம் என்று சொல்லக் கூச்சமாக இருக்கிறது. நமது அமைச்சரவை என்று, உரிமையோடும் பெருமையோடும் கூறுவதற்கு முடிகிறது, மத்திய அரசாங்கம் என்று மட்டுமே, பந்தம் சொந்தம் அற்ற முறையிலே சொல்ல முடிகிறது.

பாவி! நான் மிகப் பாடுபட்டு உள்ளத்து உணர்ச்சிகளை திரைபோட்டு வைக்கிறேன், கிளறிக் கிளறிக் காட்டித் தொலைக்கிறாயே, தேசீய முகாமின் தீப்பொறி கிளம்புமே... என்று ஆசிரியர் ஆயாசப்படக்கூடுமே என்பதுபற்றி, தம்பி, நான் பலமுறை எண்ணிப் பார்த்தேன்; என்ன செய்வது; அவருக்குக் கஷ்ட நஷ்டம் வருவதானாலும், இதனை நான் எடுத்து விளக்குவது தமிழருக்கு இலாபம் அல்லவா!!



தமிழ்நாட்டுக்குத் தமிழரை கவர்னராக நியமிக்கும்படி நமது அமைச்சரவை மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளவேண்டும் என்று யோசனை கூறியதும், ஆசிரியருக்கு வேறோர் யோசனை வருகிறது.

நமது அமைச்சர்கள், டில்லியின் கோபம் கிளம்பிடும் என்று மருளக் கூடியவர்களாயிற்றே! என்று எண்ணம் வந்தது.

உடனே, நமது அமைச்சரவைக்கு தைரியம் கொடுக்கிறார்.

மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டால் டில்லியில் யாருக்கும் மூர்ச்சை போட்டு விடாது!

என்று கூறுகிறார்!

ஏண்டா! இப்படிப் பயந்து, தொடை நடுங்கியாக இருக்கிறாய்! உயிர் ஒன்றும் போய்விடாது—என்று கோழைக்கு அச்சமற்றவன் கூறுவதிலே உள்ள 'ரசம்' இதிலே இருக்கிறதல்லவா? ஆம், அண்ணா, என்பாய். தம்பி. இதனினும் மேலான 'ரசமும்' இருக்கிறது, கேள்.

அமைச்சரவையின் அச்சத்தைப் போக்கி, தைரியமாகத் தமிழ் நாட்டுக்குத் தமிழ் கவர்னர் வேண்டும் என்று கேளுங்கள், டில்லியில் யாருக்கும் மூர்ச்சை போட்டுவிடாது—என்று வீரச்சூரணம் தருகிறாரல்லவா 'குமுதம்' ஆசிரியர், அவரைப் பார்த்து,

தமிழ் நாட்டுக்கு யார் கவர்னராவது என்பதைத் தீர்மானிக்கும் உரிமை ஏனய்யா மத்திய அரசாங்கத்திடம் இருக்கவேண்டும்? தமிழ் நாட்டு அரசிடமே அந்த உரிமை இருத்தலாகாதா? தமிழ் நாடு தனி நாடு என்ற நிலை ஏற்படுமானால் காவடி தூக்கும் கேவலம் எழாதல்லவா!—


என்று கூறிப்பார்! ஆசிரியருக்கு மூர்ச்சை போட்டுவிடும்!!

ஆசிரியர்கள் நிலையே இது என்றால், அமைச்சர்கள் அச்சம் கொள்வதிலும், ஆமையாவதிலும், ஊமையாவதிலும், ஆச்சரியப்படுவானேன்!

பிரச்சினை இதுதான், தம்பி. பலருக்கும் நன்றாகத் தெரிகிறது தமிழகத்தின் தாழ் நிலையும், அதற்கான சூழ்நிலையும். உள்ளமும் குமுறச் செய்கிறது. அதனை எடுத்துக் காட்டிப் பரிகாரம் கேட்பதிலே ஈடுபட்டால், 'உள்ளதும்' போய்

விடுமோ என்றுகூடச் சிலர் அஞ்சுகிருர்கள். மீண்டும் காங்கிரஸ் கட்சிக்கே வெற்றி என்று இந்தத் தேர்தல் முடிவு இருக்குமாஞல், 'மத்திய அரசாங்க'ப்பிடி, இரும்புப் பிடியாகி விடும் என்ற நிலைமை இருக்கிறது. இதனை நன்கு உணர்ந்துள்ள யாரும், நேரு பண்டிதரின் 'திக் விஜயத்தி'ஞல், தங்கள் நெஞ்சிலே மூண்டுள்ள நெருப்பை அணைத்துக் கொள்ள முடியாது. எரிகிற தழலில் எண்ணெய்தான், நேரு பண்டிதரின் பவனி!!

அண்ணன்,



16—12—1956

கடிதம் : 79

# காட்டாட்சி...

ஆமதாபாத்தில் குழப்பம்—பட்டேல் தினம்—'மகா குஜராத்' கிளர்ச்சி.

தம்பி!

பம்பாய்க்காரர் பட்டீல் காங்கிரசை கேரளத்தில் வெற்றி பெறச் செய்வதற்காக வென்றே, தனியானதோர் திட்டத்துடன் அனுப்பப்படுகிருராம். புறப்படுவதற்கு முன்பு பட்டீல், தமது திட்டத்தில் ஒரு துளி எடுத்துக் காட்டினர்—ஓட்டு வேட்டைக்கு இந்தத் தடவை சினிமாப்படம் பயன் படுத்தப்படுமாம்!

மிகப் பெரும்பாலான மக்கள் தற்குறிகளாக உள்ள இந்த நாட்டிலே, சினிமா மூலம் நல்லவிதமான பிரசாரம் நடத்தலாம்—படக்காட்சியைக் காணும்போது கண்ணுக்கும் கருத்துக்கும் குளிர்ச்சி ஏற்படும்—மக்கள் மகிழ்ந்திருக்கும் நேரமாகப் பார்த்து, காங்கிரசுக்கு 'ஓட்டு' தாருங்கள் என்று கேட்டுப் பெறுவது எளிது என்பது பட்டீல் வாதம்.

இந்தத் திட்டத்தை, நெடுந் தொலைவிலிருந்து, பட்டீல் வந்து தாஞ செய்துகாட்ட வேண்டும்—பனம் பள்ளியிடம் ஒரு படம் கொடுத்தால் போதாதா என்று கேட்கிருய், தெரிகிறது; ஆனுல், தம்பி! ஒரு விஷயம் உனக்குப் புரியவில்லையே, கேரளத்துக்குப் பட்டீல் தேவை என்பதற்காக அவர்

அனுப்பப்படுகிருர் என்று கூறப்படுகிறதே தவிர, உண்மை வேறு என்றுதான் நான் எண்ணவேண்டி இருக்கிறது.

பட்டீல், கேரளம் அனுப்பப்படுவதற்குக் காரணம், இங்கு அவர் மிக மிக அவசியமாகத் தேவை என்பதாலே அல்ல; பட்டீல் இந்தத் தேர்தலின்போது, பம்பாயில் இருக்க முடியாது என்பதாலே, அவர் கேரளம் அனுப்பப்படுகிருர் என்று எண்ண வேண்டி இருக்கிறது.

'தேர்தல் வேலை'யிலே இவர் புலி! கல்லிலே நார் உரிப்பார்! காயைக் கனியவைப்பார்! புதுப்புதுப் பிரசார முறைகளைக் கண்டறிவார்! யாராரை எப்படி எப்படி வளைய வைப்பது, எங்கெங்கு எப்படியெப்படி நெளிந்து கொடுப்பது, என்ற வித்தைகளிலே மெத்தச் சமர்த்தர் என்றெல்லாம் கூறப்படுகிறது இது உண்மை என்று வைத்துக்கொண்டால், தம்பி, இந்த வித்தையை அவர் தமது மாகாணத்தில் செய்து காட்டலாமே! ஏன், இங்கு வருகிருர்? தேர்தல் காலத்தில், பட்டீல் பம்பாய் பகுதியிலே இருப்பது, அவருக்கோ, காங்கிரசுக்கோ நல்லதல்ல! எனவேதான், பட்டீலைப் பிடித்துக் கேரளத்துக்கு அனுப்புகிருர்கள்.

நான் வேண்டுமென்றே கூறுகிறேன் என்று காங்கிரஸ்காரர் யாராவது பேசுவரேல், தம்பி, ஒரு கிழமையாக, பட்டீல் வாழ்கிற பகுதியில், காங்கிரஸ் படுகிற பாடுபற்றிப் பத்திரிகைகளிலே வருகிற செயல்களைப் படித்துக் காட்டு.

படம் தயாரித்துக் கொண்டு, பட்டீல், இங்கு வருவது இருக்கட்டும், இப்போது, அவர் மாகாணத்தில் காங்கிரஸ் பெரிய புள்ளிகள் படுகிறபாடு, படமாக்கப்பட்டால், பாரெல்லாம் பரிகாசம் செய்யும் போலல்லவா இருக்கிறது!!

பம்பாய்—ஆமதாபாத் அமளி அடங்கிவிட்டது என்றும், மக்கள் அறிவு பெற்றுவிட்டனர், காங்கிரஸ் ஆணைக்குக் கட்டுப்பட்டுவிட்டனர் என்றும், இருமொழி ராஜ்யத்தை ஏற்றுக்கொண்டுவிட்டனர் என்றும், மொரார்ஜி தேசாயைத் திணறவைத்தவர்கள், நேரு பண்டிதரைப் பேசவிடாதபடி செய்தவர்கள், இப்போது வெட்கித் தலைகுனிந்து கிடக்கிருர்கள் என்றும், தேசீய ஏடுகள் மிகத் தந்திரமாகப் பிரசாரம் செய்தன.

சாவன் பம்பாய் மாகாண முதலமைச்சரானுர், புதிய சூழ்நிலையே பூத்துவிட்டது, என்று பூரிப்புடன் அந்த ஏடுகள் எழுதின.



ஆனல், நீறுபூத்த நெருப்பென, சம்யுத்த மராட்டிய இயக்கமும் மகா குஜராத்தி இயக்கமும் இருந்து வருகின்றன!

அடுத்து வருகிற பொதுத் தேர்தலில், காங்கிரசை முறியடிப்பதற்கான ஏற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

அந்த இயக்கங்கள் ஓய்ந்து போயின, மாய்ந்துவிட்டன, என்று டில்லி மனப்பால் குடித்தது. இல்லை! இல்லை! எங்கள் இதயக் குமுறல் அடங்காது! எமது இலட்சியம் அழிந்து படாது! நாங்கள் எதற்கும் தயார்! என்று கூறுவது போல, கிளர்ச்சிகாரர்கள், ஒரு கிழமையாகக் கொதித்து எழுந்து விட்டுள்ளனர்.

பழையபடி, மந்திரிகள் மருள்கிருர்கள்! மோட்டார்கள் உடைபடுகின்றன! கதர்க்கொடிகள் தீக்கிரையாகின்றன! குல்லாய்களைக் கொளுத்துகிருர்கள்! குலை அறுபடும் நிலையில், தலை தப்பினல் தம்பிரான் புண்ணியம் என்று தலைவர்கள் ஒளிகிருர்கள். கருப்புக்கொடி காட்டுவதும், கண்டன முழக்கம் எழுப்புவதும், பொதுக் கூட்டங்களை நடைபெற வொட்டாது தடுப்பதுமான காரியம், தீவிரமாகச் செய்யப்படுகின்றன!

இந்த நிலைமை நீடிக்குமானல், தேர்தலின்போது ஓட்டுச்சாவடிக்குப் பட்டாளக் காவல் போட்டாக வேண்டும் போலிருக்கிறது!

காங்கிரஸ் அபேட்சகர்கள் தேர்தலில் வெற்றி பெறுவார்களா என்பது கிடக்கட்டும்; மக்களிடம் இவர்கள் சென்று, ஓட்டுக் கேட்டுவிட்டு மானம் அழியாமல், மரியாதை கெடாமல், ஊனம் ஏற்படாமல், வீடு திரும்புவார்களா என்பதே அல்லவா, பாவம், சந்தேகமாகிவிட்டது!

பட்டீல், மெத்த சமர்த்தர்தான்! இந்தச் சூழ்நிலையில், அவர் கேரளம் நாடுகிருர்!

தமிழ் நாடு தவிர, பிற எல்லா இடங்களிலும், மக்கள் தத்தமது மொழி, பண்பாடு, இவற்றின் அடிப்படையில் அமையும் உரிமை ஆகியவற்றுக்காகச் சிறிது வரம்புமீறிக் கூடக் காரியத்தில் ஈடுபட்டு வருகிருர்கள்.

இங்குதான், கோயிலில் கற்பூரம் கொளுத்துவது மூடப் பழக்கம், அது ஒழியவேண்டும்; அதை ஒழிப்பதுதான் எமக்குள்ள வேலை; என்ருலும், கற்பூரக்கடை வைத்திருக்கும் காத்த முத்து, நல்ல மனிதர், நாலைந்து குழந்தைகளுக்குத் தகப்பன், எனவே அவனுக்குப் பிழைப்புத் தரவேண்டும் என்பதற்காக, அவன் கடையிலே கற்பூரம் வாங்கிக் கோயி

லில் கொளுத்துங்கள்; என்று கூற முடிகிறது! மனம் இடம் தருகிறது!!

அங்கெல்லாம், அவ்விதமில்லை; எமது பிறப்புரிமையைப் பறித்திட உனக்குத் துணிவு பிறந்துவிட்டபோது, எனக்கும் உனக்கும் என்ன பந்தம் பாசம், ஒட்டு உறவு, சொந்தம், போ! போ!—என்று உரிமைக்காகக் கிளர்ச்சி நடத்துவோர், முழக்கமிடுகிறார்கள்!

அவர்கள் கையாண்டுவரும் முறைகள், தம்பி, எனக்குப் பிடிக்கவில்லை, ஆனால் அவர்கள் உரிமைக்காக எழுச்சி பெற்று பணியாற்றும் போக்கினைப் பாராட்டாமலிருக்க முடிகிறதா!!

அமைச்சர்கள் படுகிற அவதியைக் காணும்போது, பட்டீல் எப்படி அங்கு தேர்தலின்போது இருந்திட ஒப்புவார்! எனவேதான் கேரளம் வருகிறார்.

பலமான கல்வீச்சு

போலீஸ் சவுக்கிமீது தாக்குதல்

முனிசிபல் லாரிகள் தகனம்

போலீசாருக்குக் காயம்

விளக்குகள் உடைக்கப்பட்டன

பொதுக் கூட்டம் கலைக்கப்பட்டது

கைகலப்பிலே பலருக்குக் காயம்

கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு!

தம்பி, ஆமதாபாத் நகரில், டிசம்பர் 15-மாலை நடை பெற்ற நிகழ்ச்சிகளை, தலைப்புகளாகத் தந்திருக்கிறேன்; இவற்றைக் கொண்டு, நீ, மனக்கண்ணால் பார், நிகழ்ச்சியை.

கூட்டம் போட வந்துவிட்டார்களா, கூட்டம்?

அவ்வளவுக்குத் துணிந்துவிட்டார்களா, அக்ரமம்,

ஜீரணமாகிவிடும் என்ற எண்ணமோ!

என்று, சிறு சிறு பிரிவினர் உரையாடுவது, தெரிகிறதா!

கூட்டத்தில் பேசும் பிரமுகர், எந்த போலோ பாரத் மாதாகீ என்ற முழக்கமும், மகாத்மா காந்திக்கு ஜே என்ற முழக்கமும், கோடிக்கணக்கான மக்களைச் சொக்கிட வைத்



ததோ அதே முழக்கத்தின் துணையைத்தான் தேடுகிறார்; ஆனால் பாபம், பலிக்கவில்லை! அந்த முழக்கத்தை மிஞ்சும் வேறோர் முழக்கம் எழுகிறது.

மகாகுஜராத் ஜிந்தாபாத்!

சாவன் சர்க்கார் மூர்தாபாத்!

இந்த முழக்கம், கலவரத்துக்கு முன் அறிவிப்பாகிறது!

ஐயோ! கல்! கற்கள்! நாலா பக்கமும்!

தலை ஜாக்ரதை, கண் ஜாக்ரதை!

ஓடிவிடுவோம், ஓடிவிடுவோம்!

பாவிப் பயல்கள்! கொலைகாரப் பயல்கள்!

கூப்பிடு போலீசை, போலீசைக் கூப்பிடு!

ஓடு! ஓடு! பதுங்கிட இடம், தேடு! தேடு!

மக்கள் இவ்விதமெல்லாம் கூவிக்கொண்டு ஓடுவது தெரியுமே, தம்பி, எண்ணத்தேரில் ஏறிச் சென்று பார்த்தால்.

அன்று, பட்டேல் தினம்!

மக்களும், தலைவர்களும், அநேகமாக, அந்த இரும்பு மனிதரை மறந்தேவிட்டார்கள்! மராட்டியத்திலும், குஜராத்தி லும் அமளிநிலை இருப்பதைச் சரிப்படுத்த, எந்த ஆமதாபாத் நகரில் அவர் இட்டதுதான் சட்டம் என்ற நிலை இருந்து வந்ததோ அங்கே, படேல் தினம் கொண்டாடினால், மக்கள் பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நாலும் கலந்த பானம் சுவைப்பது போலாகி மாச்சரியத்தை மறப்பர், என்று எண்ணிக்கொண்டனர், மக்கள் இளித்த வாயர் என்ற எண்ணம்கொண்ட இறுமாப்பாளர்.

மகாகுஜராத் இயக்கத்தினருக்கு இந்தச் 'சூட்சமம்' புரிந்துவிட்டது; நீங்களென்ன படேல் தினம் கொண்டாடு வது! நாங்கள் நடத்துகிறோம் என்றுகூறி, காங்கிரசார் நடத்துவதற்கு முன்பு, மகாகுஜராத் ஆதரவாளர் சார்பில் கூட்டம் நடத்தினர்.

படேலின் அருமை பெருமைகளை எடுத்துரைத்தனர். 'பாரதம்' அவருடைய பணியின் பயனைப் பெற்றதைக் கூறினர்; பலன் பெற்ற கூட்டம் இன்று, தமது இலட்சியத் துக்கு, மகாகுஜராத்துக்கு இழைக்கும் கேடுபற்றிக் கண்டித் தனர்.

வேருேர் இடத்திலே காங்கிரஸ் ஏற்பாடு செய்த கூட்டம்.

இதைக் கண்டதும், ஆத்திரம் பிறந்தது—ஆர்ப்பரிப்பு எழும்பிற்று—அமளி மூண்டது!

யாரோ இரண்டொரு காலிகள் செயல் என்று, தேசீய ஏடுகளாலேயே இதனை அலட்சியப்படுத்திவிட முடியவில்லை. கல்வீச்சு கண்டிக்கத்தக்க செயல்; ஐயமில்லை! ஆனுல் கல் வீச்சிலே ஈடுபட்டவர்கள், விரல்விட்டு எண்ணத்தக்க சிலர் அல்ல.

**மாணிக்கசௌக் பிரதேசத்தில் 3000 பேர்கள் கற்களை வீசினர்!**

என்று 'மித்திரன்' தெரிவிக்கிறது!

மூவாயிரம் பேர் கல்வீச்சில் ஈடுபட்டால், எத்துணை அலங்கோலம் ஏற்பட்டிருக்கும், எவ்வளவு அமளி மூண்டு விட்டிருக்கும்; எண்ணிப் பார்க்கும்போதே தம்பி, அந்தக் கண்ருவிக் காட்சி தெரிகிறதல்லவா?

போலீசார் 14 கண்ணீர் வாயு வெடிகளை உபயோகித்தனர்.

போலீஸ்மீது சோடாபுட்டிகள் வீசப்பட்டன.

கூட்டத்தைக் கலைக்க போலீஸ் தடியடி நடத்திற்று!

போலீசைத் தாக்கிட ஜனத்திரள் முனைந்தது.

மொத்தம் 30-போலீசாருக்கு மேல், காயமுற்றனர்.

நாலு ஆபீசர்களுக்குப் பலமான தாக்குதல்.

போலீஸ் லாரிகள் ஜரூராயின!

போக்குவரத்துக்கு ஜனக்கூட்டம் தடைகளைப் போட்டுவிட்டன!

முனிசிபல் பஸ்கள் கொளுத்தப்பட்டன.

தம்பி! பெரியதோர் அமளி நடந்திருக்கிறது. மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல், தேசீய ஏடுகள் தகவல் களைத் தருகின்றன!

வெறும் காலிகள் சேட்டை அல்ல இது! பொறுப்பு உணர்ந்தவர்களுக்கே, ஆத்திரம் பொங்கி எழத்தக்க



விதத்தில் அநீதி இழைக்கப்பட்டால், காலித்தனமேகூட அவர்களுக்குக் கரும்பாக இனிக்கிறதுபோலும்!

எந்த அளவுக்கு, அங்கு காங்கிரசாட்சியின்மீது கசப்பு இருந்தால், கோபம் கொதித்தால், தம்பி இது நடந்திருக்கும் என்று எண்ணிப்பார்.

> "இன்று மக்கள் தெருக்களில் காந்தி குல்லாய் அணிந்து சென்றவர்களைக் குல்லாய்களை அப்புறப்படுத்தும்படி நிர்ப்பந்தித்தனர்."

தம்பி! நிர்ப்பந்தித்தனர் என்ற நாசுக்கான பதத்துக்குப் பின்னுலே தெரியும் நானுவிதமான நடவடிக்கைகளைக் கூறவாவேண்டும்!

ஆமதாபாத் காட்டியதைவிடவா 'காங்கிரஸ் பக்தி'யை, வேறு நகரம் காட்டமுடியும்!! அங்கு, இது! எல்லாம் எதன் பொருட்டு? மொழிவழி அரசு எனும் உரிமை அழிக்கப்படுவதை எதிர்த்து!

> இங்குமட்டுமே தேவிகுளம், பீர்மேடு பறிகொடுத்திடவும், ஐயோ! இழந்தோமே என்று கதறினுல், குளமாவது, மேடாவது என்று கேலி பேசிடவும் ஒரு முதலமைச்சரால் முடியும். காரணம் என்ன? அவர்தான் தமிழரின் புதியரட்சகர்! ஒரே ரட்சகர்! ஒப்பற்ற ரட்சகர்!!—என்று நெஞ்சு நெக்குருகப் பேசும் பேரியக்கம் இருக்கிறது.

ஆமதாபாத்தில் காங்கிரசார் நடத்திய படேல் தினக் கூட்டம் காரணமாக இந்த அமளி ஏற்பட்டு, பதினைந்தே நிமிஷத்தில் கூட்டம் கலைந்தது. வேருேரிடத்திலே மகா குஜராத் இயக்கம் நடத்திய 'படேல் தினம்' இரவு நெடு நேரம்வரையில் நிம்மதியாக நடைபெற்றது.

டிசம்பர் 2ந்தேதிதான் ஆமதாபாத் ஜில்லா போலீஸ் சூபரின்டெண்டு, நகரில் குற்றங்கள் பெரும் அளவுக்குக் குறைந்துவிட்டன, என்று அறிக்கை விடுத்தார்.

எனவே, காலிகளின் சேட்டையே இவ்வளவு அமளிக்குக் காரணம் என்று கூறுவதில் பொருள் இல்லை. வழக்கமாக இதுபோல் தத்துவ விளக்கம் தரும் ஏடுகள் கூட, இம்முறை அதுபோல் கூறிடக் காணுேம்.

படேல் தினம் நடத்திப் 'படாத பாடுபட்ட' காங்கிரசார் அதிகமாக வருத்தப்படுவதற்கில்லை; ஏனெனில் இதைவிட

'மோசமான' நிலைமை காங்கிரஸ் அமைச்சராகப் பணியாற்றும் ஒரு அம்மையாருக்கு ஏற்பட்டது. அது டிசம்பர் 14ல்.

இந்துமதி சிமன்லால் சமூக நலமந்திரி! மாதர்குல நலனுக்காக, துவக்கப்பட்ட ஜோதி சங்கத்தின் கூட்டத்தில் கலந்துகொள்ள அம்மையார் சென்றார், கிளர்ச்சிக்காரர்கள் வளைத்துக்கொண்டனர்.

அமைச்சரின் மோட்டார் 'பன்ச்சர்' செய்யப்பட்டதாம்! நடந்தே சென்றார்களாம் அமைச்சர்! வழிநெடுக, ஒரே கூச்சல், கேலி, கண்டனம், இடையிடையே கல்வீச்சு! கலவரத்தில் ஈடுபட்டவர் தொகை 2000 என்று, பம்பாய் 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகை எழுதுகிறது.

அமைச்சரின் விலாவிலும் முதுகிலும் அடியாம்! அவருக்குத் துணைசென்ற பத்து பன்னிரண்டு தாய்மார்களுக்கும் தாக்குதலாம்! பெண்களைப் பாதுகாக்கச் சென்ற போலீசாரில் ஐவருக்குப் பலமான காயமாம்! இத்தனைக்கும் போலீசார், கண்ணீர்ப்புகைக் குண்டு வீசிப் பார்த்தனர், கல்வீச்சின் முன்பு, அது போதுமான பலன் தந்ததாகத் தெரியவில்லை!

கார் கெடுக்கப்பட்டு விட்டதால் கால்நடையாகச் சென்றாரல்லவா, அம்மையார்; வழியில் பாவம், உருட்டிக் கீழேகூடத் தள்ளிவிட்டார்களாம்!

இவ்வளவு சங்கடத்தையும் சமாளித்துக்கொண்டு சங்கம் சென்றார். அங்கு என்ன நடந்தது தெரியுமா, தம்பி! உள்ளே நுழையாதே! என்று முழக்கமிட்டனர். யார்? பெண்கள்! மகா குஜராத் ஆதரவாளர்.

புதிய முதலமைச்சர் சவான் மட்டும் தப்பினாரா? இல்லை, தம்பி, இல்லை.

ஆமதாபாத் காங்கிரஸ் மாளிகையில், ஊழியர்கள் கூட்டம் நடத்த வந்தார் முதலமைச்சர்.

வருகிற வழியிலேயே கலகம் ஆரம்பமாகிவிட்டது; கல்வீச்சு பலமாகிவிட்டது; கருப்புக்கொடிகள் ஏராளம்; கட்டுக்கு அடங்கும் போக்கு இல்லை; போலீஸ் நடவடிக்கை பலன்தரவில்லை; ஆர்ப்பாட்டக்காரர் அமளிநிலை உண்டாக்கி விட்டனர். இது காலையில்.

மாலையிலோ, காங்கிரஸ் மாளிகையையே ஆர்ப்பாட்டக்காரர் முற்றுகையிட்டு விட்டனர். போலீஸ் வளையம், அவர்களைத் தடுத்தது, ஆர்ப்பாட்டக்காரர் வளையத்தைப் பிளந்துகொண்டு முன்னேறினர், தடியடி, கண்ணீர்ப்புகைக் குண்டு



வீச்சு நடத்திப்பார்த்தனர்—பலன் கிட்டவில்லை. இடி முழக்கம் போல,

சவான்! திரும்பிப்போ!

மகா குஜராத் வேண்டும்!

என்றனர் மக்கள். முதலமைச்சரின் முகம், படமாக்கப்பட்டதோ, என்னவோ! படமாக்கப்பட்டிருந்தாலும், பட்டில் அதையா காட்டுவார், மக்களிடம்!

'மாஜி'யையும் சும்மாவிடவில்லை' இந்த 'வம்புக்காரர்கள்.'

அவர் இந்தத் தொல்லையே வேண்டாமென்று, பம்பாய்ப் பிரச்சினைக்குத் தலைமுழுக்குப் போட்டுவிட்டு, நேருவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டார்! போகட்டும் என்று விட்டுவிட்டார்களா?

அவர் ஒரு கூட்டத்தில் பேசினார்—பேச முயன்றார்.

பெருங்கூச்சல் எழுப்பினர், பேசவிடாதபடி தடுத்தனர்.

இதற்கெல்லாம் அஞ்சுபவன் நான் அல்ல, என்றார் மொரார்ஜி.

எதற்கும் நாங்கள் அஞ்சுபவர் அல்ல, என்று கூறுவது போல, மக்கள் தொடர்ந்து முழக்கமிட்டனர்.

மொரார்ஜி, கடுமொழி புகன்று பார்த்தார்—போலீஸ் நடவடிக்கை எடுத்தது—குழப்பமோ நிற்கவில்லை.

இந்த நிகழ்ச்சி, 'பரோடாவில்' டிசம்பர் 16-ல் நடைபெற்றது.

தம்பி! குஜராத்திகள் எத்துணை கொந்தளிப்பாக இருக்கிறார்கள்—மொழிப்பற்றும், அதனுடன் தொடர்பாக உள்ள உரிமை குறித்த ஆர்வமும், அந்த மக்களுக்கு 'எத்தனை தேசியம்' பேசப்பட்டாலும், 'பாரதீயம்' உபதேசிக்கப்பட்டாலும், குலைவதாகவோ, குறைவதாகவோ காணோம் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

குஜராத்திகள், 'காங்கிரஸ் வளர' கோடி கோடியாகக் கொட்டிக் கொடுத்தவர்கள்.

காந்தி மகாத்மாவை கோயில் கட்டிக் கும்பிடும் போக்கினர்.

'மகா குஜராத்' என்ற தேசிய எழுச்சியின் முன்பு, இதெல்லாம் இருந்த இடம் தெரியாமல் போகிறது.

இத்தனைக்கும், தம்பி, குஜராத்துக்கு, தமிழகத்துக்கு உள்ளதுபோன்ற உலகப் புகழ் பெற்ற வரலாறு கிடையாது. எனினும் அங்கே அந்த அளவுக்கு எழுச்சி இருக்கிறது! இங்கு, 'தமிழ்நாடு' என்ற பெயர் இல்லாவிட்டால் என்ன! குத்துகிறதா, குடைகிறதா'—என்று கேட்கும் காமராஜர் பவனி வருகிறார்.

தம்பி! இந்தக் கருத்துமட்டுமல்ல நான் உன்னைக் காணச் சொல்வது, நாட்டுக்கு எடுத்துக் கூறச் சொல்வது.

அங்கெல்லாம், மொழிக்கிளர்ச்சி எவ்விதமான கோர உருவம் எடுத்திருக்கிறது, எவ்வளவு அமைதியுடன், அற நெறி நின்று இங்கு பணியாற்றுகிறோம்—இதற்கு இங்குள்ள காங்கிரஸ் அரசு, எவ்வளவு சுறுசுறுப்புடன் அடக்கு முறையை அவிழ்த்துவிடுகிறது. இதை எண்ணினேன்—பொது மக்களுக்கு அறிவிக்க, ஒரு துண்டு வெளியீடு அச்சிட்டு வழங்கினால் என்ன என்று தோன்றிற்று—அது இதோ—இதை அச்சேற்றி, இல்லந்தோறும் வழங்கும் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளத்தான், தம்பி, நீ இருக்கிறாயே, எனக்கென்ன கவலை.

# காட்டாட்சி

மராட்டியம்
குஜராத் — **எங்கும் கலகம்**
வங்கம்

மந்திரிகளைத் தாக்கினர்

நேருவை மடக்கினர்

போலீசை அடித்தனர்

கார்களைக் கொளுத்தினர்.

கதர்க் குல்லாயைக் கொளுத்தினர்!

நேரு படத்தை உடைத்தனர்!

எல்லாம்

மொழி உரிமைக்கு.



அன்புடையோரே!

அறிவாளரே!

இங்கு நாங்கள்

உரிமை கேட்டோம்,

அமைதியாக

பலாத்காரமின்றி.

இங்கு காங்கிரஸ்

தடியால் தாக்கி

துப்பாக்கியால் சுட்டு

அடக்குமுறை தர்பார் நடத்திற்று.

ஏன் என்று கேட்கமாட்டீர்களா?

நீதிக்காக வாதாடமாட்டீர்களா?

கொடுமைக்கு ஆளானோர்

உங்கள் இனத்தவர்!

உங்கள் நாட்டவர்!

உங்கள்

தொண்டர்!

அவர்களிடம் ஆதரவுகாட்டுவது

அடக்குமுறையைக் கண்டிப்பதாகும்.

காங்கிரசை

ஆதரிப்பது

காட்டாட்சிக்கு

வழிகாட்டும்.

பட்டீல் கட்சியில் பணம் படைத்தோர் ஏராளம். பல இலட்சம் மிக இலேசாகத் திரட்ட வழி இருக்கிறது. படம் எடுக்கலாம், கட்டணமின்றிக் காட்டலாம்! உன்னால் முடியுமா, என்னால் முடியுமா? நாம், நம்மாலான முறையில், நாட்டுக்கு உண்மையை எடுத்துச் சொல்வோம். ஏழைக்கு ஏற்ற எள் உருண்டை என்பார்களே, அதுபோல, இந்தத் துண்டு வெளியீடு என்று எண்ணிக்கொள்ளேன்.

தம்பி! இதுபோன்ற துண்டு வெளியீடுகளை, வீடுதோறும் வழங்கு—தூய உள்ளம் படைத்தோர்; உண்மைக்காக வாதாட முன்வந்தே தீருவார்கள். காட்டாட்சியால் நாட்டுக்குக் கேடு என்ற பேருண்மையை உணர்ந்து, அதற்கு ஏற்ப, பொதுத் தேர்தலின்போது, தமது கடமையைச் செய்வார்கள்.

அன்பன்,

23—12—56

கடிதம்: 80

# ஓட்டுச்சாவடி போகுமுன்பு...

பம்பாயில் சவானுக்கு எதிர்ப்பு—

தமிழர் தாழ்ந்த நிலை—வடக்கின் வளர்ச்சி.

தம்பி!

புதுடில்லியிலிருந்து கிளம்பி வந்த மொராஜி தேசாய், பூவிருந்தவல்லியிலே, காங்கிரஸ் தேர்தல் பிரசாரத்தைத் துவக்கி வைத்தார்—ஞாயிறன்று!

இந்தத் திருநாளுக்குத் துணைநின்றனர். ஓ. வி. அழகேசன், போன்றோர்.

உள்ளூர் அமைச்சர்கள் உற்சவத்திலே கலந்து கொண்டனர்.

ஒரே ஒரு குறைதான்; மக்களுக்கு உற்சாகம் எழவில்லை!!

முதல் காரணம், முதன் முதலாக இவர்கள் அழைத்து வந்தது, யாரை, கவனித்தாயா? மலடியைக்கொண்டு, பிள்ளைப் பேறின் சுகவழி பற்றிய போதனை பெறுவது போல, மங்கலநாண் இழந்தவளைக்கொண்டு, கட்டுக் கழுத்தினளுக்கு மங்கள ஸ்நானம் செய்விப்பது என்பார்களே, அதுபோல, பம்பாய் மாநிலத்தில், மக்களின் சீற்றத்தால் தாக்கப்பட்டு, மேற்கொண்டு அங்கே முதலமைச்சராக இருக்கமுடியாத நிலைபெற்று, நேரு பண்டிதருடைய தயவினாலே, டில்லியில் வேலைதேடிக்கொண்டு ஓடிப்போன மொரார்ஜி தேசாயை, அழைத்துவந்தார்கள்!

பாபம், அவர், ஆமதாபாத்தில் பட்ட அல்லலையும், பம்பாயில் பதறியதையும், மக்கள் பத்திரிகை வாயிலாகப் பார்த்திருக்கிறார்கள்.

பேச வந்தார் இந்தப் பெரியவர்; ஆமதாபாத்திலே, ஆத்திரமிகுந்த மக்கள், இவர் எவ்வளவோ கெஞ்சிக் கூத்தாடியும், மக்களுக்குத் துரோகம் செய்துவிட்ட மகானுபாவரே! போதும் உமது பேச்சு! நிறுத்திக்கொள்ளும்! என்று பெருங் கூச்சலிட்டு, இவரைப் பேச விடாமலே தடுத்துவிட்டனர். பெரிய கலகம் நேரிட்டது. பல நாள் பட்டினி கிடந்து, பரிதாபத்தை ஊட்டிப்பார்த்தார்; பிறகாவது பேச விடுவார்கள் என்று, அப்போதும் மக்கள், நீ என்ன மாயா ஜாலம், மகேந்திர ஜாலம் செய்தாலும், அதற்கெல்லாம் மயங்கப் போவதில்லை என்று கண்டிப்பாகக் கூறிவிட்டனர். பேச, மேடை ஏறினார், கலகம்தான் மீண்டும்!

எந்த மாகாணத்தில் இவர் தேசீய விடுதலைப் போராட்டக் காலத்திலே, வீரர் என்றும் தீரர் என்றும் தியாகி என்றும் கர்மயோகி என்றும் புகழ்ந்துரைக்கப் பட்டாரோ, அங்கு இவருடைய பேச்சு, செல்லாக்காசு ஆகிவிட்டது—இவர் வருகிறார் பூவிருந்தவல்லிக்கு!!

பாரததேசம் என்பது ஒன்று—இதிலே வடக்கு என்றும், தெற்கு என்றும், மத்திய சர்க்கார் என்றும், மாநில சர்க்கார் என்றும், இந்த மொழி என்றும், அந்த மொழி என்றும் பேசிப் பிளவு உண்டாக்கக்கூடாது என்று மொரார்ஜி 'தேசீய மாமந்திரம்' உபதேசித்தார்; அவருடைய மாகாணத்திலே, அவரை இந்த உபதேசத்தைப் பேசக்கூட விடவில்லை; விரட்டி அடித்தனர், வீறுகொண்ட மக்கள்! அங்கு அல்லற்பட்டவரை அழைத்து வந்து இங்கு விழா நடத்திக் காட்டினார் அமைச்சர் பக்தவத்சலம்!! பரிதாபம்! ஆரம்பமே அழுது வடிவதாக அமைந்தது பற்றி அவருடைய 'ஆப்த' நண்பர்களேகூட ஆயாசப்பட்டுக் கொண்டார்களாம்!!

முதலமைச்சருடன் சேர்ந்து மொத்தம் நான்கு மந்திரிகள், தம்பி! டில்லி மந்திரி ஒருவர்—அவர்தான் மொரார்ஜி—குட்டி மந்திரி ஒருவர்— அரியலூர் அழகேசன் அவர்கள்!

எல்லோருமே அன்று வெளுத்து வாங்கிவிட்டார்களாம் போயேன், நமது கழகத்தை,

"கூட்டம் கூடும் அவர்களுக்கு—கும்பகோணம் மாமாங்கத்துக்குக் கூடத்தான் கூடுகிறது"—என்றாராம், ஒரு மேதை!! இவர்களுக்குக் கூட்டம் வராததாலே, இந்தப் பேச்சுப் பேசுகிறார்கள், வெட்கமின்றி; பிறருக்குப் பெரிய



கூட்டம் கூடினால், 'மாமாங்கக் கூட்டம்' என்று கேலி பேசுகிறார்களே, இவர்களுடைய நேரு வருகிறபோது, கூடும் கூட்டமும், மாமாங்கந்தானா? அப்போது பார், வாயை! ஜன சமுத்திரம்! மக்கள் வெள்ளம்! இலட்சோப இலட்சம்! என்றெல்லாம் அப்போது பெருமை அடித்துக் கொள்கிறார்களே!! —என்று கூட்டத்தில் இருந்த ஒருவர் பேசிக் கொண்டதாகக் கேள்விப்பட்டேன்.

நொந்த உள்ளம் கொண்டோர் தம்பி! பேசுவது, வேகாததைத் தின்றுவிட்டு வேதனைப்படுபவர் எடுத்திடும் 'வாந்தி' போலத்தான்- நாற்றமும் குழப்பமும் அவ்வளவு இருக்கும். எனவேதான், "கூட்டம் கூடுகிறதாம் கூட்டம்! என்ன கூட்டம்! மகாமகத்துக்குக்கூடத்தான் கூடுகிறது" என்று பேசினர். போகட்டும், எப்படியோ ஒன்று தம்மை நிந்திப்பதால், நொந்து கிடக்கும் அவர்கள் உள்ளத்துக்குச் சிறிதளவு சாந்தி ஏற்படட்டுமே, நமக்கென்ன நஷ்டம்!

மொரார்ஜி, மாகாணப் பிரிவினை உணர்ச்சி—வடக்கு தெற்கு என்ற பேதம் கூடாது, என்று இங்கு உபதேசம் செய்து கொண்டிருக்கிறார்-அதே போது பம்பாய் மாகாண முதலமைச்சர் சவான், திணறித் திண்டாடிப் போகிறார். மொரார்ஜி இங்கு தந்த உபதேசம் போலவே சாவன் அங்கு உபதேசம் செய்யப் புறப்பட்டார். மராட்டிய மக்கள் இதற்கு இடந்தரவில்லை!

சம்யுக்த மராட்டியம் வேண்டும்!

சாவன், திரும்பிப்போ!

என்ற முழக்கம் இடியென்று கிளம்பிற்று!

இது சரியா?

இது முறையா?

இது தேசீயம் ஆகுமா?

என்றெல்லாம் சாவன், இறைஞ்சுகிறார்-மராட்டிய மக்களோ,

எமது உரிமையை இழக்கமாட்டோம்!

எமக்கு சம்யுத்த மராட்டியம் வேண்டும்!

என்று முழக்கமிட்டிருக்கிறார்கள்.

கருப்புக் கொடிகளைக் காட்டி, ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள்.

முதலமைச்சர் கலந்துகொள்ளும் கூட்டமாதலால், போலீஸ் படை வரிசையும் ஏராளம், ஆட்சிக்குத் துதிபாடகர்களாக உள்ளோரும் நிரம்ப! எனினும், உரிமை முழக்கத்தின் முன்பு எந்தச் சக்தியும் நிமிர்ந்து நின்றிட முடியவில்லை! சாவன் பாடு, திண்டாட்டமாகிவிட்டது. போற்றித் திரு அகவல் போதுமான தாகிவிடவில்லை!

இந்த 'பம்பாய்' மாநிலத்திலிருந்து வந்த மொரார்ஜி தான் பூவிருந்தவல்லியிலே 'ஒற்றுமை'- 'தேசீயம்' என்பன பற்றித் திருப்பல்லாண்டு பாடி இருக்கிறார்,—ஆங்கிலத்தில்; அதனை அவசரத் தமிழாக்கித் தந்திருக்கிறார், அமைச்சர் பக்தவத்சலனார்.

வடக்கே உள்ள மக்கள் ஏதோ, மாகாணப்பற்று, மொழிப் பற்று, ஏதுமற்று 'பாரதம்' என்ற பாசத்துக்கே கட்டுப்பட்டுப் போய்விட்டது போலவும், இங்கே மட்டுமே அதுபோன்ற ஓர் உணர்ச்சி ஏற்படுத்தப்பட்டு இருப்பது போலவும், அதுவும் நாம் நடத்துகிற பிரசாரம், விஷமத்தனத்தையும் விபரீதத்தையும் இங்கு மூட்டிவிட்டது போலவும், அந்த நஞ்சு போகமொரார்ஜி போன்றார் வந்து பேசுவது போலவும் ஒரு நாடகம் ஆடப்படுகிறது; தம்பி, உண்மை நிலைமையோ வேறு, அதனை நீயும் அறிவாய், நம் நாட்டிலுள்ள காங்கிரசாரும் அறிவர்.

எந்த மொழிக்காரரும், மாநிலக்காரரும், காங்கிரஸ் என்பதற்காகக் கட்டுப்பட்டு, தமது உரிமைகளை இழந்து விடத் தயாரில் இல்லை! 'கண் கண்ட கடவுள்' என்றும் 'பார் புகழ் தலைவர்' என்றும் பிற நேரங்களிலே கொண்டாடும் நேரு பண்டிதராக இருப்பினும், மொழி உரிமை, மாநில உரிமை என்ற பிரச்சினைகள் எழும்போது, பண்டிதரையே பதறி ஓடச் செய்கிறார்கள். காந்தி படமானாலும் நேரு உருவச் சிலையானாலும், கதர்ச் சட்டையானாலும் குல்லாயானாலும், கொளுத்துகிறார்கள், உடைத்துத் தூளாக்குகிறார்கள். துப்பாக்கிக் குண்டுகளுக்கு அஞ்ச மறுக்கிறார்கள்! இரத்தத்தைச் சந்தனக் குழம்பென எண்ணிக் கொள்ளுகிறார்கள்.

அமைச்சர்கள் அஞ்சி ஓடுகிறார்கள்! ஆமதாபாத்தில், அகில உலகப் புகழ் பெற்ற நேரு பண்டிதர், 20-நிமிடம் முயன்று பார்த்தார், கெஞ்சிப் பேசினார், கோபம் மிஞ்சிடப் பேசினார், கதை பேசிப் பார்த்தார், எதுவும் பலன் தரவில்லை!

எங்கள் உரிமை

எங்கள் குஜராத்!

என்றே எக்காளமிட்டனர், குஜராத்திகள்!



வங்கமும்—பீகாரும் இணையும் என்று கூறினார், வங்க முதலமைச்சர் டாக்டர் ராய்! இஃதன்றோ தேசீய — இது வன்றோ பாரதப் பண்பாடு என்று அங்கிருந்து மகிழ்ந்து வாழ்த்தினார் நேரு பண்டிதர். இங்கிருந்தபடியே ஆசிகூறினார் ஆச்சாரியார்! ஆனால், வங்க மக்கள் செய்தது என்ன?

கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பினர்—டாக்டர் ராய்மீது! அவர் 'தேசீய ஒற்றுமை' பேசித்தான் பார்த்தார்! ''நான் தெரியவில்லையா? உங்கள் தலைவன்! வங்கத்துக்கு வாழ்வளிப்பவன்! உங்கள் சுகமே என் சுகம் என்று எண்ணிப் பணியாற்றும் ஊழியன்!'' என்று ஏதேதோ பேசினார்! அவருடைய பேச்சுக்குப் பக்க பலமாகப் போலீசும் பட்டாளமும் நின்றது! எனினும் சிங்கக் குணம் படைத்த வங்க மக்கள், 'இணைப்பு' எமக்கு வேண்டாம் என்று தீர்ப்பளித்தனர்—டாக்டர் ராயைக் குற்றவாளிக் கூண்டிலே ஏற்றினர்—'தள்ளாத வயதிலே, இந்த எதிர்ப்புத் தருகிறீர்களே, தகுமா?'' என்றார். 'எதிர்ப்பு உம்மீது அல்ல; எம்மைத் துச்சமாக மதித்த உமது போக்கினை எதிர்க்கிறோம், என்றனர் வங்க மக்கள்! ஆர்ப்பரிப்பு அமளியாற்று! அடக்கு முறை, அமளியைக் காட்டுத் தீயாக்கிற்று! வங்கமும் பீகாரும் இணைந்து ஒரு பேரரசாகும் என்று பேசிவிட்டு வந்த டாக்டரே, பிறகு, இணைப்பு இல்லை! வங்கம் வங்கமாகவேஇருக்கும்! என்று அறிவித்தார்! மக்கள் வெற்றி பெற்றனர்.

இதுபோல, வடக்கே, ஒவ்வொரு மாநிலத்தாரும் தத்தமது உரிமையைப் பாதுகாத்துக் கொண்ட பிறகு, தேசீயக் காலட்சேபம் செய்கிறார்கள்!

விருந்தினை முடித்துக்கொண்டு, பட்டுப்பட்டாடை அணிந்துகொண்டு, பீடத்தில் அமர்ந்து, விரலில் உள்ள வைர மோதிரத்தைப் பளபளப்பாக்கிக் கொண்ட பிறகு,

வாழ்வாவது மாயம்

செல்வம் ஒரு பிசாசு

என்று வேதாந்தம் பேசும், பாகவதரைப் பார்க்கிறோமல்லவா, அதுபோல் வடக்கே உள்ள தலைவர்கள் இங்கு வந்து நமக்குப் பேசுகிறார்கள்—வேறென்ன!

தம்பி! வடக்கே உள்ள மக்கள், தத்தமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதிலே, தவறுவதில்லை. அதற்கான உரிமைக் கிளர்ச்சிகளிலே மும்முரமாக ஈடுபட்டுள்ளனர் என்பது மட்டுமல்ல, அந்தக் கிளர்ச்சிகளில்,

வெறுக்கத்தக்க பலாத்காரத்தை,

கண்டிக்கத்தக்க காலித்தனத்தை,

புகுத்துகிறார்கள்!

இங்கு, நாம் நமது மாநில உரிமைக்காக, மொழி உரிமைக்காக நடத்துவது இன்னும் கிளர்ச்சி உருவம்கூட எடுக்கவில்லை! நியாயத்தை எடுத்துரைக்கிறோம்; காரணங்களைக் காட்டுகிறோம்; நீதி கோருகிறோம்; இதற்கே, எவ்வளவு இடி, இழிசொல்! எத்துணை அடக்கு முறை; தாக்குதல்!

நேருபண்டிதர் சிலையை உடைக்கும் அளவுக்கு வடக்கே காலித்தனம் நடக்கிறது, அதற்குத் துப்பாக்கி தூக்குகிறது, அங்கு உள்ள துரைத்தனம். இங்கு நாம், பொது மக்களிடம் முறையிட்டுக் கொள்கிறோம், அதற்கே, துப்பாக்கி தூரத்துகிறது!

இந்த இலட்சணத்திலே, மொரார்ஜிபாயை அழைத்துக் கொண்டு வருகிறார்கள் இங்குள்ள அமைச்சர்கள், நமக்கு 'தேசீய' பாடம் போதிக்க! வெட்கம்! வெட்கம்! என்று கூறுவதன்றி, வேறென்ன கூறுவது?

நான் பன்னிப் பன்னிக் கூறி வருகிறேன், 'இல்லாத ஒன்றை, இயற்கையாக எழாத ஒன்றினை, எத்தனை பெரிய தலைவர்களானாலும், அறிவாளர்களாயினும், ஆற்றலரசர்களாயினும் கூடி முயற்சித்தாலும், புகுத்தி நிலை நிறுத்திவிட முடியாது' என்பதனை. காங்கிரஸ் நண்பர்கள் ஏதோ 'தேசீய ஒற்றுமை' என்ற உணர்ச்சி ஏற்பட்டுவிட்டது போலவும், அதனை நாம் பாழாக்குவது போலவும் எண்ணிக்கொண்டு வேதனைப்படுகிறார்கள், வெகுண்டெழுகிறார்களேயன்றி, இயற்கையாக எழ முடியாத ஓர் உணர்ச்சியை இட்டுக்கட்ட முயற்சிப்பது தவறு என்பதை அறிந்து திருந்த அஞ்சுகிறார்கள். தம்பி! வெண்ணெய்ச் சட்டியை வெளியே வைத்திருந்தால் பூனை களவாடித்தின்றுவிடும் என்று பயந்துகொண்டு, வீட்டுக்கரசி, அந்த வெண்ணெய்ச் சட்டியை எடுத்து அடுப்புக்குள்ளே செருகி வைத்தால் என்ன ஆகும்!! 'தேசீயம்' பேசுவோர், நம்மீது குறைபட்டுக் கொள்கிறார்களேயன்றி, இந்தப் பேருண்மையை உணர மறுக்கிறார்கள்.

எத்தனை எத்தனையோ நெருக்கடிகள், தாக்குதல்கள், இடிகள், இழி நிலைகள் ஆகியவற்றினுக்குப் பிறகும், தமிழன் என்ற ஓர் உணர்ச்சி இன்றும் மகிழத்தக்க அளவுக்கும், நம்பிக்கை தரத்தக்க வகையிலும், மின்னிக்கொண்டு இருக்கிறது என்றால், தம்பி! இந்த உணர்ச்சியைப் பெற, எத்தனை



எத்தனை நூற்றாண்டுகள், எவ்வளவு பெரும் பெரும் அறிவாளர்கள், என்னென்ன வகையினாலே பணியாற்றினர், தெரியுமா! அவ்வளவையும் அரை நூற்றாண்டில் அழித்துவிட முடியும் என்று எண்ணிக் கொண்டனரே, அதிலேதான் தவறு இருக்கிறதே தவிர, நம்மீது என்ன குற்றம்?

சிலம்பு ஒலிக்கவில்லை, சிந்தாமணி மின்னிடவில்லை, அகம் இல்லை, புறம் இல்லை, தொல் காப்பியம் ஏதுமில்லை' எனினும், குஜராத்தி தன் மொழிக்கு ஏற்றமும், உரிய இடமும், தனித்தன்மையும், இவைதமைக் கெடுத்திடாத தனிக் கொற்றமும் தேவை என்று கேட்கலாமாம், கேட்பதுடன் விடாது கேடுபல நேரிடுமே என்றுகூட எண்ணிடாமல், அமைச்சர்களை விரட்டலாமாம், அமளி பலவற்றினை மூட்டிவிடலாமாம், இங்கு நாம் மட்டும், அருந்தமிழ் மரபு காத்திட 'உம்' மென்றாலும் 'இம்'மென்றாலும் தேசீயம் கெடுமாம், பாரதீயம் பாழ்படுமாம், நாடு நலியுமாம்! என்ன அறிவீனம்!! என்று சீறிக் கேட்பதா? என்னே உமது ஓரவஞ்சனை? என்று, துக்கத்துடன் கேட்பதா? நம்மை எவ்வளவு, ஏது மறியாதார், இனப்பற்று இல்லாதார், மரபு காத்திடும் வழி அறியாதார், என்று எண்ணிக் கொண்டிருந்தால், மொரார்ஜிகளைக் கொண்டுவந்து இங்கு பேசச் சொல்வார்கள் என்பதை எண்ணிப்பார், தம்பி, எண்ணச் சொல்லிப் பார், காங்கிரஸ் நண்பர்களை.

பூவிருந்த வல்லியிலே மொரார்ஜி வந்து பேசிவிட்டுச் சென்றார்; என் மாநிலத்திலேகூட இந்த அளவுக்கு எனக்கு மதிப்பளிப்பார் இல்லை, இங்கு என் புகழ்க்கொடி சிறப்புறப் பறக்கிறது என்றுகூட மகிழ்ந்திருக்கக்கூடும்; ஆனால் இங்கு அவர்—"தமிழ், என் மொழி! தாய் மொழி! தமிழ் நாடு! தனி நாடு என்றெல்லாம் பேசுவது தீது, தவறு, தேசீயமாகாது" என்றெல்லாம் பேசினாரே, அதுபோல, பக்தவத்சலனாரை குஜராத்திலே சென்று பேசச் சொல்லு, பார்ப்போம்; அழகேசரை ஆமதாபாத் போகச் சொல்லு; காமராஜரை பூனா போய், "மராட்டிய மக்களே! ஏன் உங்கள் மதி இப்படிக் கெட்டுவிட்டது!" என்று கேட்கச் சொல்லு. பட்டாளம் அணிவகுத்து நின்றாலும், இவர்கள் தலைதப்புவது கஷ்டமாகிவிடும்! ஆமாம், தம்பி, அந்த அளவுக்கு அங்கெல்லாம் உரிமை உணர்ச்சி கொழுந்துவிட்டு எரிகிறது! இங்குதான், அபிசீனிய மன்னர் வரலாம, அகவல் எதுக்கு, ஆங்கிலப் பாடல் போதாதோ என்று பேசலாம், தலாய்லாமா வரலாம், திருவாசகம் எதுக்கு எமது திருப்பாதம் வீழ்ந்து வணங்கினால் போதாதோ என்று வினவலாம், தாழ்ந்து கிடக்கும் இந்தத்

தமிழகத்திலேதான், தருக்கரின் பிடியிலே சிக்கிவிட்ட தமிழகத்திலே தான், உலகின் எந்தக் கோடியிலிருந்தும் எந்த வகையான தலைவரும் வரலாம், தமிழரின் மரபினை இகழலாம், தமிழரைக் கண்டித் துரைக்கலாம்; அதற்கு அவர் தமக்கு மாலையிட்டு மகிழ்விக்க, போற்றிப் புகழ்ந்திட, இங்கு பக்த வத்சலனுர் படை வரிசை இருக்கிறது! வேறெங்கும் இந்நிலை வரவிடமாட்டார்கள்! ஏதுமற்ற நிலையைக்கூடப் பொறுத்துக் கொள்வர், எவர் வேண்டுமாயினும் எதைவேண்டுமானுலும் கூறிடும் இழிநிலைக்கு மட்டும் இடமளிக்கமாட்டார்கள்! பிச்சை எடுப்போன்கூடத் தம்பி, இல்லை போ! என்ருல் ஏக்கத்துடன் சென்றிடுவான், மச்சு வீடுடையோனுயினும் அவனைப் பார்த்து, ''ஏ! பிச்சைக்காரப் பயலே!'' என்று பேசினுல், எச்சிற் பண்டத்தைப் போட்டு வைத்திருக்கும் குவளையால் அடித்துவிட்டுக் கூறுவான், ''மச்சு வீடு என்றுமே உனக்கு நிலை என்ற எண்ணமோ, நானும் எனக் கென்று ஓர் 'குச்சி' இருந்து அதிலே வாழ்ந்தவன் தான்! ஏன் உனக்கு இந்த வாய்த்துடுக்கு?'' என்று கோபத்துடன் கேட்பான். போலீஸ் சுற்றியபடி இருப்பதால், இன்று மச்சு வீட்டுக்காரனுக்கு இது நேரிடாதிருக்கிறது!! தம்பி! அதனினும் இழிந்த நிலையிலன்ரே நாம் வைக்கப்பட்டிருக்கிரும். சர்கசில் காண்கிரேமே, காட்டரசனும் சிங்கத்தைக் கூட்டிலே நிற்கச் செய்து, அதன் முதுகின்மீது ஆட்டுக் குட்டியைச் 'சவாரி' செய்ய வைக்கிருனல்லவா, கரத்திலே துப்பாக்கி வைத்திருக்கும் கரடி' வித்தைக்காரன்! அது போலத்தான் தமிழக நிலைமை இருந்திடக் காண்கிரேம்!! அது போன்ற நிலைமை என்ருல்கூடப் போதாது; இங்கு 'ஆடு' வீரம் பேசிட, அரிமா அடக்க ஒடுக்கமாக அதனைக் கேட்டுத் தீரவேண்டி இருக்கிறது.

மொரார்ஜிகள் பேசும்போது, மரபு மறவாத தமிழர் ஒவ்வொருவருக்கும் இதுபோன்ற எண்ணம்தானே ஏற்பட்டிருக்கமுடியும்!! தேர்தலுக்கு எப்படி இது பயன்படப் போகிறது!!

'இந்தியா' ஒன்று, என்று நமக்காகப் பேசிடும், இங்குள்ள காங்கிரஸ் தலைவர்களுக்கேகூட, குட்டும், குத்தும் வலி தருமளவுக்கு ஏற்படுகிறபோது, என்ன பேசுகிருர்கள் என்பதை நாடு மறந்தா போய்விட்டது! எத்தனை எத்தனை முறை குமுறி இருக்கிருர்கள், இவர்கள் தம் நாத்தழும்பேறப் பேசுகிருர்களே 'தேசியம், அது, அப்போதெல்லாம் ஏன் மறைந்து படுகிறது?

டில்லி பாராளு மன்றத்திலேயே டாக்டர் லங்காசுந்தரம் என்பார், ''அரசியல் அதிகாரம் அனைத்தும் வடநாட்டிலேயே குவிக்கப்பட்டிருக்கிறது'' என்று பேசுகிருர்; 1955 டிசம்பர் 14-ல்!



பொருள் என்ன இதற்கு? இத்தனைக்கும் இந்த டாக்டர்கள், நம்மை எல்லாம், நாட்டைப் பிடித்தாட்டும் 'நோய்' என்று கூசாது பேசுபவர்கள்! அவர் போன்ருருக்கே பொறுக்க வில்லை, வடக்கே எல்லா அதிகாரங்களும் குவித்து வைக்கப் பட்டிருக்கும் கொடுமை.

சென்னை சர்க்கார் அமைத்த ஆலோசனைக் குழுவே' 1955 மே 30-ல்,

> "பெருந் தொழில்களைப் பொறுத்த மட்டில் சென்னை மாநிலம் வருந்தத்தக்க அளவு, புறக்கணிக்கப்பட்டிருக் கிறது''

என்று அறிவித்தது. ஏன், இந்த அழுகுரல்?

> புறக்கணிக்கப்பட்டிருக்கிறது.

என்ற உண்மையையும் கூறுகிறது அந்தக் குழு; அதனுல் நாடு வருந்துகிறது, வருந்தவேண்டும், என்ற எண்ணத்தையும், விளக்கிட,

> வருந்தத்தக்க

என்றும், எழுதுகிறது! 'தேசியம்' எங்கே ஓடிவிட்டது, இது போலக் கேட்கும்போது? இங்கே பெரிய தொழில்கள் இல்லையே என்ற கவலை குடைவானேன்? வருத்தம் பிறப்பானேன்? எங்கே இருந்தால் என்ன என்ற வேதாந்தம் ஏன் பிறக்கவில்லை! ஏன், புறக்கணிக்கப்பட்டுவிட்டதே என்ற துக்கம் துளைக்கிறது! அந்த உணர்ச்சி உங்கள் உள்ளத்திலே சுரக்கும் போதெல்லாம், அருமைக் காங்கிரஸ் அன்பர்களே! நீவிர் அனைவரும், தி. மு. க. ஆகிறீர்கள்! பிறகு, பதவி, வேறு பக்கம் அழைக்கிறது, மோசம் போகிறீர்கள், மொரார் ஜீயை அழைக்கிறீர்கள்.

சென்னை மாநிலம் வருந்தத்தக்க அளவு, புறக்கணிக்கப் பட்டிருக்கிறது என்பதையும் 1955-ல் கூறிவிட்டு, இப்போது தேர்தலில் ஓட்டு பறிப்பதற்காக, நீங்களே, தாரை தப்பட்டையுடன் கிளம்பி, தமிழாவது தெலுங்காவது வடக்காவது தெற்காவது எல்லாம் அபத்தம், தமிழ் நாடு புறக்கணிக்கப் பட்டதாகக் கூறுவது பொய்யுரை, என்று பேசுகிறீர்களே, எதையும் ஆய்ந்தறியும் திறனும், முன்பின் பேச்சுகளை ஒப்பிட்டுப் பார்த்து உண்மை காணும் போக்கும் கொண்ட மக்கள், உமது புரட்டினைக் கண்டுகொள்ள மாட்டார்களா?

என்று கேட்டால், காங்கிரசின் பெருந்தலைவர்கள் கூறும் பதில், "அவ்வளவு அறிவுத் தெளிவு உள்ளவர்கள், எத்தனை பேர் இருக்கிறார்கள்" என்பதுதான்.

தம்பி! நம் நாட்டுப் பாமர மக்களைக் காங்கிரசார், எப்படி வேண்டுமானாலும் ஆட்டிவைக்கலாம் எதைச் சொல்லியும் நம்பவைக்கலாம், என்று மனப்பால் குடிக்கிறார்கள். மக்கள் இதோ, நான் புட்டுப் புட்டுக் காட்டுவதுபோலப் பிரச்சினை களை அலசி ஆராயாமலிருக்கலாம், ஆனால் அவர்களுக்கு உண்மையை ஒரு நொடியில் உணர்ந்துகொள்ளும் திறன் இருக்கிறது; காங்கிரஸ் தலைவர்களின் புரட்டினை, மக்கள் உணர்ந்து வருகிறார்கள்; நமது பிரசாரம் இதனைப் பலப்படுத்து கிறது!! மொரார்ஜீக்கள் வருவதாலே, இந்த நம் பணி குந்தகப்பட்டு விடாது!!

வடநாட்டிலிருந்து இங்கு மொரார்ஜிகள், அடிக்கடி வந்தபடி இருப்பதையும், அவர்கள் வருகிற போதெல்லாம், இங்குள்ள காங்கிரஸ் தலைவர்கள், வணங்கி வரவேற்று, வரம் கேட்டுப் பெறுவதையும் காணும் தமிழக மக்கள், அந்த நாட்களில் இங்குவந்த வெலிங்டன், கோஷன், எர்ஸ்கின் போன்ற துரைமார்களிடம் எப்படி இளித்துப்பேசி இனிப்புப் பண்டம் பெற்றார்களோ சீமான்கள், சிற்றரசர்கள், மிட்டா மிராசுகள், அதே செயலைத்தான், இப்போது பக்த வத்சலங்கள், மொரார்ஜிகள் வருகிறபோது செய்கிறார்கள், முறை மாறவில்லை, ஆள்மட்டும்தான் மாறியிருக்கிறது என்பதையா தெரிந்து கொள்ளாமலிருக்கிறார்கள்.

'ஓட்டு' வாங்குவதற்காக, தம்பி, காங்கிரஸ் பிரசார கர்கள், ஐந்தாண்டுத் திட்டச் சாதனைகளைப் பேசுகிறார் களல்லவா! எல்லாப் பேச்சாளர்களுமல்ல, மிகச் சிலரே, அந்தச் சிரமத்தை எடுத்துக்கொள்வர்—பெரும்பாலானவர், நம்மை ஏசிவிட்டாலே போதும், என்று எண்ணிக்கொள் கிறார்கள்—உண்மையிலேயே சிலருக்கு, மிகக் காரமாக நம்மை ஏசுவதால் ஏற்படும் நாக்கெரிச்சலே வேறு எந்த விஷயத்தைப் பற்றியும் பேச இடமளிக்காது—நான் இந்தப் போக்குக்கு விதிவிலக்கு என்று குறிப்பிடத்தக்க இரண்டொரு வரைக் கூறுகிறேன்—அவர்கள் ஐந்தாண்டுத் திட்டத்திலே பெற்ற அரிய வெற்றிகளைக் கூறி, ஓட்டு கேட்கிறார்கள் என்று வைத்துக்கொள். மக்கள், அதைக் கேட்கும்போது உள்ளபடி திகைக்கிறார்கள். பெருமைப்படத்தக்க, மகிழ்ச்சி கொள்ளத் தக்க வெற்றிகள் கிடைத்துள்ளன; நாடு, நலிவு போக்கிக் கொண்டது; எல்லோருக்கும் இன்பவாழ்வுக்கு வழி ஏற்பட்டு விட்டது; என்றெல்லாம் பேசும்போது, மக்கள் தம்மைச் சூழ



இருக்கிற வறுமையைப் பார்க்கிறார்கள்; தமது சொந்த வாழ் விலே கப்பிக்கொண்டிருக்கும் சோகத்தைப் பார்க்கிறார்கள்; என்ன அதிசயம், இது! ஐந்தாண்டுத் திட்டத்தின் அரிய வெற்றியாலே பாலும் தேனும் ஓடுவதாகச் சொல்கிறார், இந்தப் பாலும் கண்களுக்கு ஒன்றும் தெரியவில்லையே; நாம் பார்க்கும்போது, பழங்கலமும் அதிலே உள்ள பழஞ் சோறும், அதிலே நெளியும் பூச்சிப் புழுவும் தெரிகிறது! இவர், ஏதோ, இங்கு வளம் கொஞ்சுவதாகக் கூறுகிறாரே! எங்கே அந்த வளம்? யாருக்குப் பயன்படுகிறது அந்த வளம்! என்றுதான், எண்ணித் திகைக்கிறார்கள்.

ஐந்தாண்டுத் திட்டத்திலே அரிய வெற்றிகள் ஏற்படவே இல்லையா? என்று கேட்டால், ஏற்பட்டது! எப்படி ஏற்படாம லிருக்கும், இரண்டாயிரம் கோடி ரூபாயைச் செலவிட் டிருக்கும்போது! ஆனால், நமது கேள்வி, நாட்டு மக்களின் கேள்வி, அதனால் ஏற்பட்ட பலன், யாரை வாழ வைத்திருக்கிறது என்பதுதான்! இதற்கு மொரார்ஜிகள் தரக்கூடிய பதில் என்ன? இதோ என்னிடம் உள்ள பட்டியல்! நீயும் படித்துப் பார்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நீர்ப்பாசன திட்டங்கள்

1. நந்திகொண்டா
2. கோசி
3. காக்ராபர்
4. ஹரிகே
5. துங்கபத்ரா
6. (டி. வி. சி.) தாமோதர்
7. கோய்னா
8. ஹிராகூட்
9. பக்ரா—நங்கல்
10. ரீகண்டு
11. மயூராட்சி
12. சாம்பால்
13. பத்ரா
14. கட்டபிரபா
15. தூத்வா
16. கீழ் பவானி
17. மச்சகந்த்

18. சாரதா
19. ஜோக்
20. மாஹி
21. காந்தி சாகர்.

இவைகளெல்லாம் முதல் ஐந்தாண்டுத் திட்ட வெற்றிகள்.

இவைகளில், இங்கு பலன் தந்திருப்பது, எத்தனை என்று கேட்டுப் பார், அதற்காகச் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்ற கணக்கு கேள், வடக்கே உள்ளவை எத்தனை? செலவிடப்பட்ட தொகை எத்தனை? என்று கணக்குக் காட்டச் சொல்லு. பிறகு ஓட்டுச்சாவடிக்குப் போகட்டும் மக்கள்!

"நீயும் நானும் ஒற்றுமையாக இருக்கலாம்! உன் கைக் கடியாரத்தை என்னிடம் கொடுத்துவை! உனக்குத் தேவைப் படும்போது, நான் மணி பார்த்துச் சொல்லுகிறேன்"— என்று பாரிஸ் பட்டினத்து எத்தன் ஒருவன் சொன்னதாக நான் படித்திருக்கிறேன். மொரார்ஜிகளும், அவர்களின் அடிதாங்கி, அரசியலில் இலாபம் தேடுவோரும், பேசும் 'ஒற்றுமை' இதுபோன்றதுதான், வேறில்லை!

நாடு இதனை, மெள்ள மெள்ள அறிந்துகொண்டு வருகிறது; தேர்லின்போது மேலும் தெளிவு ஏற்படப்போகிறது! நிச்சயமாக!!

தொழில் வளர்ச்சித் திட்டங்களில் தென்னிந்தியா
இந்தியப் பேரரசால் ஒதுக்கித் தள்ளப்பட்டிருக்கிறது.

என்று, சென்ற ஆண்டு ஜூலையில் மைசூர் சட்டசபையில், மைசூர் தொழில் மந்திரி, சென்ன பாசப்பா பேசி இருக்கிறார்.

இவர் என்ன, ஓட்டுக்கேட்க வரும், தி. மு. கழகமா? அல்லவே!!

நாடு, எண்ணிப்பார்த்திடவே செய்யாதா? எண்ணிப் பார்த்திடும்படி செய்யும் பணியினைத்தானே நாம், மேற்கொண்டிருக்கிறோம். அது எந்த அளவுக்கு வெற்றி பெறுகிறது என்பதைப் பொறுத்துத்தான், தேர்தலில் நாம் வெற்றி பெறுவது இருக்கிறது.

நாடெங்கும், வீடெங்கும், இந்தப் பேச்சு எழவேண்டும்; அதை ஆக்கித் தரும் பணிதான், தம்பி, உன்னிடம் நான் எதிர்பார்க்கிறேன்.



## தாயும் மகனும்

மகன் : எப்போதும் அழுதுகொண்டே இருக்கிறாயே, ஏனம்மா?

தாய் : மகனே! என்னடா செய்வது, உன் அப்பாவுக்கு இன்னமும் ஒரு வேலை கிடைக்கவில்லையே! அந்த வேதனைதான்!

மகன் : அப்பா, ஏனம்மா வேலைக்குப் போகாமலிருக்கிறார்?

தாய் : வேலை கிடைக்கவில்லையடா மகனே!

மகன் : போம்மா! அப்பா ஏமாற்றுகிறார்! வேலைதான் நிறைய கிடைக்கிறதாமே!

தாய் : யாரடா அப்பா, சொன்னது?

மகன் : நேற்று, கூட்டத்திலே ஒரு மந்திரி சொன்னார், அம்மா! ஐந்தாண்டுத் திட்டம் போட்டார்களாம்—நாடு சுபிட்சமாகிவிட்டதாம்—வேலை எல்லோருக்கும் கிடைக்கிறதாம்.

தாய் : காங்கிரஸ் கூட்டமாடா மகனே!

மகன் : ஆமம்மா!

தாய் : அங்கு அப்படித்தான் மகனே! பொய்யை மளமளவென்று கொட்டுவார்கள்...சுபிட்சமாகிவிட்டதாமா, நாடு... நம் வீட்டைப் பார்த்தால் தெரியவில்லையா இலட்சணம்! வேலையா கிடைக்கிறது, வேலை! யாருக்கு? இந்தக் காங்கிரசுக்குப் பககமேளம் அடிக்கிறவர்களுக்கு வேலை கிடைக்கிறது! அதுவும் என்ன வேலை? இவர்களை இந்திரன், சந்திரன் என்று புகழ்கிற வேலை! வயிற்றெரிச்சலை ஏண்டா மகனே, கிளப்புகிறாய்...

மகன் : ஏம்மா, அப்படியானா, பொய்யா பேசறாங்க...

தாய்: எலக்ஷன் வருதடா, மகனே! அதனாலே, மக்களை ஏமாளியாக்கி ஓட்டுவாங்க அதுபோலப் பேசுகிறார்கள்.

மகன் : நான் ஒரு சின்னப் பொய் பேசினா, காதைப் பிடித்துக் கிள்ளி, கன்னத்திலே அறைகிறே...!

தாய்: போடா, குறும்புக்காரா!...

மகன் : காங்கிரஸ்காரர், நாடு சீர்பட்டுவிட்டது, எல்லோருக்கும் வேலை கிடைத்துவிட்டது என்று பொய்யை வாரி வாரி வீசறாங்க... அவங்களை, என்ன செய்தே...?

தாய் : என்ன செய்தேனு...தேர்தல் வருது...மகனே! அப்போதுதானே, அவங்களுக்குப் புத்தி புகட்ட வேணும்...பார், அப்போது...

மகன் : ஆமாம்மா! பெரிய மனுஷருங்க பொய் பேசுகிற போது, புத்தி சொல்லாமே விட்டுவிட்டா என்னைப்போல சின்னப் பசங்கக்கூடக் கெட்டுப் போயிடுவாங்கம்மா...

தாய் : ஆமாண்டா, மகனே! இப்படிப் பொய்யைப்பேசி ஜனங்களை ஏமாத்துகிற காங்கிரசுக்கு மறுபடியும் ஓட்டுப் போட்டா, நாடேகெட்டுப்போகும். நான் மட்டுமில்லடா, நம்ம பக்கத்து வீட்டு பங்கஜம், எதிர் வீட்டுத் தாத்தா, கோடிவீட்டுக் குப்பி, நம்ம மாமன் வீடு, எல்லோருமே இதே முடிவுக்குத்தான் வந்திருக்கிறோம்...

மகன் : நான்கூட அம்மா,யாராரைப் பார்க்கிறேனே, அவங் களிடமெல்லாம்,இதைத்தான் சொல்லப்போகிறேன்.

தம்பி! எண்ணற்ற இல்லங்களிலே, இதுபோன்ற உரையாடல் நடைபெற்றுக்கொண்டுதான் உள்ளது.

எது பற்றியும் கவலைகொள்ளாத இல்லங்கள், நம்மால் என்ன ஆகும் என்று எண்ணும் இல்லங்கள், இவைகளில் எல்லாம்கூட, இதுபோன்ற உரையாடல்கள் எழச் செய்ய வேண்டிய பொறுப்பு,உன்னிடம்ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

ஓட்டுச் சாவடி போகுமுன்பு, நாட்டு மக்கள், எல்லாப் பிரச்சினைகளையும் அறிந்திடத்தக்க முறையிலே, ஏசுவோருக் குப் பதிலளிக்க வேண்டும் என்ற எண்ணத்துக்கே இடமேற் படாத முறையில், இனிய எளிய, பிறரிடம் பகை காட்டாத தன்மையில், தம்பி, நீ அறிந்துள்ள உண்மைகளை, மக்களுக்கு எடுத்துக் கூறு, அதுபோதும்; ராஜாக்களும் கோடீஸ்வரர் களும் முகாமிட்டுள்ள காங்கிரஸ் நம்மை ஒன்றும் செய்து விடாது! நாட்டு மக்கள், மீண்டும் ஓர்முறை, கேட்டினை மூட்டி விடும் காங்கிரசைக் கட்டி அணைத்திட மாட்டார்கள்! அவர்கள், பட்டது போதும் என்ற நிலையில் உள்ளனர். ஓட்டுச்சாவடி போகுமுன்பு நாட்டு மக்களிடம் நிலைமையைக் கவனப்படுத்தினால், போதும்; நாம் மகிழத்தக்க பலன், நிச்சயம் கிடைக்கும். தொடர்ந்து பணியாற்று! வெற்றிக்கு வழிகாட்டு!!

அன்பன்,

30—12—1956.

09210

அறிஞர்
# அண்ணுவின் நூல்கள்

தம்பிக்கு அண்ணுவின் கடிதங்கள்—(முதற் பகுதி)

தம்பிக்கு அண்ணுவின் கடிதங்கள்—(இரண்டாம் பகுதி)

தம்பிக்கு அண்ணுவின் கடிதங்கள்—(மூன்ரும் பகுதி)

தம்பிக்கு அண்ணுவின் கடிதங்கள்—(நான்காம் பகுதி)

கைதி எண் — 6 3 4 2

பார்வதி பி.ஏ.

ரங்கோன் ராதா

மாஜிக் கடவுள்கள்

காதல் ஜோதி

ஓர் இரவு

அண்ணுவின் சொற் செல்வம்

★

பாரி நிலையம்
184, பிராட்வே :: சென்னை-1

Jacket Printed at Neo Art Press, Madras-14